# தமிழர் செல்வம்



அமுதன் அடிகள

# தமிழர் செல்வம்

– சர் ஏ. டி. பன்னீர்செல்வம் வரலாறு –

அமுதன் அடிகள்

சர் ஏ.டி. பன்னீர் செல்வம் நூற்றாண்டு
நினைவு வெளியீடு
1888 – 1988

நூல் : தமிழர் செல்வம்

ஆசிரியர் : அமுதன் அடிகள்

உரிமை © : சர். ஏ. டி. பன்னீர் செல்வம் நூற்றாண்டு நினைவு அறக்கட்டளை

முதற்பதிப்பு : 1990

பக்கங்கள் : XVIII + 110

அச்சுப்பணி : கானரா ப்ரிண்ட்டர்ஸ், சென்னை - 600 086

கிடைக்குமிடம் : தமிழ் இலக்கியக் கழகம்
49, பாரதியார் சாலை
திருச்சி - 620 001.

# உள்ளடக்கம்


அணிந்துரை

வாழ்த்துரை

மதிப்புரை

என்னுரை

1. தமிழர் செல்வம் ... ... ... 1
2. புகழொடு தோற்றம் ... ... ... 5
3. வாழ்வும் வளமும் ... ... ... 13
4. சொந்த மண்ணில் ... ... ... 29
5. நீதிக் கட்சிப் பணிகள் ... ... ... 35
6. சட்டமன்றப் பணிகள் ... ... ... 72
7. செல்வத்தின் மறைவு ... ... ... 91
8. நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் ... ... 104

மு. கருணாநிதி
முதல் அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

நாள் 12. 1. 1990



# அணிந்துரை

தமிழர் தளபதி சர் ஏ. டி. பன்னீர்செல்வம் தமிழர்களின் பெருஞ்செல்வமானார். 'தமிழர் செல்வம்' என்னும் தலைப்பில் தலைவர் பன்னீர்செல்வத்தின் வாழ்க்கை வரலாற்று நூல் அமுதன் அடிகளாரால் எழுதப்பட்டிருப்பது அமுதமான செய்தி! 'செல்வம் என்ற போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று நான் மகிழ்ந்தேன்.

சென்ற தலைமுறையில் நின்ற புகழ் கொண்ட நீதிக்கட்சியின் சுடராய், சுயமரியாதை இயக்கத்தின் படைத்திலகமாய், தஞ்சை நகராட்சித் தலைவராய், சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராய்ப் பெருந்தகை செல்வம் ஆற்றிய பணிகள் பொன்னேட்டில் பொறிக்கத் தக்கன.

இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்த்துத் தந்தை பெரியாருக்குத் தோள் துணையாக நின்ற அஞ்சா நெஞ்சத்தினராகிய செல்வம் குறை வாழ்நாளில் விமான விபத்தில் 1.3.1940–இல் மறைந்தது தமிழினத்துக்கு மாபெரும் இழப்பாயிற்று. தம் துணைவியார் மறைந்தபோதும், தாயார் மறைந்தபோதும் கண்ணீர் சிந்தாத தந்தை பெரியார் பன்னீர்செல்வத்தின் மறைவு கேட்டுக் கழகத்தின் தூண் சரிந்ததே என்று கண் கலங்கினார்.

"தொல்லை நீக்கிட எழுந்த
தூயரில் பன்னீர்செல்வன்
இல்லையேல் படைத்தலைவன்
இல்லையெம் தமிழ்வேந்துக்கே"

என்று பாவேந்தர் பாடியதை நினைவு கூர்கிறேன்.

தன்மானச் சிங்கம் பன்னீர்செல்வத்தின் இதயம் ஏழைகளுக்காகவே துடித்தது. நாட்டு நலனுக்காகவே முரசு கொட்டியது. இங்கிலாந்தில் பயின்ற சட்டப்படிப்பு இங்குள்ள ஏற்றத்தாழ்வுகளை மாற்ற வேண்டிய ஊக்கம் அளித்தது.

தமிழினத்துப் பாசறைத் தளபதியாகிய சர் பன்னீர்செல்வம் அவர்களின் நூற்றாண்டு விழா 1.6.88–இல் நடந்தது. நாட்டார் அனைவரும் நன்றியஞ்சலி செலுத்தினர்.

இன்றோ, பன்னீர்செல்வம் பெயரில் புதிய அறக் கட்டளைகள், கல்விச் சாலைகள், தங்கள் மழலைச் செல்வங்களுக்குத் தளபதியின் பெயர் சூட்டிப் பெருமைப்படும் பெற்றோர்கள் என்ற வகையில் செல்வத்தின் புகழ் நிலைபெற்றுள்ளது.

திருவாரூருக்கு அருகிலுள்ள செல்வபுரத்தில் தோன்றிய செல்வம், தம் மக்கட் செல்வங்களையும் தமிழினப் பற்றாளர்களாக வளர்த்திருக்கிறார். பூண்ட கொள்கையாலும், பொன்போன்ற மக்களாலும் பொலிந்த சர் ஏ.டி. பன்னீர் செல்வத்தின் நன்னீர்மைகளை நாடுணர்ந்து போற்ற இந்நன்னூல் அழகுற வெளியிடப்பட்டிருப்பது மெத்தப் பொருத்தமானது.

புகழொடு தோன்றி, போராட்டத்தோடு வாழ்ந்து, தியாக வாழ்வை நிலைநிறுத்திச் சென்ற திராவிடத் திலகத்தின் வீர வரலாறு எழுதிய அமுதன் அடிகளாரைப் பாராட்டுகிறேன்.

மு. கருணாநிதி

க. அன்பழகன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

நாள் 12.1.1990



# அணிந்துரை

தம்மை உணராதார் தமிழர்; தாம் தமிழர் என்பதிலும் உறுதி கொள்ளாதார்; தமிழ் இனத்தின் வரலாற்றுப் பெருமையைக் கூட அறிவித்தாலும், அறிந்துகொள்ள முடியாத மனநிலையினர்! இந்த நிலை ஏன்? நெடுங்காலமாகவே தமது முன்னோர் வரலாற்றை எழுதி வைத்துப் போற்றும் ஆர்வம் கொள்ளாதவராவர். அதன் பயனை எண்ணிப் பாராதவர். அதனால்தான் தமது உரிமை நிலையைக் காக்கும் உணர்விழந்து சிறுமைக்கு ஆட்பட்டு தேய்ந்து வரும் பழங்கயிறு போல் கட்டுவிட்ட கூட்டமாய், ஒற்றுமை காண முடியாதவராய் வீழ்ச்சிப் பாதையில் சரிந்து வருகின்றனர். இந்த நிலையை மாற்றிட விழைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் வரலாற்று அறிவு பரவவேண்டுமென வலியுறுத்தினார்.

பல நூறாண்டுகள் – தெளிவற்ற நிலையில், அறியாமையின் பிடிப்பில் ஒடுக்கப்பட்டுக் கிடந்த தமிழ் மக்களிடையே, அவர்தம் உரிமைகளை நினைவூட்டி, ஓரளவில் பெற்றுத்தந்த இயக்கமே – பார்ப்பனரல்லாதார், தென்னிந்தியர், திராவிடர் என்னும் பெயர்களுக்கு மதிப்பு ஏற்படுத்திய நீதிக்கட்சி.

கல்வித் துறையிலும், அரசு அலுவல்களிலும் அனைத்து வகுப்பாருக்கும் இடம் வேண்டும் என்று துவக்கப்பட்ட நீதிக்கட்சியின் முழக்கந்தான் – நீடுதுயில் கொண்டிருந்த – பிற்படுத்தப்பட்ட, மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களை

எல்லாம் துயில் எழச் செய்தது. நீதிக்கட்சியின் இணையற்ற தலைவர்களான டாக்டர் நடேச முதலியார், சர். பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர் போன்றாரின் அறிவாற்றலும், தொண்டும் வேறு எந்தத் தேசியவாதிக்கும் குறைந்ததல்ல.

தேசியத்தின் செல்வாக்கு மிகுந்தபோது, நீதிக்கட்சி தோல்வியை ஏற்க நேரிட்டது. ஆனாலும் நீதிக் கட்சியின் கொள்கை வலிவுதான் – இந்தி எதிர்ப்பு இயக்கம் வடிவு கொள்ளவும், திராவிடர் கழகம் உருவாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்படவும் அடிப்படையாய் அமைந்தது எனலாம். நீதிக்கட்சி பெயரளவில் மறைந்தாலும், அவர்கள் அமைத்த அடித்தளத்தை, தேசியக் காங்கிரசாலும் மாற்றவோ, மறைக்கவோ முடியவில்லை என்பது வரலாறு. பழந்தமிழ் நாட்டு வரலாற்றை அறியாவிடினும் – இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் – தமிழ் இனத்தின் எழுச்சிக்கு வழிகாட்டியாக விளங்கிய தலைவர்களின் வரலாற்றையேனும் தமிழர்கள் அறிந்திடச் செய்ய வேண்டியது – நம்மவர் கடமையாகும்.

நீதிக்கட்சியின் கொள்கை வெற்றிபெற, அயராது பாடுபட்ட தலைவர்களில் ஒருவராக, தமிழர் தளபதி என்னும் சிறப்பினைப் பெற்ற பெருமைக்குரியவர் சர் ஏ.டி. பன்னீர்செல்வம். அவரது புகழை அறிந்தவர் – கேட்டவர் தமிழ் மக்கள் எனினும், அவரது நினைவு போற்றித் தம் மக்களுக்குப் பன்னீர்செல்வம் என்று பெயர் சூட்டி நன்றி செலுத்துகின்றனர் எனினும், அவரது வாழ்க்கை வரலாற்றை அறியாதவராகவே இருக்கின்றனர். அந்தக் குறையைப் போக்கும் முறையில் பெருமைக்குரிய பன்னீர்செல்வம் அவர்களது வாழ்க்கை வரலாற்றை முயன்று தொகுத்து எழுதும் கடமையை அமுதன் அடிகளார் மேற்கொண்டது பாராட்டுக்குரியதாகும்.

செல்வாக்கும் செல்வமும் உடையாரின் குடும்பத்திலே பிறந்து, சீருடன் வளர்ந்து உயர்கல்வி பெறுவதற்கு இங்கிலாந்து சென்று, பார்–அட்–லா பட்டமுடன் திரும்பி – வழக்கறிஞராகத் தொழில் தொடங்கி — தஞ்சை நகராட்சிமன்றத் தலைவராகவும், பொதுநலத் தொண்டராகவும் செயலாற்றி தஞ்சை மாவட்டத் தலைவர்களின் நன்மதிப்புக்குரியவராக விளங்கியவர் அவர்.

அரசியலில் நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவராய் நிலைத்து, சென்னை மாகாணச் சட்டமன்றத்தில் உறுப்பினராக அமர்ந்து – கைப்பொருளை மட்டுமன்றிக் குடும்பச் செல்வத்தையும் செலவிட்டவர். சிறுபான்மைச் சமுதாயத்தின் காவலராகவும் அவர் விளங்கிய நிலையில் 1934–ஆம் ஆண்டில், சென்னை மாகாண நிருவாகக்குழுவில் உள்துறை உறுப்பினராக நியமனம் பெற்று, தமது திறமையாலும் நேர்மையாலும் அரசியல் அறிந்த அனைவரது பாராட்டையும் பெற்றார். பின்னர் 1937 ஏப்ரலில், சர் கே.வி. ரெட்டி நாயுடு தலைமையில் அமைந்த இடைக்கால அமைச்சரவையில் சில மாதங்கள் நிதி, உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று விளங்கினார். 1938–ஆம் ஆண்டு இறுதியில், தளர்ச்சியுற்ற நீதிக்கட்சியினை வளர்த்திட, மக்களைத் தட்டி எழுப்பக்கூடிய ஒரு தலைவரே நீதிக்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்றிட வேண்டும் என்று கருதிய பன்னீர்செல்வம் அவர்கள் பெரியாரை நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கச் செய்வதில் முனைந்து செயல்பட்டவர் ஆவார்.

தந்தை பெரியாரின் மத எதிர்ப்புக் கொள்கை அவருக்கு உடன்பாடிலது என்றாலும், தமிழ் மக்களுக்குப் பெரியாரின் தலைமையும் தொண்டும் தேவை என்று உணர்ந்து, அவரிடத்தில் பேரன்பும் மதிப்பும் கொண்டவராய்ச் செயல்பட்டவர். கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கப்பட்டபோது பெரியாருக்குத் துணையாக நின்று, சட்டமன்றத்தில் வாதாடியது மட்டுமின்றி, பெரியாரும் அண்ணாவும் சிறைப்பட்டிருந்த காலத்தில் நடைபெற்ற மாநாட்டுக்குத் தலைமை ஏற்று நடத்தியவர். அம்மாநாட்டில் பன்னீர்செல்வம் அவர்களைப் பாராட்டி வரவேற்று மாலை அணிவித்தபோது, மேடையில் இருந்த பெரியாரின் படத்தின் அடியில் அம்மாலையை வைத்து, 'என் தோளுக்கு இட்ட மாலையைத் தலைவர் பெரியாரின் தாளுக்கு அணிவித்து வணங்குகிறேன்' என்று அறிவித்த தலைவர் அவர்.

பன்னீர்செல்வம் அவர்கள், எந்த நிலையில் எங்கு செயல்பட்டாலும் – தமிழ்மொழி தம் தாய்மொழி என்பதையும், தமிழ் இனம் தம் இனம் என்பதையும் மறவாது, அவற்றின் பெருமையை உணர்த்தி வந்தவர். அந்த வகையில் பெரியாரைத் தம் தலைவராக மதித்து ஏற்றுச் செயல்பட்டவர். 1940 – ஆம்

ஆண்டில் – இங்கிலாந்தில் – போர்க்கால நிலையில் அமைந்திருந்த அமைச்சரவையில் இந்திய விவகார அமைச்சருக்குத் துணையாக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பன்னீர்செல்வம் அவர்கட்குக் கிடைத்த பொறுப்பு நீதிக்கட்சியினர் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சி தந்தது. அவர் மூலம் தமது இலட்சிய வெற்றிக்கு வழிகாணப்படும், நீதிக்கட்சியின் நியாயத்தை ஆங்கிலேய அரசு உணரச் செய்வார் என்னும் எதிர்பார்ப்புடையவராய் எழுச்சி கொண்டனர்.

செல்வபுரத்திலிருந்து – சென்னை; சென்னையிலிருந்து – பம்பாய்; பம்பாயிலிருந்து விமானத்தில் கராச்சி என்று அடைந்து – அங்கிருந்து இங்கிலாந்து செல்லும் விமானத்தில் ஏறினார். ஆனால் பின்னர் இறங்கவே இல்லை. புறப்பட்டார், போய்ச் சேரவில்லை. அவர் ஏறிச்சென்ற 'அனிபால்' விமானம் ஓமான் கடலைத் தாண்டவில்லை.

அச்செய்தி தென்னாட்டு மக்களுக்கு, நீதிக்கட்சிக்குப் பேரிடியாயிற்று! பெரும் துயரம், ஏக்கம், ஏமாற்றம் கவிந்தது! பன்னீர்செல்வம் அவர்கள் – கராச்சியிலிருந்து தந்தை பெரியாருக்கு எழுதிய கடிதமே அவர் கடைசியாக எழுதியதாகும். ஆனால் அவர் ஏற்றிருந்த கொள்கை, இலட்சியம், இன்றும் – அவர்விட்டுச் சென்ற செல்வமாக – ஒளிவிட்டுக் கொண்டுதான் உள்ளது. வரலாற்றைத் தெளிவும் சுவையும் தோன்ற வரைந்துள்ள அதன் ஆசிரியர் அமுதன் அடிகளாருக்குத் தமிழ்ச் சமுதாயம் கடமைப்பட்டுள்ளது.

வாழ்க பன்னீர்செல்வம் புகழ்!

க. அன்பழகன்



# அணிந்துரை

தமிழகத்தின் வரலாற்றில் நீதிக்கட்சி, ஒரு மைல்கல். தமிழினத்தைச் சேர்ந்த மக்கள் அறிஞர்களாக இருப்பினும், ஆற்றல்மிக்குடையோராக இருப்பினும் மதிப்பார் இல்லை, ஒளிவிட முடிவதில்லை. பார்ப்பனர் மேலாதிக்கம், ஆங்கிலேய அரசினுடைய அரவணைப்புடன் கோலோச்சிக் கொண்டிருந்த காலம். அந்த அமுக்கத்திலிருந்து விடுதலை பெற எழுந்த தமிழரின் விடிவெள்ளியே நீதிக்கட்சி. நீதிக்கட்சியின் பரிணாம வளர்ச்சியே திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன.

நீதிக்கட்சியில் பல தலைவர்கள் விளங்கினர். ஆனால் இளமை நலமும், அறிவாற்றலும், செயல்திறனும் பெற்று விளங்கியதன்றிப் பிற நாட்டாரும் மதிக்கத் தகுந்த அறிஞராக விளங்கியவர் பன்னீர்செல்வம். பன்னீர்செல்வம் அவர்களின் இனிய வரலாற்றை அருள்தந்தை அமுதன் அடிகள் இனிய எளிய தமிழில் அழகுற எழுதியுள்ளார்கள். பன்னீர்செல்வம் அவர்களின் நூற்றாண்டு வந்து விட்டது. வழக்கம்போல் மறதியில் ஆழ்ந்து இனமானமும், இனநலனும் பேணாதிருக்கும் தமிழ் மக்களைத் தூண்டிட இந்த நூல் துணை செய்யும்.

நீதிக்கட்சியின் தலைவர்கள் "பிராமணரல்லாதாரிடையே மேல்மட்டத்தைச் சார்ந்தவர்களாயினும், இயக்கம் பிராமணரல்லாதார் அனைவரின் நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்காக உழைத்து வந்தது" என்று நூலாசிரியர் எழுதியுள்ள கருத்து, நூற்றுக்கு நூறு உண்மை. ஆயினும் இத்தன்மை தொடர்ந்து பேணப்படுதல் வேண்டும்.

இலட்சிய நோக்குடன் சங்கத் தலைவர்கள் விளங்கியதால் டாக்டர் சுப்பராயன் ஆட்சி நீடிக்க முடிந்தது என்ற ஆசிரியர் கருத்து ஏற்புடையது. இப்போதும் தமிழர்களிடையே வேற்றுமைகளைக் கடந்த இலட்சிய உணர்வு தேவை என்பதை ஆசிரியர் விளக்கும் பாங்கு அருமையானது.

காங்கிரசுக்கும், சுயமரியாதைக் கட்சிக்கும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களில் இருந்த இடைவெளியை ஆசிரியர் எடுத்துக்காட்டும் இடம் படிக்கத்தக்கது. இன்றும் காங்கிரசின் நிலை மாறவில்லை. காங்கிரசுக்குச் சமுதாயச் சீர்திருத்தத்தில் உடன்பாடிருந்தாலும், உரக்கப் பேசுவதில்லை. செயல்படும் துணிவில்லை. இது ஒரு பெரிய குறையே!

கிறிஸ்துவ மதத்தினரிடையிலும் சாதி வேற்றுமைகள் நிலவுவதைப் பன்னீர்செல்வம் கண்டித்ததை நூலாசிரியர் தவறாமல் எடுத்தெழுதியிருப்பது நூலாசிரியரின் பெருந்தன்மைக்குச் சான்று. தீண்டாமையும், சாதி வேற்றுமையும் இந்தியாவின் புற்றுநோய்! என்று இந்த நோய் நீங்குமோ?

இந்தியின் பிடியிலிருந்து தமிழைக் காக்கப் போராடிய வீர வரலாறு எடுத்துக் கூறப்படுகிறது. இன்று தமிழைக் காக்கப் போராடுவோரைக் காணோமே என்ற ஏக்கம் பிறக்கிறது.

அருள்தந்தை அமுதன் அடிகள் எழுதியுள்ள தமிழ்ச் செல்வமாகத் திகழ்ந்த பன்னீர்செல்வத்தின் வரலாறு, நல்ல வரலாற்று நூல்; படிக்க வேண்டிய நூல். நூலாசிரியர் அருள்தந்தை அமுதன் அடிகளுக்கு நன்றி; கடப்பாடு!

இன்ப அன்பு

4.8.1989
குன்றக்குடி

**அடிகளார்**
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)



# வாழ்த்துரை

காலஞ்சென்ற சர் ஏ.டி. பன்னீர்செல்வம் தலைசிறந்த அரசியல் தலைவராகவும், சமுதாயத் தலைவராகவும் திகழ்ந்தவர். திறமை மிக்க நிர்வாகியாகவும் ஆற்றல்மிக்க சட்டமன்ற உறுப்பினராகவும் விளங்கியவர். கத்தோலிக்கக் கிறிஸ்துவ சமுதாயம் ஈன்றெடுத்த மிகச் சிறந்த தலைவராகப் புகழ்பெற்றவர்.

திருச்சி புனித வளனார் கல்லூரியில் கல்வி கற்றுப் பின் ஆங்கில நாட்டில் பயின்று 'பார்-அட்-லா' பட்டம் பெற்றவராகத் தாயகம் திரும்பிய பன்னீர்செல்வம் வழக்கறிஞர் தொழிலில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. சமுதாயப் பணிகளிலும் அரசியல் பணிகளிலுமே கவனம் செலுத்திவந்தார். தஞ்சை நகராட்சி மன்றத் தலைவராகவும் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகவும் பல முறை தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறந்த பணிகளாற்றினார். மாவட்டக் கழகத் தலைவர் பதவி என்பது மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிக்கு அடுத்த நிலையில் அன்று விளங்கியதாகும்.

1930-ஆம் ஆண்டு முதல் சட்டமன்றம் கலைக்கப்படும்வரை ஏறக்குறைய ஒன்பதாண்டுகள் அவர் சட்டமன்ற உறுப்பினராக விளங்கினார். நான்காண்டுக்காலம் மாநில ஆளுநரின் நிர்வாக சபை உறுப்பினராகவும், மூன்றரை மாதக் காலம் உள்துறை, நிதித்துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தாம் ஈடுபட்ட பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் மிக்க இவரை நான் தஞ்சையிலும் சென்னையிலும் பல முறை சந்தித்திருக்கிறேன். 1935-ஆம் ஆண்டு நான் குருத்துவக் கல்விக்காக உரோமை நகருக்குச் செல்லுமுன் அவரைச் சந்தித்தேன். அதுவே அவருடன் என் கடைசிச் சந்திப்பாகும்.

மிக உயர்ந்த பதவிகளை வகித்தவரேனும் அனைவருடனும் மிக எளிமையாகப் பழகும் இயல்புள்ளவர் அவர். கட்சித்

தொண்டர்களும் இவரை மிக எளிதாக அணுக முடியும். அதனாலேயே தஞ்சை மாவட்ட நீதிக்கட்சியின் தலைவராக மிகச் சிறப்பான பணிகளை அவர் ஆற்ற முடிந்தது.

அரசியலில் தலைசிறந்து விளங்கிய சர். ஏ டி.பன்னீர் செல்வம் நல்ல கத்தோலிக்கராகவும் திகழ்ந்தவர். தமது சமயக் கடமைகளை மிக ஒழுங்காக நிறைவேற்றி வந்தார். தமது ஓய்வு நேரங்களில் தஞ்சை திரு இருதயக் கோவில் பங்குத் தந்தை மி. மோத்தாவாஸ் சுவாமிகளிடம் வந்து உரையாடிக் கொண்டிருப் பதை நான் பார்த்திருக்கிறேன். புனித வாரத்தின் இறுதி நாட் களில் திருச்சி தூய வளனார் கல்லூரியில் முன்னாள் மாணவர் களுக்காக ஆண்டுத் தியானம் நடைபெறும்பொழுது அதில் பன்னீர்செல்வம் தவறாமல் கலந்து கொள்வார். 1940–ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்துக்குப் புறப்படுமுன்னும் இத்தியானத்தில் கலந்து கொண்டார். அவர் பக்தியிலும் கடவுள் பற்றிலும் சமயப் பற்றிலும் சிறந்து விளங்கியவர் என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழ்ச் சமுதாயமும் கத்தோலிக்க சமுதாயமும் இவரது அறி வாற்றலால் பல நன்மைகளைப் பெற முடியும் என எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில் விமான விபத்தில் பன்னீர்செல்வம் உயிர் துறந்தார் என்னும் செய்தி தமிழகத்தை ஆறாத் துயரில் ஆழ்த்தியது.

இன்று அவர் இறந்து ஐம்பதாண்டுகளாகின்றன. கடந்த 1.6.1988 அன்று செல்வபுரத்தில் அவரது பிறப்பின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது உடல் நலக் குறைவால் என்னால் கலந்து கொள்ள இயலாமற் போயிற்று. விழா சிறப்பாக நடைபெற்றதாக அறிந்து மகிழ்ந்தேன்.

சர் ஏ டி பன்னீர்செல்வத்தின் வரலாற்றை அமுதன் அ +கள் எழுதியுள்ளமை பற்றிப் பெரிதும் மகிழ்கின்றேன். பலரோடு கலந் துரையாடி, பல நூல்களையும், பத்திரிகைகளையும் பயன் படுத்தித் தேவையான செய்திகளைச் சேகரித்து இந்நூலைத் திறம்பட எழுதியதற்காக அவரைப் பாராட்டுகின்றேன். தமிழர் தலைவராக விளங்கிய சர் பன்னீர்செல்வத்தின் வாழ்வு இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டாக அமையட்டும்.

20. 7. 1989 † இரா. ஆ. சுந்தரம்
தஞ்சை முன்னாள் தஞ்சை ஆயர்.



# மதிப்புரை

தஞ்சையில் பல ஆண்டுக் காலம் சமயப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து வந்து, திருச்சி தமிழ் இலக்கியக் கழகத்தில் தற்போது அரும்பணிகள் புரிந்து வருகின்ற வணக்கத்துக்குரிய ஞானத்தந்தை அமுதன் அடிகள் அவர்களால் எழுதப் பெற்ற "தமிழர் செல்வம்" என்ற நூல் என் பார்வைக்கு வந்தது. படித்து மகிழ்ந்தேன்.

தஞ்சை மாவட்ட ஆட்சிக் கழகத்தின் தலைவராகவும், சென்னை அரசாங்க உள்ளாட்சித்துறை உறுப்பினராகவும், காங்கிரசுக் கட்சியின் ஆட்சியில் (1937–39) எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்துக்கும் நற்பணிகள் பல புரிந்து மறைந்த உயர்திருவாளர் சர் ஏ.டி. பன்னீர்செல்வம் பார்–அட்–லா அவர்களின் வரலாற்றைப் பற்றியது இந்நூல்.

இந்நூலுக்குப் பன்னீர்செல்வம் என்று பெயரிடாமல் "தமிழர் செல்வம்" என்று பெயரிட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. காரணம், சர் ஏ.டி.பி. அவர்களின் எண்ணமும், சொல்லும், வாழ்வும், உழைப்பும் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பற்றியதாக அமைந்திருந்ததே ஆகும்.

திரு. செல்வம் அவர்கள் என்னிடத்து அதிகமான அன்பும், நட்பும் கொண்டவர். நான் மாகாண நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து பணிபுரிந்தபோது அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. திரு. செல்வம் அவர்கள் பெரியாரிடத்தும் என்னிடத்தும் அதிக நட்புக் கொண்டவர். சென்னை தீவுத் திடலில் 29.12.1938 அன்று நீதிக் கட்சி மாநாடு நடந்தபோது, மாநாட்டின் தலைவராகிய பெரியார் பெல்லாரிச் சிறையில் இருந்ததால் அவருடைய தலைமை

உரையை சர் ஏ.டி.பி. அவர்களும் நானும்தான் படித்து வழங்கினோம்.

நான் பெரியாரோடு மாறுபட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிய போது எங்கள் இருவரையும் ஒன்று சேர்க்கப் பொதுமக்கள் அமைத்த குழுவில் குமாரராஜா முத்தையா செட்டியார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், நெடும்பலம் சாமியப்ப முதலியார், பட்டிவீரன்பட்டி சவுந்தர பாண்டிய நாடார், சர். பி.டி. ராஜன் ஆகியவர்களோடு சர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களும் ஓர் உறுப்பினராயிருந்து ஒன்று சேர்க்கப் பெரிதும் முயன்று பாடுபட்டனர்.

1938–இல் நடந்த இந்தி எதிர்ப்புக் காலத்தில் எட்டையபுரம் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த என்மீது கல்லெறிந்த காங்கிரஸ்காரர்களைக் கைது செய்து வழக்குப் போட்டிருந்த கோவில்பட்டி சப்–கலெக்டரிடம், அப்போது முதலமைச்சராய் இருந்த ராஜாஜி அவர்கள் அவ்வழக்கை வாபஸ் வாங்கும்படி போட்டிருந்த உத்தரவை சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் சென்னை சட்டசபையில் ஆத்திரத்தோடு கண்டித்துப் பேசினார். அப்போது ராஜாஜி "பொது மக்கள் முன்பு பேசுகிறவர்கள் பிறர் மனம் புண்படாமல் பேசியிருக்க வேண்டும்" என்று கூறினார். அது கேட்ட பன்னீர்செல்வம் மேலும் ஆத்திரம் கொண்டு "திரு. விசுவநாதத்தைப் போலப் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் இந்தச் சட்டசபையில் உள்ள காங்கிரஸ்காரர்களில் எவராவது ஒருவர் இருக்கிறார்களா?" என்று திருப்பிக் கேட்டார். விடை வரவில்லை. இச்செய்தி அன்றைய சட்டசபைக் கூட்ட நிகழ்ச்சியில் பதிவு செய்யப் பெற்றிருக்கிறது. அத்தகைய துணிவுமிக்க வீரர் திரு. செல்வம் அவர்கள்.

பெரியார் பெல்லாரிச் சிறையில் இருந்தபொழுது நானும் பன்னீர்செல்வமும் தான் பெல்லாரிக்குச் சென்று அவரைக் கண்டு இயக்கப் பணிகளுக்குத் திட்டமிட ஆலோசனை பெற்று வந்தோம்.

1938–இல் திருச்சியில் என்னால் நடத்தப்பெற்ற மூன்றாவது தமிழர் மாநாட்டில் சர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் பங்கு பெற்று நிகழ்த்திய வீர உரைகள் இன்னும் என் காதுகளில்

ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அவர் லண்டனில் பார்-அட்-லா படித்துக் கொண்டிருந்தபொழுது, ஒரு விருந்துக்குச் சென்ற அவர் திரும்பி விடுதிக்கு அதிகக் காலதாமதமாக வந்தபொழுது பயந்து கொண்டே வந்தார். அந்த விடுதிப் படுக்கைகள் அனைத்தும் காலியாக இருந்ததைக் கண்டு தான் தான் முதலில் வந்ததாக மகிழ்ச்சியடைந்து அதிகாரிகளிடம் கூறிய பொழுது அவர்கள் மெத்தையின் அடியில் எல்லோரும் படுத்திருப்பதைச் சுட்டிக் காட்டினராம். அதைச் செல்வம் அவர்கள் அடிக்கடி சொல்லிச் சொல்லி மகிழ்ச்சியடைவது உண்டு.

அவர் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவராயினும் சாதி, சமயம், வகுப்பு, வேற்றுமை ஏற்றத் தாழ்வுகளின்றி எல்லோருடனும் அன்புடன் பழகி வந்த பெருங்குணத்தை அக்காலத்து மக்கள் அனைவரும் பெரிதும் பாராட்டி வந்தனர்.

இவையும் இவைபோன்ற அவரது வரலாற்றுச் செய்திகள் பலவற்றையும் ஆசிரியர் அமுதன் அடிகள் அவர்கள் பெரிதும் முயன்று, துருவி ஆராய்ந்து அறிந்து கண்டு இந்நூலில் முறைப்படுத்தி எழுதி அமைத்திருக்கிறார்கள்.

செய்திகள் அனைத்தும் எளிய நடையில், நல்ல தமிழில் அமைந்துள்ளன. இது அவர் அமெரிக்காவில் பெற்றுவந்த இதழியல் பயிற்சியை நன்கு விளக்கிக் காட்டி நம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது.

இந்நூலாசிரியரின் எழுத்தும் எண்ணமும் தொண்டும் இன்னும் பல பன்னீர்செல்வங்கள் தமிழகத்தில் தோன்ற வேண்டும் என்பதுதான்.

ஆசிரியர் ஞானத்தந்தை அமுதன் அடிகள் இது போன்ற வரலாற்று நூல்கள் பலவற்றை எழுதித் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கி உதவ வேண்டுமெனவும் தமிழக மக்கள் இவற்றைப் பயன்படுத்திப் பயனடைய வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி
12.10.1989.

தங்களன்பிற்குரிய,
**கி.ஆ.பெ. விசுவநாதம்**



# என்னுரை

சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் வரலாற்றை எழுதக் கிடைத்த வாய்ப்பினை என் வாழ்வின் பெரும் பேறாகவே கருதுகின்றேன். தமிழினத்துக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்க்கைப் பணியாகக் கருதிய அவரது வரலாறு பற்றிய குறிப்புகளைத் தேடிக் கண்டபோதெல்லாம் என் உள்ளம் விம்மிதமும் செம்மாப்பும் கொண்டது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எவரையும் நான் என் வாழ்வில் இதுவரை சந்தித்ததில்லை. செல்வத்தின் வரலாற்றை எழுதி முடித்த நிலையில் இப்பொழுதுதான் அத்தகைய ஒருவரைச் சந்தித்ததாக நான் கருதி மகிழ்கின்றேன்.

1.6.1988 அன்று செல்வபுரத்தில் நிகழ்ந்த செல்வம் நூற்றாண்டு விழாவில் உரையாற்றுவதற்காக நான் சேகரிக்கத் தொடங்கிய செய்திகளே இந்நூலுக்கு அடிப்படை எனலாம். அவ்விழாவே இந்நூலுக்குக் காரணம் என்பதும் மிகையாகாது. விழா நடந்தேறிய சிறிது காலத்துக்குப் பின் திரு. ஜார்ஜ் செல்வம் தங்கள் பங்குத்தந்தை அருள்திரு. ஆ. சேவியர் மூலம் என்னை அணுகி இந்நூலை எழுத இயலுமா என்று கேட்டபோது மகிழ்வுடன் இசைந்தேன். ஆனால் ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு முன் மறைந்துவிட்ட செல்வத்தின் வரலாற்றை எழுதும் பணி அத்துணை எளிதாக இருக்கவில்லை. அவரது மக்கள் எனக்குப் பல குறிப்புகளைத் தந்து உதவினர். அனிபால் விமான விபத்து பற்றியும், அவரது அகால மரணம் பற்றியும், செல்வம் நினைவு நாள் கூட்டங்கள் பற்றியும், செய்தித் தாள்களில் வந்த செய்திகளையெல்லாம் செல்வத்தின் மூத்த மகன் ஜார்ஜ் செல்வம் சேகரித்து வைத்திருந்து உதவினார். அவரது அரசியற் பணி பற்றிய குறிப்புகளைப் பல நூல்களில் நான் தேட வேண்டியதாயிற்று. எனவே இந்நூலை எழுதி முடிக்க நான் எதிர்பார்த்ததை விட நீண்ட காலமாயிற்று.

இப்பணியினைச் செய்யும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய திரு. ஜார்ஜ் செல்வத்துக்கும், துணைநின்ற அருள்திரு. ஆ. சேவியர் அடிகளார்க்கும் என் நன்றி உரித்தாகும். செல்வத்தின் அரசியற் பணிகள் பற்றிய குறிப்புகளை நான் தேடிய போது, திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும், 'விடுதலை' ஆசிரியருமாகிய திரு. கி. வீரமணி எனக்குப் பெரிதும் உதவினார். எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் பொறுப்பினைத் திரு. நம். சீனிவாசனிடம் அவர் ஒப்படைத்தார். திரு. சீனிவாசனும் எனக்குத் தேவையான நூல்களையும் பத்திரிகைக் குறிப்புகளையும் அயராமல் தேடித் தந்து ஒத்துழைத்தார். இவ்விருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். நான் பேட்டி கண்டபோது என் வினாக்களுக்குப் பொறுமையுடன் பதிலிறுத்துப் பல செய்திகளைத் தெரிவித்த முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கட்கும், சர் ஏ.டி. பன்னீர்செல்வத்தின் மக்கள் ஜார்ஜ் செல்வம், மேரி ஸ்தனிஸ்லாஸ், டெய்ஸி இராயப்பன், டாக்டர் எட்வர்ட் செல்வம் ஆகியோர்க்கும், மருமகள் கிளாரா செல்வம் அம்மையார்க்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூலுக்குத் தஞ்சை முன்னாள் ஆயர் மேதகு இரா. ஆ. சுந்தரம் ஆண்டகை வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். தமிழ்மாமுனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரும் முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பல்வேறு பணிகளுக்கிடையே இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இப்பெருமக்கள் அனைவர்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி என்றென்றும் உரித்தாகும்.

பிறர் நலப் பணியின் சிறப்பினை சர் ஏ.டி. பன்னீர்செல்வத்தின் வரலாறு இன்றையத் தலைமுறையினர்க்கு உணர்த்துமாயின் அதுவே நான் இந்நூலை எழுதியதால் பெற்ற பேறு எனக் கருதி மகிழ்வேன்.

*14.1.1990*
பொங்கல் திருவிழா

**அமுதன் அடிகள்**



# 1. தமிழர் செல்வம்

சர் ஏ.டி. பன்னீர் செல்வம் பிறந்து ஒரு நூற்றாண்டுக்காலம் உருண்டோடி விட்டது. அவர் இறந்து ஏறக்குறைய ஐம்பதாண்டுக் காலம் ஆகிவிட்டது. இன்றைய தலைமுறையினர் அவரை அறியாதிருக் கலாம். மூதிய தலைமுறையினர் அவரை இன்று ஓரளவு மறந்திருக் கலாம். ஆனால் செல்வம் வாழ்ந்த காலத்தில் அவர் தமிழினத்தின் பெருந்தலைவர்களுள் ஒருவராக விளங்கிய வரலாற்று உண்மையை யாரும் மறுக்கவியலாது. அனிபால் விமான விபத்தில் அவர் எதிர் பாராத விதமாக இறந்தபோது தமிழகம் முழுமையும் கண்ணீர் வடித்துக் கலங்கிய காட்சியை அன்றையச் செய்தி இதழ்கள் படம் பிடித்துக் காட்டின. செல்வம் இறந்திருக்க மாட்டார் என்று பலர் ஆணித்தரமாகக் கூறினர். செல்வம் விரைவில் திரும்பி வருவார் என்று பலர் தேதி குறித்து ஆரூடம் கூறினர். அரபு நாட்டுக் கொள்ளைக் காரர்களின் கையிலகப்பட்டுள்ள செல்வத்தை எவ்வாறாயினும் மீட் போம் என்று சூளுரைத்தனர் சிலர். இறுதியாக அனிபால் விமான விபத்து உறுதியாகி, அதில் பயணம் செய்த அனைவரும் இறந்துவிட்ட தால் செல்வமும் அவ்வாறு இறந்தோருள் ஒருவர் என்று சென்னை அரசு அறிவித்தபோது கலங்கித் துடித்தவர்கள் பலர்.

தங்கள் தலைவரின் நினைவாகப் பலர் தங்கள் மக்களுக்குப் பன்னீர் செல்வம் என்று பெயரிட்டு மனதை ஆற்றிக் கொண்டனர். பல நகர்களில் செல்வத்துக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டன. ஈரோட்டிலுள்ள செல்வம் பூங்காவும் தஞ்சையிலுள்ள செல்வம் நகரும் இன்றளவும் அவரை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

சமய, சாதிப் பிரிவினைகளை எள்ளளவும் மனதில் கொள்ளாமல் தமிழ் மக்களைத் தம் மக்களாக ஏற்று, சாதி சமய பேதமின்றித் தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு உழைத்தவர் பன்னீர் செல்வம். அவர் ஆங்கில நாட்டிலே பயின்று 'பார் அட்லா' (வழக்கறிஞர்) பட்டம் பெற்றவர். ஆங்கில அரசு அவருக்கு ராவ்பகதூர், சர் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது.

ஆயினும் அவர் தம் படிப்பையும் பட்டத்தையும் பயன்படுத்திப் பணம் சேர்க்கும் வகை தெரியாதவர். தம் அறிவையும் ஆற்றலையும் மக்கள் நலனுக்குச் செலவிடுவதைத் தவிர வேறெதுவும் அறியாதவர். தமிழ் மக்களின் நலம் சூறையாடப்பட்டு அவர்களது உரிமைகள் பறிக்கப் பட்டதைக் கண்டு கொதித்தெழுந்து இறுதிவரை போராடியவர். வளமான வாழ்வு வாழ வகையிருந்தும் பிறர் நலனுக்காகவே தம் வாழ்வைச் செலவிட்டவர்.

இவ்வாறு தமிழர் நலனுக்காகத் தம் சிந்தனை, சொல், செயல் அத்தனையையும் செலவிட்டு உழைத்தவர் செல்வம். அதனால்தான் செல்வத்தின் இறப்பு தமிழருக்குத் தாங்க முடியாத இழப்பாயிற்று. இதனைச் செல்வம் இறந்தபோது தந்தை பெரியார் ஈ.வெ.ரா. தம் 'குடிஅரசு' இதழில் "பன்னீர் செல்வமே மறைந்து விட்டாயா?" என்னும் தலைப்பில் எழுதிய ஆசிரியவுரையே விளக்கும். அவ்வுரையை முழுமை யாகக் கீழே தருகின்றோம்.

> "நமது உண்மைத் தோழரும், உற்ற துணைவரும், உள்ளும் புறமும் ஒன்றாய் உள்ளவரும், தமிழர் இயக்கத்தில் உறுதியான பற்றுக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்தவரும், நம்மிடத்தில் களங்கமற்ற அன்பும் பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்தவரும், நினைத்தால் திடுக்கிடும்படி எதிரிகள் நெஞ்சில் எப்போதும் திகிலை உண்டாக்கிக் கொண்டிருந்த வருமான அருமைப் பன்னீர்செல்வம் அவர்களை இன்று "காலஞ்சென்ற பன்னீர் செல்வம்" என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொள்கிறது. மெய் நடுங்குகிறது. எழுதக் கையோடவில்லை. கண்கலங்கி மறைக்கிறது. கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது. பன்னீர் செல்வத்திற்குப் பாழும் உத்தியோகம் வந்ததும் போதும், அது அவரது உயிருக்கே உலையாய் இருந்ததும் போதும். அவர் தமிழர்களைப் பரிதவிக்கவிட்டு மறைந்து விட்டார்.
>
> இந்த உத்தியோகம் ஏன் வந்ததென்றே ஒவ்வொரு விநாடியும் தோன்றுகிறது. அவருக்கடுத்தாற்போல் யார் யார் என்று மனம் ஏங்குகிறது, தேடுகிறது, தேடித் தேடி ஏமாற்றமடைகிறது.
>
> என் மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்தபோதும் இயற்கைதானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா? இது பேராசையல்லவா என்று கருதினேன். பத்து வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன் படித்து விட்டு இந்தியா வந்து சேர்ந்து, சரியாக இருபதாவது வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை, கதறவில்லை.

பன்னீர் செல்வத்தின் மறைவு மனதை வாட்டிடுகின்றது. தமிழர்களைக் காணுந்தோறும் தமிழர் நிலையை எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கின்றது.

காரணம் முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுகதுக்கத்தைப் பொறுத்தது. தன்னலம் மறையும்போது அவர்களது மறைவின் நினைவும் மறந்துபோகும். பன்னீர் செல்வத்தின் மறைவு பொதுநலத்தைப் பொறுத்தது. எனவே தமிழர் களைக் காணுந்தோறும் நினைக்குந்தோறும் பன்னீர் செல்வம் ஞாபகத்திற்கு வருகின்றார். இது என்று மறைவது? இவருக்குப் பதில் யார் என்று மனம் திகைக்கிறது. பாழாய்ப் போன உத்தியோகம் சர்க்கரை பூசிய நஞ்சுருண்டைக்குள் குத்திய தூண்டில் முள்ளாக இருந்து விட்டது. ஆம், முள்ளில் பட்ட மீனாக ஆகிவிட்டார் செல்வம். இனி என் செய்வது? தமிழர் இயக்கமானது தோன்றிய நாள் முதல் இப்படியே தத்துக்களுக்கு ஆளாகி வந்திருக்கிறது என்றாலும் நாளுக்கு நாள் முன்னேறியே வந்திருக்கிற அனுபவம்தான் நமக்கும் தமிழ்மக்களுக்கும் சிறிது ஆறுதலளிக்கும் என்று கருதுகின்றேன்".

(குடி அரசு 17.3.1940)

பெரியாரின் ஆசிரியவுரையை இங்கு முழுமையாக வெளியிடு வதற்குக் காரணம் உண்டு. பெரியார் பொதுவாக உணர்ச்சி வசப்படா தவர், ஏன் உணர்ச்சிக்கு இடம் கொடாதவர் என்றே சொல்லலாம். 1933–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஈரோட்டு மருத்துவமனையில் தம் மனைவி நாகம்மையாரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போதே திருப்பத்தூர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டு விட்டார். மாநாட்டிலிருந்து திரும்பி வந்ததும் மனைவி இறந்து விட்டார். ஈமச் சடங்குகள் முடிந்தபின் அன்றே திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டு விட்டார். இவ்வாறு தம் குடும்பத்தில் தமக்கு நெருக்கமானவர்கள் இறந்தபோதுகூட அதைப் பெரிதாகக் கருதிக் கலங்காத அதே தந்தை பெரியார்தான் பன்னீர் செல்வத்தின் மறைவால் தமிழரின் நலன் காக்கப் போரிட்ட ஒரு பெருந்தலைவர் மறைந்து விட்டாரே என்று மனம் பதைக்கின்றார். அந்த அளவுக்குப் பன்னீர் செல்வத்தின் மறைவு பெரியாரை நிலை குலையச் செய்தது. ஆகவேதான் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 2–ஆம் நாளைப் பன்னீர் செல்வம் நாளாகக் கொண்டாடுமாறு தம் தோழர்களுக்கு அறிக்கை விடுக்கின்றார். செல்வம் இறந்து விட்டார், அவர் இனி உயிரோடு திரும்பி வரமாட்டார் என்பது உறுதியாக அறிவிக்கப்பட்டபோது 2–4–1940 ஆம் நாளைச் "செல்வம் மறைந்த துக்க நாள்"என்று துக்கம் கொண்டாடும்படி பெரியார் கேட்டுக் கொண்டார்.

"அன்று காலை ஒவ்வொரு ஊரிலுமுள்ள தமிழர்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகளைக் கட்ட வேண்டும்.

அந்த ஊர்களிலுள்ள எல்லாக் கடைகளையும் அடைத்துக் கடைகளில் கறுப்புக் கொடிகள் கட்டச் செய்து துக்கம் கொண்டாடச் செய்ய வேண்டும்.

மாலை கறுப்புக் கொடியுடன் ஒரு துக்க மௌன ஊர்வலம் வரவேண்டும். பின் ஒரு அனுதாபப் பொதுக் கூட்டம் கூட்டி அதில் சர் செல்வம் அவர்கள் தமிழர்களுக்குச் செய்த ஊழியத்தை எடுத்துக்கூறி ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இந்தத் துக்க நாள் கொண்டாடுவதில் எல்லா ஊர்களிலுமுள்ள தென்னிந்திய நலவுரிமைச் சங்கங்கள், சுய மரியாதைச் சங்கங்கள், தமிழர் சங்கங்கள் யாவும் ஒன்றாய்ச் சேர்ந்து கொள்ள வேண்டுகின்றேன்"

என்று அந்த அறிக்கையில் பெரியார் கூறினார். இது சர் பன்னீர் செல்வத்தின் மீது பெரியார் கொண்டிருந்த பெருமதிப்பை எடுத்துக் காட்டுவதாகும்.

# 2. புகழொடு தோற்றம்

## கிறித்துவத்தைத் தழுவிய முன்னோர்கள்

பன்னீர் செல்வத்தின் முன்னோர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருக்கோவிலூருக்கு அருகிலுள்ள வேட்டபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கிறித்துவ சமயத்தை எப்போது தழுவினர் என்பதைச் சுட்டிக் காட்டும் ஆதாரம் எதுவும் கிடைக்க வில்லை. ஒன்பது தலைமுறைகளுக்கு முந்திய முத்தையா என்பவரின் காலத்தில் தங்கள் குடும்பம் கிறித்துவத்தைத் தழுவியதாகப் பன்னீர் செல்வத்தின் பெரிய தந்தை வழக்கறிஞர் முத்துச்சாமி தங்கள் குடும்ப வரலாற்றில் எழுதிவைத்துள்ளார். வறுமையில் உழன்ற முத்தையாவின் கனவில் ஓர் அம்மையார் தோன்றி அவருக்கு இரு பொற்காசுகளையும் ஓர் ஓலைச்சுவடியையும் கொடுத்ததாகவும், முத்தையா தூக்கத்தி லிருந்து விழித்தபோது தம் தலையணைக்கு அடியில் இரு பொற்காசு களையும் ஓலைச்சுவடியையும் கண்டதாகவும் இக்குடும்பத்தில் நிலவி வரும் வழிவழிச்செய்தி கூறுகிறது. பொற்காசுகளைக் கொண்டு தம் வறுமையைப் போக்கிக் கொண்ட முத்தையா ஓலைச்சுவடியைப் படித்து, அதில் கத்தோலிக்க சமயக் கருத்துக்கள் கூறப்பட்டிருப்பதை உணர்ந்து, அச்சமயத்தை ஏற்றுக் கொண்டார் எனவும் அச்செய்தி கூறுகிறது.

## கிறித்துவர்கள் ஆனது எப்போது?

முத்தையாவே இவர்கள் முன்னோருள் முதல் கிறித்துவர் என்று கொண்டால் அவர் கிறித்துவத்தைத் தழுவியது 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எனக் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் அது புனித பிரான்சிஸ் சேவியரின் காலத்தில் நிகழ்ந்ததாதல் வேண்டும். ஆனால் 1545-ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் பகுதியிலிருந்து கடற்கரையோர மாக மயிலாப்பூருக்குப் புனித சேவியர் சென்றதாக வரலாறு கூறுகின் றதே தவிர, அவர் உள்நாட்டில் மறைப்பணி புரிந்ததாகக் கூறவில்லை. முத்தையா புனித சேவியரை எவ்விடத்தில் சந்தித்திருக்க முடியும் என்

பதும் தெரியவில்லை. எனினும் ஆண்டுக் கணக்கை வைத்துப் பார்க்கின்றபோது புனித பிரான்சிஸ் சேவியரே இவரைக் கிறித்துவ சமயத்தில் சேர்த்தவர் எனக் கணிப்பதில் தவறில்லை. போர்த்துக்கல் நாட்டு யேசுசபைத் துறவியாகிய ஜான் டி பிரிட்டோ என்னும் புனித அருளானந்தர் மறவநாட்டுப் பகுதியில் (இன்றைய இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்கள்) கிறித்துவ சமயப் பணி புரிந்தவர். இவர் தமது வழிகாட்டியாகிய தத்துவ போதகர் என்னும் யேசுசபைத் துறவியைப் போலக் காவியுடை தரித்துப் புலால் உணவு நீக்கித் தவ வாழ்வு வாழ்ந்தவர். இவர் பெரும்பாலும் பணியாற்றியது மறவ நாடாயினும் தஞ்சாவூர், கும்பகோணம், பில்லாவடந்தை, மயிலாடுதுறை, திருக்கோயிலூர் ஆகிய பகுதிகளிலும் பணியாற்றியுள்ளார். இவர் திருக்கோயிலூர்ப் பகுதியில் பணியாற்றிய காலத்தில் பன்னீர் செல்வத்தின் முன்னோர் கிறித்துவ சமயத்தைத் தழுவியிருக்கலாம் எனக் கூறுவோரும் உளர். அனேகமாகப் புனித சேவியர் காலத்தில் கிறித்துவ சமயத்தைத் தழுவிய இவர்களைப் புனித அருளானந்தர் கிறித்துவ சமயத்தில் உறுதிப்படுத்தியிருக்கலாம்.

## மாதாவே காப்பாற்றினார்

பன்னீர் செல்வத்தின் முன்னோருள் ஒருவராகிய முத்துச்சாமி கிறித்துவ சமயத் துறவியாக வேண்டும் என்னும் எண்ணத்துடன் புதுச்சேரியில் இலத்தீன், பிரெஞ்ச் மொழிகளைப் பயின்று குருத்துவப் பயிற்சியிலும் ஈடுபட்டார். ஆங்கிலேயர்கள் புதுச்சேரியைத் தாக்கிய அச்சமயத்தில் முத்துச்சாமியின் தமையன் அப்புசெல்வம் காணாமற் போய்விட்டார். அதன் காரணமாகவோ என்னவோ முத்துச்சாமி குரு மடத்தை விட்டு வெளியில் வந்து விட்டார். இலத்தீன், ஃப்ரெஞ்ச் மொழிகளில் வல்லவராயிருந்த அவருக்குப் பாம்பனில் கடற் சுங்க வரி மேற்பார்வையாளராக வேலை கிடைத்தது. அவர் பாம்பனில் தம் மனைவி மக்களோடும், மனைவியின் பெற்றோரோடும் வாழ்ந்து வரும் போது ஒரு நாள் கடற் கொந்தளிப்பால் அவரது வீடு மூழ்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலை கண்டு அஞ்சிய குடும்பம் முழுவதும் வீட்டிலிருந்த மரியன்னையின் திருச்சிலையின் முன் மண்டியிட்டு மன்றாடியது. வீட்டின் ஒரு பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்த தென்னை நார்க்குவியல் தண்ணீரால் அடித்துவரப்பட்டு வாயிலுக்கு வந்து தண்ணீரை வீட்டினுள் வராமல் தடுத்தது. விரைவில் நீர் வடிந்தது. குடும்பம் காப்பாற்றப்பட்டது. இத்திருச்சிலை இன்றும் செல்வபுரத்தில் பன்னீர் செல்வத்தின் வீட்டில் வணங்கப்பட்டு வருகின்றது. இந் நிகழ்ச்சியின் நினைவாக இறைவனுக்கு நன்றிசெலுத்தும் வகையில் பாம்பனுக்கருகிலுள்ள தங்கச்சி மடத்தில் முத்துச்சாமி சிற்றாலயம் ஒன்றைக் கட்டியெழுப்பினார்.

## நிலம் வாங்கினார்

பாம்பனிலிருந்தபோது தம் மனைவி அன்னம்மாளின் வேண்டுகோளுக்கிணங்கித் திருவாரூரிலிருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செட்டியாபுரத்தில் (இன்றைய செல்வபுரம்) முத்துச்சாமி நிலம் வாங்கினார். இவ்வாறு நிலம் வாங்கப்பட்டது 1811–ஆம் ஆண்டிலாகும். அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் செட்டியாபுரத்திலும், அருகிலுள்ள சித்தாடியிலும் அவர் நிலம் வாங்கினார்.

## முன்னோர்கள்

முத்துச்சாமியின் இரு புதல்வர்களுள் மூத்தவராகிய திரு.அன்னாசாமியே பன்னீர் செல்வத்தின் பாட்டனார். 1834–ஆம் ஆண்டில் திருமணம் செய்த அன்னாசாமி, 1855–ஆம் ஆண்டில் பிறந்த தம் இரண்டாம் மகனுக்குத் தம் தந்தையின் பாட்டனார் பெயராகிய தாமரைச் செல்வம் என்பதையே இட்டார். இந்தத் தாமரைச் செல்வமும், இரத்தினம் அம்மையாரும் செல்வத்தின் பெற்றோர் ஆவர்.

## தந்தையின் உழைப்பும் நேர்மையும்

அவ்வமயம் நாகைப்பட்டினத்திலிருந்த புனித வளனார் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் விடுதி மாணவராகத் தங்கியிருந்து படித்த தாமரைச் செல்வம் கல்விப் பருவத்தில் அடிக்கடி நோயுற்றதால் அவர் கல்லூரியில் பயில இயலாமற் போயிற்று. நாகைப்பட்டினத்தில் இரயில்வே எழுத்தராகப் பணியாற்றத் தொடங்கிய அவர் நோயின் காரணமாகப் பதவியினின்று விலகினார். தந்தையும் தமையனும் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தாமரைச் செல்வம் தம் சொந்த ஊராகிய செட்டியாபுரத்தில் தங்கித் தம் குடும்ப நிலங்களைக் கவனிக்கும் பொறுப்பையேற்றுக் கொண்டார். செட்டியாபுரத்தில் தங்கள் குடும்பத்தினர்க்கு உரிமையாக இருந்த நன்செய் நிலத்தில் முழுமுனைப்புடன் உழைப்பதில் ஈடுபட்டார். தம் உழைப்பால் இன்னும் அதிக நிலத்தை வாங்கித் தம் குடும்பத்தின் சொத்தைப் பெருக்கினார். நூறு ஏக்கராக இருந்த நிலத்தைப் பெருக்கி இருநூறு ஏக்கராக்கினார். பின்னாளில் நிலம் பிரிக்கப்பட்டபோது 'நான் தானே உழைத்துப் பெருக்கினேன், எனவே எனக்கு அதிகப் பங்கு வேண்டும்' என்றெல்லாம் எண்ணிக் கூடப் பார்க்காமல் நிலத்தைச் சமமாகப் பிரித்துத் தம் தமையன் வழக்கறிஞர் முத்துச்சாமியிடம் நூறு ஏக்கரை ஒப்படைத்தார்.

## பெற்றோரின் பண்பு

தாமரைச் செல்வமும் இரத்தினம் அம்மையாரும் தாராள உள்ளம் கொண்டவர்கள். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சி காண்பவர்கள். தங்கள் பணியாட்களையும் மிகுந்த அன்புடன் நடத்தியவர்கள். பிற்காலத்தில் திருச்செல்வமும் பன்னீர் செல்வமும் வெளியூர்களில் வாழ்ந்தபோது செல்வபுரத்திலுள்ள தங்கள் பண்ணை வீட்டில் இரத்தினம் அம்மையார் தனியாக வாழ்ந்துவந்தார். ஊரில் யாருக்காவது நோய் என்றாலும் விரைந்துசென்று உதவிவருவார்.

## தாய்வழிப்பாட்டனார்

தாமரைச் செல்வத்தின் நான்கு குழந்தைகளுள் ஆத்தாளம்மாள், செபாஸ்டின் திருச்செல்வம், பன்னீர் செல்வம் ஆகிய மூவரே நீண்ட நாள் வாழ்ந்தவர்கள். செல்வத்தின் தாய்வழிப்பாட்டனார் அவர்மீது தனிப்பட்ட பாசம் கொண்டிருந்தார். சிறுவன் செல்வத்தைப்பற்றித் தம் உறவினரிடம் அடிக்கடிப் பேசி மகிழ்வார் அவர். 'இச்சிறுவன் வாழ்வில் பல நலன்களைப் பெறுவான். மிகப் பெரிய மனிதனாக விளங்குவான்' என வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துரைப்பார். உறவினரும் முதியவரின் கூற்றை ஏற்றுக் கொள்வர். 'விளையும்

பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிக்கு ஏற்ற சான்றாக இளமையிலேயே விளங்கினார் செல்வம்.

## பூ வைக்கலாமா?

அக்காலத்தில் சிறுவர்களுக்குத் தலையில் கூந்தலை அள்ளி முடிந்து பூச்சூட்டி மகிழ்வது வழக்கம். ஆனால் செல்வத்தின் தந்தைவழிப் பாட்டனார் அன்னாசாமிக்கு அது பிடிக்காது. தம் பேரக்குழந்தைகளுக்குத் தலையில் பூச்சூட்டக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார். ஒருமுறை தலையில் பூவுடன் தெருவில் விளை யாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனைத் தம் பேரன் செல்வமென்று நினைத்து அவன் விளையாடிவிட்டு வரும்வரை வீட்டின்முன் காத்தி ருந்தார். வெகுநேரமாகியும் பேரன் திரும்பாததால் வீட்டினுள்ளே சென்றபோது அங்குத் தம் பேரனைக் கண்டு கோபத்துடன் திட்டினார். செல்வத்துக்கும் அவர் பாட்டிக்கும் முதியவரின் கோபத்துக்குக் காரணம் புரியவில்லை. முதியவர் கோபம் தணிந்து விளக்கியபோது, செல்வம் அன்று விளையாடச் செல்லாமல் தம்முடனே வீட்டில் இருந்ததைப் பாட்டியார் எடுத்துரைத்தபோதுதான் பாட்டனார்க்கு உண்மை புரிந்தது. தாம் அவசரப்பட்டுப் பேரனைத் திட்டியதற்காக மனம் வருந்தினார் அன்னாசாமி.

## தஞ்சையிலும் திருச்சியிலும் கல்வி

செல்வபுரத்தில் கல்விப் பயிற்சிக்கு வசதியில்லை. எனவே தம் ஆண் மக்களாகிய திருச்செல்வமும் பன்னீர் செல்வமும் தம் தமைய னாகிய வழக்குரைஞர் முத்துச்சாமியின் இல்லத்தில் தங்கியிருந்து தஞ்சையிலேயே படிக்க ஏற்பாடு செய்தார் தாமரைச் செல்வம். சிறந்த வழக்குரைஞராக அன்று தஞ்சையில் விளங்கிய முத்துச்சாமி, அவர் களின் படிப்புச் செலவையும் ஏற்றுக் கொண்டார். தஞ்சையில் பயின்ற பின் திருச்சி புனித வளனார் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் தம் படிப்பைத் தொடர்ந்தார் பன்னீர் செல்வம். படிக்கும் காலத்தில் மாணவர் மன்றங்களில் தம் சொல்வன்மையால் இடம்பெற்ற பன்னீர் செல்வம் தாம் பயின்ற கல்லூரியை என்றுமே மறந்ததில்லை.

## உனக்கே திருமணம்!

பெரும்பண்ணையூரைச் சார்ந்த முத்துச்சாமி ஒரு பெருநிலக் கிழார். இவர் தம் உறவினராகிய பன்னீர் செல்வத்தின் திறமைகளை விரைவிலேயே உணரும் வாய்ப்புப் பெற்றார். ஒருமுறை தம் பள்ளிப் பருவத்தில் திருவாரூர்ப் புகைவண்டி நிலையத்தில் மாணவர் பன்னீர் செல்வம் புகைவண்டிக்காகக் காத்திருந்தபோது, முத்துச்சாமி அங்கு அவரைக் கண்டு உரையாடினார். இளைஞராக இருந்த பன்னீர் செல்வத்தின் தோற்றப் பொலிவும் அறிவாற்றலும் அவரைக் கவர்ந்தன. அவருடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்த பின்பு, "எந்த வகுப்பில் பயில்கின்றாய்?" என்று முத்துச்சாமி வினவியபோது, "ஏழாம் வகுப்பில்" என்று பதிலுரைத்தார் பன்னீர் செல்வம். "நீ பள்ளியிறுதித் தேர்வை முடித்ததும் எனக்கு எழுது. என் மகளை உனக்குத் திருமணம் செய்து வைப்பேன்" என்று முத்துச்சாமி கூறியதைக் கேட்ட பன்னீர் செல்வம் நாணத்தால் தலைகுனிந்தார்.

## கண்டதும் காதல்!

உயர்நிலைக்கல்வித் தேர்வினை முடித்துவிட்டு விடுமுறைக்காக ஊர் வந்த செல்வம் ஒருநாள் பெரும்பண்ணையூருக்குச் சென்றார். அவர் தெருவில் நடந்து சென்றபோது ஒரு வீட்டின் மாடியில் அழகு மிக்க ஓர் இளம்பெண் நிற்பதைக் கண்டார். அப்பெண்மீது 'கண்டதும் காதல்' கொண்டார். மணந்தால் இத்தகைய அழகுமிக்க பெண்ணையே மணக்க வேண்டும் என்று மனதில் உறுதி கொண்டார்.

## எதிர்கால மனைவியைச் சந்தித்தார்

சில நாட்களுக்குப்பின் பெரும்பண்ணையூருக்குத் திருமணத்துக்காகச் சென்றிருந்த பன்னீர் செல்வத்தைத் திருமண வீட்டில் உண வருந்த விடாமல் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் முத்துச்சாமி. அங்குத் தம் மகள் பொன்னுபாப்பாள் அம்மாளைப் பன்னீர் செல்வத்துக்கு அறிமுகம் செய்து வைத்ததோடு அவரையே பன்னீர் செல்வத்துக்கு உணவு பரிமாறவும் செய்தார். தாம் ஏற்கனவே வீட்டு மாடியில் பார்த்துக் காதல் கொண்ட பெண் அவரே என்று கண்ட போது செல்வத்தின் மகிழ்ச்சி அளவு கடந்ததாயிற்று. முத்துச்சாமியின் வாக்குறுதியை நினைவுகூர்ந்த அவர் தாம் விரும்பிய பெண்ணை மணக்க எவ்விதத் தடையும் இராது என்பதை உணர்ந்து நெஞ்சத்தில் நிறைவு கொண்டார். பன்னீர் செல்வம் தம் எதிர்கால மனைவியை நேரில் சந்தித்தது இவ்வாறுதான். திருமணத்துக்கு முன்பே இருவர்க்கும் கடிதத் தொடர்பு ஏற்பட வழிகோலியதும் இந்தச் சந்திப்புத்தான்.

## மாமனாரின் கொடை உள்ளம்

பன்னீர் செல்வத்தின் மாமனாராகிய முத்துச்சாமி வள்ளன்மை உள்ளம் கொண்டவர். பெரும்பண்ணையூரைச் சேர்ந்த பல சிறுவர்கள் தக்க கல்வி பெறும் வாய்ப்பின்றி வருந்தியதைக் கண்ட அவர், தஞ்சையில் வாடகைக்கு ஒரு வீட்டை ஏற்பாடு செய்து தம் ஊரைச் சார்ந்த பலர் அங்குத் தங்கிக் கல்வி பயில வகை செய்தார். அச்சிறுவர்களின் நலத்தில் தாமே நேரிடையாகக் கவனம் செலுத்தினார். ஒவ்வொரு நாளும் அச்சிறுவர்களுக்கு என்னென்ன உணவு வழங்கப்பட வேண்டும் என்பதைக்கூட அவர் வகுத்துக் கொடுத்து மகிழ்ந்தார். தாம் தஞ்சை செல்லும்போதெல்லாம் அச்சிறுவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உண்பார். ஆண்டுதோறும் ஆகஸ்ட் திங்கள் 29–ஆம் நாள் தொடங்கி செப்டம்பர் 8–ஆம் நாள் வரை வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா நடக்கும் காலத்தில், திருவிழாவுக்காக வரும் ஏழைகளுக்கு இலவசமாக அவர் உணவு வழங்கி வந்தார்.

## செல்வத்தின் செல்வம்

பன்னீர் செல்வத்தின் பாட்டனார் அன்னாசாமி குணச் செல்வம், பணச் செல்வம், புகழ்ச் செல்வம் ஆகிய மூன்று செல்வங்களையும் பெற்றிருந்தார். இவற்றுள் பணச்செல்வம் தவிர மற்ற செல்வங்களைப் பன்னீர் செல்வம் பெற்றிருந்தார் என்பது மிகையாகாது.

## அண்ணனின் ஆசை

திருச்சி வளனார் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் பயின்று கொண்டிருக்கும்போது பன்னீர் செல்வத்துக்குத் திருமணம் நடத்த ஏற்பாடாயிற்று. மணப்பெண் மேற்குறித்த பெரும்பண்ணையூர் முத்துச் சாமியின் மகள் பொன்னுபாப்பாள் அம்மாள்தான். இருவரும் கடிதத் தொடர்பின் மூலம் தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டு திருமண நாளை எதிர்நோக்கி நின்றனர். இந்நிலையில் தமையன் செபாஸ்டின் திருச்செல்வம் அதே பொன்னுபாப்பாள் அம்மாளை மணக்க விரும்பினார். 'தம்பியை அழைத்து அவரிடம் தம் விருப்பத்தை நேரடியாகவே வெளிப்படுத்தினார். பொதுவாகக் குடும்பத்தில் மற்றவர்களுக்காக எதையும் விட்டுக் கொடுத்துவிடும் இயல்பினராய் விளங்கினார் பன்னீர் செல்வம். எனவே தம் விருப்பத்தை நிறைவேற்றுதல் கடினமன்று என்று திருச்செல்வம் எண்ணினார் போலும். ஆனால் பன்னீர் செல்வமோ, 'எதை விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பேன். இந்த ஒரு காரியத்தில் மட்டும் விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று பிடிவாதமாகவே இருந்தார். ஆகவே செபாஸ்டின் திருச்செல்வத்துக்குப் பெரும்பண்ணையூருக்கு அருகில் அமைந்துள்ள இலந்தவனச் சேரியிலுள்ள அப்பாசாமி, அனந்தம்மாள் ஆகியோரின் மகளான குழந்தையம்மாளை மணப் பெண்ணாக ஏற்பாடு செய்தனர் பெற்றோர்.

## ஒரே நாளில் திருமணம்

தாமரைச் செல்வம் தம் இரு ஆண்மக்களுக்கும் ஒரே நாளில் திருமணம் நடத்த விரும்பி ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்து ஈடுபட்டார். ஆயினும் ஒரே வீட்டில் சகோதரர் இருவரின் திருமணத்தையும் நடத்தக்கூடாது என்னும் கருத்துடையவராய், மூத்தவராகிய திருச்செல்வத்தின் திருமணத்தைச் செட்டியாபுரத்திலுள்ள தம் வீட்டில் நடத்த ஏற்பாடு செய்தார். வீட்டை அடுத்துள்ள இடத்தில் பெரிய பந்தலை அமைத்து அப்பந்தலில் பன்னீர் செல்வத்தின் திருமணத்தை நடத்த முனைந்தார். ஆனால் பொறாமை பிடித்த சிலர் அப் பந்தலுக்குத் தீயிட்டு எரித்துவிட்டனர். எனவே வீட்டு மாடியில் பன்னீர் செல்வத்துக்கும் கீழே திருச்செல்வத்துக்கும் திருமணம் நடந்தது.

## இங்கிலாந்தில் கல்வி

கல்லூரியில் இடைநிலை மாணவராக இருந்த பன்னீர் செல்வம் இங்கிலாந்துக்குச் சென்று சட்டக் கல்வி பயில விரும்பினார். அக் காலத்தில் இங்கிலாந்து நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இடம் பெறுவது அத்துணைக் கடினமாக இருக்கவில்லை. எனவே பன்னீர் செல்வத்துக்கு எளிதாக கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தது. அப்பல்கலைக்கழகத்தின் பீட்டர்ஸ் ஹவ்ஸில் செல்வம் மாணவரானார்.

மருத்துவக் கல்வியில் ஈடுபட்டிருந்த செபாஸ்டின் திருச்செல்வம் தமது மேற்படிப்புக்காக அயர்லாந்து நாடு சென்றார். அதன்பின் இலண்டன் நகரில் ஓராண்டு பயின்றார். அதே சமயம் இலண்டனில் பன்னீர் செல்வம் சட்டம் பயிலும் மாணவராக இருந்தார். எனினும் சகோதரர் இருவரும் ஒரே இடத்தில் தங்கவில்லை. ஒரே உறைவிடத்தில் இருவரும் ஏன் தங்கவில்லை என்பதற்குக் காரணம் தெரியவில்லை.

## கம்பீரத் தோற்றம்

இலண்டனில் பயிலும்போது பன்னீர் செல்வம் தம் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தினார். தம் வாதத் திறமையை வளர்த்துக் கொண்டார். சட்டக் கல்வியில் திறம்பெறும் வகையில் பயின்று வந்தார். 'க்ரேய்ஸ் இன்'னில் (Gray's Inn) அவர் சட்டக் கல்வி பயின்ற போது நன்றாக ஆடைகள் அணிவதிலும் கவனம் செலுத்தினார். இந்தியா திரும்பிய பின்னும் சிறப்பாக ஆடை அணிந்து வந்தார். அக்காலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலெல்லாம் கோட்டும் 'டை'யும் அணிந்தவராக அவர் கம்பீரமாகத் தோற்றம் அளிப்பதைக் காணலாம்.

## மேனாட்டு நாகரிகம்

இங்கிலாந்தில் பயின்ற காலத்தில் செல்வம் ஆங்கில உணவு வகைகளில் மிகுந்த விருப்பம் கொண்டார். இவ்விருப்பம் இந்தியா திரும்பிய பின்னும் குறையவில்லை. எனவே தமக்கு மேனாட்டு உணவு வகைகளைத் தயாரித்துத் தருவதற்காகத் தனிச் சமையல்காரரையும் சிறிது காலம் ஏற்பாடு செய்திருந்தார். இந்த உணவுப் பழக்கம் 'க்ரேய்ஸ் இன்'னில் அவர் பயின்ற காலத்தில் பழகியதேயாகும். ஏனெனில் ஆங்கில நாட்டில் சட்டம் பயிலும் மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதை விடக் கல்லூரியில் நடைபெறும் விருந்துகளில் கலந்து கொள்வதில் அதிகக் கவனம் செலுத்துவர். இவ்விருந்துகளில் கலந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இதனால் சட்டக் கல்லூரி மாணவர்கள் சிறந்த நாகரிகத்தைக் கற்றுக் கொள்ள இயலும் என்பதால் இப்பழக்கம் கட்டாயமாக்கப்பட்டிருக்கலாம். செல்வமோ விருந்துகளில் கலந்து கொண்டு நாகரிகத்தைக் கற்றுக் கொண்டதோடு, கல்வியிலும் சிறப்புக் கவனம் செலுத்தித் திறமை பெற்றார். இலண்டனில் பயிலும்போது சிகரெட் பிடிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொண்டார். பின்னாளில் இப்பழக்கத்தைக் குறைத்துக் கொண்டாலும் முற்றிலும் விட்டு விடவில்லை.

## பி.டி. இராசனுடன் தொடர்பு

செல்வம் இலண்டனில் பயின்று வந்தபோது பொன்னம்பலம் தியாகராசனும் அங்கு மாணவராக இருந்தார். இவரே பின்னாளில் நீதிக் கட்சியின் சிறந்த தலைவர்களுள் ஒருவராகப் புகழ் பெற்ற தமிழவேள் பி.டி. இராசன் ஆவார். சைவ உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்த பி.டி. இராசன் இலண்டனில் தொடக் கத்தில் மிகுந்த துன்பத்துக்கு ஆளானார். அப்போதெல்லாம் செல்வம் அவருக்கு மிகவும் ஆறுதலாக இருந்தார். புதிய மாணவராகிய பி.டி. இராசனை அடிக்கடி தம் அறைக்கு அழைத்துத் தேநீரும் சிற்றுண்டி யும் வழங்குவார். இதனால் பி.டி. இராசன் தம் தொடக்க காலத் துன்பங்களை மேற்கொள்ள முடிந்தது. இத்தொடர்பு இந்தியா திரும்பிய பின்னரும் இருவருக்கிடையேயும் தொடர்ந்தது. செல்வம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகவும், பி.டி. இராசன் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த காலத்தில் மதுரையிலிருந்து பி.டி. இராசன் புகைவண்டியில் சென்னைக்குச் செல்லும்போதெல் லாம் தஞ்சைப் புகைவண்டி நிலையத்தில் செல்வம் இராசனைச் சந்திப்பார். அவருக்குப் பிடித்தமான முந்திரிப் பருப்பு வழங்கி

மகிழ்வார். அவ்வாறே சென்னையிலிருந்து மதுரைக்கு இராசன் திரும்புகையில் புகைவண்டி தஞ்சைக்கு விடியற்காலையில் வரும். செல்வம் அவரைச் சந்தித்து காஃபி வழங்கி மகிழ்வார்.

## பாரிஸ்டர் பட்டம்

இலண்டனில் தம் சட்டக் கல்வியை முடித்துக் கொண்டு 26–1–1912 அன்று செல்வம் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். 31–1–1912 அன்று பாரிஸ்டர் பட்டியலில் கையொப்பமிட்டு முழு பாரிஸ்டராகத் தகுதி பெற்றார். 22–3–1912 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.

## மகளின் பாசம்

1912–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா திரும்பிய செல்வம் தம் மகள் மேரியை முதல் முறையாகக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி கொண்டார். அவர் இங்கிலாந்துக்குக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருக்கையில் ஏடன் துறைமுகத்தை அடைந்தபோது தமக்கு மகள் பிறந்திருக்கும் செய்தியைத் தாங்கி வந்த கடிதத்தைப் படித்துப் பெருமகிழ்வு கொண்டார். இப்போது அக்குழந்தை நான்கு வயதுடைய வளாக, குறுகுறு நடந்து சிறுகை நீட்டி மழலை பேசியதையெல்லாம் வியப்புடன் கண்ணுற்று மகிழ்ந்தார். தான் பிறந்தது முதல் கண்டிராத தந்தையை இப்போது கண்ட மேரி தன் தந்தையிடம் மிகுந்த பாசத்துடன் ஒட்டிக் கொண்டாள்.

## தஞ்சையில் வழக்கறிஞர்

இந்தியா திரும்பித் தம் குடும்பத்தினருடன் சில நாட்களைச் செலவிட்ட பின் செல்வம் அடுத்து என்ன செய்வதென்று சிந்திக்கலானார். சென்னைக்குச் சென்று சிறிது காலம் வழக்கறிஞராக இருந்தார். சென்னை நகரம் அவருக்குப் பிடிக்கவில்லை. மலேரியாவினால் அடிக்கடி பாதிக்கப்பட்டார். நீண்ட காலம் வெளி நாடுகளில் வாழ்ந்ததால் தம் சொந்த மண்ணாகிய தஞ்சை மண்ணிலேயே வாழ எண்ணினாரோ என்னவோ! தஞ்சையில் குடியேறி வழக்கறிஞர் பணியாற்றத் தொடங்கினார். விரைவிலேயே சிறந்த குண நலன்களும் மிகுந்த அறிவாற்றலும் கொண்ட வழக்கறிஞர் என்று புகழ் பெற்றார்.

# 3. வாழ்வும் வளமும்

பன்னீர் செல்வத்தின் குடும்ப வாழ்வு இனிமை மிக்க வாழ்வாகும். தம் மனதுக்கியைந்த பெண்மணியாகிய பொன்னு பாப்பாள் அம்மாளை மணந்த அவர் பலருக்கும் எடுத்துக்காட்டான இல்லற வாழ்வு வாழ்ந்து வந்தார். இம்மண வாழ்வின் பயனாக அவர்களுக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் மேரி, ஜார்ஜ், டெய்ஸி, விக்டோரியா, எட்வர்ட், ஆல்பர்ட் ஆகிய அறுவர் இன்றும் உயிர் வாழ்ந்து வருகின்றனர். இரண்டாவது குழந்தை(மகன்)யும் ஏழாவது குழந்தை(பெண்)யும் ஒரு வயது நிரம்பா முன்னரே இறந்து விட்டனர். செல்வம் இலண்டனில் பயிலச் சென்றபோது பிறந்த முதல் குழந்தை தான் மேரி. செல்வம் பயணம் மேற்கொண்டபோது அவரது மனைவி நிறை கர்ப்பிணியாக இருந்தார். மகப் பேற்றுக்குப் பின் பயணத்தைத் தொடங்கவே விரும்பினார் செல்வம். ஆனால் அந்தக் கப்பலைத் தவற விட்டால் பின் அடுத்த கப்பல் கிடைக்கக் காலச் சுணக்கம் ஏற்படும், கல்வியை உரிய காலத்தில் தொடங்க இயலாது என்பதால் அந்நிலையிலேயே பயணம் தொடங்கினார். பொன்னு பாப்பாள் அம்மாளுக்கும் செல்வத்துக்கும் இது மிகுந்த கவலை தருவதாக இருந்தாலும், செல்வத்தின் நன்மையை முன்னிட்டு இத்தியாகத்தை இருவருமே மேற்கொண்டனர்.

## மனைவியிடமே பொறுப்பு

செல்வம் இந்தியா திரும்பிய பின் இருவரும் இணைபிரியாத் தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். செல்வம் தம் கையில் பணம் ஒன்றுமே வைத்துக் கொள்ள மாட்டார். தம் வருமானம் முழுவதையும் தம் மனைவியிடமே கொடுத்து விடுவார். தம் மூக்குப்பொடிச் செலவுக்காக ஒவ்வொரு நாளும் மனைவியிடம் காலணா (ஏறக்குறைய ஒன்றே கால் பைசா) பெற்றுக் கொள்வார். வீட்டு நிர்வாகமெல்லாம் மனைவியின் பொறுப்புத்தான். செல்வம் அதில் தலையிடவே மாட்டார். காலையில் செல்வம் வீட்டை விட்டுப் புறப்படும்போது அவரது செலவுகளுக்காகக் கோட்டுப் பையில் பொன்னுபாப்பாள்

அம்மாள் ஒரு ரூபாய்ப் பணம் வைப்பார். மறுநாள் காலையில், எஞ்சியிருக்கும் சில்லறைக் காசுகளை எடுத்து விட்டு மீண்டும் ஒரு ரூபாய் வைப்பார்.

## தாராள உள்ளம்

தம்மிடம் உதவி கேட்டு யார் வந்தாலும் செல்வம் அவர்களுக்கு உதவிடத் தயங்க மாட்டார். அவர் கையில் பணம் வைத்துக் கொள்வதில்லை. எனவே உதவி கேட்டு வருவோரிடம் சீட்டுக் கொடுத்தனுப்பி, மளிகைக் கடையிலோ துணிக் கடையிலோ வேண்டிய பொருட்களைப் பெற்றுக் கொள்ளச் சொல்வார். அடுத்த மாதத் தொடக்கத்தில் இத்தகைய கடன் செல்வத்தின் கணக்கில் பெருந்தொகையாக மாறியிருக்கும். அதை உடனே அடைத்து விடுவார். வருமானம் குறைந்த போது இக்கடன்களை மெல்ல அடைப்பதும் உண்டு. ஆனால் வருமானம் குறைந்த காலத்திலும், தம்மிடம் இல்லையென வந்தோர்க்கு இல்லையென்று சொல்லாத உள்ளம் கொண்டவர் அவர்.

## ஆறு இலட்சம்!

இவ்வாறு தம் தம்பி தாராளமாகச் செலவிடுவதைக் கண்ட திருச்செல்வம் செல்வத்திடம் ஒரு முறை, "உனக்கு ஆறு குழந்தைகள் இருந்தும் நீ எதுவுமே சேமித்து வைப்பதில்லையே" என்று குறைபட்டுக் கொண்டார். செல்வமோ அமைதியாக, "என் ஆறு குழந்தைகளும் ஆறு இலட்சம் போன்றவர்கள். நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டார்கள். அது போதும் எனக்கு" என்று பதிலளித்தார்.

செல்வத்தின் தாராளச் செலவுகளால் அவரது மனைவி குறைப் பட்டுக் கொண்டதுண்டு. அவர் தாராளமாகச் செலவிடுவதை முன்னிட்டு அல்ல, ஆனால் அதனால் வரும் கடனை அடைக்க முடியாமல் செல்வம் திண்டாடுவதைப் பார்த்தே அவர் வருந்துவார். ஆனால் தம் கணவர் பிறருக்கு உதவி செய்யக் கூடாது என்று ஒரு போதும் அவர் தடுத்ததில்லை.

## மனைவி வழி வந்த சொத்து

பொன்னு பாப்பாளின் தந்தை முத்துச்சாமி தம் மருமகன் மீது அளவற்ற பாசம் கொண்டவர். ஆனால் தம் ஊரில் முன்பு நிகழ்ந்திருந்த சில நிகழ்ச்சிகளால் வழக்கறிஞர்கள்மீது அவநம்பிக்கை கொண்டிருந்தார். அது தம் சொந்த மருமகன் செல்வத்தின்மீதும் ஐயம் கொள்ளச் செய்தது. ஒருவேளை செல்வம் தம் சட்ட அறிவின் துணை கொண்டு தம் நிலங்களையெல்லாம் ஏதாவதொரு வகையில் அபகரித்து விடுவாரோ என்னும் அச்சம் அவரை ஆட்கொண்டது. எனவே செல்வம் இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும்போதே தம் நிலங்களின்மீது தம் மகள் பொன்னு பாப்பாளுக்கு எத்தகைய உரிமையும் இல்லை என்று அவரிடம் எழுதி வாங்கிக் கொண்டார். பொன்னு பாப்பாளும் தயங்காமல் தந்தை கேட்டவாறே எழுதிக் கொடுத்தார். இச்செய்தியை இலண்டனிலிருந்த செல்வத்துக்குத் தெரிவித்தபோது அவரும் தம் மனைவி செய்தது சரியே என்று பாராட்டி எழுதினார். ஆனால் செல்வம் இந்தியா திரும்பிப் பொதுநலப் பணிகளில் ஈடுபட்டதையும், எத்தகைய ஊழலுக்கும் இடம் கொடாத வகையில்

அவர் வாழ்ந்து வந்ததையும், அவரது நேர்மையையும் கண்ட முத்துச்சாமி மனம் மாறினார். நூற்று முப்பத்திரண்டு ஏக்கர் நிலம் புதிதாக வாங்கித் தம் மகள் பெயரில் எழுதி வைத்தார். அதன்பின் செல்வத்தின் பொருளாதார நிலை முன்னேறியது. ஆனால் தமக்காக அதிகம் செலவழித்துக் கொள்வதைவிடத் தேவையென்று தம்மை அணுகி வந்தவர்களுக்கு உதவுவதிலேயே அவர் அதிகம் ஆர்வம் காட்டினார்.

## போதுமென்னும் மனம்

பணம் சம்பாதிக்க வேண்டுமென்று செல்வம் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. வழக்குரைஞர் தொழிலில் அவர் முழுமையாக ஈடுபட்டிருந்தால் பெருஞ்செல்வம் திரட்டியிருப்பார். ஆனால் அவர் அத்தொழிலில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. எப்போதாவது ஏதாவது வழக்கை எடுத்துக் கொள்வார். அதனால் வரும் வருமானமும், நிலத்திலிருந்து வரும் வருமானமும் தமது குடும்பச் செலவுக்குப் போதும் என்று மன நிறைவு கொண்டிருந்தார் அவர்.

## சொத்துச் சேர்ப்பது பெரிதல்ல

செல்வம் தம் வருமானத்தைக் கொண்டு சொத்துக்கள் சேர்த்ததில்லை. தஞ்சையில் வாழ்ந்த காலத்தில் சொந்த வீடு வாங்கியிருந்தார். பொன்னு பாப்பாள் அம்மாளுக்கு அவரது தந்தையார் அன்பளிப்பாகக் கொடுத்திருந்த நிலத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டே அவ்வீட்டை ரூ.17,000த்துக்கு வாங்கினார். மகர்நோன்புச் சாவடியில் மிஷன் தெருவில் இருந்த அவ்வீட்டுக்குச் 'செல்வ விலாஸ்' என்று பெயரிட்டார். சிறிதுகாலம் காரும் வைத்திருந்தார்.

செல்வபுரத்தைச் சேர்ந்த சுப்பையா என்பவர் தம் இரண்டு ஏக்கர் நிலத்தின்மீது ஒருவரிடம் கடன் வாங்கியிருந்தார். அக்கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் துன்புற்றார். கடனைக் கட்டாமல் நிலம் ஏலத்துக்கு வந்தால் விலை மிகவும் குறைந்து விடுமே என்னும் அச்சத்தால் தம் நிலத்தை உரிய விலைக்கு வாங்கிக் கொள்ளுமாறு செல்வத்தைக் கேட்டுக் கொண்டார். செல்வமும் அவரது நிலைக்கு இரங்கி அந்நிலத்தை வாங்கினார். தஞ்சையிலுள்ள வீட்டையும் காரையும் பிற்காலத்தில் அவர் விற்றபோதும் செல்வபுரத்தில் தாம் வாங்கியிருந்த நிலத்தை மட்டும் விற்று விடவில்லை. தம் தந்தையார் உழைத்து வாங்கிய சொத்தாக இந்த இரண்டு ஏக்கர் நிலம் மட்டுமே அவரது மக்களுக்குக் கிடைத்தது. மற்ற நிலமெல்லாம் அவர்களது முன்னோர் வழியாக வந்தவையே.

இந்திய அமைச்சரின் ஆலோசகராகப் பதவியேற்கச் செல்வம் 1940–ஆம் ஆண்டு இலண்டனுக்குப் புறப்பட்டபோது அவரது வங்கிக் கணக்கில் பதினைந்து ரூபாய் இரண்டு அணா ஐந்து பைசா மட்டுமே இருந்தது. பயணச் செலவுக்காக முத்தையா செட்டியாரிடம் மூவாயிரம் ரூபாய் கடனாகப் பெற்றுக்கொண்டுதான் இலண்டனுக்குப் புறப்பட்டார் அவர். பின்பு அரசிடமிருந்து பயணச் செலவுத்தொகை கிடைத்ததும் ஜார்ஜ் அந்தக் கடனை அடைத்துவிட்டார்.

## திருச்செல்வத்தின் ஆத்திரம்

செல்வத்தின் தமையன் டாக்டர் செபாஸ்டின் திருச்செல்வம் பர்மா நாட்டு இரங்கூனில் நலத்துறை அதிகாரியாகப் பணியாற்றிய பின், இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் பொது நலத் துறைத் துணை இயக்குநராகப் பணியாற்றி வந்தார். அவருக்குக் குழந்தைச் செல்வம் இல்லை.

தம் வயது முதிர்ச்சியால் கவலை கொண்ட தாமரைச் செல்வம் விருப்பு முறி எழுதி வைக்க விரும்பினார். தஞ்சையிலிருந்து தக்க வழக்கறிஞரை அழைத்து வருமாறு அவர் பலமுறை கேட்டுக் கொண்டும் செல்வம் தம் தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவில்லை. தந்தை திரும்பத் திரும்பச் சொல்லவே, இறுதியாகத் தம் நண்பராகிய த.வே.உமா மகேசுவரனாரைத் தந்தையிடம் அழைத்து வந்தார். தம் சொத்தை மூன்று பங்காக்கித் தம் ஆண் மக்கள் இருவருக்கும் ஆளுக்கு 33 ஏக்கராகப் பிரித்தார் தாமரைச் செல்வம். அடுத்த 33 ஏக்கரைத் தம் மனைவி இரத்தினம்மாளுக்கு அனுபவ உரிமையாக்கினார். அதாவது அவர் தம் வாழ்நாளில் நிலத்தை அனுபவிக்கலாம். அது அவரது இறப்புக்குப்பின் மக்களுக்கு உரியதாகி விடும். இரத்தினம்மாள் தம் வாழ்நாளின்போது அந்நிலத்தை விற்க முடியாது. செபாஸ்டின் குழந்தைச் செல்வமின்றி இறந்தால் அவரது பங்கு பன்னீர் செல்வத்தின் குழந்தைகளுக்கு உரியதாக வேண்டும் என்று தந்தையார் விருப்புமுறி எழுதத் தீர்மானித்தார். பன்னீர் செல்வம் அது வேண்டாமென்று மறுத்துரைத்தார். சொத்தைப் பிரித்து எழுதினால் போதுமென்றும், தம் தமையனின் சொத்து அவர் குழந்தைச் செல்வமின்றி இறந்தால் தம் மக்களுக்குச் சேர வேண்டுமென எழுத வேண்டாமென்றும் தந்தையிடம் வலியுறுத்தினார். தந்தையோ பிடிவாதமாக இருந்தார். "மூத்தவனுக்குக் குழந்தை பிறந்தால் சொத்து அவனது குழந்தைகளுக்குச் சேரட்டும். பிறக்காவிட்டால் தானே இவ்வாறு உன் மக்களுக்குச் சேர வேண்டும் என்று எழுதியுள்ளேன். அதில் ஒன்றும் தவறில்லை" என்று தம் மகனுடன் வாதாடினார். தம் தமையனின் மன நிலையை நன்குணர்ந்த செல்வம் மீண்டும் மீண்டும் மறுத்துரைத்தும் தந்தையார் அவருக்குச் செவிமடுக்கவில்லை.

சொத்துப் பிரிக்கும் விவரம் அப்போது ராஞ்சியில் பணியாற்றிக் கொண்டிருந்த செபாஸ்டினுக்கு எட்டியது. அவர் உடனே செல்வ புரத்துக்குத் திரும்பித் தம் தந்தையாரிடம் கோபித்துக் கொண்டார். 'எனக்குச் சேர வேண்டிய சொத்து எனக்கு வரட்டும். என் காலத் துக்குப் பின் அது யாருக்கு உரியது என்பதை நான் தீர்மானித்துக் கொள்வேன்' என்று தம் தந்தையாரிடம் வாதிட்டார். தந்தையாரோ தம் பிடிவாதத்திலிருந்து இம்மியளவும் தளரவில்லை. சொத்துத் தொடர் பாகத் தம் தந்தைக்கும் தமையனுக்குமிடையே கசப்புத் தோன்றியுள்ள நிலை செல்வத்துக்கு ஏற்புடையதாக இல்லை. தம் தந்தையிடம் தொடர்ந்து வாதாடித் தம் தமையனின் விருப்பப்படியே தந்தையாரின் விருப்புமுறி அமைய வகை செய்தார்.

## திருச்செல்வத்தின் சொத்துக்கள்

குழந்தைப் பேறில்லாவிடினும் செபாஸ்டின் சொத்துச் சேர்ப்

பதில் மிகுந்த ஆர்வம் செலுத்தினார். அவரும் அவரது மனைவியும் இயல்பிலேயே சிக்கனப் பிரியர்களாக இருந்ததால் தம் மாத வருமானத்தில் எஞ்சிய பணத்தைச் சேர்த்துச் செல்வபுரத்துக்கருகிலுள்ள பண்ணைவிளாகத்தில் நிலம் வாங்கத் தொடங்கினார். உயர்ந்த அரசுப் பதவியில் இருந்த அவரால் மிகுதியாகச் சேமிக்க முடிந்தது. விலைக்கு வாங்கிய நிலமும் குத்தகைக்கு எடுத்த நிலமுமாகச் சேர்ந்து 890 ஏக்கர் நிலத்துக்கு அவர் உரிமையாளரானார். 1932–ஆம் ஆண்டில் தம் பணியிலிருந்து முன்ஓய்வு பெற்றுக் கொண்டு செபாஸ்டின் பண்ணை விளாகத்தில் குடியேறினார்.

## காரணம் என்ன?

செல்வபுரத்தினராகிய தாமரைச் செல்வத்துக்கும் அவரது தமையனாகிய வழக்கறிஞர் முத்துச்சாமிக்கும் சேர்த்து மொத்தம் இருநூறு ஏக்கர் நிலம் தான் இருந்தது. அதுவும் கூட அவர்களின் தந்தையார் அன்னாசாமி இறந்த போது நூறு ஏக்கராகத்தான் இருந்தது. தாமரைச் செல்வம் தம் முயற்சியால் அதை இருநூறு ஏக்கராகப் பெருக்கினார். இவர்களின் உறவினர்கள் பலர் பெரும்பண்ணையூரில் வாழ்ந்து வந்தனர். பெரும்பண்ணையூர்க்காரர்களுக்கும் செல்வபுரத்துக்காரர்களுக்கும் தொடக்கத்திலிருந்தே கொள்வினை கொடுப்பினை அதிகம். இரண்டு ஊர்க்காரர்களுமே தென்னாற்காடு பகுதியிலிருந்து தஞ்சைப் பகுதிக்கு வந்து குடியேறியவர்களே. ஆனால் பெரும்பண்ணையூரில் பலர் பெரும் நிலக்கிழார்களாக இருந்தனர். செல்வபுரத்தாருக்கு நிலம் அதிகம் இல்லை என்பதால் அவர்களைப் பெரும்பண்ணையூரினர் இழிவாக நடத்தினர். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் "நீங்கள் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறீர்கள்?" என்று பரிகாசம் செய்வதுண்டு. இந்தப் பரிகாசமே டாக்டர் செபாஸ்டினைச் சொத்துச் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடச் செய்தது எனலாம். ஆனால் ஏனோ அத்தகைய ஆர்வம் பன்னீர் செல்வத்துக்கு ஏற்படவே இல்லை.

## சிக்கனமும் வள்ளன்மையும்

சிக்கனமாக இருந்து தாம் சேர்த்த சொத்தில் 230 ஏக்கர் நிலத்தைத் தம் மனைவிக்கு எழுதிவைத்த டாக்டர் செபாஸ்டின் திருச்செல்வம், எஞ்சிய 660 ஏக்கர் நிலத்தைக் கொண்டு பண்ணை விளாகத்தில் செயராக்கினி அன்னை அறக்கட்டளையை நிறுவினார். இதை மயிலாப்பூர் ஆயரிடம் ஒப்புவித்து அறக்கட்டளையின் வருமானத்தைக் கொண்டு அறுபது ஏழைகளுக்கு நாள்தோறும் உணவு வழங்க வேண்டுமென்றும், நோயாளிகளுக்கு மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்றும் விருப்பு முறி எழுதினார். இந்த அறக்கட்டளை இன்று பண்ணைவிளாகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக முதியோர் இல்லங்கள் நடத்தி வருகின்றது. வயது முதிர்ந்த பல ஏழைகள் இதனால் பயன் பெறுகின்றார்கள். பண்ணை விளாகம், கங்களாஞ்சேரி, திருவாரூர் ஆகிய இடங்களில் ஏழைகளுக்கு மருத்துவ உதவியும் வழங்கப்படுகிறது. டாக்டர் செபாஸ்டின் திருச்செல்வம் ஏற்படுத்திய செயராக்கினி அன்னை அறக்கட்டளையால் இவ்வாறு சாதி மத வேறுபாடின்றி இன்று பலர் பயன்பெற்று வருகின்றனர்.

## திருமதி செபாஸ்டினின் தாராள உள்ளம்

தம் கணவர் தமக்கு விட்டுச் சென்ற 230 ஏக்கர் நிலத்தில் பெரும் பகுதியைத் தம் கணவரின் உறவினர்க்கே எழுதி வைத்தார் குழந்தை யம்மாள் செபாஸ்டின். செல்வத்தின் ஆண்மக்களாகிய ஜார்ஜ், எட்வர்ட், ஆல்பர்ட் ஆகிய மூவருக்கும் 92 ஏக்கரும், செல்வத்தின் தமக்கையாகிய ஆத்தாளம்மாளின் மக்களுக்கு 105 ஏக்கரும் எழுதி வைத்த குழந்தையம்மாள் எஞ்சிய நிலத்தைக் காரையூர்ப் பங்குக் கோவிலுக்கு எழுதி வைத்தார். இவ்வாறு கணவன் மனைவி இருவருமே தங்களின் கொடைவண்மையால் பலரும் பயன்பெற வழிவகுத்தனர்.

## குடும்பத்தினர்மீது பாசம்

தம் குழந்தைகள்மீது செல்வத்துக்கு அளவற்ற பாசம். அவர்கள் ஏதாவது குறும்பு செய்தால்கூட அன்பாகப் பேசி அவர்களைத் திருத்தவே அவர் முனைவார். மிக மிக அரிதாகவே அவர்களை அடித்துத் திருத்த முயல்வார். செல்வம் தம் அலுவலகப் பணிகளை முடித்துக் கொண்டு இல்லம் திரும்பியதும் தம் குழந்தைகளைப்பற்றிக் குறை ஏதாவது இருந்தால் அவரிடம் பொன்னு பாப்பாள் அம்மாள் எடுத்துக் கூறுவார். குறும்பு செய்த குழந்தையைப் பார்த்துச் செல்வம் "ஏன்'பா, அப்படிச் செய்தாயா?" என்று புன்முறுவலுடன் கேட்பார். "ஆமா, இப்படிக் கேட்டால் அவர்கள் உருப்பட்டாற் போலத்தான்" என்பார் பொன்னு பாப்பாள் அம்மாள். அத்துடன் அப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவார் செல்வம். தம் மூத்த மகள் மேரிக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் 'அன்புள்ள குழந்தைக்கு' என்று விளித்தே எழுதுவார். மேரிக்குத் திருமணமாகி அவர் தாய்மைப் பேறு அடைந்த பின்பும் கூட அப்படித்தான் எழுதுவார்.

மனைவி எப்போதாவது தம்மீது வருத்தம் கொண்டிருந்தால் தம் தொப்பியை அவரது தலையின்மீது வைத்துக் கேலி செய்வார். மனைவியும் தம் வருத்தத்தை மறந்தவராய்ச் சிரிக்கத் தொடங்கி விடுவார்.

## ராஞ்சியில் ஜார்ஜ்

ஜார்ஜின் மீது பெரியப்பா டாக்டர் செபாஸ்டின் திருச் செல்வத்துக்கும் அவரது மனைவி குழந்தையம்மாளுக்கும் மிகுந்த பிரியம். 1926–ஆம் ஆண்டில் தந்தையார் தாமரைச் செல்வம் நோயுற்று மரணப் படுக்கையில் இருந்தபோது செபாஸ்டின் தம் தந்தையாரைக் காண ராஞ்சியிலிருந்து வந்தார். தந்தையாரின் அடக்கத்துக்குப் பின் தம்பியிடம் "ஜார்ஜை என்னோடு ராஞ்சிக்கு அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்கிறேன்" என்று கேட்டார். செல்வத்துக்கோ தம் மூத்த மகனைப் பிரிந்திருக்கச் சற்றும் விருப்பமில்லை. ஆனால் தமையன் வலியுறுத்தவே இசைவு தெரிவித்தார். கணவர் இசைவு தெரிவித்ததால் பொன்னு பாப்பாளும் மறுக்காமல் இசைந்தார். எனவே ஜார்ஜ் தம் பெரியப்பா பெரியம்மாவுடன் ஓராண்டுக்காலம் ராஞ்சிக்கு அருகிலுள்ள 'நாம்கும்' என்னுமிடத்தில் வாழ்ந்தார். ஆனால் அவரால் பெற்றோரைப் பிரிந்து இருக்க முடியவில்லை. எனவே மீண்டும் தம் பெற்றோரிடமே வந்து சேர்ந்தார். பிள்ளையைப் பார்த்த பெற்றோருக்கு அளவற்ற மகிழ்ச்சி. ஆனால் டாக்டர்

செபாஸ்டினுக்கும் அவரது மனைவிக்கும் மிகுந்த வருத்தம். குழந்தை தன் பெற்றோரைப் பிரிந்து வாழ இயலாதபோது என்ன செய்வது என்று தம் மனதைத் தேற்றிக் கொண்டனர் அவர்கள்.

## சொல்லாமல் சொன்னார்

ஒருமுறை செல்வம் தம் மூத்த மகள் மேரியுடன் செல்வபுரத்துக்குச் சென்றிருந்தார். ஊரிலிருந்து தஞ்சைக்குத் திரும்புமுன் சிறுமி மேரி தம் பாட்டியிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றாள். தாத்தாவுக்குத் தெரியாமல் பாட்டி பேத்தியிடம் நூறு ரூபாய் கொடுத்தார். வீட்டு முன் திண்ணையில் உலாவிக் கொண்டிருந்த செல்வத்திடம் மேரி வந்து பணத்தைக் கொடுத்தாள். தந்தைக்குத் தெரியாமல் தம் அன்னையார் மேரிக்குப் பணம் கொடுத்ததைச் செல்வம் விரும்பவில்லை. ஆனால் அன்னையைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை. எனவே வீட்டினுள்ளே வந்து கட்டிலில் படுத்திருந்த தம் தந்தையாரின் காதில் விழும் வண்ணம் உரத்த குரலில், "என்னம்மா, பேத்திக்கு நூறு ரூபாய் பணம் கொடுத்து அனுப்புகிறீர்களா?" என்று கேட்டார். மகனின் வார்த்தைகளைக் கேட்ட தந்தையார் சிரித்துக் கொண்டார். இதைத் தந்தைக்குத் தெரிவித்து விட்டோம் என்று செல்வமும் மனநிறைவு கொண்டார். அதன் பின்னரே தம் பெற்றோரிடம் விடைபெற்றுச் சென்றார்.

## விளையாட்டுக்கு ஊக்கம்

தம் குழந்தைகள் பல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதில் செல்வத்துக்கு அளவற்ற ஆர்வம். மூத்த புதல்வராகிய ஜார்ஜ் தஞ்சை புனித அந்தோனியார் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற காலத்தில் படிப்பைவிட விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டினார். பள்ளியில் கால்பந்து விளையாடும்போது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் கால்பந்தை விட்டு விட்டுப் பூப்பந்து ஆட்டத்தில் அவர் ஈடுபட்டார். அவ்விளையாட்டிலும் வல்லவராகி விட்ட ஜார்ஜ் 'செல்வ விலாஸ் பூப்பந்தாட்டக் குழு' என்னும் குழு ஒன்றினைத் தொடங்கிச் சென்னை மாநில அளவில் போட்டிகளை நடத்தத் தொடங்கினார். இப்போட்டிகளை நடத்தும் செலவுக்காக நன்கொடைகள் சேர்ப்பார் ஜார்ஜ். செல்வம், அவரது மனைவி ஆகிய இருவரின் பெயரே நன்கொடையாளர் பட்டியலில் முதலிடம் பெறும். அந்த அளவுக்குத் தங்கள் மகனின் முயற்சிகளை அப்பெற்றோர் ஆதரித்து வந்தனர். ஒருமுறை போட்டியில் வெற்றி பெற்றோருக்குக் கோப்பைகளை வழங்க அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சர் சர் பி.டி. இராசனையே அழைத்திருந்தார் ஜார்ஜ். செல்வத்தின் நெருங்கிய நண்பராகிய இராசனும் அவ்வழைப்பை ஏற்றுத் தஞ்சைக்கு வந்து, கோப்பைகளை வழங்கி நல்லதொரு உரையும் நிகழ்த்தினார்.

## மகனுக்கு இங்கிலாந்தில் கல்வி

விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டிய ஜார்ஜை இந்தியாவில் படிக்க வைப்பதைவிட இங்கிலாந்தில் படிக்க வைத்தால் அது அவரது எதிர்காலத்துக்குப் பெருந்துணையாக இருக்கும் என்று செல்வம் எண்ணினார். எனவே 1930–ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டுக்கு இந்தியக் கிறித்துவர்களின் பிரதிநிதியாகச்

சென்றபோது ஜார்ஜ் இங்கிலாந்தில் படிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். மீண்டும் 1931–ஆம் ஆண்டில் வட்டமேசை மாநாட்டுக்காகச் செல்லும்போது ஜார்ஜை உடனழைத்துச் சென்றார். பேட்டர்ஸீ நகரிலுள்ள சலேசியன் கல்லூரியில் ஜார்ஜை மாணவராகச் சேர்த்தார். அவர் தனிப்பயிற்சியும் பெற்று லண்டன் மெட்ரிக் தேர்வில் வெற்றி பெற்ற பின் இலண்டன் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து பயிலச் செய்தார்.

## நிறைவேறாத எண்ணம்

தாம் உள்துறை அமைச்சராக இருந்த காலத்தில் இளையவர்களாகிய எட்வர்ட், ஆல்பர்ட் ஆகிய இருவரையும் செல்வம் ஏற்காட்டிலுள்ள மோன்ட்ஃபோர்ட் பள்ளியில் சேர்த்துப் பயிலச் செய்தார். அப்பள்ளியில் முதல் வகுப்பு விடுதிக் கட்டணம் முப்பது ரூபாயாகவும் சிறப்பு வகுப்புக் கட்டணம் அறுபது ரூபாயாகவும் இருந்தது. செல்வம் தம் மக்களை முதல் வகுப்பு விடுதி மாணவராகவே சேர்த்திருந்தார். உள்துறை அமைச்சரின் மக்களாகிய தாங்கள் சிறப்பு வகுப்பில் இல்லாதது இருவருக்கும் மனவருத்தமாக இருந்தது. எனவே தங்களைச் சிறப்பு வகுப்பில் சேர்க்குமாறு எட்வர்ட் தம் தந்தைக்கு எழுதினார். இன்று அமைச்சராக இருக்கும்போது சிறப்பு வகுப்புக் கட்டணத்தைக் கட்டுவது கடினமன்று என்றாலும் நாளை தாம் அமைச்சராக இல்லாத போதும் சிறப்பு வகுப்புக் கட்டணத்தைத் தொடர்ந்து கட்டுவது இயலாது என்று தம் மகனுக்கு எழுதினார் செல்வம். எனவே பின்பு வகுப்பு மாறிச் சிரமப்படுவதைவிட எப்போதும் முதல் வகுப்பில் தொடர்வதே நலம் என்றும் தம் மகனுக்கு விளக்கி எழுதினார். எட்வர்டையும் ஆல்பர்ட்டையும் இலண்டனில் படிக்க ஏற்பாடு செய்யவே எண்ணியிருந்தார் செல்வம். ஆனால் எட்வர்டும் ஆல்பர்ட்டும் ஏற்காட்டில் பயின்று கொண்டிருக்கும்போதே அனிபால் விமான விபத்தில் செல்வம் இறந்துவிட்டதால் அவரது எண்ணம் நிறைவு பெறாமற் போயிற்று. பின்னாளில் எட்வர்ட் கண்மருத்துவராகவும் ஆல்பர்ட் வழக்கறிஞராகவும் பயிற்சிபெற்றனர்.

## தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்

ஜார்ஜை இலண்டனுக்கு அழைத்துச் சென்றபோது பம்பாயிலிருந்து ‘மலோயா’ என்னும் கப்பலில் பயணம் செய்தார் செல்வம். கப்பலில் சிறந்த உணவு வழங்கப்படுவது வழக்கம். அதுவும் முதல் வகுப்பில் பரிமாறப்படும் உணவைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் உணவுச் சீட்டு ஃப்ரெஞ்ச் மொழியில் அச்சிடப்பட்டிருந்ததுதான் கடினமாக இருந்தது. ஜார்ஜ் ஆங்கிலமே அதிகம் அறியாத காலம் அது. ஃப்ரெஞ்ச் மொழி அவருக்கு எப்படித் தெரியும்? ஆகவே தம் தந்தை என்ன உணவு வேண்டுமென்று கேட்கிறாரோ அதையே ஜார்ஜ் தமக்கும் கொடுக்குமாறு கேட்டார். தாம் கேட்கும் உணவுப் பண்டம் இன்னதென்று தெரியாத போதிலும் தம் தந்தையார் உண்ணும் உணவையே தாம் உண்ண ஜார்ஜ் விரும்பியதில் வியப்பேதுமில்லை. ஆனால் தந்தையார் இங்கிலாந்தில் பயின்ற காரணத்தால் ஐரோப்பிய உணவுப் பண்டங்களைச் சுவைத்து உண்டு மகிழ்பவர். ஜார்ஜோ இந்திய–அதிலும் தமிழ் நாட்டு – உணவு வகைகளையே உண்டு பழகியவர். எனினும் கப்பலின் பதினோரு நாள் பயணத்தில்

ஐரோப்பிய உணவு வகைகளை இனம் காணவும் உண்டு மகிழவும் ஒருவாறு பழகினார் ஜார்ஜ். செல்வமும் தம் மகனைச் சிறு குழந்தையாக நடத்தாமல் ஒரு தோழனைப் போலவே நடத்தினார்.

## பணமா? பாசமா?

தொடர்ந்து பல ஆண்டுகள் வெளிநாட்டில் தன் மகன் இருந்தால் ஏங்கிப் போய் விடுவார் என்பதைச் செல்வம் உணர்ந்திருந்தார். அதோடு தாமும் தம் மனைவியும் தங்கள் மூத்த மகனைப் பிரிந்திருத்தல் கடினம் என்பதையும் அவர் அறிவார். எனவே படிப்புக் காலத்தின் நடுவில் அவ்வப்போது கோடை விடுமுறைக்காக இந்தியா வந்து செல்லுமாறு தம் மகனைக் கேட்டுக் கொண்டார். அக்காலத்தில் இலண்டனிலிருந்து கப்பலில் இந்தியா வந்து திரும்ப மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணமாக 44 பவுண்ட் மட்டுமே வசூலிக்கப் பட்டது. செல்வத்தின் அன்றைய பொருளாதார நிலையில் இது அதிகத் தொகையே என்றாலும் செல்வம் தயங்கவில்லை. பணத்தைப் பற்றிக் கவலைப்படுவதைவிடத் தம் மகனைப் பார்ப்பதே அவருக்குப் பெரிது அல்லவா?

## பெண் குழந்தைகளின் கல்வி

செல்வம் ஏனோ தம் பெண் மக்களை அதிகமாகப் படிக்க வைக்கவில்லை. மேரி, விக்டோரியா ஆகிய இருவருமே உயர் நிலைப் பள்ளியைத் தாண்டவில்லை. டெய்ஸி கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பை எட்டிப் பார்த்துவிட்டு அது பிடிக்காமல் வீடுதிரும்பிவிட்டார்.

## மனைவியின் பாசம்

தம் கணவரின் உணவைப் பொறுத்த அளவில் மிகுந்த கவனம் செலுத்துவார் பொன்னு பாப்பாள். காலையில் காப்பியும் எளிய சிற்றுண்டியும் அருந்தும் பழக்கமுடைய செல்வம் பகலுணவுக்கு முன் நான்கு ஐந்து முறையாவது காபி அருந்துவார். அவரது பகலுணவும் எளிய உணவுதான். பகலுணவு நேரத்தில் அலுவலகத்தில் இருந்தால் வீட்டிலிருந்து உணவு அலுவலகத்துக்கே வந்துவிடும். மாவட்டக் கழகத் தலைவராயிருந்தபோது பகலுணவுக்குப் பின்னரே வீட்டிலிருந்து புறப்படுவார். இரவு உணவு நன்றாக அமைய வேண்டும் அவருக்கு. எனவே அவருக்குப் பிடித்த குடல் கறி, தலைக்கறி, பொறித்த கறி, கட்லெட் என வகை வகையான உணவுகளைச் சுவையாகச் சமைத்து வழங்குவார் பொன்னு பாப்பாள் அம்மாள். வீட்டில் பணியாளர் பலர் இருந்தாலும் தம் கணவருக்குப் பிடித்த உணவுப் பண்டங்களைத் தாமே சமைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார்.

## வந்த நோய்கள்

மூலம், பௌத்திரம், விரைவீக்கம், காலில் கொடிய வலி எனப் பல நோய்களால் செல்வம் துன்புற்றார். டாக்டர் சி.வி. ராஜம் என்பவர் செல்வத்தைப் பரிசோதித்த பின் மூலத்துக்காக அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும் என்று வலியுறுத்தினார். செல்வம் அதற்குத் தயாராக இருந்தார். அறுவைச் சிகிச்சை செய்யுமுன் மயக்க மருந்து கொடுக்கப்படும் என்பதை அறிந்ததும் பொன்னு பாப்பாளுக்கு மன

நிம்மதியே இல்லை. அறுவைச் சிகிச்சை செய்யாமலே குணப்படுத்த முடியாதா என்று பலமுறை மருத்துவரைக் கேட்டார். மருத்துவரும் "அப்படிக் குணப்படுத்த முடியுமானால் நான் ஏனம்மா அறுவைச் சிகிச்சை செய்யுமாறு வலியுறுத்தப் போகிறேன்?" என்று பொறுமை யுடன் கேட்ட போது அவருக்குப் பதில் சொல்ல இயலவில்லை. செல்வம் அறுவைச் சிகிச்சைக்காக அரங்கினுள் கொண்டுசெல்லப்பட்டதும் ஒரு தனி அறையில் மெழுகுதிரிகளைக் கொளுத்தி வைத்துக் கொண்டு இறைவனை மன்றாடத் தொடங்கினார் பொன்னு பாப்பாள். செல்வம் மயக்கம் தெளிந்து எழுந்த பின்னரே அறையை விட்டு வெளியில் வந்தார்.

## மனைவியின் நோய்

இவ்வாறெல்லாம் தம் கணவர்மீது பாசத்தைப் பொழிந்தவராய் வாழ்ந்து வந்த பொன்னு பாப்பாள் அம்மாள் நோயினால் மெல்ல மெல்ல நைவுறலானார். டாக்டர் குருசாமி முதலிய வல்லுநர்கள் பரி சோதித்துப் பார்த்தும் என்ன நோய் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அடிக்கடி அவர் காய்ச்சலாலும் வயிற்றுப் போக்கு நோயாலும் துன்புற்றார். அவரது உடல் மெலியலாயிற்று. முகம் களையிழந்து போயிற்று. இதைக் கண்டு செல்வம் மிகவே கவலை கொண்டார். எத்தகைய மருத்துவ உதவியும் பயனற்றுப் போயிற்று.

## இறுதி முறி

தம் இறுதிக்காலம் நெருங்கி வருவதை உணர்ந்த பொன்னு பாப்பாள் தம் தந்தையார் தம் பெயரில் எழுதி வைத்திருந்த நிலத்தை யெல்லாம் விருப்பு முறியாக எழுதி வைக்க விரும்பினார். விருப்பு முறியைத் தயாரித்த செல்வம் நிலத்தைத் தம் குழந்தைகளுக்கு உரிய தாக எழுதினார். பொன்னு பாப்பாள் அம்மாளோ தம் கணவரின் பெயரில் எழுதவே விரும்பினார். கணவர் வற்புறுத்தியும் அவர் தயாரித்த விருப்பு முறியில் பொன்னு பாப்பாள் கையெழுத்திட மறுத்து விட்டார். கடைசியில் நிலமெல்லாம் குழந்தைகளுக்கு உரியதென்றும், அவர்களின் காப்பாளராகச் செல்வம் நிலத்துக்குப் பொறுப் பேற்பதென்றும் எழுதியபோது பொன்னு பாப்பாள் அரை மனதோடு கையொப்பம் இட்டார்.

## மனைவியின் மறைவு

மனைவியின் நிலை மோசமாவதைக் கண்ட செல்வம் தங்கள் பங்குத் தந்தையாக இருந்த மோத்தாவாஸ் அடிகளாரை அழைத்து வந்து தம் மனைவிக்கு ஒப்புரவு, நோயில் பூசுதல், நற்கருணை ஆகிய அருட்சாதனங்களை வழங்க ஏற்பாடு செய்தார். வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்த ஜார்ஜ் தவிர மற்ற எல்லாக் குழந்தைகளும் தம் கணவரும் அருகிலிருக்க 12-4-1934 அன்று இரவு 11-15 மணிக்குப் பொன்னு பாப்பாள் உயிர் நீத்தார். செல்வம் உடனே பண்ணை விளாகத்துக்கும் பெரும்பண்ணையூருக்கும் உந்து வண்டிகளை அனுப்பித் தம் தமையனார் டாக்டர் திருச்செல்வத்தையும் தம் மருமகன் (மேரியின் கணவர்) ஸ்தனிஸ்லாஸையும் அழைத்து வரச் செய்தார்.


Gray's Inn

These are to Certify

That Arockiaswamy Thamaraiselvam Pannirselvam

was called to the Degree of an

UTTER BARRISTER

BY THE

Honourable Society of Gray's Inn,

on the twenty sixth day of January

in the year of our Lord, One thousand

nine hundred and twelve

D. D. [illegible]

(Under-Treasurer)

Witness [illegible]
Chief Clerk

பாரிஸ்டர் பட்டச் சான்றிதழ் — 1912.



செல்வத்தின் திருமணம் — *1908*

*நிற்போர் :* செபாஸ்டின் திருச்செல்வம், ஆத்தாளம்மாள், அவரது கணவர் லூர்தையா, செல்வம்.

*அமர்ந்திருப்போர் :* குழந்தையம்மாள் திருச்செல்வம், தாமரைச்செல்வம்,- இரத்தினம் அம்மாள், பொன்னுபாப்பாள்.

## தாங்க இயலாத துயரம்

தம் அருமைத் துணைவியின் மறைவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் குமுறிக் குமுறி அழுதார் செல்வம். திரு இருதயக் கோவிலை அடுத்துள்ள கல்லறையில் பொன்னு பாப்பாள் அம்மாளை அடக்கம் செய்தபோது துயரத்தை அடக்க இயலாமல் வாய்விட்டு அழுதார். காலப் போக்கில் ஒருவாறு மனம் தேறினாலும் அவ்வப் போது மனைவியை நினைத்துக் கொண்டு மனம் வருந்துவார், கண்ணீர் விட்டுப் புலம்புவார்.

## தமையனின் உதவி

தம்பியின் துயரத்தைக் கண்டு பெரிதும் கலங்கிய செபாஸ்டின் அவரைத் தம்மோடு பண்ணைவிளாகத்துக்கு அழைத்துச் சென்று அவரது துயரைக் களைய முயன்றார். ஒரு மாத காலம் தம் தமையனின் இல்லத்தில் தங்கியிருந்த செல்வம் பின் தஞ்சைக்குத் திரும்பிப் பணிகளில் மிகுதியாக ஈடுபட்டுத் தம் கவலையை மறக்க முயன்றார்.

## தாராள உள்ளம்

பொன்னு பாப்பாள் அம்மாள் யாருக்கும் தெரியாமல் பல ஏழைகளுக்குத் தொடர்ந்து உதவி வந்தார். இதை அவர் இறந்த பின்னரே அவரது குடும்பத்தாரில்கூடப் பலர் அறிய வந்தனர். பசி என்று வந்தவர்க்கெல்லாம் இல்லையென்னாது உணவு வழங்குவார். அவ்வாறே உடையின்றி வருந்திய பெண்களுக்கெல்லாம் புடைவைகள் கொடுத்து உதவுவார். இப்படி வருவோர்க்குக் கொடுப்பதற்காக வீட்டில் நிறையப் புடைவைகள் வாங்கி வைத்திருப்பார். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவதிலும் அவருக்கு ஆர்வம் மிகுதி. ஆண்டுக்கு இருமுறை 200, 300 பேருக்கு அன்னதானம் வழங்குவார். அவ்வமயம் வடை பாயசத்தோடு வகையான உணவு சமைத்துப் பரிமாறுவார்.

## மூத்த மகளின் பொறுப்பு

பொன்னு பாப்பாள் இறந்த பின் மூத்த மகளாகிய மேரி தம் தந்தையைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவரது கணவர் ஸ்தனிஸ்லாஸ் பொன்னு பாப்பாளின் உடன் பிறந்த தம்பி தான். ஆகவே தாம் தம் சொந்த ஊராகிய பெரும்பண்ணையூரிலேயே தங்கிக் கொண்டு, தம் மனைவி செல்வத்தோடு உடனிருந்து கவனித்துக் கொள்ள அவர் இசைந்ததில் வியப்பேதுமில்லை. எனவே செல்வம் தஞ்சையிலிருந்தபோதும் சரி, சென்னையில் வாழ்ந்த போதும் சரி, மேரி அவருடனிருந்து கவனிக்கும் பொறுப்பைச் செம்மையாகச் செய்து வந்தார்.

## ஜார்ஜ் பற்றிய கவலை

தம் மூத்த மகனாகிய ஜார்ஜை இலண்டனில் படிக்க அனுப்பிய பின், 'ஜார்ஜ் எப்படி இருக்கிறானோ?' என்று செல்வம் அடிக்கடி கவலை கொள்வார். வீட்டு முன்புறத்தில் நடந்தவாறே ஜார்ஜைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார். 'அவனது நன்மைக்காகத் தானே வெளிநாட்டில் படிக்க அனுப்பியிருக்கிறோம்' என்று தமக்குத் தாமே ஆறுதலாகச் சொல்லிக் கொள்வார். எனினும் சில வேளை

களில் அவர் உரத்த குரலில் "ஜார்ஜ் ஜார்ஜ்" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொள்வது வீட்டினுள் இருப்பவர்களுக்குத் தெளிவாகக் கேட்கும்.

## காரை விற்றுக் கல்வி

இலண்டனில் படித்துக் கொண்டிருந்த ஜார்ஜுக்கு அனுப்பு வதற்குப் பணமில்லாமல் ஒரு முறை தவித்தார் செல்வம். ஆனால் யாரிடமும் போய்க் கடன் வாங்கவும் விரும்பவில்லை. எனவே தமது காரை விற்றுப் பணத்தை அனுப்பி வைத்தார்.

## புகை பிடிக்காதே

இலண்டனில் பயில்வதற்காக ஜார்ஜை அழைத்துச் சென்றபோது செல்வம் தம் மகனிடம் "நீ புகை பிடிக்கக் கூடாது" என்று வலியுறுத்திச் சொன்னார். முதலாண்டில் ஒழுங்காக இருந்த ஜார்ஜ் இரண்டா மாண்டில் புகை பிடிக்க ஆரம்பித்து விட்டார். தாம் புகை பிடிக்கும் போது எடுத்த புகைப் படத்தைத் தம் அக்கா மேரிக்கு இலண்டனி லிருந்து அவர் அனுப்பி வைத்தார். அதை மேரி தம் பெற்றோரிடம் காட்டியபோது செல்வம் அதை நம்ப மறுத்து விட்டார். "அது விளை யாட்டுக்காக எடுக்கப்பட்ட படமாக இருக்கும்" என்றார். தான் சொல் வதைத் தன் மகன் தட்ட மாட்டான் என்னும் நம்பிக்கை அவருக்கு. ஜார்ஜ் விடுமுறையின்போது இந்தியா வந்த பின்தான் அவருக்குப் புகை பிடிக்கும் பழக்கம் இருப்பதை அறிந்து கொண்டார் செல்வம். எனினும் அதற்காகத் தம் மகனைக் கடிந்து கொள்ளவுமில்லை. ஏனெனில் தாம் இலண்டனில் பயின்ற போது புகை பிடிக்கத் தொடங்கியதை அவர் நினைவிற் கொண்டார்.

## தந்தையின் முன்னிலையில் வேண்டாம்

1934–ஆம் ஆண்டில் செல்வம் ஆளுநரின் நிர்வாகக் குழுவில் உள்துறை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவ்வமயம் பேராசிரியர் இரத்தினசாமி அவருக்கு ஒரு விருந்து கொடுத்தார். (பேராசிரியர் இரத்தினசாமி அக்காலத்தில் நீதிக்கட்சி உறுப்பினர். சென்னைச் சட்டமன்றத் தலைவர், பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர், அண்ணா மலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், இந்தியக் குடியரசில் மாநிலங்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வல்லுநர்.) அவ் விருந்தில் ஜார்ஜும் கலந்து கொண்டார். முடிவில் சிகரெட் பரிமாறப் பட்டபோது ஜார்ஜ் மரியாதை கருதி வேண்டாமென்று மறுத்து விட்டார். அப்போது செல்வம், "ஜார்ஜ் தன் தந்தையின் முன்னிலையில் புகை பிடிக்க மாட்டான்" என்று புன்முறுவலோடு கூறினார்.

## கடுங்காய்ச்சல்

1937–ஆம் ஆண்டில் கோடை காலத்தில் உதக மண்டலத்தில் சட்ட மன்றம் கூடியபோது செல்வமும் அங்குச் சென்றிருந்தார். ஆனால் அங்குக் கொடிய காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மயக்கமுற்றார். என்னவாகுமோ என்று நண்பர்கள் கலங்கத் தொடங்கி விட்டனர். செல்வத்தின் நெருங்கிய நண்பராகிய என்.ஆர்.சாமியப்ப முதலியார்



செல்வபுரத்திலுள்ள 'செல்வ விலாஸ்' இல்லம்.



தஞ்சையில் செல்வம் வாழ்ந்த 'செல்வ விலாஸ்' இல்லம்.



சென்னையில் வழக்குரைஞராகப் பணிபுரிந்தபோது செல்வமும் குடும்பத்தினரும் (1913)

அவரைத் தம் உந்து வண்டியிலேயே சென்னைக்கு அழைத்து வந்தார். சென்னையில் அன்று புகழ் பெற்ற மருத்துவராக விளங்கிய டாக்டர் எம்.ஆர். குருசாமி முதலியார் செல்வத்துக்குச் சிகிச்சையளித்துக் குணப்படுத்தினார். காய்ச்சல் குணமாகி விட்டது. ஆனால் காலில் கடுமையான வலியால் துன்புற்றார் செல்வம். கால் எலும்பில் இருந்த குறையினை டாக்டர் சுந்தரவதனம் கண்டு பிடித்து அறுவைச் சிகிச்சை மூலம் குணமாக்கினார். ஆயினும் வலி தொடர்ந்தது. செல்வம் பெரும்பண்ணையூருக்கு வந்து தம் மகள் மேரியின் வீட்டில் தங்கி யிருந்தார். அப்போது திருவாரூரிலிருந்து ஒரு மருத்துவர் ஒவ்வொரு நாளும் பெரும்பண்ணையூருக்கு வாடகை உந்து வண்டியில் வந்து, புண்ணுக்கு மருந்திட்டுக் கட்டுக் கட்டிச் செல்வார். அதன் பின்னரே செல்வம் பூரண சுகம் பெற்றார். இதற்குப் பின் செல்வம் எத்தகைய நோயுமின்றி உடல்நலத்தோடு வாழ்ந்தார்.

## கிராமத்தில் நிர்மாணப் பணி

1938–ஆம் ஆண்டில் செல்வம் தம் குடும்பத்துடன் செட்டியா புரத்தில் வசிக்கத் தொடங்கினார். அப்போது தான் செட்டியா புரத்தின் பெயரைச் செல்வபுரம் என்று மாற்றினார். ஊரிலுள்ள அத்தனைக் குடும்பங்களின் குடிக்கணக்கும் எடுத்து ஆவணமாகப் பதிவு செய்தார். 1–4–1938 அன்று செல்வம் எழுதத் தொடங்கிய பதிவேட்டில் ஊரின் பெயரைச் செல்வபுரம் என்றே குறித்துள்ளார். புறம்போக்கு நிலங்களில் குடியேறியிருந்தவர்களை அகற்றி ஊரின் பொதுச் சொத்துக்களைக் காப்பாற்றிய செல்வம் ஊரின் அமைப் பையும் திட்டமிட்டு மாற்றினார்.

ஆதி திராவிட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அளப் பரிய சேவைகள் புரிந்தார். அவர்களுக்கு இலவச மருத்துவ வசதி களுக்கு ஏற்பாடு செய்தார். வாரத்தில் ஆறு நாட்கள் வேலை செய்த விவசாயக் கூலிகளுக்கு ஞாயிற்றுக் கிழமையை ஓய்வு நாளாக மாற்றினார். அது மட்டுமல்ல, ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக்கிழமைக்கும் சேர்த்து அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கச் செய்தார். அவர் வாழ்ந்த காலத்தில் செல்வபுரம் கிராமமே கலகலப்பாக இருக்கும். ஏனெனில் ஊர் நலனுக்காக ஏதாவது பணிகளில் ஈடுபட்ட வண்ணமே இருப்பார். முக்கிய சாலையிலிருந்து தம் ஊருக்குப் பாதை பிரியுமிடத்தில் செல்வ புரம் என எழுதப்பட்ட கைகாட்டியையும் வைத்தார். அந்தக் கைகாட்டி இன்றளவும் இருக்கிறது. இங்கிலாந்தில் படித்துத் திரும்பிய ஜார்ஜ் தான் கைகாட்டியில் தம் ஊரின் பெயரைப் பொறித்தார். அவர் 'செல்வுபுரம்' என்று தவறாக எழுதிப் பின் திருத்தியுள்ளதைக் கைகாட்டி யில் இன்றளவும் காணலாம். செல்வம் தம் இளமைப்பருவத்திலேயே தஞ்சையிலும் திருச்சியிலும் பின் இலண்டனிலும் படித்ததால் தம் சொந்த ஊரில் அதிகம் தங்கியதில்லை. இலண்டனிலிருந்து திரும்பிய பின்னும் தஞ்சையிலும் சென்னையிலுமே அவர் வாழ்ந்து வந்தார். தம் ஊருக்கு எப்போதாவதுதான் வந்து செல்வார். எனினும் 1938–ஆம் ஆண்டில் தம் ஊரில் குடியேறியபோது தம் ஊரைச் செம்மைப்படுத்த முனைந்தார். ஊரில் ஒரு குளம் வெட்டினார். புனித குழந்தை தெரசாள் பெயரால் தம் ஊரில் ஒரு சிற்றாலயமும் அதே ஆண்டில் கட்டியெழுப்பினார்.

## ஆற்றில் வெள்ளம்

கையிலிருந்த பணத்தையெல்லாம் குளம் வெட்டுவதிலும் கோவில் கட்டுவதிலும் செலவிட்டு விட்ட செல்வம், அடுத்த அறுவடையின்போது வருமானத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அச்சமயம் வெட்டாற்றில் வெள்ளம் என்று செய்தி வந்தது. வெட்டாற்றின் கரையிலுள்ள பொம்மாநத்தம் கிராமத்து நிலங்கள் தம் தமையன் டாக்டர் செபாஸ்டினுக்குச் சொந்தமானதால் அந்நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்குமே என்று அஞ்சித் தம் தமையனுக்கு உதவிசெய்ய ஆட்களைத் திரட்டிக் கொண்டு சென்றார். வெள்ளத்தின் சேதத்தைக் குறைக்க உதவினார். அங்கிருக்கும்போது செல்வபுரத்தில் தமது நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வரவே விரைந்து செல்வபுரத்துக்குத் திரும்பினார். திரும்பும்போது அவரது மனதில் பெருங்கலக்கம். நிலங்கள் பாதிக்கப்பட்டால் இவ்வாண்டு விளைச்சல் என்னாவது என்று அஞ்சினார். கையில் பணமில்லாத நிலையில் அப்படி நிகழ்ந்தால் தம் நிலைமை என்னவாகும் என்று கலங்கித் தவித்தார். ஆனால் செல்வபுரத்தை நெருங்கியபோது நல்ல செய்தி காதில் விழுந்தது. வெள்ளத்தால் அப்பகுதி நிலங்கள் பாதிக்கப்படவில்லை. செல்வம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

## சமயப் பற்று

செல்வம் சமய உணர்வு மிக்கவர். ஞாயிறு வழிபாட்டில் தவறாமல் கலந்து கொண்டார். ஒவ்வொரு நாளும் செபமாலை ஓதத் தவறாதவர். இப்பழக்கத்தை அவர் தம் பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொண்டார். காலையில் கண்விழித்ததும் விவிலியத்தைப் படிக்கும் பழக்கமுடைய தாமரைச் செல்வம் இரவு படுக்கைக்குச் செல்லுமுன் தம் மனைவியுடன் சேர்ந்து தவறாமல் செபமாலை செபிப்பார். மாவட்டக் கழகத் தலைவராகச் செல்வம் பணியாற்றிய காலத்தில் வேலை மிகுதி. எனவே அவர் உறங்கச் செல்லும்போது இரவு பன்னிரண்டு மணியாகிவிடும். எனினும் செபமாலை ஓதி முடித்த பின்னரே படுக்கைக்குச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

## தவறுக்குப் பரிகாரம்

பொன்னு பாப்பாள் அம்மாளின் தம்பி ஸ்தனிஸ்லாஸை மகள் மேரிக்குத் திருமணம் செய்வதென்று குடும்பத்தார் முடிவு செய்தனர். ஆனால் மேரிக்கு ஸ்தனிஸ்லாஸ் தாய்மாமன் முறையாதலால் கத்தோலிக்கத் திருச்சபை அதைத் தடை செய்தது. அவ்விதியிலிருந்து விலக்குப் பெற வேண்டுமாயின் அம்மறைமாவட்ட ஆயருக்கு விண்ணப்பிக்க வேண்டும். திருச்சபை தடை செய்வதிலிருந்து ஏன் விதிவிலக்குப் பெற முயல வேண்டும் என எண்ணிய செல்வம் தம் மகளுக்கு வேறு மாப்பிள்ளை ஏற்பாடு செய்ய விரும்பினார். ஆனால் பொன்னு பாப்பாளின் தந்தையார் எப்படியும் தம் மகனுக்கே தம் பேத்தியை மணமுடிக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தார். இறுதியில் செல்வம் மாமனாரின் விருப்பப்படியே நடக்கத் தீர்மானித்தார். ஆனால் விதிவிலக்குப் பெற வேண்டுமாயின் அதற்குத் தக்க காரணங்களைக் காட்ட வேண்டும். தகுந்த காரணங்கள் இல்லாததால் மயிலாப்பூர் ஆயர் இசைவு தர மறுத்து விட்டார். தஞ்சை திரு இருதய ஆலயத்தில் பங்குத் தந்தையாக இருந்த யூஜின் மெடர்லே அடிகளார்

செல்வத்தை அழைத்து இச்செய்தியைத் தெரிவித்தபோது செல்வம் எரிச்சல் கொண்டார். மாமனாரால் தூண்டப்பட்டவராக, திருச்சபை விதிவிலக்குத் தராவிட்டாலும் தம் மகளுக்குத் தம் மைத்துனரையே திருமணம் செய்து வைப்பேன் என்று சூளுரைத்தார். அவ்வாறே திருமணமும் நடந்தது. ஆனால் அத்திருமணத்தை ஆலயத்தில் முறைப் படி நடத்த முடியவில்லை. கத்தோலிக்கத் திருச்சபை அத்திரு மணத்தை முறையான திருமணமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. திருச்சபையின் சட்டங்கள் அத்தகையன. செல்வத்தின் மனதை இந் நிகழ்ச்சி உறுத்திக் கொண்டே இருந்தது. அதற்கேற்றாற்போல் மேரிக் கும் குழந்தைப் பேறு இல்லாதிருந்தது. எனவே திருச்சபை முறைப்படி தம் மகளின் திருமணத்தை நெறிப்படுத்தச் செல்வம் முடிவு செய்தார். அக்காலத்தில் முறையற்ற திருமணத்தை மேற்கொண்ட மணமகனும் மணமகளும்,திருமணத்தை முன்னின்று நடத்தியவர்களும் ஆலயத்தில் ஞாயிறு வழிபாட்டின்போது, தங்கள் தவறுக்குப் பரிகாரமாக எரியும் மெழுகுதிரியை ஏந்திப் பிடிக்க வேண்டும். இவ்வாறு அனைவரும் அறியும் வகையில் தவறுக்குப் பரிகாரம் புரிவது வழக்கம். அதன்பின் முறைப்படி திருமணம் ஆலயத்தில் குருவின் முன்னிலையில் நிகழும். இந்நிகழ்ச்சியில் மேரியும் ஸ்தனிஸ்லாஸும் மட்டுமல்ல, திருமணத்தை முன்னின்று நடத்திய செல்வமும் ஆலயப் பொதுவில் அனைவரும் அறிய மெழுகுதிரி ஏந்திப் பரிகாரம் செய்ய வேண்டியதாயிற்று. தவறை உணர்ந்து கொண்ட செல்வம் தவறுக்குப் பரிகாரம் செய்யத் தயங்க வில்லை. செல்வத்தின் பெருந்தன்மையையும், தன் விதிகளைக் கடைப் பிடிப்பதில் கத்தோலிக்கத் திருச்சபை உயர்வு தாழ்வு பாராட்டாமல் அனைவரையும் சமமாக நடத்துவதையும் தஞ்சைப் பகுதி மக்கள் பெரிதும் பாராட்டினர். தவறுக்குப் பரிகாரம் செய்வதைச் செல்வம் அவமானமாக நினைக்கவில்லை. மக்களும் அதைச் செல்வத்தின் நற்பண்புக்கு அடையாளமாகவே எண்ணிப் போற்றினர்.

## சாதியை ஒழிப்போம்!

செல்வம் கத்தோலிக்க சமயத்தில் உண்மையான பற்றுடையவர். கத்தோலிக்க சமயத்தினரிடையே சாதி வேறுபாடு நிலவுவதை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் கண்டித்துப் பேசி வந்தார். 1929–ஆம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற அனைத்திந்தியக் கத்தோலிக்க மாநாட்டில் செல்வம் தலைமை தாங்கினார். கத்தோலிக்கரிடையே சாதி வேறுபாடு நிலவுவதைத் தம் தலைமையுரையில் வன்மையாகச் சாடினார். கடவுள் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதால் கத்தோலிக்க சமயம் சமத்துவத்தை வலியுறுத்த வேண்டும் என்று அடிக்கடி எடுத்துரைப் பார். சாதி வேறுபாட்டை ஒழிப்பதில் கத்தோலிக்க சமயம் முயற்சி யுடன் ஈடுபடாமல் இருப்பதைப் பற்றி அவர் அடிக்கடி மனம் நொந்து பேசுவார்.

## சாதிப்பற்றே இல்லாத சான்றோர்

செல்வம் வாழ்ந்த காலம் பெருந்தலைவர்கள் கூடத் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர்களை ஒட்ட வைத்து வழங்கிக் கொண்டிருந்த காலம். நீதிக்கட்சித் தலைவர்கள் கூட அவ்வாறு செய்து வந்தவர்கள்தான். பி. தியாகராயச் செட்டியார், எஸ்.ஜி. சடகோப ராமானுஜ முதலியார், டாக்டர் சி. நடேச முதலியார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், முத்தையா செட்டியார் என்றே அவர்களின்

பெயர்கள் அன்று வழங்கி வந்தன. அவர்களும் அவ்வாறே கையொப்ப மிட்டு வந்தனர். அவர்களிடையே நாம் இரு விதிவிலக்குகளைக் காணலாம். செல்வமும், பி.டி. இராசனும் தான் அவர்கள். செல்வம் எப்போதும் தம் பெயரை ஏ.டி. பன்னீர் செல்வம் என்றே வழங்கி வந்தார். கையொப்பமும் அவ்வாறே இட்டு வந்தார். கட்சியிலும் கட்சிக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அவரைச் செல்வம் என்றே செல்லமாக வழங்கினர். பி.டி. இராசனும் அவ்வாறே சாதிப் பெயர் இல்லாமலேதான் தம் பெயரை வழங்கி வந்தார். இது இவ்விருவரின் சாதிப் பிடிப்பில்லாத சான்றாண்மையையே சுட்டிக் காட்டுகிறது.

# 4. சொந்த மண்ணில்

வழக்கறிஞர் தொழிலில் மட்டும் ஈடுபடுவது செல்வத்துக்குச் சுய நலமிக்கதாகத் தோன்றியது. எனவே அத்தொழிலை வாழ்க்கையூதியம் தேடும் தொழிலாகக் கொண்டு, மனநிறைவுக்காக மக்கள் பணியில் ஈடுபட்டார். தஞ்சை நகரில் இவர் தொடர்பு கொள்ளாத அமைப்புகள் ஒன்றுமில்லை என்று சொல்கின்ற அளவுக்குப் பல இளைஞர் சங்கங்களிலும் பல்வேறு கழகங்களிலும் பங்கு கொண்டார். சாதி சமய வேறுபாடின்றி அனைவருடனும் எளிதாகப் பழகினார். இவரது வாழ்வும் பேச்சும் செயலும் அனைவரின் மனத்தையும் கவர்ந்தன.

## பொறுப்புகள் பல

மக்களிடையே மிகுந்த புகழ் பெற்றிருந்த அவர் 1918-ஆம் ஆண்டு தஞ்சை நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தஞ்சை நகரத்தின் தண்ணீர்த் துன்பத்தைப் போக்க அரும்பாடுபட்டார். அவரது ஆட்சியில் தஞ்சை நகர நிர்வாகம் மிகச் சிறப்பான நிலையில் அமைந்திருந்தது. பின் அடுத்தடுத்துப் பல பொறுப்புக்கள் அவரைத் தேடி வந்தன. தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் கல்விக் குழு ஆகியவற்றின் உறுப்பினராகப் பொறுப்பேற்று அனைவரும் மதித்துப் போற்றும் வகையில் பணியாற்றினார். 1922 முதல் 1924 வரை தஞ்சை மாவட்ட உயர்நிலைக் கல்விக் குழுவின் தலைவராகவும், பின் தஞ்சை மாவட்டக் கல்விக் குழுவின் தலைவராகவும் இருந்து, மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். அதன் பின் தஞ்சை மாவட்டக் கழகத்தின் துணைத் தலைவராகவும், பின் அக்கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

## பெற்ற அனுபவம்

மாவட்டக் கழகத் துணைத் தலைவராக இருந்த போது அதன் தலைவராக இருந்த திவான் பகதூர் வி.கே. இராமானுஜாச்சாரியார் என்பவருக்குத் தக்க உதவியாளராக இருந்தார். மாவட்ட நிர்வாகப்

பணிகளைத் திறம்படச் செய்வது எவ்வாறு என்பதை அவரிடமே கற்றுக் கொண்டார். பின்னர் செல்வம் மாவட்டக் கழகத் தலைவராக 1924 முதல் 1930 வரை பணியாற்றிய போது இவ்வனுபவம் அவருக்குப் பெரிதும் துணை புரிவதாயிற்று.

## சிறப்பான நிர்வாகம்

மாவட்டக் கழகத் தலைவராக இவர் ஆற்றிய பணிகள் அனைவ ராலும் பாராட்டப்பட்டன. மாநில அளவில் இவரது புகழ் பரவுவதற்கு இது வகை செய்தது. இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட 'சைமன் கமிஷன்' தஞ்சை மாவட்டக் கழக நிர்வாகத்தை நேரில் காண வந்தது. அந்த அளவுக்கு இவரது நிர்வாகம் புகழ் பெற்றிருந்தது.

## சத்திரங்களில் சீர்திருத்தம்

தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு அறக்கட்டளைகளால் ஏற்படுத்தப் பட்டிருந்த சத்திரங்கள் இருந்தன. இவை வழிப்போக்கர்க்கு உணவும் உறைவிடமும் வழங்கியதோடு, கல்வி பயிலும் மாணவர்க்கும் உதவி செய்து வந்தன. மராட்டிய மன்னராலும் அரச குடும்பத்தினராலும் வேறு சிலராலும் ஏற்படுத்தப்பட்ட இச்சத்திரங்களில் காலப் போக்கில் ஊழல்கள் மலியலாயின. செல்வம் இவ்வூழல்களை ஒழிப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். ஒய்வு கிடைக்கும்போதெல்லாம் ஒரத்த நாடு, இராசா மடம் ஆகிய ஊர்களுக்குத் திடீரென்று புறப்பட்டுப் போய் அங் குள்ள சத்திரங்களைப் பார்வையிடுவார். அச்சத்திரங்களில் நிலவி வந்த ஊழல்கள் இதனால் குறையலாயின. இச்சத்திரங்களில் பார்ப்ப னரல்லாத சிறுவர்களிடையே சாதி வேறுபாடு பாராட்டப்படாமல் அவர் கள் ஒன்றாக அமர்ந்து உணவு கொள்ள ஏற்பாடு செய்தார். இதனால் அப்பகுதியில் சிறுவர்களிடையே சமத்துவம் நிலவ வகை செய்ததோடு, மாணவர்கள் ஊக்கமுடன் கல்வி பயிலவும் வழி வகுத்தார்.

## வகுப்பு வேற்றுமையில்லாமல்

மராட்டிய அரச குடும்பத்தினரால் நிறுவப்பட்ட பல சத்திரங் களில் பார்ப்பனருக்கு மட்டுமே உணவு வழங்கப்பட்டது. மற்றவர் களுக்கு உணவு மறுக்கப்பட்டது. இந்நிலையை மாற்றி இச்சத்தி ரங்களில் இல்லையென்று வந்த எல்லோர்க்கும் வகுப்பு வேற்றுமை யின்றி உணவு வழங்க ஏற்பாடு செய்தார் செல்வம்.

## கல்விப் பணி

மாவட்டக் கழகக் கல்வித் துறை இவரது ஆட்சிக் காலத்தில் சிறப் பாகச் செயல்படத் தொடங்கியது. திருவாரூர், பாபநாசம் ஆகிய ஊர் களில் அமைந்திருந்த உயர்நிலைப்பள்ளிகள் மாவட்டக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. முத்துப்பேட்டை, கூத்த நல்லூர் ஆகிய ஊர்களில் நடுநிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் தஞ்சை மாவட்டத் தில் கல்வி செழித்தோங்க வகை செய்தார் செல்வம். தஞ்சையில் ஆதி திராவிட மாணவர்களுக்காக விடுதி ஒன்று ஏற்படுத்தினார். அது இன்றளவும் செயல்பட்டு, ஆதி திராவிட மாணவர்கள் கல்வியில் வளர்ந்து முன்னேற உதவி புரிந்து வருகிறது.

## திருவையாறு கல்லூரி

மாவட்டக் கழகத் தலைவராகச் செல்வம் பொறுப்பேற்ற பின் திருவையாறு கல்லூரியில் அதிகக் கவனம் செலுத்தினார். 1924–ஆம் ஆண்டில் அங்கு வடமொழி மட்டுமே கற்பிக்கப்பட்டது. அதிலும் மேல் நிலை வகுப்புகள் மட்டுமே இயங்கின. அதனால் பார்ப்பனரல்லாத மாணவர்கள் அக்கல்லூரியில் சேர்ந்து பயில இயலாமலிருந்தது. இந் நிலையைக் கண்ணுற்ற செல்வம் பல சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தார். முதலில் தொடக்க நிலை வடமொழி வகுப்புகளை ஏற்படுத்தினார். பின் தமிழ் வகுப்புகள் தொடங்க ஏற்பாடு செய்தார். தமிழில் புலவர் பட்டம் பெற வழிவகுத்தார். 'சமஸ்கிருதக் கல்லூரி' என்னும் பெயரை மாற்றி 'அரசர் கல்லூரி' என்று புதுப்பெயர் சூட்டினார். திருவையாறு கல்லூரியில் ஆண்டாண்டுக் காலமாக இருந்து வந்த நிலையைச் செல்வம் மிகுந்த துணிவுடன் மாற்றினார். இதற்குப் பல எதிர்ப்புகள் எழுந்தன. ஆனால் எதிர்ப்புகளைப் பொருட்படுத் தாமல் மக்களுக்கு நன்மை செய்வதிலேயே கருத்தோடு ஈடுபட்டார். அவரது இச்செயல்களால் இன்று திருவையாறு அரசர் கல்லூரி பலருக்கும் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது.

## எல்லோர்க்கும் உதவி

மாவட்டக் கழகத்தின் அதிகாரத்துக்கு உட்பட்ட பணி நியமனங் களில் வேறுபாடு காட்டாத செல்வம் ஒவ்வொரு வகுப்பினர்க்கும் தாராளமாகப் பங்கு கிடைக்கச் செய்தார். பார்ப்பனர்களுக்கும் அவர் களது விகிதாச்சாரத்துக்குத் தக்கபடி நியமனம் கிடைக்கச் செய்தார். ஏற்கனவே பணிப் பொறுப்புகளில் இருந்தவர்களுக்கும் செல்வத்தால் எத்தகைய இடையூறும் எழுந்ததில்லை.

## வங்கிப் பணி

மாவட்டக் கழகத் தலைவராக இருந்த காலத்தில் தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றி வந்தார். பணம் ஒரே இடத்தில் குவிந்து விடாமல் பலரிடமும் அது பரவலாக வேண்டு மானால் அதற்குக் கூட்டுறவு முறையே சாலச் சிறந்தது என்று எண்ணிச் செயல்பட்டார் செல்வம்.

## தேர்தல் செல்லாது!

1930–ஆம் ஆண்டு முதல் தஞ்சையில் அரசு வழக்குரைஞராகவும் சிறிது காலம் செல்வம் பணியாற்றினார். இதனால் அவர் மாவட்டக் கழகத் தலைவராகத் தொடர இயலாமற் போயிற்று. 1930–ஆம் ஆண்டில் மாவட்டக் கழகத் தலைவராகச் செல்வம் மூன்றாம் முறை யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அரசு வழக்குரைஞர் பணி அரசு ஊழியமாதலால் செல்வத்தின் தேர்தல் செல்லாது என்று வழக்குத் தொடரப்பட்டது. எனவே செல்வம் பதவி விலக வேண்டியதாயிற்று. நடந்த மறுதேர்தலில் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த வி. நாடிமுத்துப் பிள்ளை மாவட்டக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## கட்டாயத்துக்கு இடமில்லை

அன்புக்கு அடிபணிபவர் செல்வம். ஆனால் எவருடைய கட்டாயத்துக்கும் அடிபணிந்து விட மாட்டார். 1928–ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டக் கழகத் தலைவர் பதவிக்கு அவர் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார். அப்போது செல்வத்திடம் பேரன்பு கொண்டிருந்த பூண்டி அப்பாசாமி வாண்டையார் அவரை அழைத்துத் தம் மகன் வீரையா வாண்டையார் மாவட்டக் கழகத் தலைவர் பதவிக்குப் போட்டியிட விரும்புவதால் செல்வம் விலகிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். "உங்களை என் மகனைப் போலக் கருதுகிறேன். அதனால் தான் உரிமையோடு கேட்கிறேன்" என்றார். "நான் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்னால் நீங்கள் என்னை அழைத்துப் பேசியிருந்தால், கட்டாயம் உங்கள் விருப்பத்துக்கு இசைந்திருப்பேன். இப்போது என்ன காரணத்தைக் காட்டி விலகிக் கொள்ள இயலும்?" என்று செல்வம் கேட்டபோது, காரணம் எதுவும் சொல்லாமல் மீண்டும் வலியுறுத்தினார் வாண்டையார். தக்க காரணம் எதுவும் வாண்டையார் சொல்லாததால் அவரது விருப்பத்துக்கு இசையச் செல்வம் மறுத்து விட்டார். வீரையா வாண்டையாருக்கும் செல்வத்துக்கும் நடந்த போட்டியில் செல்வம் ஒரு வாக்கு அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார். அதன் பின்னும் வாண்டையார் மீதோ, அவரது குடும்பத்தின் மீதோ செல்வம் எத்தகைய கசப்பும் இல்லாமல் முன்பு போலவே தொடர்ந்து பழகி வந்தார்.

## பனகல் கட்டடம்

நீதிக்கட்சியின் வளர்ச்சிக்குப் பனகல் மன்னர் ஆற்றிய பணிகளைச் செல்வம் என்றும் மறந்ததில்லை. சர் பி. தியாகராயரின் மறைவுக்குப் பின் கட்சியைக் கட்டிக் காத்து வளர்த்தவர் அவரே. செல்வம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்தபோது மாவட்டக் கழக அலுவலகமாகக் கட்டியெழுப்பிய கட்டடத்துக்குப் 'பனகல் கட்டடம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். இன்றும் அதே பெயரோடு இயங்கும் அக்கட்டடம் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாக விளங்கி வருகின்றது.

## தணிக்கை அதிகாரியின் பாராட்டு

மாவட்டக் கழகக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரி யாகிய சர் டி.ஜி. ரதர்ஃபோர்டு தஞ்சை மாவட்டக் கழகக் கணக்குகளை ஒருசமயம் தணிக்கை செய்ய வந்தார். அதுபோது அவர் செல்வத் திடம் தொடுத்த கேள்விகள் செல்வத்தின்மீது அவர் ஐயப்பாடு கொண் டிருந்ததுபோல் தோன்றின. செல்வம் சற்றே எரிச்சலோடு, "நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு என்னால் இயன்றவரை விடையிறுத்துவிட்டேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள்" என்றார். சர் ரதர்ஃபோர்டு சற்றும் சினம்கொள்ளாமல் அமைதியாகச் சொன் னார்: "எனக்கு முன்னிருந்த தணிக்கை அதிகாரி தாம் மாறுதலாகிச் செல்லுமுன் உங்கள் மீது பல ஐயங்களை எழுப்பும் வகையில் எழுதி வைத்துள்ளார். அவற்றைத் தெளிவுபடுத்துவதற்காகவே நான் இத் தகைய கேள்விகளைக் கேட்க நேர்ந்தது. நீங்கள் சட்டங்களின் நெளிவு சுழிவுகளையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொண்டு செயல்பட்டிருக்

கிறீர்கள். எனவே எழுப்பப்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தக்க விடையளித்து விட்டீர்கள்."

பல ஆண்டுகளுக்குப் பின் சர் ரதர்ஃபோர்டைச் செல்வம் சந்திக்க நேர்ந்தது. ஜார்ஜ் இங்கிலாந்தில் தம் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பி ஓராண்டு ஆகியும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. தம் மகனின் வேலைக்காகச் செல்வம் முயற்சி செய்யவுமில்லை. 1939–ஆம் ஆண்டில் ஜார்ஜுக்கு வேலை கிடைக்கவிருந்த சூழ்நிலையில், அன்றைய அமைச்சராகிய சி.ஜே. வர்க்கி அவ்வேலையை வேறொருவருக்குக் கொடுக்கும்படி பரிந்துரை செய்தார். முதலமைச்சராகிய ராஜாஜியும் அதற்கு இசைந்து அடுத்த வாய்ப்புக் கிடைக்கும்போது ஜார்ஜை நியமித்துக் கொள்ளலாம் என்றார். ஆனால் உள்துறை அமைச்சராகிய கோபால் ரெட்டி, "ஜார்ஜுக்குக் கொடுக்காவிட்டால் எதிர்க்கட்சித் தலைவரின் மகன் என்பதற்காகக் கொடுக்கவில்லை என்று குறை கூறுவார்களே" என்றார். இச்சூழ்நிலையில் அன்றைய ஆளுநரின் செயலராகவிருந்த சர் ரதர்ஃபோர்டிடம் செல்வம் ஜார்ஜை அழைத்துக் கொண்டு சென்றார். பிரச்சினையை அறிந்திருந்த செயலர், "சர் செல்வம், மற்றவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு உங்கள் மகனுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்க வந்திருக்கிறீர்களா?" என்றார். "அப்படியல்ல. ஆனால் என் மகன் என்பதற்காக ஜார்ஜுக்கு வேலை கிடைக்காமலிருந்து விடக்கூடாது என்று சொல்வதற்கே வந்தேன்" என்று பதிலிறுத்தார் செல்வம். பின் ஜார்ஜுக்கே அந்த வேலை கிடைத்தது.

## தாழ்த்தப்பட்டோர் முன்னேற

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமானால் சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் அவர்கள் வளர்ச்சிபெற வேண்டும் என்பது செல்வத்தின் கருத்து. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவச் செல்வம் தயங்கவில்லை. அவர் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்தபோது பட்டுக்கோட்டை வட்டக் கழகத்துக்குத் தாம் நியமனம் செய்ய வேண்டியவரைத் தாழ்த்தப்பட்டோர் சமூகத்தினின்றே செல்வம் தேர்ந்தெடுத்தார். ஆனால் பட்டுக்கோட்டை வட்டக் கழகத் தலைவரான வி. நாடிமுத்துப் பிள்ளை அந்நியமனத்தை ஏற்க மறுத்தார். தாழ்த்தப்பட்டோர் ஒருவரை வட்டக் கழக உறுப்பினராக நியமனம் செய்து மற்றவர்களுடன் சரிசமமாக அவரை அமரச் செய்ய இயலாது என்று அவர் வாதாடினார். அப்பொழுது சென்னை முதலமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயனின் உதவியை நாடினார். தஞ்சை மாவட்டக் கழகத்திலிருந்து இப்பிரச்சினைபற்றிய விளக்கம் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. இரு தரப்பினரின் விளக்கங்களையும் அறிந்த முதலமைச்சர், தஞ்சை மாவட்டக் கழகத் தலைவரால் நியமிக்கப்பட்டவர் பட்டுக்கோட்டை வட்டக் கழக உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். தமது தீர்ப்பு ஏற்கப்படாவிட்டால் பட்டுக்கோட்டை வட்டக் கழகம் கலைக்கப்படும் என்றும் அவர் அச்சுறுத்தினார். எனவே நாடிமுத்துப்பிள்ளை இத்தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டியதாயிற்று. செல்வம் விரும்பியபடியே தாழ்த்தப்பட்ட ஒருவர் வட்டக் கழக உறுப்பினராகித் தொண்டு செய்ய முடிந்தது.

## கறைபடியாத கரங்கள்

செல்வத்தின் வாழ்வில் ஊழலுக்கு இடமில்லை. தாமும் ஊழலுக்கு இடம் கொடுக்க மாட்டார். பிறரையும் ஊழலுக்கு இரை யாகாமல் இருக்குமாறு அறிவுரை கூறுவார். ஊழல் மலிந்திருந்த காலத்தில் பொறுப்புக்களை ஏற்றிருந்தாலும் தம் கரங்களில் கறை படியாமல் பார்த்துக் கொண்டார். அவர் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்தபோது அவரது உதவியை நாடி ஒருவர் வந்தார். அவரது கோரிக்கையை அறிந்த செல்வம் தம்மால் இயன்ற அளவு உதவுவதாக வாக்களித்தார். அவர் திரும்பிச் செல்லுமுன் செல் வத்தின் மேசைமீது ஓர் உறையை விட்டுச் சென்றார். அவர் வெளியில் சென்றபின் அவ்வுறையைத் திறந்து பார்த்த செல்வம் அதனுள் நூறு ரூபாய்த் தாள் இருக்கக் கண்டு கடுஞ்சினம் கொண்டார். 'தம்மை இதன் மூலம் விலைக்கு வாங்கி விடலாம் என்று எண்ணி விட்டாரா அவர்?' என்று நெஞ்சம் குமுறினார். அவரைத் திரும்ப அழைத்து, அவருக்கு முன்னாலேயே அந்த நூறு ரூபாய்த் தாளைக் கிழித்து முகத்தில் விட்டெறிந்தார். கிழிந்த துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டு போகுமாறு கோபத்துடன் மொழிந்தார். அவர் அவ்வாறே சென்ற பின் பொன்னு பாப்பாள் மெல்லத் தம் கணவரை அணுகி, "அந்த நூறு ரூபாயைக் கிழிக்காமல் திருப்பிக் கொடுத்திருந்தால் அது அவருக் காவது பயன்பட்டிருக்குமே" என்றார். "இப்படித்தான் இத்தகைய ஊழல் பேர்வழிகளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்" என்று செல்வம் கோபம் ஆறாத நிலையில் கூறியதும் அவர் பதில் பேசவில்லை.

## மகனுக்கு அறிவுரை

தம் மகன் ஜார்ஜ் முதன் முறையாக மாவட்டக் கழகப் பொறியா ளராகப் பணியேற்றபோது செல்வம் அவருக்கு ஏற்ற அறிவுரைகள் வழங்கினார். "நான் அரசியல்வாதி. அவ்வப்போது மாலைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இரண்டு எலுமிச்சம் பழங் களைத் தவிர வேறு எதையும் நீ யாரிடமிருந்தும் வாங்கக் கூடாது. இலஞ்சத்துக்கும் ஊழலுக்கும் உன் வாழ்வில் இடம் கொடுக்கவே கூடாது" என்று கடுமையாக எச்சரித்து, ஆசி வழங்கி அனுப்பினார்.

## அயராத உழைப்பு

எதையாவது எப்போதும் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்னும் விருப்பமுடைய செல்வம் தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பொறுப்புகளையும் ஏற்றுச் சுறுசுறுப்புடன் உழைத்து வந்தார். வாழ்வில் பொருள் சேர்ப்பதை விடப் பிறருக்குத் தொண்டு செய்வதே மிக உன்னதமானது என்பதை உணர்ந்த செல்வம் பிறர்நலப் பணியில் முழு நிறைவு கொண்டார். மாவட்டக் கழகப் பொறுப்புகளோடு நீதிக் கட்சி யின் மாவட்டத் தலைவர் பொறுப்பையும் ஏற்றுத் திறம்பட உழைத்தார். மாநில அளவில் நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார்.

# 5. நீதிக் கட்சிப் பணிகள்

இங்கிலாந்தில் தம் சட்டக் கல்வியை முடித்துக் கொண்டு பாரிஸ்டராக 1912–ஆம் ஆண்டு இந்தியா திரும்பிய செல்வம் முதலில் சென்னையில் வழக்கறிஞராகத் தொழில் புரியத் தொடங்கினார். விரைவிலேயே சென்னையை விட்டுத் தஞ்சையில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

## பிராமணர் ஆதிக்கம்

1912–ஆம் ஆண்டில் சென்னையில் பிராமணர்களே எல்லாத் துறைகளிலும் முதலிடம் வகித்து வந்தனர். வழக்கறிஞர், பொறியிய லாளர், ஆசிரியர், அரசு நிர்வாகம் எனப் பல துறைகளிலும் முதலிடத் தில் இருந்த அவர்கள் 1909–ஆம் ஆண்டு மின்ட்டோ–மார்லி சீர்திருத்தத்தின் விளைவாக அமைக்கப்பட்ட சட்டமன்றத்திலும் முதன்மை பெறலாயினர்.

சென்னையில் இரு குழுக்கள் முதலிடம் பெறுவதில் முனைந்து நின்றன. எழும்பூர்க் குழுவில் சி. சங்கரன் நாயர், டி. ரங்காச்சாரி, கஸ்தூரி ரங்க ஐயங்கார், வி.சி. தேசிகாச்சாரியார், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், சுப்பிரமணிய ஐயர் போன்றோர் தலைவர்களாக விளங்கினர். மயிலாப்பூர்க் குழுவுக்கு வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைவ ராக இருந்தார். மாநில ஆளுநருடனும் அரசின் உயர் அதிகாரி களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவரது செல்வாக்கு மிகப் பெரிது. அவரே சென்னை மாநிலக் காங்கிரசுக் கட்சியின் முடி சூடா மன்னராக விளங்கினார். இக்குழுவைச் சேர்ந்த பலர் உயர் நீதி மன்ற நீதிபதிகளாவும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினர்களாகவும் இடம் பெற்றனர். சிலர் சென்னை மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர். 1910–ஆம் ஆண்டுமுதல் மாநில ஆளுநரின் நிர்வாகக் குழுவில் ஓர் இந்தியரை நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டபோது அப்பதவி சென்னை மாநிலத்தில் மயிலாப்பூர்க் குழுவைச் சார்ந்த ஒருவருக்கே கிடைத்தது. சென்னை மாநகரில் எப்பதவியையும் எளிதில் பெற அவர்களால்

முடிந்தது. சென்னை மாநகராட்சி மன்றத்திலும் அவர்களின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கியது. சென்னைத் துறைமுகப் பொறுப் பாண்மைக் கழகம், பச்சையப்பர் அறக்கட்டளை முதலியவற்றில் மயிலாப்பூர்க் குழுவைச் சார்ந்தவர்களே முதன்மை பெற்றனர்.

இந்து ஆலயச் சீர்திருத்தத்துக்காக இவர்கள் 'தர்மரக்ஷண சபை'யை நிறுவினர். சென்னை மாநிலத்திலுள்ள பல பெரிய ஆலயங் களின் நிர்வாகப் பொறுப்பு மயிலாப்பூர்க் குழுவினர்க்கே கிடைக்க இச்சபை வழிவகுத்தது.

## சட்டமன்றத்திலும் அவர்களே

அரசியல் பணித்துறையில் மட்டுமல்ல—நகராட்சி, வட்ட, மாவட்டக் கழகங்களிலும் பிராமணர்களின் அதிகாரமே கொடிகட்டிப் பறந்தது. சென்னை மாநிலச் சட்டமன்றத்திலும் 1910—ஆம் ஆண்டு முதல் 1920—ஆம் ஆண்டு வரை பிராமணர்களே பெருந் தொகையினராக இருந்தனர். அரசால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களுள் எட்டுப்பேர் பிராமணர்களாக இருந்தனர். மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றங்களும் வட்ட, மாவட்டக் கழகங்களும் சேர்ந்து சட்டமன்றத்துக்கு ஒன்பது உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தன. இவ்வொன்பது பேரில் எட்டுப்பேர் பிராமணர்களாகவே இருந்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டதாரிகளாகிய பலர் பிராமணராகவே இருந்ததால் சென்னைப் பல்கலைக் கழகத் தொகுதியிலிருந்து பெரும்பாலும் ஒரு பிராமணரே சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு நியமனப் பதவிகள் மட்டுமல்ல, தேர்தலுக்குரிய பதவிகளும் பிராமணரின் கைகளிலேயே இருந்தன.

## நீதித் துறையிலும் ஆதிக்கம்

1912—ஆம் ஆண்டளவில் இந்நிலை மேலும் மோசமாகியது. நியமனப் பதவிகள், தேர்தல் பதவிகள் அனைத்தும் மயிலாப்பூர் குழுவினருக்கே உரியனவாயின. அரசுப் பணித் துறையில் காலியாகும் இடங்களையெல்லாம் அவர்கள் தங்கள் உறவினரைக் கொண்டே நிரப் பினர். குறிப்பாக நீதித் துறையில் மயிலாப்பூர்க் குழுவினரின் ஆதிக்கம் அதிகமாயிற்று. இதைக் கண்டு மனம் பொறுக்காத பலர் அரசுக்குப் புகார்க் கடிதங்கள் எழுதலாயினர். அரசாங்கத்தில் ஊழல் மலிந்து விட்டதாக 'இந்து' நாளிதழ் தொடர்ந்து எழுதி வந்தது.

## சுயாட்சி என்பது பிராமணர் ஆட்சி தானோ?

1914—15—ஆம் ஆண்டுகளில் சென்னை மாநிலக் காங்கிரசும் பிராம ணர்களின் ஆதிக்கத்திலேயே இருந்தது. அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவில் பிராமணரல்லாதார் இடம் பெற இயலாத நிலையே பெரும்பாலும் அவ்வமயம் நிலவியதாக 1915—ஆம் ஆண்டின் செயற்குழு அறிக்கை கூறுகிறது. இந்திய அளவில் காங்கிரசுச் செயற் குழுவில் ஏ.பி. பாத்ரோ (பின்னாளில் நீதிக்கட்சி அமைச்சராக விளங்கியவர்) மட்டுமே இடம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. 'சுயாட்சி என்பது பிராமணர் ஆட்சியாகவே மாறிவிடும்' என்னும் அச்சம் வலிமை பெறும் வகையிலேயே அன்றைய காங்கிரசின் நிலை இருந்த தாக 'மதராஸ் மெயில்' நாளிதழ் எழுதியது.

## பிராமணரல்லாதார் அறிக்கை

பிராமணர்களின் ஆதிக்கம் அளவுக்கு அதிகமாக ஓங்கியிருந்த நிலையை மாற்ற வேண்டுமென்று பிராமணரல்லாதார் சிலர் சிந்திக்கத் தொடங்கினர். கருணாகர மேனன், கேசவப் பிள்ளை போன்ற பெருந் தலைவர்கள் காங்கிரசில் இருந்தபோதும் நீதிபதி சேஷகிரி ஐயரே சென்னை மாநிலக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, காங்கிரசிலுள்ள பிராமணரல்லாதாரும் தங்கள் எதிர்காலத் தைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். முஸ்லீம்கள் ஓர் அமைப்பாக இருந்து தங்கள் சமுதாய, அரசியல் நன்மைகளுக்கு வழி வகுத்துக் கொண்டிருப்பதைப் போல பிராமணரல்லாதாரும் தங்களுக்கென ஓர் அமைப்பைத் தோற்றுவித்தல் வேண்டும் என்னும் கருத்து பலராலும் வலியுறுத்தப்படலாயிற்று.

## பின்னணிக் காரணங்கள்

வர்ணாசிரம தர்மத்தின் பெயரால் பிராமணரல்லாதார் இழிவு படுத்தப்பட்டதை, அவர்களுள் படித்தவர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. டாக்டர் கால்டுவெல் எழுதிய ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ திராவிட மொழிகளின் சிறப்பையும் திராவிடப் பண்பாட்டின் மேன்மையையும் எடுத்தோதித் திராவிட மக்களிடையே விழிப்புணர்வுக்குக் காரணமாயிற்று. ஆரியர்கள் தென்னிந்தியாவில் செல்வதற்குப் பெறுமுன்னரே திராவிட மொழிகளும் பண்பாடும் மேன்மை பெற்றிருந்த நிலையை அந்நூல் விளக்கியது. திராவிட மொழிகள் தனிக் குடும்பத்தைச் சார்ந்தனவென்றும், பல வட மொழிச் சொற்களின் வேர்ச் சொற்களைத் திராவிட மொழிகளிலேயே காண இயலுமென்றும், திராவிட மொழிகளுள் தமிழ் மொழி உயர்தனிச் செம்மொழியென்றும், அது வடமொழியின் துணையின்றித் தனித் தியங்க வல்லதென்றும் தம் நூலில் கால்டுவெல் ஆராய்ச்சிப்பூர்வமாக நிறுவினார். தங்கள் தனித் தன்மையைத் திராவிட மக்கள் உணர்ந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் காரணமாகியது.

இந்தியாவில் சமயப் பணி புரிந்து, பின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்ற ஜி.யு. போப் திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ‘இந்தியாவின் சமயத் தத்துவங் களுள் சைவ சித்தாந்தமே தலை சிறந்தது; அது தென்னகத்தை, குறிப்பாகத் தமிழகத்தைச் சார்ந்த சமயம்; அது ஆரியரின் வருகைக்கு முன்னரே தென்னகத்தில் தழைத்தோங்கியிருந்த சமயம்’ என்றெல்லாம் அவர் ஆராய்ந்து வெளியிட்டார்.

ஏடுகளிலேயே இருந்த பழந்தமிழ் இலக்கிய நூல்களைத் தேடிக் கண்டு பிடித்து, பாட பேதங்களை ஆராய்ந்து பார்த்து அவற்றை அச்சேற்றுவதில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், சி.வை. தாமோதரம் பிள்ளை முதலியோர் ஈடுபட்டனர். இதனால் அதுவரை மறைந்திருந்த பல பழந்தமிழ் இலக்கியங்கள் மக்கள் அரங்கத்துக்கு வந்தன. தமிழிலக்கியத்தின் செழுமையும் சிறப்பும் பலருக்கும் புரியலாயின.

மறைமலையடிகள், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, பி. சுந்தரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை முதலிய பல தமிழறிஞர்கள் தமிழக

வரலாற்றை ஆராய்ந்து நூல்கள் எழுதி வெளியிட்டனர். இதனால் தமிழின் தொன்மையும் தமிழினத்தின் பண்டையச் சிறப்பும் உலகறிந்த உண்மைகளாயின.

## உண்மையை உணர்ந்தனர்

இவ்வாறு வெளிநாட்டவரும் தமிழ்நாட்டவருமாகிய பலரின் ஆராய்ச்சியும் முயற்சியும் தமிழினத்தைப் பற்றிய பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தன. இதனால் தமிழர்கள் தங்கள் வரலாற்றை அறிந்து தங்கள் குடிச் சிறப்பை உணர்ந்து வாழ வழியுண்டாயிற்று. ஆரியர்களும் திராவிடர்களும் தனித்தனி இனங்கள் என்னும் உண்மை உறுதிப்படவே, திராவிடர்கள் தங்கள் இனத்தின் பெருமையையும் தனித்தன்மையையும் உணர்ந்து வாழத் தொடங்கினர்.

## கூடிச் செயல்படுவோம்

சென்னை அரசிலும் சட்டமன்றத்திலும் பிராமணர்கள் தனியாட்சி செலுத்தி வந்த தன்மையும், திராவிட இனத்தாரின் தனிச்சிறப்பும் உணர்ந்த பிராமணரல்லாத சில தலைவர்கள் கூடி அது பற்றி அடிக் கடி சிந்திக்கலாயினர். பிராமணரல்லாதார் ஒன்றாகக் கூடி தங்களுக் கெனத் தனியமைப்பு ஒன்றை நிறுவிச் செயல்பட்டாலொழியத் தாங்கள் முன்னேற இயலாது என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்து கொண்ட தன் விளைவாகவே 'தென்னிந்திய மக்கள் பேரவை' தோற்றுவிக்கப் பட்டது.

## நீதிக்கட்சியின் முன்னோடிகள்

சென்னை மாநிலத்தின் வருவாய் வாரியத்திலும் பிற அரசு நிறுவனங்களிலும் பணியாற்றி வந்த பிராமணரல்லாதார் பலர் பிராமணர்களால் தாங்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வருவதையும், தக்க பதவி உயர்வுகள் தங்களுக்கு வழங்கப்படாமல் தாங்கள் வஞ்சிக் கப்படுவதையும் கண்டு வருந்தினர். தங்களுக்கு மேலதிகாரிகளாக இருக்கும் பிராமணர்களின் பாரபட்சமுள்ள போக்கினால் பிராமண ரல்லாதாராகிய தாங்கள் துன்புறுவதை எடுத்தோதித் தங்கள் எதிர்கால முன்னேற்றத்துக்கு வழிவகுக்கத் தங்களுக்கென ஓர் அமைப்புத் தேவை யென உணர்ந்தனர். அதன் விளைவாகச் 'சென்னை ஒன்றிப்பு அணி' என்னும் அமைப்பினை உருவாக்கினர். தஞ்சையில் மாவட்டத் துணை ஆட்சியாளராகப் பணிபுரிந்த சரவணப் பிள்ளை, பொறியியல் துறை யைச் சார்ந்த துரைசாமிப் பிள்ளை, வருவாய் வாரிய அலுவலகத்தைச் சார்ந்த எஸ். நாராயணசாமி நாயுடு போன்றவர்கள் இவ்வமைப்பில் தீவிரமாக ஈடுபட்டு முன்னணித் தலைவர்களாக விளங்கினர். இவர்களுக்குப் பின்னணியிலிருந்து ஊக்கமும் உதவியும் நல்கி வழிகாட்டியாக விளங்கியவர் டாக்டர் சி. நடேச முதலியார் ஆவார். திருவல்லிக்கேணிப் பகுதியில் மருத்துவத் தொழில் புரிந்து வந்த இவர் சென்னை மக்களிடையே புகழ் பெற்ற பொதுநலத்தொண்டராக இருந்தார். அந்நாளில் புகழ் பெற்ற ஆங்கில நாளிதழாக விளங்கிய 'இந்திய தேச பக்தன்' இதழின் ஆசிரியராகிய சி. கருணாகர மேனன், பின்னாளில் பனகல் அரசராகவும் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராகவும் விளங்கிப் புகழ் பெற்ற பி. இராமராய நிங்கர் போன்ற பெரியோர்களும் விரைவில் இவ்வமைப்பின் உறுப்பினராகச்



வட்டமேசை மாநாட்டிலிருந்து திரும்பிய செல்வத்துக்குத் தஞ்சை புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு – 1930. செல்வத்தின் அருகில் அவரது துணைவியார் பொன்னு பாப்பாள் அம்மாள்.



*1931* - ஆம் ஆண்டில் வட்ட மேசை மாநாட்டுக்குச் சென்றிருந்த செல்வமும், இலண்டனில் படித்துக் கொண்டிருந்த ஜார்ஜும்.

சேர்ந்தனர். சரியான திட்டமின்றித் தொடங்கப்பட்ட 'சென்னை ஒன்றிப்பு அணி' விரைவில் தன் பெயரைச் 'சென்னை திராவிட சங்கம்' என்று மாற்றிக் கொண்டது.

சென்னை திராவிட சங்கம் தனக்கென முறையான அமைப்புச் சட்டங்களை அமைத்துக் கொண்டு 10–11–1912 முதல் செயல்படலாயிற்று. விரைவில் சென்னை நகரின் பல்வேறிடங்களிலும் சங்கத்தின் கிளைகள் தோன்றின. சென்னை நகரில் செயல்படவே இச்சங்கம் தோன்றியதாயினும் மதுரை போன்ற நகர்களிலுள்ள பிராமணரல்லாதாரும் இதற்கு ஆதரவும் ஊக்கமும் வழங்கினர். பிராமணரல்லாத மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்த இச்சங்கம் 5–4–1914 அன்று கூடிய பொதுக்குழுக் கூட்டத்தில் தன் சட்டங்களை மாற்றியமைத்துக் கொண்டு புதிய ஊக்கத்துடன் செயல்படத் தொடங்கியது. டாக்டர் சி. நடேச முதலியார் கௌரவச் செயலாளராகவும், பாரிஸ்டர் எஸ். ஜி. ரங்கராமானுஜம் துணைச் செயலாளர் – பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த முகமது இப்ராகிம் போன்ற இஸ்லாமியத் தலைவர்களும் இவ்வமைப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

## பெஸண்ட் அம்மையாரின் ஆதரவாளர்கள்

அன்னி பெஸண்ட் அம்மையாரின் 'சுயாட்சி இயக்கம்' மயிலாப்பூர் பிராமணர்களின் ஆதரவைப் பெற்றது. இவ்வியக்கத்தின் தலைவராக எஸ். சுப்பிரமணிய ஐயர் பொறுப்பேற்றிருந்தார். சி.பி.இராமசாமி ஐயர் அம்மையாரின் ஆலோசகராகவும், ஜி.ஏ. நடேசனும் எல்.ஏ. கோவிந்த ராகவ ஐயரும் அம்மையாரின் நம்பிக்கைக்குரிய நண்பர்களாவும் திகழ்ந்தனர். அம்மையாரின் 'புதிய இந்தியா' அச்சகத்துக்கு அரசு விளம்பரங்கள் மூலம் வருமானம் கிடைக்க அரசுத் துறைகளில் பணியாற்றிய பல பிராமண நண்பர்கள் உதவினர். அவரது புரட்சிகரமான பேச்சுக்கள் காரணமாக அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டபோது, அன்றைய அரசுத் தலைமை வழக்கறிஞராக இருந்த எஸ். சீனிவாச ஐயங்கார், உயர் நீதிமன்ற நீதிபதிகளான டி. சதாசிவ ஐயர், டி.வி. சேஷகிரி ஐயர் முதலியோர் அம்மையார் தண்டனை பெறாதபடி உதவினர்.

## 1916–ஆம் ஆண்டுத் தேர்தலும் பிராமணரல்லாதார் தோல்வியும்

டெல்லி சட்டமன்றத்துக்கு 1916–ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. சென்னைச் சட்டமன்றம் இருவரை மத்திய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். இதற்கு ஏழுபேர் போட்டியிட்டனர். சென்னைச் சட்டமன்றத்தில் பிராமணர்களே பெருந்தொகையினராக இருந்த போதிலும் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியை எதிர்த்து நின்ற டாக்டர் டி.எம். நாயரை ஆதரிப்பதாகப் பிராமணர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால் இறுதியில் தேர்தல் நடைபெற்ற போது அவர்கள் டாக்டர் நாயருக்கு எதிராகவே வாக்களித்தனர். தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது வி.எஸ். சீனிவாச சாஸ்திரியும், பி.என். சர்மாவும் வெற்றி பெற்றனர். நிலக்கிழார்கள் தொகுதியில் போட்டியிட்ட பி. இராமராய நிங்கரைக் கே.வி. ரங்க

சாமி ஐயங்கார் தோற்கடித்தார். அவ்வாறே பிற தொகுதிகளில் பி.தியாகராயச் செட்டியாரும் கே.வி. ரெட்டி நாயுடுவும் தோற்கடிக்கப் பட்டனர். வெற்றி பெற்றவர்கள் அன்னி பெஸண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தையும் மயிலாப்பூர்க் குழுவையும் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். பிராமணர்களின் அதிகார பலமும் சுயநலமுமே புகழ் பெற்ற பிராமணரல்லாதார் தலைவர்கள் தோல்விக்குக் காரணம் என்று டி. பிரகாசம் (பின்னாளில் சென்னை, ஆந்திர முதலமைச்சர்) போன்ற பிராமணர்களே வருந்திக் கூறினர்.

## தனி அரசியல் கட்சி தேவை

இத்தோல்விகள் பிராமணரல்லாதார்க்கென்று அரசியல் கட்சி ஒன்று தேவையென்று உணர்த்தின. சுதந்திர இயக்கம் வெற்றி பெற்று இந்தியா விடுதலையடைந்தாலும் அவ்வியக்கத்திலும் பிராமணர்களே முன் நிற்பதால் பிராமணரல்லாதார்க்கு விடிவே இல்லை என்பதைத் தலைவர்கள் உணர்ந்தனர்.

## தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்

சென்னை மாநிலத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த பிராமண ரல்லாதார் தலைவர்கள் 20–11–1916 அன்று சென்னை விக்டோரியா மன்றத்தில் கூடி விவாதித்தனர். பிராமணரல்லாதாரின் பிரச்சினை களை எடுத்துரைக்கப் பத்திரிகைகளைத் தொடங்கி நடத்துவதென்றும், பிராமணரல்லாதாரின் நலன்களைப் பாதுகாத்து வளர்க்க ஓர் அரசியல் கட்சி தொடங்குவதென்றும் அவர்கள் தீர்மானித்தனர். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் நாளிதழ் நடத்துவதற்காகத் 'தென்னிந்திய மக்கள் பேரவை'யும், பிராமணரல் லாத மக்களின் அரசியல் நலன்களைக் காத்து வளர்த்திடத் 'தென் னிந்திய நலவுரிமைச் சங்க'மும் தொடங்கப்பட்டன.

தென்னிந்திய மக்கள் பேரவை 'பிராமணரல்லாதார் அறிக்கை' யினை 1916–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் அதன் செயலாளர் பி.தியாகராயச் செட்டியாரின் கையொப்பத்துடன் வெளியிட்டது. (பி.தியாகராயர் சென்னையில் பெரிய வர்த்தகராகவும், தென்னிந்திய வர்த்தகர் சபையின் தலைவராகவும், சென்னை மாநகராட்சி மன்றத் தின் மூத்த உறுப்பினராகவும் திகழ்ந்தவர். அவர் சட்ட மன்ற உறுப்பின ராகவும் பணியாற்றியிருந்தார்.) இந்த அறிக்கையே பிராமணரல்லா தார் இயக்கத்தின் தொடக்கம் எனலாம். இவ்வறிக்கை சுயாட்சி இயக் கத்தை வன்மையாகச் சாடியது. சென்னை அரசின் பல்வேறு துறை களிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் இந்தியருக்குக் கிடைக்கக் கூடிய பதவி நியமனங்களில் பிராமணரின் ஆதிக்கம் ஓங்கியிருந்த நிலையை அது சுட்டிக்காட்டியது. பிராமணரல்லாதாரின் கல்வி வளர்ச்சிக்காகப் பிராமணரல்லாதாரின் தலைமையில் ஆங்காங்கே சங்கங்கள் நிறுவிச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. சென்னை மாநிலத்தின் 4.15 கோடி மக்க ளுள் 4 கோடி மக்கள் பிராமணரல்லாதாராக இருந்ததால் அவர்கள் ஒருங்கிணைந்து தங்கள் முன்னேற்றத்துக்காக உழைப்பதும், பிராம ணர்களின் அதிகார ஏகபோகத்துக்கெதிராகத் தங்கள் உரிமைகளைக் காக்க முனைவதும் இன்றியமையாதது என்று வலியுறுத்தியது. இவ் வறிக்கை சென்னை மாநிலத்திலுள்ள பிராமணரல்லாத மக்களின்

கண்களைத் திறக்க உதவியது. பிராமணரல்லாதவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு இதுவே தொடக்க விழாவாக அமைந்தது எனலாம்.

## பிராமணரல்லாதாரின் நலனே குறிக்கோள்

பி. தியாகராயச் செட்டியாரும் டாக்டர் டி.எம். நாயரும் இவ்வியக்கத்தின் முன்னணித் தலைவர்களாக விளங்கினர். சென்னை நகரத்து மேற்குடி மக்கள் மட்டுமல்லாமல், சென்னை மாநிலத்திலுள்ள நிலக்கிழார்களும் சமீன்தார்களும் இவ்வியக்கத்தில் சேர்ந்து உழைக்கலாயினர். சென்னை திராவிட சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்த அரசு அலுவலர்கள் பலரும், வழக்கறிஞர்களும் இயக்கத்தில் சேர்ந்தனர். இயக்கத்தின் தலைவர்களும் முன்னணி வீரர்களும் பிராமணரல்லாதாரிடையே மேல்மட்டத்தைச் சார்ந்தவர்களாயினும், இயக்கம் பிராமணரல்லாதார் அனைவரின் நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்காக உழைத்து வந்தது.

## நீதிக்கட்சியின் மதச்சார்பின்மை

நீதிக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களே. ஆனால் அது இந்துக்களுக்கு மட்டுமே உரிய கட்சியாக இருக்கவில்லை. 20–11–1916 அன்று நீதிக்கட்சி தொடங்கப்பட்டபொழுது இந்து சமயத்தைச் சாராதவர்களாகிய கே.ஜி. அகமது தம்பி மரைக்காயரும், எம்.ஜி. ஆரோக்கியசாமிப் பிள்ளையும் அதன் துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பி. இராமராய நிங்கரும் பி. தியாகராயச் செட்டியாருமே அதன் மற்ற இரு துணைத் தலைவர்கள். இவ்வுண்மையே நீதிக்கட்சி இந்து சமயத்தைச் சாராத பிற சமயத்தவர்க்கும் உரிய இடம் கொடுத்த நிலையை எடுத்துரைக்கும். அவ்வாறே முகமது உஸ்மான், கட்சியின் நான்கு செயலாளருள் ஒருவராகப் பணியாற்றினார். நீதிக்கட்சி சமய அடிப்படையில் தோன்றியதல்ல என்பதும், அது பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பிராமணரல்லாதாரின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி என்பதும் இச்செயல்களால் தெளிவாக விளங்குகிறது.

தென்னிந்தியராகவும் இருபத்தொரு வயதினராகவும் பிராமணரல்லாதர்ராகவும் ஒருவர் இருந்தால் அவர் நீதிக்கட்சியின் உறுப்பினராகலாம் என்று கட்சியின் விதிகள் கூறியதும் நீதிக்கட்சியின் மதச் சார்பின்மையை நிலைநாட்டுகிறது. "பிராமணரல்லாதாராகிய முகமதியர், கிறித்துவர், பிறசமயத்தினர் ஆகிய அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை நிலைநாட்டுவதை" நீதிக்கட்சி தன் நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டிருந்தது. சட்டமன்ற நீதிக்கட்சியின் செயற்குழுவில் முகமதியருக்கும் கிறித்துவருக்கும் தக்க பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் அமைப்புச் சட்டம் வலியுறுத்தியது.

## மூன்று பத்திரிகைகள்

திட்டமிட்டபடியே 'நீதி' என்னும் ஆங்கில நாளிதழ் தொடங்கப் பெற்றது. டாக்டர் டி.எம். நாயர் அதன் கௌரவ ஆசிரியராகவும் பி.என். இராமன் பிள்ளை, எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை ஆகிய இரு

வரும் துணை ஆசிரியர்களாகவும் பொறுப்பேற்றனர். "பொதுவாகச் சென்னை மாநில மக்களுக்கும், குறிப்பாகப் பிராமணரல்லாத மக்களுக்கும் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார, உலகாதாய முன்னேற்றத்துக்காக இப்பத்திரிகை உழைத்துவரும்" என்று பத்திரிகை யின் பதிப்பாளரும் வெளியீட்டாளருமாகிய பி. தியாகராயச் செட்டியார் சுற்றறிக்கை விடுத்தார். 'நீதி' பத்திரிகையின் முதல் இதழ் 26-2-1917 அன்று வெளிவந்தது. அதே ஆண்டு ஜுன் மாதத்தில் 'திராவிடன்' என்னும் தமிழ் நாளிதழ் பக்தவத்சலம் பிள்ளையை ஆசிரியராகவும் சுவாமி ருத்ரசோதீஸ்வரா, பண்டித வில்வபதி செட்டியார் ஆகி யோரைத் துணையாசிரியர்களாவும் கொண்டு வெளிவரத் தொடங் கியது. ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த 'ஆந்திர பிரகாசிகா' என்னும் தெலுங்குப் பத்திரிகை சங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டது. அதன் ஆசிரியராக ஏ.சி. பார்த்தசாரதி நாயுடுவும் துணையாசிரி யர்களாக ராகவய்யா நாயுடு, நரசிம்மராவ் நாயுடு ஆகியோரும் பொறுப்பேற்றனர். மூன்று நாளிதழ்களும் பிராமணரல்லாத மக்களி டையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஆற்றல்மிக்க கருவிகளாக விளங்கின. எனினும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகத் திராவிடனும் ஆந்திர பிரகாசிகாவும் விரைவில் வார இதழ்களாக மாற்றப்பட்டன.

## வளர்ச்சி

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலாயிற்று. அன்றைய சென்னை மாநிலம் இன்றைய தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடக மாநிலத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. மாநிலத்தின் பல்வேறிடங்களிலும் கூட்டங்கள் நடத்திப் பொதுமக்களி டையே விழிப்புணர்ச்சியை எழுப்புவதில் சங்கம் முனைந்தது. 1917 ஆகஸ்ட் 19, 20 தேதிகளில் கோயம்புத்தூரிலும், அக்டோபர் 27, 28 தேதி களில் கோதாவரி மாவட்டத்திலுள்ள பிக்கவோலேயிலும், நவம்பர் 3-ஆம் தேதி கடப்பா மாவட்டத்திலுள்ள பிலிவெந்தலாவிலும், நவம்பர் 11, 12 தேதிகளில் விஜயவாடாவிலும், நவம்பர் 30, டிசம்பர் 1 தேதிகளில் திருநெல்வேலியிலும், டிசம்பர் 9-ஆம் தேதி சேலத்திலும் சங்கத்தின் மாநாடுகள் நடைபெற்றன. பிராமணரல்லாத மக்கள் இம்மாநாடுகளில் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். சங்கத்தின் நோக்கத்தை மக்க ளிடையே பரப்புவதற்கு இம்மாநாடுகள் நல்ல வாய்ப்பாக அமைந்தன.

இம்மாநாடுகளின் வெற்றியைக் கண்ட பி. தியாகராயரும், டி.எம். நாயரும் சங்கத்தின் முதல் ஆண்டு நிறைவைப் பெரும் மாநா டாகக் கொண்டாட முடிவு செய்தனர். 1917-ஆம் ஆண்டு டிசம்பர் 28, 29 தேதிகளில் சென்னை வெல்லிங்டன் திரையரங்கில் நீதிக்கட்சியின் மாநாடு (தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் பெயர் விரைவில் நீதிக்கட்சி என மாறி வழங்கலாயிற்று) நடைபெற்றது. மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய பி. தியாகராயர் கட்சியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டினார். 1916-ஆம் ஆண்டு டிசம் பரில் தொடங்கியதாயினும் 1917-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே செயல்படத் தொடங்கிய கட்சி பல்வேறு மாவட்டங்களிலும் மாநாடுகள் நடத்தி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார். வெங்கடகிரி ராஜா தலைமையேற்றிருந்

தார். சுயாட்சி இயக்கத்தை அம்மாநாட்டின்போது பல நீதிக்கட்சித் தலைவர்கள் கடுமையாகச் சாடி உரையாற்றினர். மாநாட்டின் இரண்டாம் நாளில், படிப்படியான அரசியல் சீர்திருத்தம்பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து டாக்டர் நாயர் உரையாற்றினார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், வகுப்புவாரிப் பதவி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி கைத்தொழில் முன்னேற்றம் பற்றிய தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

## மாவட்ட நீதிக் கட்சித் தலைவர்

சென்னை நகர அனுபவம் காரணமாக, பிராமணர்கள் மாநிலத்தில் தனியாட்சி செலுத்தி வருவதால் பிராமணரல்லாதார் முன்னேற முடியாமலிருக்கும் நிலையைச் செல்வம் நன்றாக உணர்ந்திருந்தார். தமிழ் மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களிலேயே பிராமணர்கள் தொகை மிகுதியாக இருந்தது. எனவே தம் சொந்த மாவட்டத்திலும் பிராமணர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதைச் சொந்த அனுபவத்திலேயே கண்டறிந்தார். ஆகவே 1916–ஆம் ஆண்டின் இறுதியில் நீதிக்கட்சி தொடங்கப்பட்டபோது அதில் உடனே உறுப்பினராகச் சேர்ந்தார். அவரது நண்பர்களாகிய டி.வி. உமா மகேசுவரம் பிள்ளை, பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு, நெடும்பலம் ஆர். சாமியப்ப முதலியார், ஐ. குமாரசாமிப்பிள்ளை, நாகை வி.பி.பி. காயாரோகணம் பிள்ளை, குடந்தை கந்தசாமி மூப்பனார் போன்றவர்களும் நீதிக்கட்சி உறுப்பினர்களாயினர். செல்வம் மாவட்ட நீதிக்கட்சியின் தலைவரானார். அவரும் அவரது நண்பர்களும் அயராமல் உழைத்ததன் விளைவாக, அதுவரை பிராமணர்களே ஆதிக்கம் செலுத்திவந்த தஞ்சை மாவட்டம் நீதிக்கட்சியாரின் கோட்டையாக மாறியது. நகராட்சி மன்றங்கள், வட்ட ஆட்சிக் கழகங்கள், மாவட்டக் கழகம் அனைத்தையும் நீதிக்கட்சியினர் படிப்படியாகக் கைப்பற்றலாயினர்.

## மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தம்

இந்தியாவுக்குச் சிறிது சிறிதாகச் சுயாட்சி வழங்குவதில் ஈடுபட்டிருந்த ஆங்கில அரசு முதலில் மின்ட்டோ – மார்லி சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியது. பின் 1917–ஆம் ஆண்டில் மாண்டேகு –செம்ஸ்ஃபோர்டு சீர்த்திருத்தங்களுக்கு வழிகோலியது. அதன் தொடர்பாக, மாண்டேகு டிசம்பர் 14–ஆம் நாள் சென்னைக்கு வந்தார். பிராமணரல்லாதார் நான்கு குழுக்களாக அவரைச் சந்தித்தனர். பி.கேசவப்பிள்ளையின் தலைமையில் சென்னை மாநிலச் சங்கமும், பி.இராஜரத்தின முதலியார் தலைமையில் நீதிக்கட்சியும், இராமராய நிங்கரின் தலைமையில் சென்னை திராவிடச் சங்கமும், ஆர். வெங்கடரத்தினம் தலைமையில் பொதுவாகப் பிராமணரல்லாதார் சங்கங்களும் மாண்டேகுவைச் சந்தித்தனர்.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும்

நீதிக்கட்சியினர் மாண்டேகுவிடம் சமர்ப்பித்த விண்ணப்பம் பி.தியாகராயச் செட்டியாரால் வாசித்தளிக்கப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின் இந்தியாவுக்கு வழங்கப்படவிருக்கும் அரசியல் சீர்திருத்தங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இடம் பெற்றாலன்றிப்

பிராமணரல்லாதார் இந்தியாவில் முன்னேற முடியாது என்னும் கருத்தினை நீதிக்கட்சி மாண்டேகுவிடம் பெரிதும் வலியுறுத்தியது. சென்னை திராவிடச் சங்கத்தின் சார்பிலும் பிராமணரல்லாதார் சங்கங்களின் சார்பிலும் இதே கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலமே சென்னை மாநிலத்தின் பெரும்பான்மை மக்களாகிய பிராமணரல்லாதார் வாழ்வு பெற முடியும் என்னும் கருத்து பல ஆதாரங்களைக் கொண்டு நிறுவப்பட்டது.

## இங்கிலாந்திலும் போராட்டம்

இந்தியாவில் பல தலைவர்களைச் சந்தித்தும் மாண்டேகுவால் எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை. தங்கள் போராட்டத்தை இங்கிலாந்தில் தொடர்ந்தாலன்றிச் சட்டமன்றத்திலும் அரசுப் பணிகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற இயலாதென்பதை நீதிக் கட்சித் தலைவர்கள் உணர்ந்தனர். எனவே டாக்டர் டி.எம். நாயரின் தலைமையில் இங்கிலாந்துக்கு ஒரு குழுவை அனுப்ப முடிவு செய்தனர். தூதுக் குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு முன்னால் இங்கிலாந்து சென்ற நாயர் அங்குள்ள பத்திரிகை ஆசிரியர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துத் தம் கட்சியின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு ஆதரவு தேடினார்.

## அறிக்கை தந்த ஏமாற்றம்

2–7–1918 அன்று மாண்டேகு–செம்ஸ்போர்டு அறிக்கை வெளியாயிற்று. அது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு எதிரான தீர்ப்பை வழங்கியதைக் கண்டு நீதிக்கட்சித் தலைவர்கள் கொதித்தெழுந்தனர். மாண்டேகு–செம்ஸ்போர்டு அறிக்கைக்கு நீதிக்கட்சியினரின் மறுப்பு 14–7–1918 அன்று பி. தியாகராயச் செட்டியாரின் பெயரில் வெளியிடப்பட்டது. பிராமணரல்லாதாரின் கோரிக்கைகள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டதைக் கண்டித்த இம்மறுப்பு அறிக்கை, சுயாட்சி இயக்கத்தினரைக் கலந்தாலோசித்து அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே மாண்டேகு–செம்ஸ்ஃபோர்டு அறிக்கை தயாரிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டியது.

## வாக்குரிமைக் குழு உறுப்பினருக்கு எதிர்ப்பு

மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்த்திருத்தத்தைச் செயல்படுத்து முன் வாக்காளர் பிரச்சினையை – அதாவது வாக்குரிமை யார் யாருக்கு உண்டு என்னும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சௌத்ப்ரோ தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் உறுப்பினராக இடம் பெற்ற வி.எஸ். சீனிவாச சாஸ்திரி (சென்னை), சுரேந்திர நாத் பானர்ஜி (வங்காளம்) ஆகிய இருவருமே பிராமணர்கள். இருவருமே பிராமணரல்லாதாருக்கு எதிராகச் செயல்படுபவர்கள் என்பது நீதிக் கட்சியினரின் கணிப்பு. அதிலும் சீனிவாச சாஸ்திரியின் நியமனம் டாக்டர் நாயர் முதலிய நீதிக்கட்சித் தலைவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது. கட்சியின் ஆங்கில நாளேடான 'நீதி' இந்நியமனத்தைக் கடுமையாகத் தாக்கியது. சீனிவாச சாஸ்திரியின் நியமனத்தை எதிர்த்து மாவட்ட அளவிலும் நகரங்களிலும் எதிர்ப்புக் கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென நீதிக்கட்சியினரை அது கேட்டுக் கொண்டது.

## தஞ்சையில் எதிர்ப்புக் கூட்டம்

உடனே தஞ்சை மாவட்டத் தலைவராகிய செல்வம் தஞ்சையில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தார். தஞ்சை கந்தப்பச் செட்டியார் சத்திரத்தில் 6–10–1918 அன்று எதிர்ப்புக் கூட்டம் கூடியது. கூட்டத்துக்குச் செல்வமே தலைமை தாங்கினார். சௌத்ப்ரோ குழுவில் பிராமணரல்லாதார் யாரையுமே சேர்க்காமல், பிராமணரல்லாதாரின் எதிரியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த சீனிவாச சாஸ்திரியை அக்குழுவில் நியமித்த அநியாயத்தைத் தஞ்சைக் கூட்டம் கண்டித்தது. அக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தீர்மானங்களின் பிரதிகள் அரசுக்கு அனுப்பப்பட்டன. அத்தீர்மானங்களுள் ஒன்று பின்வருமாறு :–

> "சௌத்ப்ரோ குழுவில் உறுப்பினராகச் சீனிவாச சாஸ்திரி சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டு தஞ்சை பிராமண ரல்லாத மக்கள் அஞ்சுகின்றார்கள்; அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். வாக்குரிமை பற்றிய சௌத்ப்ரோ குழுவில் டாக்டர் நாயரும், நிதிநிலைமை பற்றிய ஃபீத்தம் குழுவில் ராவ் பகதூர் பி. தியாகராயச் செட்டியாரும் உறுப்பினராக நியமிக் கப்பட வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்துகிறது. இவ்விரு வரின் நியமனமே பிராமணரல்லாதாரின் நலன்களைப் பாதுகாக்க முடியும்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எதிர்ப்புக் கூட்டம் பற்றிய செய்தியும் எதிர்ப்புத் தீர்மானங்களின் பிரதிகளும் அரசாங் கத்துக்கு அனுப்பப்பட்டன. எனினும் தஞ்சையில் கூட்டப்பட்ட கூட்டம் அத்தகைய கூட்டங்களுக்கு முன்னோடி எனலாம். கட்சியின் மாநாடு கூடுவதற்குப் பதினான்கு நாட்களுக்கு முன்பே செல்வம் தஞ்சையில் எதிர்ப்புக் கூட்டத்தைக் கூட்டியதால் கட்சித் தலைவர்களின் கவனத்துக்கு உரியவரானார்.

## அறிக்கைக்கு எதிர்ப்பு

மறுப்பு அறிக்கை விடுத்ததோடு நீதிக்கட்சி வாளாவிருந்து விடவில்லை. 20–10–1918 அன்று சென்னையில் தங்கள் கட்சியின் ஆண்டு மாநாட்டைக் கூட்டி மாண்டேகு – செம்ஸ்போர்டு அறிக்கையை மீண்டும் தாக்கியது. மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பி. தியாகராயச் செட்டியார் தம் தலைமை உரையில்,

> "சுயாட்சித் தத்துவத்துக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் எப்படி எதிரானதென்பது எனக்கு விளங்கவில்லை. சுயாட்சித் தத்துவத்துக்கு அது எதிரானது என்றால், முகமதி யருக்கும் சீக்கியருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது எவ்வாறு? இந்தியாவில் ஒரு பகுதி யினருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டி ருக்கும்போது மற்றொரு பகுதியினருக்கு அது மறுக்கப் படுவது ஏன்?"

என்று காரசாரமாக வாதாடினார்.

## தஞ்சையில் பிராமணரல்லாதார் மாநாடு

1918–ஆம் ஆண்டின் இறுதியின் தஞ்சையில் பிராமணரல்லாதார் மாநாடு ஒன்றினைக் கூட்டினார் செல்வம். சிங்கம்பட்டி ஜமீன்தார் அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். டாக்டர் நாயர், பி. தியாக ராயர் முதலிய நீதிக் கட்சிப் பெருந்தலைவர்கள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாடு முடிந்த மறுநாள் பி. தியாகராயர் தஞ்சையைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். அதற்குச் செல்வம் ஏற்பாடு செய்து தாமும் உடன்சென்றார். ஓரிடத்தில் அவர்கள் ஏறிச் சென்று கொண்டிருந்த பீட்டன் வண்டியின் சக்கரம் செம்மண்ணில் புதைந்து விட்டது. (அன்று தஞ்சை நகரத்தின் சாலைகளெல்லாம் செம்மண் சாலைகள் தான்!) குதிரை இழுக்க முடியாமல் திணறிற்று. வண்டியிலிருந்து செல்வம் கீழே குதித்துச் சக்கரத்தைத் தோள்கொடுத்துத் தள்ளி ஓடச் செய்தார். ஆபத்தில் அஞ்சாமல் செயல்பட்ட செல்வம் அன்று முதல் பி. தியாகராயரின் நெஞ்சில் இடம் பெற்றார்.

## பல்வேறு பதவிகள்

தியாகராயரின் நெஞ்சில் மட்டுமல்ல, தஞ்சை நகர மக்கள், தஞ்சை மாவட்ட மக்கள் ஆகிய அனைவரின் நெஞ்சிலும் அவர் இடம் பெற்றார். அதனாலேயே 1918 முதல் 1920 வரை தஞ்சை நகராட்சி மன்றத் தலைவராகவும், பின் தஞ்சை மாவட்டக் கழகத்தின் துணைத் தலைவராகவும், அதன்பின் தலைவராகவும் அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். கிறித்துவத் தொகுதி உறுப்பினராகவே அவர் சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பொதுவாக எல்லா மக்களின் நலனிலும், குறிப்பாகப் பிராமணரல்லாதார் நலனிலும் அவர் கருத்துச் செலுத்தினார். "நான் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவன். ஆகவே சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்தவன். ஆயினும் எல்லா வகுப் பினருடைய ஆதரவும் எனக்குக் கிடைத்து வருகிறது. அதனாலேயே நான் பல பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நீதிக்கட்சியும் நண்பர்களின் உதவியுமே நான் பெரும் பதவிகள் பெறுவதற்குக் காரணம்" என்று செல்வம் அடிக்கடி கூறுவார்.

## மாவட்ட மாநாடு

1919–ஆம் ஆண்டு நாகையில் தஞ்சை மாவட்ட நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றபோது அதற்குக் கே.வி. ரெட்டி நாயுடு தலைமையேற்றார். வரவேற்புரையாற்றியது தஞ்சை மாவட்ட நீதிக்கட்சித் தலைவராகிய செல்வம் தான். அவரது வரவேற்புரையும், மாநாட்டை ஏற்பாடு செய்து நடத்துவதில் அவர் வெளிப்படுத்திய திறமையும், பிரதிநிதிகளை அன்போடு விருந்தோம்பிய பண்பாடும் மாநாட்டுக்கு வந்திருந்தோர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

## பிரச்சினை தொடர்ந்தது

பிராமணரல்லாதாருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று நீதிக்கட்சியினர் தொடர்ந்து வலியுறுத்தினர். இப்பிரச் சினைபற்றி வாதாடுவதற்காக இங்கிலாந்து சென்றிருந்த டாக்டர் டி.எம். நாயர் இங்கிலாந்திலேயே காலமானார். எனினும் நாயருக்குப்

பின் தூதுக்குழுவுக்குத் தலைமையேற்ற கே.வி. ரெட்டி நாயுடுவும் குழுவின் உறுப்பினராகிய ஏ. இராமசாமி முதலியாரும் நீதிக் கட்சியின் கருத்துக்களை இங்கிலாந்தில் பொதுக் கூட்டங்களிலும் ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டங்களிலும் திறமையுடன் வாதிட்டனர். ஆயினும் பிரச்சினை தொடர்ந்தது. இங்கிலாந்தில் இப்பிரச்சினை தீர்க்கப்படாததால் இந்தியாவிலேயே அதைத் தீர்ப்பதற்குரிய முயற்சிகள் தொடர்ந்தன. மாநில ஆளுநர் வில்லிங்டன் பிரபுவின் ஆலோசனையின் பேரில் மெஸ்டன் பிரபு நடுவராக நியமிக்கப்பட்டார்.

## 66% வேண்டும்

பிராமணரல்லாதார் தங்களின் எண்ணிக்கைக்கேற்பப் பெரும் பான்மையான சட்டமன்றத் தொகுதிகளும் அரசு நியமனங்களும் தங்கள் சமூகத்தாருக்கு வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். தஞ்சை வட்டாட்சிக் கழகத் தலைவராக இருந்த டி.வி. உமாமகேசுவரம் பிள்ளையின் தலைமையில் 22–2–1920 அன்று கூடிய தஞ்சை நீதிக்கட்சி, சென்னைச் சட்டமன்றத்தில் இந்துக்களுக்குரிய தொகுதிகளில் 66% பிராமணரல்லாதாருக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது. இல்லையேல் அது மக்களிடையே பெரும் அதிருப்தியை விளைவிக்குமென்று அக்கூட்டம் அச்சுறுத்தியது. கூட்டத்துக்குத் தலைமை தாங்கியது உமாமகேசுவரம் பிள்ளை என்றாலும் கூட்டத்துக்கு முதுகெலும்பாக விளங்கியது மாவட்டக் கட்சித் தலைவராகிய செல்வமே என்பது சொல்லாமலே விளங்கும்.

## மெஸ்டன் பிரபுவின் தீர்ப்பு

பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் தனிப் பிரதிநிதித்துவம் பற்றி எடுத்துரைத்த கருத்துக்களையெல்லாம் கேட்டறிந்த பின் 11–3–1920 அன்று மெஸ்டன் பிரபு தம் தீர்ப்பை வழங்கினார். சென்னைச் சட்டமன்றத்தில் 28 தொகுதிகள் பிராமணரல்லாதாருக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்னும் அவரது தீர்ப்பு பிராமணரல்லாதாருக்கு மிகுந்த ஏமாற்றத்தையே அளித்தது. பிராமணர் தலைவராகிய கஸ்தூரி ரங்க ஐயங்காருக்குக் கூட இத்தீர்ப்பு ஏமாற்றத்தைத் தந்தது. இத்தீர்ப்பு "பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் கொண்டிருக்கும் கசப் புணர்வை வளர்க்கவே உதவும்" என்று 'இந்து' நாளிதழில் 18–3–1920 அன்று ஆசிரியவுரையாக அவர் எழுதினார்.

## முதல் தேர்தலும் அமைச்சரவையும்

1919–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இந்தியச் சீர்திருத்தச் சட்டத்தின்படி 1920–ஆம் ஆண்டு நவம்பர் 30–ஆம் நாள் மத்திய மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. காங்கிரசுக் கட்சியினர் ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகத் தேர்தலில் போட்டியிடவில்லை. சுயாட்சி இயக்கத்தினர்க்கும் நீதிக்கட்சி யினருக்குமே தேர்தலில் போட்டி நிலவியது. அனுபவமின்மை காரணமாக நீதிக்கட்சியினர் பல தொகுதிகளில் முறைப்படி தங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தவில்லை. எனினும் தேர்தல் நடைபெற்ற 98 தொகுதிகளுள் பி. தியாகராயச் செட்டியார், ஓ. தணிகாசலம் செட்டியார், ஏ. சுப்பராயலு ரெட்டியார், ராஜா

இராமராய நிங்கர், கே.வி. ரெட்டி நாயுடு, ஆர்.கே. சண்முகம் செட்டியார், ஏ. இராமசாமி முதலியார், பாரிஸ்டர் தங்க வேலுப் பிள்ளை, எட்வின் பெரியநாயகம் முதலிய 63 பேர் வெற்றி பெற்றனர். நியமன உறுப்பினர் உட்பட மொத்தம் 127 உறுப்பினருள் 81 பேர் நீதிக் கட்சியினராக இருந்ததால், கட்சித் தலைவராகிய பி. தியாகராயச் செட்டியாரை வில்லிங்டன் பிரபு அமைச்சரவை அமைக்குமாறு அழைத்தார். அவ்வழைப்பைத் தியாகராயர் ஏற்றுக் கொள்ளாமல் திவான் பகதூர் ஏ. சுப்பராயலு ரெட்டியாரை முதல் அமைச்சராகவும், ராஜா இராமராய நிங்கரை (பனகல் அரசர்) இரண்டாவது அமைச்சராகவும், ராவ்பகதூர் கே.வி. ரெட்டி நாயுடுவை மூன்றாவது அமைச்சராகவும் நியமிக்குமாறு ஆளுநரிடம் பரிந்துரைத்தார். ஆளுநரும் அப்பரிந்துரையை ஏற்று மூவரையும் அமைச்சர்களாக நியமித்தார்.

## இரட்டையாட்சி முறை

மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்த்திருத்தத்தின்படி மாநிலங் களில் இரட்டையாட்சி முறை செயல்படுத்தப்பட்டது. வருவாய், சட்டம், நிதி, நீர்ப்பாசனம், உள்ளாட்சி ஆகிய துறைகள் ஆளுநரின் நிர்வாகக் குழுவின் பொறுப்பில் இருக்கும். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவர். மருத்துவ நிர்வாகம், நல்வாழ்வுத் துறை, கல்வி, பொதுப்பணி, விவசாயம், கூட்டுறவு, சமய அறநிலையத் துறை, தொழில் வளர்ச்சி ஆகியவை சட்டமன்றத்திலிருந்து நியமிக்கப்படும் அமைச்சர்களின் பொறுப்பிலிருக்கும். இதுவே இரட்டையாட்சி அமைப்பாகும்.

## அடுத்த முதலமைச்சர்

வயதில் முதிர்ந்தவராகவும், நோயாளியாகவும் இருந்த முத லமைச்சர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் 12–12–1921 அன்று காலமானார். அதன்பின் பனகல் அரசர் முதல் அமைச்சராகவும் கே. வி. ரெட்டி நாயுடு இரண்டாவது அமைச்சராகவும் ஏ.பி.பாத்ரோ மூன்றாவது அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்.

## மீண்டும் தேர்தல்

இரண்டாவது தேர்தல் 31–10–1923 அன்று நடைபெற்றது. சுயராச் சியக் கட்சியினரும் நீதிக்கட்சியினரும் போட்டியிட்டனர். தேர்தலுக் குரிய 98 தொகுதிகளில் 61 தொகுதிகளில் நீதிக்கட்சியினர் வெற்றி பெற்றனர். (1920–ஆம் ஆண்டுத் தேர்தலில் இதே தொகுதிகளில் 63 பேர் வெற்றி பெற்றிருந்தனர்.) நீதிக்கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்த தாயினும் நீதிக் கட்சிக்குள் ஒற்றுமை குலையத் தொடங்கி விட்டது. தொடக்க காலத்திலிருந்தே கட்சியின் முன்னணித் தலைவர்களாயிருந்த ஓ. கந்தசாமிச் செட்டியார், எம்.சி. இராசா, டாக்டர் சி. நடேச முதலியார் போன்றோர் கட்சித் தலைமையின் மீது அதிருப்தி கொண்டனர். முதல் இரு அமைச்சரவைகளில் மூன்று அமைச்சர் களும் தெலுங்கர்களாகவே இருந்தது கட்சியிலுள்ள தமிழரிடையே அதிருப்தியைத் தோற்றுவித்திருந்தது. சரியான முறையில் தேர்தல் பிரசாரம் நடத்தப்படாததும் கட்சியின் ஒற்றுமையைக் குலைத்தது.

## மனக்குறை நீங்க

பனகல் அரசரின் தலைமையில் இரண்டாவது முறையாக அமைந்த அமைச்சரவையில் ஏ.பி. பாத்ரோவும், டி.என். சிவஞானம் பிள்ளையும் இடம் பெற்றனர். அமைச்சரவையில் தமிழர் எவரும் இடம் பெறவில்லை என்னும் மனக்குறை சிவஞானம் பிள்ளையின் நியமனத் தால் தீர்ந்தது என்றாலும் தங்களுக்கு அமைச்சரவையில் இடம் கிடைக் கவில்லையே என்னும் மனக்குறையே நடேச முதலியாரும் கந்தசாமிச் செட்டியாரும் கட்சிக்கு எதிராகச் செயல்படக் காரணமாயிற்று.

## தியாகராயரின் மறைவு

டாக்டர் டி.எம். நாயருக்குப்பின் நீதிகட்சியின் பெருந்தலைவ ராகத் திகழ்ந்த சர் பி. தியாகராயர் 28–4–1925 அன்று காலமானார். சிறந்த அரசியல்வாதியும் ஒப்பற்ற நிர்வாகியுமான அவரே 1920, 1923 தேர்தல்களில் நீதிக்கட்சி வெற்றி பெற்று அமைச்சரவை அமைக்க முன்னணியில் நின்று உழைத்தவர். அவர் எப்போதும் அணிந்திருந்த வெள்ளையாடை அவரது உள்ளத் தூய்மைக்கும் நேர்மைக்கும் வெளி அடையாளமாக விளங்கியது. ஆளுநர் மனையில் நடைபெறும் விருந்து களில் கலந்து கொள்வோர் கறுப்புக் கோட்டு அணிந்திருக்க வேண்டும் என்னும் விதி அவருக்காகத் தளர்த்தப்படும் அளவுக்கு அவர் சமுதாயத்தில் மதிப்புப் பெற்றிருந்த பெருந்தலைவராக விளங்கினார். அவரது மறைவு நீதிக்கட்சிக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பாகும்.

## புதிய தலைவர்

தியாகராயரின் மறைவுக்குப் பின் முதலமைச்சர் பனகல் அரசரே கட்சியின் தலைவரானார். டாக்டர் நடேச முதலியார் போன்றவர்களை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வரவும் ஆட்சிக்குப் புத்துயிரளிக்கவும் அவர் மிகவும் உழைத்தார். சமீன்தார் பரம்பரையில் தோன்றியவ ராயினும் சனநாயக உணர்வுடன் செயலாற்றியவர் அவர்.

## மூன்றாவது தேர்தல்

காங்கிரஸ் கட்சியில் ஒரு பகுதியாக இருந்த சுயராச்சியக் கட்சி யினர் 1926–இல் நடந்த தேர்தலில் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர். பொதுக் கூட்டங்கள், வீடுவீடாகச் சென்று வாக்கு சேகரித்தல், பஜனை ஊர்வலங்கள் ஆகிய பல முறைகளைக் கையாண்டு தேர்தலில் வெற்றி பெற முனைந்தனர். நீதிக்கட்சியினரோ வழக்கம் போலக் கிராமங் களிலும் நகரங்களிலுமுள்ள பெருந்தலைகளின் ஆதரவைப் பெற்று அதன்மூலம் வெற்றி பெற்று விடலாம் என்று நம்பினர். இதற்கிடையில் 1925–ஆம் ஆண்டு முதல் காங்கிரசுக் கட்சியை விட்டு ஒதுங்கத் தொடங்கிய ஈ.வெ.ரா. பெரியாரும் சுயராச்சியக் கட்சியினரைக் கடுமை யாகத் தாக்கினார். சேரன்மாதேவி குருகுலத்தில் வ.வே.சு. ஐயர் சாதிப் பாகுபாட்டைச் செயல்படுத்தியதைப் பொதுக் கூட்டங்களில் எடுத் துரைத்துக் காங்கிரசுக் கட்சி சாதிவெறி பிடித்த பிராமணர்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வருவதாகத் தம் சொந்த அனுபவங்களைக் கொண்டு நிரூபிக்க முயன்றார். தமது 'குடி அரசு' பத்திரிகையின் மூலம் பிராமணர்களைக் கடுமையாகச் சாடி, பிராமணரல்லாத வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடினார்.

## நீதிக்கட்சியின் தோல்வி

தேர்தல் நடைபெற்ற 98 தொகுதிகளில் 41 தொகுதிகளில் காங்கிரசும் 21 தொகுதிகளில் நீதிக்கட்சியினரும் வெற்றி பெற்றனர். 36 பேர் சுயேச்சைகளாக வெற்றி பெற்றனர். ஓ. தணிகாசலம் செட்டியார், டாக்டர் சி. நடேச முதலியார், ஏ. இராமசாமி முதலியார் முதலிய தலைவர்கள் தேர்தலில் தோல்வியைத் தழுவினர். பனகல் அரசர் மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார்.

## சுப்பராயன் அமைச்சரவை

சுயராச்சியக் கட்சியும் நீதிக்கட்சியும் அமைச்சரவை அமைக்க மறுத்து விட்டதால் சுயேச்சையாகிய டாக்டர் பி. சுப்பராயன் அமைச்சரவை அமைக்க இசைந்தார். ஏ. அரங்கநாத முதலியாரும் ஆர். என். ஆரோக்கியசாமி முதலியாரும் அமைச்சரவையில் இடம் பெற்றனர். ஆளுநரால் நியமிக்கப்பட்ட 34 உறுப்பினர்களும் அமைச்சரவையை எப்போதும் ஆதரிக்க வேண்டுமென்னும் நிபந்தனையுடன் நியமிக்கப்பட்டனர். இதனால் பி. சுப்பராயன் சுயராச்சியக் கட்சி, நீதிக்கட்சி ஆகிய இரு கட்சிகளின் ஆதரவின்றியே செயல்பட முடிந்தது. எனினும் தொடக்கத்தில் சுயராச்சியக் கட்சியும், பின் நீதிக்கட்சியும் அவருக்கு நேசக்கரம் நீட்டி உதவினர்.

## சைமன் கமிஷனும் நீதிக்கட்சியும்

1919–ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆங்கில மன்னரால் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. குழுவுக்குத் தலைவராக இருந்த ஜான் சைமன் பெயரால் இக்குழு 'சைமன் கமிஷன்' என்று அழைக்கப்பட்டது. காங்கிரசுக் கட்சி இக்கமிஷனுடன் ஒத்துழைக்க மறுத்தது. சென்னை மாநிலச் சட்ட மன்றமும் ஒரு தீர்மானத்தின் மூலம் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க மறுத்தது. நீதிக்கட்சியினரும் இம்மறுப்புத் தீர்மானத்தை ஆதரித்தனர். இத்தீர்மானத்தின் காரணமாகச் சுப்பராயன் அமைச்சரவை ஆட்டம் கண்ட போது, பனகல் அரசரின் இராச தந்திரம் அமைச்சரவையைக் காப்பாற்ற உதவியதோடு நீதிக்கட்சியின் செல்வாக்கை வளர்க்கவும் வழி வகுத்தது. நீதிக்கட்சியும் தன் கருத்தை மாற்றிக் கொண்டு சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்கத் தீர்மானித்தது. 18–2–1929 அன்று சைமன் கமிஷன் சென்னைக்கு வந்தபோது வழங்கப்பட்ட வரவேற்பில் நீதிக் கட்சியினர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நீதிக் கட்சியினரின் கருத்துக்களைக் கமிஷனிடம் எடுத்துரைப்பதற்காக ஒரு தூதுக் குழு நியமிக்கப்பட்டது. செல்வமும், ஏ. இராமசாமி முதலியாரும் அக்குழுவில் உறுப்பினராக விளங்கினர். இந்தியாவுக்கு 'டொமினியன் நிலை' சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்றும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் தொடர வேண்டும் என்றும் நீதிக்கட்சியினர் சைமன் கமிஷனிடம் எடுத்துரைத்தனர். சென்னை மாநில அரசின் சார்பில் கமிஷனுக்கு வழங்கப்பட்ட அறிக்கை இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, முழு மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்று ஆணித்தரமாக வலியுறுத்தியது.

## சுப்பராயன் அமைச்சரவை செய்த நன்மைகள்

நீதிக்கட்சியினரின் பலத்த ஆதரவுடன் சுப்பராயன் ஆட்சி தொடர்ந்தது. நாட்டுக்குப் பொதுவாகவும், நீதிக்கட்சியினர் வற்புறுத்த லால் பிராமணரல்லாதாருக்குக் குறிப்பாகவும் பல நன்மைகள் சுப்ப ராயன் ஆட்சியில் ஏற்பட்டன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது இவ்வாட்சியின்போதுதான். ஆதி திராவிட மாணவர் களைச் சேர்க்க மறுக்கும் பள்ளிகளுக்கு அரசின் நிதியுதவி வழங்கப் படாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அமைச்சர் எஸ். முத்தையா முதலியாரின் முயற்சியால் நடைமுறைக்கு வந்த வகுப்புவாரி அரசுப் பணி உத்தரவு பிராமணரல்லாதாருக்குப் பேருதவியாக அமைந்தது. பொதுப்பணத்தைக் கொண்டு நிர்வகிக்கப்பட்ட இந்துக் கோவில்களில் தீண்டாமை ஒழிக்கப்படவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய மாணவர் களுக்கு இலவச விடுதிகள், புத்தகங்கள், கல்வி, பகலுணவு வழங்கப்பட வும் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. இதனால் நீதிக்கட்சியினரும் சுய மரியாதை இயக்கத்தினரும் சுப்பராயன் அமைச்சரவையை முழுமையாக ஆதரித்து இன்னும் அதிகமாகச் சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர்.

## பனகல் அரசரின் மறைவு

பி. தியாகராயருக்குப் பின் நீதிக்கட்சியின் தலைவராக விளங்கிய பனகல் அரசர் பி. இராமராய நிங்கர் 16–12–1928 அன்று காலமானார். நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்கு அவரது மறைவு பெருங்காரணமாயிற்று. வடமொழி வல்லுநரும் தலைசிறந்த அரசியல்வாதியும் ஒப்பற்ற இராசதந்திரியுமாகிய பனகல் அரசர் கட்சியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். அரசு நிர்வாகத் துறையில் தம் முத்திரையைப் பொறித்தவர். தாம் மாதச் சம்பளமாகப் பெற்றுவந்த ஐயாயிரம் ரூபாயையும் கட்சியின் வளர்ச்சிப் பணிக்காக மாதந்தோறும் வழங்கி வந்தவர். அவரது நன்கொடை இல்லாமலிருந்தால் 'நீதி' ஆங்கில நாளிதழ் என்றோ மறைந்திருக்கும். அரசுப் பணிகளில் பிராமண ரல்லாதோர் மிகப் பலரை நியமனம் செய்ததன்மூலம் பிராமணரல்லா தார் முன்னேற அவர் மிகவும் உதவினார்.

## நீதிக்கட்சியின் அடுத்த அமைச்சரவை

1930–ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி போட்டி யிடவில்லை. காங்கிரசு உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் போட்டி யிடலாம் என்று அறிவிக்கப்பட்டாலும் நீதிக்கட்சிக்கும் பி. சுப்பராயன் தலைமையில் செயல்பட்ட சுயேச்சைகளுக்குமிடையே தான் கடுமையான போட்டி நிலவியது. இறுதியில் நீதிக் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற்றனர். பி. முனிசாமி நாயுடு தலைமையில் நீதிக்கட்சி அமைச் சரவை அமைத்தது. பி.டி. இராசனும், எஸ். குமாரசாமி ரெட்டி யாரும் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

திருச்சி–தஞ்சை கிறித்துவத் தொகுதியில் செல்வம் நீதிக் கட்சியின் வேட்பாளராக வெற்றி பெற்றார்.

## கட்சியில் குழப்பம்

நீதிக்கட்சியின் பன்னிரண்டாவது ஆண்டு மாநாடு 1932–ஆம் ஆண்டு அக்டோபர் 10–11 தேதிகளில் தஞ்சாவூரில் நடைபெற்றது. என்.ஆர். சாமியப்ப முதலியார் வரவேற்புக் குழுத் தலைவராக இருக்க, பொப்பிலி அரசர் மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். மாநாட்டின்போது முனிசாமி நாயுடுவின் ஆதரவாளர்களுக்கும் பொப்பிலி அரசரின் ஆதரவாளருக்குமிடையே சலசலப்பு ஏற்பட்டது. நாற்காலிகளும் காலணிகளும் வீசப்பட்டன. கல் சரமாரியாகப் பொழியப்பட்டது. எரிச்சலும், ஆத்திரமும் மாநாட்டில் நிலவின. அத்தனைக்கிடையிலும் பொப்பிலி அரசர் தம் தலைமையுரையை ஆற்றினார்.

கட்சியை வளர்ப்பதில் பொப்பிலி அரசர் முனைப்புடன் ஈடுபட்டார். அதற்காகத் தம் சொந்தப் பணத்தைச் செலவிடவும் அவர் தயங்கவில்லை. ஆயினும் கட்சி பலம் குன்றியே வந்தது.

## பொப்பிலி அரசர் முதலமைச்சர்

நீதிக்கட்சிக்குள் குழப்பங்கள் தொடர்ந்தன. அதன் காரணமாக முனிசாமி நாயுடு பதவி விலகினார். பொப்பிலி அரசர் ராவ் சுவேத சலபதி இராமகிருஷ்ண ரங்கராவ் 5–11–1932 அன்று அடுத்த முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். பி.டி. இராசனும், எஸ். குமாரசாமி ரெட்டியாரும் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

## 1934 தேர்தலில் செல்வத்தின் தோல்வி

1933–ஆம் ஆண்டில் நடைபெற வேண்டிய தேர்தல் ஓராண்டு கழித்தே நடைபெற்றது. காங்கிரசு தன் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டுத் தேர்தலில் குதித்தது. மிகச் சிறந்த முறையில் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தி மாபெரும் வெற்றியைப் பெற்றது. இத்தேர்தலில் தம் கட்சி வேட்பாளர்களுக்காகப் பல்வேறு தொகுதிகளிலும் சூறாவளியாகச் சுற்றி உழைத்த செல்வம் தமது தொகுதியில் தோல்வியைத் தழுவினார். இத்தேர்தலில் தம் தொகுதியைச் செல்வம் மாற்றிக் கொண்டதும் தோல்விக்கு ஒரு காரணமாகும்.

## சுயமரியாதை இயக்கம்

காங்கிரசுக் கட்சியில் பிராமணர்களின் ஆதிக்கத்தைப் பொறுக்க முடியாமல் பெரியார் ஈ.வெ.ரா. 1926–ஆம் ஆண்டு காங்கிரசை விட்டு வெளியேறினார். காங்கிரசில் அவரது நெருங்கிய தோழராக இருந்த எஸ். இராமநாதன் அதே ஆண்டிலேயே சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியிருந்தார். சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதைத் தன் நோக்கமாகக் கொண்டிருந்த இவ்வியக்கத்தின் தலைவராகப் பெரியாரும், செயலாளராக எஸ். இராமநாதனும் பொறுப்பேற்றிருந்தனர். ஆனால் காங்கிரசுக் கட்சியிலிருந்த வரை இருவராலும் சுயமரியாதை இயக்கப் பணிகளில் அதிகமாக ஈடுபட முடியவில்லை. காங்கிரசுக் கட்சியிலுள்ள பிராமணர்கள் மீது கசப்புக் கொண்டிருந்த பெரியார் 1926– ஆம் ஆண்டில் மதுரை, மாயூரம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடந்த நீதிக்கட்சி மாநாடு



செல்வபுரத்தில் செல்வம் கட்டியெழுப்பிய புனித தெரசாள் ஆலயம்
நூற்றாண்டு விழாப் பொலிவுடன் விளங்கும் தோற்றம்.

# SANAD

To

M. R. Ry. Arochiaswamy

Thamaraiselvam Pannirselvam Avargal,

Barrister-at-Law,

President, District Board,

Tanjore,

Madras Presidency.

I hereby confer upon you the title of Rao Bahadur as a personal distinction.

Viceroy and Governor General of India.

Simla,

The 4th June 1928.

SEAL OF THE GOVERNOR GENERAL OF INDIA IN COUNCIL

இராவ் பகதூர் விருது 4–6–1928

களிலும் கலந்து கொண்டார். காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறி நீதிக்கட்சியோடு தம்மை இணைத்துக் கொள்ளலாமா என்று பெரியார் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆயினும் நீதிக்கட்சியின் போக்கு பிடிக்காத காரணத்தால், காங்கிரசை விட்டு வெளியேறியதும் நீதிக்கட்சியில் பெரியார் சேரவில்லை. சுயமரியாதை இயக்கத்தை நாடெங்கும் பரப்பும் முயற்சியில் அவர் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். சமுதாயச் சுதந்திரம் இல்லாமல் அரசியல் சுதந்திரத்தால் நாட்டுக்கு நன்மை கிடைக்காது என்பது அவரது ஆணித்தரமான கருத்து. எனவே நாடெங்கும் சுற்றிச் சுயமரியாதை இயக்கப் பிரச்சாரம் செய்தார். 1928–ஆம் ஆண்டுக்குள் சுயமரியாதை இயக்கம் அறுபது கிளைகளை ஏற்படுத்தியது. இவை தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, வட தென் ஆற்காடு மாவட்டங்களில் பெரும்பாலும் அமைந்திருந்தன.

## சுயமரியாதை இயக்கத்தில் செல்வம்

சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் பிராமணரல்லாத மக்களின் நலனைக் கருத்தில் கொண்டிருந்தமையால் நீதிக்கட்சியினர் பலர் அவ்வியக்கத்தில் உறுப்பினராயினர். நீதிக்கட்சி அரசியல் கட்சியாகவும், சுயமரியாதை இயக்கம் சமூக அமைப்பாகவும் இருந்ததால் ஒருவர் இரு அமைப்புகளிலும் உறுப்பினராயிருக்கத் தடையெதுவும் இல்லை. எனவே செல்வம் சுயமரியாதை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். சுயமரியாதை இயக்கக் கூட்டங்களில் கலந்து கொண்டு மக்களிடையே மூட நம்பிக்கைகளைப் போக்கவும் சமத்துவ உணர்வை வளர்க்கவும் பிரசாரம் செய்தார். சுயமரியாதை இயக்கத்தின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இயக்கத்தின் நாத்திகக் கருத்துக்களை அவர் ஏற்றுக் கொள்ளாவிடினும் அதன் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்று அவற்றை நாட்டில் பரப்ப முனைந்தார்.

## இயக்க மாநாடு

சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு செங்கற்பட்டில் 17–2–1929 அன்று நடந்தது. அம்மாநாட்டில் சென்னை மாநில முதலமைச்சர் பி. சுப்பராயன் கலந்து கொண்டு தொடக்கவுரை நிகழ்த்தினார். சாதிப் பிரிவினைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் இடம் கொடுத்து, இளம்வயதில் திருமணம், விதவைகளுக்கு மறுமணம் செய்ய மறுத்தல் ஆகிய தீமைகளைக் கடைப்பிடித்தால் சமூக முன்னேற்றம் பெற முடியாதென்றும், சரியான சமூகக் கண்ணோட்டமில்லாமல் அரசியல் முன்னேற்றம் காண இயலாதென்றும் அவர் தம் உரையில் விளக்கினார்.

அம்மாநாட்டின் ஒரு முக்கிய தீர்மானம் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர்களைச் சேர்க்கக் கூடாது என்று வலியுறுத்தியது. பெரியார் ஈ.வெ. இராமசாமி நாயக்கர், ஊ.பு.அ. சவுந்தர பாண்டிய நாடார் முதலிய தலைவர்கள் இனிச் சாதிப் பெயர்களைச் சேர்க்க மாட்டோம் என்று சூளுரைத்து, அவ்வாறே விட்டு விடவும் செய்தனர். ஆனால் செல்வமோ என்றுமே சாதிப் பெயரைத் தம் பெயருக்குப் பின்னால்

சேர்த்துக் கொண்டதே இல்லை. அவர் எப்போதுமே ஏ.டி. பன்னீர் செல்வம் தான்.

## வாலிபர் மாநாட்டில் செல்வம் தலைமை

அடுத்த நாள் 18–2–1929 அன்று செங்கற்பட்டில் பார்ப்பனரல்லாத வாலிபர் மாநாடு நடைபெற்றது. இவ்விளைஞர் மாநாட்டுக்குச் செல்வம் தலைமையேற்றார். இம்மாநாட்டில் உரையாற்றிய பெரியார் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகச் செல்வம் ஆற்றியுள்ள பணிகளைப் புகழ்ந்துரைத்தார். சுயமரியாதை மாநாட்டின் சார்பாக நடைபெற்ற இம்மாநாட்டில் செல்வத்தின் தலைமையுரை இளைஞர் களுக்கு எழுச்சியூட்டுவதாக அமைந்திருந்தது. சமயத்தின் விளைவாக வும் பண்பாட்டின் காரணமாகவும் சமுதாயத்தில் அழுத்தமாக ஊன்றி ஊறிப் போயிருந்த மூட நம்பிக்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களை யும் மாற்றிச் சமூக முன்னேற்றப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு உழைக்குமாறு அவர் இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

## செல்வம் – பெரியார் நட்பு

இம்மாநாட்டின் தலைமைப் பொறுப்பேற்றபோது செல்வத்துக்கு 40 வயது. எனினும் சுயமரியாதை இயக்கத்தின்மீது அவர் கொண்டி ருந்த பிடிப்பும், தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பாக இளைஞர்களுக் கிடையே அவருக்கு இருந்த செல்வாக்கும் அவருக்கு இத்தலைமைப் பொறுப்பைப் பெற்றுத் தந்தன எனலாம். அதோடு பெரியாருக்கும் செல்வத்துக்குமிருந்த நெருங்கிய நட்பும் இதற்குக் காரணமெனில் அது மிகையாகாது. ஏற்கனவே 1927–ஆம் ஆண்டு செல்வம் தஞ்சை மாவட் டக் கழகத் தலைவராக வெற்றிபெற்றபோது பெரியார் தஞ்சைக்குச் சென்று செல்வத்தைச் சந்தித்தார். 25–1–1927 அன்று தஞ்சை மணிக்கூண்டில் நடந்த பெருங்கூட்டத்தில் செல்வம் தலைமையேற்றார். பெரியார் விரிவுரையாற்றினார். அன்று முதலே செல்வத்துக்கும் பெரியாருக்குமிடையில் ஆழமான தோழமையும் நட்பும் தோன்றலாயின.

## சுயமரியாதை இயக்கத்தை விட்டு விலகல்

சுயமரியாதை இயக்கத்தின் துணைத் தலைவராக இருந்து பணி யாற்றிய செல்வம், பெரியாரின் நாத்திகக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாமல் திணறினார். அத்துடன் பெரியார் கத்தோலிக்க சமயத்தின் கருத்துக்களைக் கடுமையாகச் சாடத் தொடங்கியதைச் செல்வத்தால் சீரணித்துக் கொள்ள இயலவில்லை. கத்தோலிக்க சம யத்தில் பற்றுமிக்கவராகிய செல்வம் நாத்திக வாதம் பேசும் சுய மரியாதை இயக்கத்தில் எப்படிப் பொறுப்பேற்றுப் பணி புரியலாம் என் னும் கேள்வி கத்தோலிக்க வட்டாரத்தில் எழலாயிற்று. எனவே செங்கற் பட்டு மாநாட்டுக்குப் பின் செல்வம் சுயமரியாதை இயக்கத்தை விட்டு விலகினார். எனினும் பெரியாருடன் அவர் கொண்ட நட்புத் தொடர்ந்தது.

## பெரியாரும் நீதிக்கட்சியும்

பெரியார் நீதிக்கட்சி உறுப்பினராக இல்லாவிடினும் 1928–ஆம் ஆண்டு முதலே அக்கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

கட்சித் தலைவராகிய பொப்பிலி அரசர் கட்சியின் தமிழ் ஏடாகிய திராவிடனை நீதிக் கட்சியின் கொள்கைகளுக்கு ஆதரவாக நடத்தி வரும்படி பெரியாரிடம் ஒப்படைத்திருந்தார்.

## வட்டமேசை மாநாடு

1930–டிசம்பரில் சைமன் கமிஷன் அறிக்கை வெளியான போது அது பலருக்கு அதிருப்தியை அளித்தது. மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரத்தை வழங்கிய அவ்வறிக்கை ஆளுநர்களுக்கு மிகுந்த உரிமையையும் வழங்கியது. வட்ட மேசை மாநாட்டைக் கூட்டி இந்திய அரசியல் தலைவர்கள் பலரையும் பங்குபெறச் செய்து இந்தியாவுக்கு ஏற்ற அரசியலமைப்பை உருவாக்குவதுபற்றிப் பேசலாம் என்று அவ் வறிக்கை ஆலோசனை கூறியது. காங்கிரசுக் கட்சி அவ்வறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அறிக்கை அதிக ஏமாற்றம் தருவதாக இருப் பினும் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதன்மூலம் நாடு பயன் பெறும் என்று நீதிக்கட்சி கருதியது. காந்தியடிகளும் பிற காங்கிரசு உறுப்பினர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, வட்ட மேசை மாநாட்டில் காங்கிரசுத் தலைவர்கள் கலந்து கொள்ள அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பெரியார் வலியுறுத்தினார். அரசு அவரது கோரிக்கைக்குச் செவிமடுக்கவில்லை.

## மாநாட்டில் செல்வம்

எனினும் காந்தியடிகள் கலந்து கொள்ளாமலே முதல் வட்ட மேசை மாநாடு இலண்டனில் 12–11–1930அன்று தொடங்கியது. அடுத்த ஆண்டு நடந்த வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார். இரண்டு மாநாடுகளிலும் இந்தியக் கிறித்துவர்களின் சார்பாகச் செல்வம் கலந்து கொண்டார். நீதிக் கட்சியின் சார்பில் ஏ.இராமசாமி முதலியார், ஏ.பி. பாத்ரோ, ஆர். சீனிவாசன் முதலியோரும், முகமதியர் சார்பில் ஆகா கான், தாழ்த்தப்பட்டோர் சார்பில் டாக்டர் அம்பேத்கார், ஆங்கிலோ இந்தியர் சார்பில் சர் ஹென்றி ஸிட்னி, இந்தியாவிலுள்ள ஐரோப்பியர் சார்பில் சர் ஹ்யூபெர்ட் கார் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தியாவுக்கு முழு விடுதலை வழங்கும் வகையில் தயாரிப்பதற்காக எத்தகைய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவது என்பது பற்றி அம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. காந்தியடிகள் தாமும் காங்கிரசும் இந்தியா முழுமைக்கும் பிரதிநிதியாக விளங்குவதாக அடிக்கடி வலியுறுத்தினாலும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களுக்குள் கலந்து பேசிச் சில முடிவுகளை வட்ட மேசை மாநாட்டின் பொது அமர்வில் சமர்ப்பித்தனர். அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :

(1) பொதுப்பணிகள், அரசுப்பணிகள், விருதுகள், சமுதாய உரிமைகள், வியாபார உரிமைகள் ஆகிய அனைத்திலும் பிறப்பு, சமயம், சாதி ஆகியவற்றின் அடிப்படையில் எத்தகைய வேறுபாடும் காட்டப்படக் கூடாது.

(2) எந்தக் குறிப்பிட்ட சமூகத்தினருக்கு எதிராகவும் சட்டமன்றம் சட்டங்கள் பிறப்பிக்க முடியாத வகையில் தக்க உத்திரவாதம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும்.

(3) பொது ஒழுங்குக்கும் ஒழுக்கத்துக்கும் ஊறு விளைவிக்காத வகையில் யாரும் எந்தச் சமயத்தையும் ஏற்றுப் பின்பற்றவும், பரப்பவும், சங்கங்களும் கல்வி நிறுவனங்களும் அமைக்கவும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் சமயத்தாருக்காகச் சொந்தச் செலவில் சமய, சமூக, அற, கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தி நடத்த உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

(5) மத்திய மாநில அமைச்சரவைகளில் சிறுபான்மையினர் இடம் பெறுவதை ஒரு மரபாகக் கொள்ள வேண்டும்.

(6) சிறுபான்மைச் சமூகங்களைப் பாதுகாத்து அவர்களின் நலனில் கருத்துச் செலுத்துவதற்காக அரசினர் தனித்துறைகளை ஏற்படுத்திச் செயல்பட வேண்டும்.

(7) நியமனத்தின் மூலமும் தேர்தல் மூலமும் சட்டமன்றங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள சமூகங்களின் அவ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும். பத்தாண்டுகளுக்குப் பின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமா, தனித் தொகுதிகள் வேண்டுமா என்பதைப்பற்றி விவாதித்து முடிவு செய்யலாம். ஆனால் குறிப்பிட்ட சமுதாயத்தினரின் ஒப்புதலின்றி இவ்வகையில் எத்தகைய முடிவும் எடுத்தலாகாது.

(8) பொதுப்பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டு அதன்மூலம் எல்லா வகுப்பினரும் நன்மையடையும் வகையில் அரசுப் பதவிகளுக்கு நியமனங்கள் நடைபெற வேண்டும்.

இம்முடிவுகள் ஆகாகான், டாக்டர் அம்பேத்கார், செல்வம், சர் ஹென்றி ஜிட்னி, சர் ஹ்யூபர்ட் கார் ஆகியோரின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் இவற்றைக் காங்கிரசும் சீக்கியரும் ஏற்றுக் கொள்ளவில்லை. வட்டமேசை மாநாடு எவ்வித முடிவுக்கும் வராமலே கலைந்தது.

மேற்கண்ட முடிவுகளைப் பார்க்கும்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே சிறுபான்மையினரைப் பாதுகாக்க வல்லது என்னும் கருத்தும், சமய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அவை அரசியலமைப்புச் சட்டத்திலேயே இடம்பெற்றால்தான் இயலும் என்னும் கருத்தும் தெளிவாக வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

வட்டமேசை மாநாட்டின்போது இந்தியக் கிறித்துவர்களின் உரிமைகளுக்காகச் செல்வம் துணிவுடன் வெளிப்படையாகப் பேசினார் என்று அவருடன் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட திவான் பகதூர் ஆர். சீனிவாசன் கூறியுள்ளார். இக்கூற்று உண்மையே என்பதைச் சிறுபான்மைக் குழுவினரின் தீர்மானங்களை ஒரு முறை படித்துப் பார்த்தாலே தெளிவாக விளங்குகிறது.

## பிரதம அமைச்சரின் ஆதரவு

தனித்தொகுதிகள் பற்றிய சிறுபான்மையினரின் கருத்தை ஆங்கில அரசு ஏற்றுக் கொண்டது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலமே

சிறுபான்மையினரின் உரிமைகள் காப்பாற்றப்பட முடியும் என்பதை அது புரிந்து கொண்டிருந்தது. "ஏற்கனவே இருந்து வந்துள்ள தனித் தொகுதிகள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகியவை மிக மிக முக்கியமானவை எனச் சிறுபான்மையினர் கருதுகின்றனர். இன்றைய நிலைமையில் இத்தகைய பிரதிநிதித்துவ முறையை ஆங்கில அரசு ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்" என்று 16–8–1932 அன்று வெளியிட்ட அறிக்கையில் ஆங்கிலப் பிரதம அமைச்சர் ராம்சே மக்டானல்ட் குறிப்பிட்டார். செல்வமும் பிற சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதிகளும் வட்ட மேசை மாநாட்டின்போது தங்கள் கருத்துக்களைப் பற்றித் தெளிவாக எடுத்துரைத்ததே இதற்குக் காரணம் எனலாம்.

## கிறித்துவர்களுக்குத் தனித் தொகுதிகள்

இப்புதிய திட்டத்தின்படி சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் தேர்தலுக்குரிய தொகுதிகள் 215 ஆக அதிகரிக்கப்பட்டன. இவற்றுள் 9 தொகுதிகள் இந்தியக் கிறித்துவர்களுக்கென ஒதுக்கப்பட்டன. இவ்வொன்பது தொகுதிகளில் ஒரு தொகுதி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டதாகும்.

## ஏமாற்றம்

ஆளுநரின் நிர்வாகக் குழுவில் 1933–ஆம் ஆண்டில் சட்ட உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை எழுந்தது. தம் கணவருக்கே அப்பதவி கிடைக்கும் என்று பொன்னு பாப்பாள் எதிர்பார்த்தார். ஆனால் கே.வி. ரெட்டி நாயுடு அப்பதவிக்கு நியமிக்கப் பட்டார். இது செல்வத்துக்கும் அவர் மனைவிக்கும் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

## உள்துறை உறுப்பினராகச் செல்வம்

ஆனால் 1934–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிர்வாகக் குழுவில் உள்துறை உறுப்பினராக இருந்த சர் முகமது உஸ்மான் பதவி விலகிய போது செல்வம் உள்துறை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இப் பதவியை வகித்தவர்களுள் இவரே மிகத் திறம்படச் செயலாற்றியவர் என எல்லோரும் போற்றும் அளவுக்குத் தம் கடமைகளை மிகுந்த பொறுப்போடு நிறைவேற்றி வந்தார். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் உறுப்பினர்களாக அமர்வார்கள். எனினும் அமைச் சரவையைப் போல நிர்வாகக் குழு சட்டமன்றத்துக்குக் கட்டுப்பட்ட தல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அமைச் சரவை பதவி விலக நேரிடலாம். ஆனால் நிர்வாகக் குழு உறுப்பினர் களோ ஆளுநர் விரும்பும் வரையில் பதவி வகிக்கலாம்.

மிகுந்த பொறுப்புணர்வோடும் நேர்மையோடும் செல்வம் உள்துறை உறுப்பினராகப் பணியாற்றினார். தம் இல்லத்துக்குப் பாது காப்புக் காவலர்கள் தேவையில்லை என்று சொல்லிவிட்டார். தம் சொந்த மருமகன் சுந்தரராசன் (மகள் விக்டோரியாவின் கணவர்) காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்கு முயற்சி செய்த போது அவருக்குச் செல்வம் எவ்வுதவியும் செய்யவில்லை. காவல்துறை உள்துறை உறுப்பினரின் அதிகாரத்துக்கு உட்பட்டதே என்பதை எண்ணும்போது செல்வத்தின் நேர்மை நமக்கு விளங்கும்.

அவ்வாறே செல்வத்திடம் பணியாற்றிக் கொண்டிருந்த சங்கரன் நாயர் சூதாடியதற்காக நீதிமன்றத்துக்கு வர வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டபோது சங்கரன் செல்வத்தின் உதவியை நாடினார். செல்வமோ நீதித்துறையின் நிர்வாகத்தில் தலையிட மறுத்தார். அவ்வமயம் கோடை காலத்துக்காக உதகையில் இருந்த செல்வம் சங்கரனின் கையில் பணம் கொடுத்து நேராகச் சென்னைக்குப் போய் நீதிமன்றத்துக்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தார்.

உள்துறை உறுப்பினராகிய செல்வத்துக்குப் புகைவண்டியில் சிறப்புப் பெட்டியில் செல்லும் உரிமை உண்டு. ஆனால் அவ்வுரிமை தமது பதவிக்காகவே தமக்கு வழங்கப்பட்டது என்பதைச் செல்வம் ஒரு போதும் மறந்ததில்லை. ஒருமுறை செல்வம் கடலூருக்குப் புகைவண்டி யில் செல்லவிருந்தபோது, பத்து வயதினராகிய எட்வர்ட் தம் தந்தை யுடன் செல்ல விரும்பினார். செல்வமோ தம் மகனுக்கு முதல்வகுப்பில் அரைப் பயணச் சீட்டு வாங்கிவரச் செய்து அதன்பின்னரே எட்வர்டைப் புகைவண்டியில் அழைத்துச் சென்றார். அதுபோலவே மற்றொரு முறை செல்வம் மேட்டூருக்குச் செல்லும்போது தம் மகன் ஜார்ஜுக்கு முதல்வகுப்புப் பயணச் சீட்டு வாங்கிய பின்னரே உடனழைத்துச் சென்றார்.

தம் பதவியின் மதிப்புக்கு ஊறு நேராத வகையில் செல்வம் நடந்து கொண்டார். அக்காலத்தில் ஆங்கிலேயரே காவல் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தனர். ஆங்கிலேயராயினும் அவர் உள் துறை உறுப்பினரின் அதிகாரத்துக்கு உட்பட்டவர். ஆனால் செல்வத் துக்கு முன்பிருந்த உள்துறை உறுப்பினர்கள் காவல்துறைத் தலைவ ரிடம் ஏதாவது பேச வேண்டுமானால் அவரது இல்லத்துக்கே சென்று நேராய்ப் பேசி வருவதுண்டு. ஆனால் செல்வமோ தமது அதிகாரத் துக்கு உட்பட்டவரின் இல்லத்துக்குத் தாம் செல்வது தமது அதிகாரத் துக்குச் சரியல்ல என்பதை உணர்ந்தார். எனவே ஏதாவது பேச வேண்டுமானால் அன்று காவல் துறைத் தலைவராகவிருந்த சர் சார்லஸ் கன்னிங்ஹாமைத் தம் இல்லத்துக்கோ அலுவலகத்துக்கோ அழைத்துத்தான் பேசுவார். இது கன்னிங்ஹாமுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் செல்வமோ தம் பதவியின் பெருமையை விட்டுக் கொடுக்க வில்லை.

## நீதிக்கட்சியும் பெரியாரும்

காங்கிரசுக் கட்சியும் நீதிக் கட்சியும் அடுத்துவரும் தேர்தலுக்குரிய தயாரிப்புகளில் ஈடுபடத் தொடங்கின. பிரசாரத்துக்குரிய பத்திரிகை களும் பேச்சாளர்களும் காங்கிரசிடம் அதிகம். நீதிக்கட்சியோ தன் பேச்சாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. 'நீதி' ஆங்கில ஏடும் 1933-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நின்றுவிட்டது. எனவே நீதிக்கட்சித் தலைவராகிய பொப்பிலி அரசர் சுயமரியாதை இயக்கத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டு அதன் பிரசார வசதி களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். ஆகவே சுயமரியாதை இயக்கத் தலைவராகிய பெரியார் நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரானார்.

மக்களிடையே காங்கிரசுக்கு ஆதரவு பெருகிவருவதைக் கண்ட நீதிக்கட்சியினர் பலர் பதவியில் நிலைக்க வேண்டுமானால் காங்கிர சில் சேர வேண்டுமென்று முடிவு செய்து கட்சி மாறினர். இவ்வாறு கட்சி மாறிப் பலர் வெற்றியும் பெற்றனர். மாவட்டக் கழகத் தேர்தல் களில் நீதிக்கட்சியினர் வெற்றிபெறாவிடினும், வெற்றி பெற்றோருள் பலர் முன்னாள் நீதிக்கட்சியினராகவும் பிராமணரல்லாதாராகவும் இருந்ததைக் கண்டு நீதிக்கட்சி உறுப்பினர் சிலர் மகிழ்ச்சி கொண்டாடினர். காங்கிரசில் பிராமணரல்லாதாரின் ஆதிக்கம் வளர்ந்து வருவதற்கு அடையாளமாகவே அவர்கள் இதை ஏற்றுக் கொண்டனர்.

## ஒற்றுமைக் குலைவு

வரவர நீதிக்கட்சிக்குள் ஒற்றுமை குலையலாயிற்று. கள்ளிக் கோட்டு அரசர், கே.வி. ரெட்டிநாயுடு, ஏ.பி. பாத்ரோ, பித்தாபுரம் அரசர் ஆகிய கட்சித் தலைவர்களுக்கும் பொப்பிலி அரசருக்கும் கருத்து வேறுபாடுகள் வளரத் தொடங்கின.

## 1937 தேர்தல்

புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின்படி 18–2–1937 அன்று சென்னை மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடைபெற்ற 215 தொகுதிகளுள் 159 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி 17 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. வெற்றி பெற்றவர்களுள் செல்வம், கே.வி.ரெட்டி நாயுடு, எம்.சி. இராசா, பி. கலிபுல்லா சாகிப், முத்தையா செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பொப்பிலி அரசர், பி.டி. இராசன் போன்றோர் தோல்வியைத் தழுவினர்.

## இடைக்கால அமைச்சரவை

வெற்றி பெற்ற காங்கிரஸ், அமைச்சரவை அமைக்க முன்வந்தது. ஆனால் புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின்படி தமக்கு வழங்கப் பட்டிருந்த சிறப்பு அதிகாரங்களை ஆளுநர் பயன்படுத்திக் காங்கிரஸ் திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் தடுப்பாரோ என்று அஞ்சியது. மூன்றரை மாதக் காலம் ஆளுநருடன் பேச்சு வார்த்தை நடத்திய பின் 14–7–1937 அன்று இராஜாஜியின் தலைமையில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றது.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னரும் அமைச்சரவை அமைக்கப்படாவிட்டால் மக்கள் அதிருப்தி கொள்வார்கள் என்பதால் ஆளுநர் நீதிக் கட்சியை இடைக்கால அமைச்சரவை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். கே.வி. ரெட்டி நாயுடுவின் தலைமையில் பொறுப் பேற்ற அமைச்சரவையில் செல்வம், முத்தையா செட்டியார், எம்.சி. இராசா, பி. கலிபுல்லா சாஹிப், ஆர். எம். பாலாட் ஆகியோர் இடம் பெற்றனர். செல்வம் அமைச்சரவையில் இரண்டாவது இடம் பெற்ற தோடு நிதி, உள்துறை ஆகிய துறைகளுக்குப் பொறுப்பேற்றார். 1–4–1937 அன்று பொறுப்பேற்ற இவ்விடைக்கால அமைச்சரவை 14–7–1937 வரை அதிகாரத்தில் இருந்தது.

## இந்தித் திணிப்பு

காங்கிரசு அமைச்சரவை பொறுப்பேற்றதால் நீதிக்கட்சியினரும், சுய மரியாதை இயக்கத்தினரும் அது ஆரியர்களின் கைப்பொம்மை யாகச் செயல்படும் என்று அஞ்சினர். மாநிலக் காங்கிரஸ் தலைவர் களாகிய இராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோர் மாநில ஆட்சியைப் பிராமணர்களின் ஆட்சியாக மாற்றி விடுவார்களோ என்று கலங்கினர்.

இராஜாஜியின் மொழிக் கொள்கை விரைவில் இத்தகைய அச்சத்தை மிகுதியாக்கியது. ஆறு, ஏழு, எட்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு இந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என்று 11–8–1937 என்று அவர் அறிவித்தபோது நீதிக்கட்சினரும் சுய மரியாதை இயக்கத்தினரும் தாங்கள் அஞ்சியது நடந்து விட்டதே என்று கலக்கமுற்றனர்.

இந்திமொழிதான் இந்தியாவின் பொது மொழியாக வல்லது என்று காந்தியடிகள் 1917–ஆம் ஆண்டிலேயே கூறியிருந்தார். அதுமுதல் இந்தியைப் பொது மொழியாக்க வேண்டுமென்பது காங்கிரசின் திட்டமாக மாறியது. இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளுமாறு காந்தியடிகள் வாய்ப்புக் கிடைக்கும்பொதெல்லாம் தென்னக மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார். ஆனால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று காங்கிரஸ் திட்டமிடவில்லை. இந்திப் பிரசார சபையின் முயற்சிகள் தென்னகத்தில் வெற்றி பெறவில்லை. எனவே இராஜாஜியின் இந்தித் திணிப்பு தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. ‘இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளாவிட்டால் சுதந்திர இந்தியாவில் நாம் பாதகமான நிலைக்குத் தள்ளப்படுவோம். எனவே இந்தி மொழியைக் கற்றுக் கொள்வது நமக்கு நன்மை பயப்பதாகும்’ என்று இராஜாஜி எடுத்துக் கூறிய கருத்தைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 1919–ஆம் ஆண்டு முதலே இந்தி சாகித்ய சம்மேளனமும் இந்திப் பிரசார சபையும் மாநிலத்தில் இந்தி வகுப்புகளை நடத்தி வந்தன. ஆனால் இதில் பிராமணர்களே அதிகமாகச் சேர்ந்தனர். ஏற்கனவே வடமொழி அவர்களுக்குத் தெரிந்த மொழியாதலால் அதே தேவநாகரி அகர வரிசையைக் கொண்டிருந்த இந்தியைக் கற்றுக் கொள்வது அவர்களுக்குக் கடினமாக இருக்கவில்லை. அதோடு வட மொழியிலிருந்து தோன்றிய இந்தியில் வடமொழிச் சொற்கள் அதிக மாகவே வழங்கி வந்ததாலும் இந்தி மொழியைக் கற்பது அவர்களுக்கு எளிதாயிற்று. ஆனால் இத்தகைய வசதிகளில்லாத பிராமணரல் லாதார் இந்தியைக் கற்பதில் ஆர்வம் செலுத்தவில்லை. இந்தியைக் கற்பது அவர்களுக்கு எளிதாகவும் இருக்கவில்லை.

## இந்திக்கு எதிர்ப்பு

பள்ளிகளில் தாய்மொழியே கட்டாயப் பாடமாக இல்லாத நிலை யில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது எவ்வாறு நியாயம் என்னும் கேள்வி தமிழகத்தில் பல்வேறிடங்களிலும் கிளர்ந்தெழுந்தது. என்.வி. நெல்லையப்பப் பிள்ளை, டி.எஸ். கந்தசாமி முதலியார், வி. திரு வரங்கம் பிள்ளை ஆகியவர்கள் 1937–ஆம் ஆண்டில் நெல்லையில் கூடித் ‘தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்’ என்னும் அமைப்பினை நிறுவினர்.

இந்தித் திணிப்பை எதிர்த்துப் பொதுக் கூட்டங்கள் நடைபெறலாயின. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய நாவலர் சோமசுந்தர பாரதியார், ஈழத்துச் சிவானந்த அடிகள், காஞ்சிப் பரவாசத்து இராசகோபாலாச் சாரியார் ஆகிய மூவரும் முன்னணியில் நின்று இக்கூட்டங்களை ஏற்பாடு செய்தனர். இந்தித் திணிப்பை எதிர்த்துப் பல தீர்மானங்களை இக்கூட்டங்களில் நிறைவேற்றி மாநில ஆளுநருக்கும் முதல் அமைச் சருக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பினர். காங்கிரசுக் கட்சியினர் சிலர் இந்தித் திணிப்பைக் கைவிட வேண்டுமென்று இராஜாஜிக்கு ஆலோசனை கூறுமாறு காந்தியடிகள், பண்டித நேரு போன்ற தலைவர்களுக்கு எழுதினர். ஆனால் விரும்பிய பயனெதுவும் விளையவில்லை.

## தமிழர் மாநாடு

இந்தித் திணிப்பைத் தமிழர் அனைவரும் இணைந்து நின்று எதிர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பதற்காகத் திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் 26–12–1937 அன்று திருச்சியில் சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டைக் கூட்டினார். நகராட்சிப் பொது மன்றத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் சோமசுந்தர பாரதியார் தலைமையேற்றார். இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் அம்மாநாட்டில் பங்கேற்றனர். முன்னாள் அமைச்சர் முத்தையா முதலியார், கருமுத்து தியாகராசச் செட்டியார், பெரியார் போன்றவர்களோடு செல்வமும் அம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

## நொண்டிக் கொண்டே

திருச்சியில் தமிழர் மாநாட்டுக்குரிய ஆயத்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மாநாட்டில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு மாநாட்டு அமைப்பாளர் கி.ஆ.பெ. விசுவநாதம் அழைப்பு விடுத்தார். அவ்வமயம் செல்வம் காலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு செல்வபுரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தின் காரணமாக நொண்டிக் கொண்டே வந்து மாநாட்டில் கலந்து கொண்டார். அதோடு தமிழின் சிறப்புப் பற்றியும் தமிழின் பண்பாட்டுத் தொன்மை பற்றியும் விளக்கி, இந்தித் திணிப்பு ஏன் கூடாதென்பது பற்றிப் பல காரணங்களை அடுக்கடுக்காக எடுத்துரைத்து விரிவாகப் பேசினார். அன்றைய மாநாட்டில் நாவலர் பாரதியாரும் செல்வமும் ஆற்றிய பேருரைகளே சிறந்த சொற்பொழிவு களாகக் கருதப்பட்டன.

## தனித் தமிழ் மாநிலம்

அம்மாநாட்டுத் தீர்மானங்களுள் ஒன்று சோமசுந்தர பாரதியார், பெரியார், டி.வி. உமாமகேசுவரம் பிள்ளை ஆகிய மூவரையும் ஒரு தூதுக் குழுவாக மாநில ஆளுநரைக்கண்டு பேச வேண்டுமென்று பணித்தது. மற்றொரு தீர்மானம் தமிழ் மாநிலம் என்று தனியாக அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

## மறியல்

இந்தித் திணிப்பை எதிர்த்துப் பொதுக் கூட்டங்கள் தொடர்ந்தன. தனிநபர் சத்தியாக்கிரகங்கள் நடந்தன. உண்ணாநோன்புகள் இடம் பெற்றன. சென்னையில் முதலமைச்சர் இராஜாஜியின் வீட்டின் முன் மறியல் நடைபெற்றது. 'இந்த ஆரிய ஆதிக்கத்தை எதிர்த்துத் தன் உடலில் சுத்த ரத்தம் பாயும் ஒவ்வொரு தமிழனும் போராட வேண்டும்' என்று வலியுறுத்திப் பெரியார் 'குடி அரசு' இதழில் ஆசிரியவுரைகள் தொடர்ந்து தீட்டி வந்தார். இருந்தும் காங்கிரஸ் அரசு அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. மறியலிலும் சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்ட பல தொண்டர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

## தமிழர் பெரும்படை

அடுத்த திட்டமாகத் திருச்சியிலிருந்து தமிழர் பெரும்படை ஒன்று புறப்பட்டுக் கால்நடையாகவே சென்னை செல்வதென்று தீர்மானிக்கப் பட்டது. 1–8–1938 அன்று திருச்சியிலிருந்து புறப்பட்ட இப்படை 42 நாட் களில் 577 மைல் தூரம் நடந்து 11–9–1938 அன்று சென்னையைச் சென்ற டைந்தது. முஸ்லீம் லீகையும் சுயமரியாதை இயக்கத்தையும் சார்ந்த பலர் இப்படையில் கலந்து கொண்டனர். தஞ்சை ஐ. குமாரசாமிப் பிள்ளை இப்படைக்குத் தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள 304 ஊர்கள் வழியாக இப்படை அணி வகுத்துச் சென்றது.

## மாவட்டங்களில் தமிழர் படை

இப்படை அணிவகுப்பின் வெற்றி தமிழகத்தின் பல்வேறு மாவட் டங்களிலும் இத்தகைய படைகளை அமைக்கத் தூண்டியது. தம் குடி அரசு, விடுதலை இதழ்களில் இந்தித் திணிப்பை எதிர்த்துக் கடுமை யாகச் சாடி எழுதிவந்த பெரியார் தமிழகமெங்கும் சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வலுவடையச் செய்தார்.

## செல்வத்தின் இந்தி எதிர்ப்புப் பணிகள்

மறியல், சத்தியாக்கிரகம் முதலிய வழிமுறைகளில் செல்வத்துக்கு நம்பிக்கை இல்லை. பொதுக் கூட்டங்கள் மூலமும், மாநாடுகள் மூலமும் மக்களின் சிந்தையைத் தூண்டியெழுப்பி அதன் வழியாகவே இந்தித் திணிப்புக்கு முடிவு காண வேண்டும் என்பதே செல்வத்தின் எண்ணமாக இருந்தது. எனவே செல்வம் எத்தகைய மறியலிலும் சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று தம் வீர உரைகளால் மக்களுக்கு எழுச்சியூட்டி வந்தார்.

## அதிகாரப் பூர்வமாக அல்ல

நீதிக்கட்சி உறுப்பினர்களாகிய செல்வம், பெரியார், ரெட்டி நாயுடு போன்ற பலர் தனிப்பட்ட முறையில் இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில் கலந்து கொண்டாலும் நீதிக்கட்சி அதிகாரப் பூர்வமாக இப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கட்சித் தலைவராகிய பொப்பிலி அரசர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். அவரில்லாமல்

கட்சியின் செயற்குழு கூடவுமில்லை. கட்சி செயலிழந்து ஊக்கமற்ற நிலையில் காணப்பட்டது.

## கட்சித் தலைமையில் மாற்றம் தேவை

கட்சிக்குப் புத்துயிர் கொடுப்பதில் தெலுங்குத் தலைவர்கள் யாரும் ஈடுபட முன்வரவில்லை. சட்டமன்றத்தில் நீதிக்கட்சித் தலைவராக இருந்த முத்தையா செட்டியாரும் எம்முயற்சியிலும் ஈடுபடவில்லை. இந்நிலையில் 12–6–1938 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற மாவட்டத் தமிழர் மாநாட்டில் தலைமை தாங்கிய செல்வம் 'கட்சித் தலைமையில் மாற்றம் தேவை' என்று வெளிப்படையாகவே வலியுறுத்தினார். பொப்பிலி அரசர் தம் சொந்தப் பணத்தைப் பெருந் தொகையாகச் செலவிட்டுக் கட்சியை வளர்க்க முனைந்ததைச் செல்வம் புகழ்ந்து பேசினார். எனினும், "கட்சிக்குப் புத்துயிர் அளிக்கக்கூடிய வகையில், மக்கள் தலைவராக விளங்கும் ஒருவர் கட்சித் தலைமை ஏற்பது இன்றைய நிலையில் இன்றியமையாதது" என்று விளக்கினார். அம்மாநாட்டில் பேசிய ஜி.நாராயணசாமி செட்டியார், "ஓர் இளைஞர் கட்சிக்குத் தலைமையேற்றால்தான் டாக்டர் நாயர், பனகல் அரசர் ஆகியோர் காலத்தில் கட்சி பெற்றிருந்த சிறப்பையும் செல்வாக்கையும் மீண்டும் பெற முடியும்" என்றார். ஆனால் செல்வமும் சரி, நாராயண சாமி செட்டியாரும் சரி 'அவ்வாறு கட்சிக்குப் புத்துயிர் அளிக்கக் கூடிய தலைவர் யார்?' என்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லை.

## பெரியாரே தகுந்தவர்

பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அவர் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்களில் மக்கள் பெருந்திரளாகக் கூடினர். பெரியாரின் தன்னலமற்ற தொண்டுகளையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் காட்டிய தீவிரத்தையும், அயராத உழைப்பையும் கவனித்து வந்த செல்வமும் சவுந்தர பாண்டியனாரும் செல்வத்தின் நண்பராகிய என்.ஆர்.சாமியப்ப முதலியாரும் மக்களைத் தட்டியெழுப்பத் தகுந்த தலைவர் பெரியாரே என்று உணர்ந்தனர். முஸ்லீம் லீக் தலைவர் கலிபுல்லாவும் பெரியாரின் முயற்சிகளை ஆதரித்தார். கலிபுல்லா, செல்வம் ஆகிய இரு தலைவர்களின் ஆதரவைக் கண்ணுற்ற முஸ்லீம், கிறித்துவ மக்களும் பெரியாரின் பணிகளைப் பாராட்டினர்.

## பொப்பிலியின் இந்தி எதிர்ப்பு

பொப்பிலி அரசர் இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் மாநிலத்தின் நிலைமையை ஆராய்ந்து, கட்டாய இந்தி கூடாது' என்று அறிக்கை விடுத்தார். 'இதை ஓர் ஒழுங்குப் பிரச்சினையாகக் கொள்ளாமல் மக்களின் பொதுநலனைப் பற்றிய பிரச்சினையாகக் கருதி இதைத் தீர்த்து வைக்க வேண்டும். சென்னை நகரில் ஒரு வாக்கெடுப்பு நடத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்' என்று அவர் வலியுறுத்தினார். இந்தி எதிர்ப்பு இயக்கத் தலைவராகிய சோம சுந்தர பாரதியார்க்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியதோடு, தமிழர்படை சென்னை வந்து சேர்ந்தபோது அவர்களை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் தமிழர் படையினரைப் பாராட்டிப் பேசிய அவர் இந்தித் திணிப்பு

ஒழிக்கப்படும் வரையிலும் அமைதியாகப் போராடுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

## பொப்பிலி பதவி விலகல்

இதற்கிடையில் 1938–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் பெரியார் மீது காங்கிரசு அரசால் வழக்குத் தொடுக்கப்பட்டது. பொப்பிலி அரசர் திடீரென்று நீதிக்கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இவ்விரு நிகழ்ச்சிகளும் தமிழருக்கு அதிர்ச்சியூட்டுவனவாக அமைந்தன. பொப்பிலி அரசர் தம் சொந்த நலனைக் கருதி அரசியலிலிருந்து விலகியதாகச் செல்வத்துக்கு எழுதினார்.

## புதிய தலைவர் பெரியார்

பதவி விலகிய பொப்பிலி அரசர் அதுபற்றி மறுபரிசீலனை செய்ய மறுத்து விட்டார். எனவே கட்சியின் முன்னணித் தலைவர்கள் அடுத்த தலைவர் யார் என்று சிந்திக்கத் தொடங்கினர். கட்சி வளர்ச்சிக்காகப் பொப்பிலி அரசரைப் போலப் பணம் செலவழிக்கத் தயங்காத ஒருவர் தலைமைப் பொறுப்பேற்றால் தேர்தல் பணிகளுக்கு உதவியாக இருக்குமென்று முதலில் அவர்கள் நினைத்தனர். முத்தையா செட்டியார், கே.வி. ரெட்டி நாயுடு, ஏ.பி. பாத்ரோ, பி.டி. இராசன் முதலியோரை அணுகினர். அவர்கள் மறுக்கவே, பணக்காரராக இல்லாவிடினும் கட்சியின் மீது அயராத பற்றுதலும் அறிவாற்றலும் இளமை வீறும் மிக்க செல்வத்தை அணுகினர். தலைமைப் பொறுப்பேற்கச் செல்வம் முன்வரவில்லை. ஆனால் பெரியார் ஈ.வெ.இராமசாமியே அன்றைய சூழ்நிலையில் கட்சித் தலைமைப் பொறுப்பேற்பதற்கு மிகவும் பொருத்தமானவர் என்று ஆலோசனை கூறினார். 1937–ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வியடைந்த போதே மக்களைத் தட்டியெழுப்பி வழி நடத்தக் கூடிய ஒருவர்தான் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டுமென்றும் அதற்குப் பெரியாரே ஏற்றவர் என்றும் செல்வம் எண்ணத் தொடங்கிவிட்டார். தம் கருத்தை மறைமுகமாக இராமநாதபுரம் மாவட்டத் தமிழர் மாநாட்டிலும் வெளியிட்டார். இன்று செல்வம் அதை வெளிப்படையாக அறிவித்த போது பலரும் அக்கருத்தை ஆதரிப்பாராயினர்.

அடுத்த தலைவராகப் பெரியாரே நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திப் பல நீதிக் கட்சித் தலைவர்களும், நீதிக்கட்சியின் மாவட்டக் கிளைகளும் செயற்குழுவுக்குக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பினர். இறுதியாக 28–11–1938 அன்று சென்னையில் நீதிக்கட்சிச் செயற்குழுவும் மாநாட்டு வரவேற்புக் குழுவும் கூடிப் பெரியாரைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தனர். இத்தீர் மானத்தை முத்தையா செட்டியார் முன்மொழிந்தார். செல்வமும், கே.சி. சுப்ரமணியச் செட்டியாரும் வழிமொழிந்தனர்.

## பெரியாருக்குச் சிறைத் தண்டனை

இந்நிலையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட பெரியாருக்கு 6–12–1938 அன்று ஓராண்டுக் கடுங்காவல்

தண்டனையும் ஆயிரம் ரூபாய் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கப்பட்டது. இது அடாத செயல் என்று தமிழகமே கொதித்தது. இந்தியன் எக்ஸ்ப்ரெஸ், ஆனந்த விகடன், நவசக்தி முதலிய காங்கிரஸ் சார்புப் பத்திரிகைகள் கூட இதைக் கடுமையாக எதிர்த்தன. மக்களின் எதிர்ப்பைக் கண்ட மாநில அரசு கடுங்காவல் தண்டனையைச் சாதாரணக் காவல் தண்டனையாக மாற்றிப் பெரியாரை மூன்றாம் வகுப்பிலிருந்து முதல் வகுப்புக் கைதியாக மாற்றியது.

பெரியாரின் சிறைத் தண்டனை இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களிடையே புத்துணர்ச்சியைத் தூண்டியது. அதுவரையில் 364 தொண்டர்களே சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். இப்போது தொண்டர்கள் பலர் ஊக்கத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டதால் நான்கு மாத காலத்துக்குள் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்கள் சிறை புகுந்தனர். டிசம்பர் மாத இறுதிக்குள், பெரியாரின் சிறைத் தண்டனையை எதிர்த்து ஐநூறுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களிலெல்லாம் பெரியாரின் புகைப்படம் மேடையில் நடுநாயகமாக வைக்கப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் 'பெரியாரின் தலைமையில் இந்தியை எதிர்த்துப் போராடும் தேசியப் பணியில் ஈடுபடுவோம்' என்று தொண்டர்கள் சூளுரைத்தனர்.

## "பார்ப்பனர்கள் தமிழர்கள் அல்லர் !"

18–12–1938 அன்று சென்னையில் நடைபெற்ற பெரியார் பிறந்த நாள் விழாவிலும், 27–12–1938 அன்று வேலூரில் நடைபெற்ற தமிழர் மாநாட்டிலும் தலைவர்களும் தொண்டர்களும் பெருந்திரளாகக் குழுமினர். தமிழர் மாநாட்டில் செல்வம் தலைமை தாங்கினார். அவரது தலைமையுரை சிந்தனையைத் தூண்டும் உரையாக அமைந்திருந்தது.

"தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே தமிழர்கள். சமஸ்கிருதத்தைத் தெய்வீக மொழியாகக் கொள்ளுகின்றவர்களும், தமிழை இழிவாகக் கருதுகின்றவர்களுமாகிய பார்ப்பனர்கள் தமிழர்கள் அல்லர். தமிழ் நாடு எக்காலத்திலும் வட நாட்டினருக்கு அடிமைப்பட்டிருந்ததில்லை. இனியும் நாம் வடநாட்டினருக்கு அடிமையாக இருக்க முடியாது. தமிழ்நாட்டு அரசியல் தமிழரிடமே இருக்க வேண்டும்" என்னும் கருத்துக்களைத் தம் தலைமையுரையில் அவர் வெளியிட்டபோது மாநாட்டு அரங்கமே ஆர்வத்தால் கையொலி எழுப்பி அதிர்ந்தது.

## பெரியாரின் புகைப்படம்

29–12–1938 அன்று நீதிக்கட்சி மாநாடு சென்னையில் தொடங்கியது. எழும்பூர் வரதராச புரத்திலிருந்து புறப்பட்டுத் தீவுத் திடலுக்கு வந்து சேர்ந்த மாநாட்டு ஊர்வலத்தின் நடுநாயகமாக ஒரு தேரின் நான்கு பக்கங்களிலும் பெரியாரின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்வூர்வலத்தில் 30,000 பேருக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

## 'தோளுக்கு உரிய மாலையைத் தாளுக்கு இடுகிறேன்'

மாநாட்டுத் தலைவர் பெரியார் சிறையிலிருந்ததால் அவருக்குப் பதிலாகச் செல்வம் மாநாட்டுக்குத் தலைமையேற்றார். பெரியார் எழுதி அனுப்பியிருந்த தலைமையுரையைச் செல்வமும், கி.ஆ.பெ. விசுவநாதமும் மாநாட்டில் படித்தனர். தமக்குச் சூட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்ட மாலையைத் தம் கைகளில் வாங்கிக் கொண்டு "என் தோளுக்கு அணிவிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட இம் மாலையை நம் தலைவர் பெரியாரின் தாளுக்கு அணிவிக்கிறேன்" என்று சொல்லி மாநாட்டின் நடுநாயகமாக இருந்த பெரியாரின் புகைப்படத்துக்குச் செல்வம் மாலை அணிவித்தபோது மாநாட்டுப் பந்தல் மக்களின் கையொலியால் அதிர்ந்தது. அதன் பின்னரே செல்வம் பெரியாரின் தலைமையுரையைப் படிக்கத் தொடங்கினார்.

## மாநாட்டில் செல்வத்தின் தாக்குதல்

அடுத்த நாள் மாநாடு நடந்த போது ஏ.பி.பாத்ரோ, பட்டுக் கோட்டை அழகிரிசாமி, அ.பொன்னம்பலனார் முதலியோர் உரை யாற்றினர். மாநாட்டு நிறைவுரையாற்றிய செல்வம் தேசியம் என்று சொல்லிக் கொண்டு இராஜாஜி வகுப்பு வாதத்தைச் செயல்படுத்து கிறார் என்று சாடினார். ஏற்கனவே மிகையான பிரதிநிதித்துவம் பெற்றிருந்தவர்களுக்கே மேலும் மேலும் பதவிகள் வழங்கப்படுவதையும், பிராமணரல்லாதாருக்குப் பதவி வழங்குவதை விடுத்துப் பதவி ஓய்வுபெற்ற பிராமணர்களுக்குப் பதவி வழங்கப்படுவதையும் கடுமை யாகக் கண்டித்தார். சட்டத்துறைச் செயலாளராகப் பணியாற்றிய சி.கோவிந்தன் நாயருக்கு 55 வயதாகி விட்டதால் பதவி நீடிப்புச் செய்யச் சட்டம் இடம் கொடுக்காது என்று இராஜாஜி அரசு மறுத்துவிட்டது. ஆனால் ஒரிஸா அரசு அவர் ஓய்வு பெற்ற பின் அவரைத் தங்கள் மாநிலத்தில் தலைமைச் செயலாளராக நியமித்தது. அதே சென்னை மாநில அரசு ஓய்வு பெற்ற பிராமணர் ஒருவரைச் சென்னைப் பொது மருத்துவ மனையில் பொது நிலைச் செயலாளராக நியமித்தது. இதைப்பற்றிச் செல்வம் சட்டமன்றத்தில் வினா எழுப்பிய போது, "சாதி அடிப்படையில் அல்ல, தகுதி அடிப்படையில்தான் அந்த நியமனம் இடம் பெற்றது" என்று நலவாழ்வுத்துறை அமைச்சர் பதிலளித்தார். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் நீதிக்கட்சி மாநாட்டில் செல்வம் எடுத்துரைத்தார்.

## ஆரியரும் திராவிடரும் வெவ்வேறு இனங்கள்

ஏற்கனவே வேலூர் மாநாட்டில் ஆரியரும் திராவிடரும் வெவ் வேறு இனங்கள் என்று தாம் எடுத்துரைத்த கருத்தை நீதிக்கட்சி மாநாட் டிலும் செல்வம் எடுத்து முழங்கினார். பிராமணர்களுக்கு எதிராக அவர் அடிக்கடி பொதுக் கூட்டங்களில் பேசியது வகுப்புக் கலவரங் களை உண்டாக்கலாம் என்று அரசு அஞ்சியது. பொதுப்பணி நிய மனங்களில் குறிப்பாக நலவாழ்வுத் துறையில் வகுப்புரிமை வழங்கப் படாதிருந்த நிலையைச் செல்வம் நன்றாக அறிந்திருந்தார். இதற்குக் காரணம் இராஜாஜி ஒரு வகுப்புவாதி என்பதே என்று செல்வம் உறுதியாக நம்பினார். எனவே பொதுக் கூட்டங்களில் தக்க எடுத்துக் காட்டுகளுடன் அவர் மாநில அரசைத் தொடர்ந்து தாக்கி வந்தார்.



சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் சென்னையை விட்டுப் புறப்பட்டு கராச்சியடைந்து அங்கிருந்து விமானத்தில் லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு எழுதிய கடிதம்

Nursing Home
Vepery.
16. 8. 37

My Dear Child Clara,

Thanks for both your letters. I am much worried to hear of Daisy's health. I hope she is alright by now. Please ask your sister Philomena to write to me every day about her condition till she is alright.

I am glad to hear you have had the weekly letter from your dear hubby. I am sure he will write to you regularly hereafter. If he had not been doing so in the past, it must have been due to his being busy with his work. So don't worry & be cheerful & only a few months more & you will be both together, happy & gay. And then would you care for this old lonely man. I am sure you would.

I am getting better day by day & I am able to walk about in my own room a little longer & a little more freely, though I am not yet completely alright. The swelling in the leg is still there, though not so much as before & I am also getting off & on slight fever never above 100°. Otherwise I am alright. Dr. Gurusamy thinks that I should be able to leave this place in a few days.

Please convey to Theresa my hearty congratulations on the birth of her son & heir.

With love & kisses
Your ever affectionate daddy
A.T. Pannirselvam

மருத்துவ மனையிலிருந்து செல்வம் தம் மருமகள் கிளாரா அம்மையாருக்கு எழுதிய கடிதம்

## பெரியாரை விடுதலை செய்க !

இந்தி எதிர்ப்புப் போராட்டமும் பெரியாரை விடுதலை செய்ய வேண்டுமென்னும் போராட்டமும் தொடர்ந்தன. இது தொடர்பாகப் பல இடங்களில் பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. இவ்வாறு கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெறும்போது நீதிக்கட்சி யினருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்குமிடையே மோதல்கள் இடம் பெற்றன. அவ்வப்போது இம்மோதல்கள் வன்முறையில் முடிவ துண்டு.

## செல்வத்தின் சொல்லடி !

எட்டையபுரத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டமொன்றில் சோம சுந்தர பாரதியார் தலைமையேற்றார். கி.ஆ.பெ. விசுவநாதம் அக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது காங்கிரசுக் கட்சியினர் கூட்டத்தைக் கலைக்க முற்பட்டுக் கல்லெறிய ஆரம்பித்தனர். அதனால் அரைமணி நேரத்துக்கு மேல் கூட்டத்தை நடத்த முடியவில்லை. காவல் துறையினர் குறுக்கிட்டுக் கூட்டத்தைக் கலைத்து விடுமாறு தலைவரைக் கேட்டுக் கொள்ளவே, கூட்டம் கலைக்கப்பட்டது. ஆனால் கல்லடி நிற்கவில்லை. பாரதியாரையும் கி.ஆ.பெ. விசுவநாதத்தையும் காவல் துறையினர் சூழ்ந்துகொண்டு எதிரில் இருந்த ஒரு தகரத் தாழ்வாரத்தில் நிறுத்தி வைத்துக் காவல் புரிந்தனர். சுமார் 500 பேர் தூரத்தில் நின்று கொண்டு கல்லெறிந்து கொண்டே இருந்தனர். காவல்துறையினர் துப்பாக்கியால் சுடப்போவதாக அச்சுறுத்தி அவர்களைக் கலைத்து விரட்டினர். அவர்களுள் முப்பத்திரண்டு பேரைக் காவல்துறையினர் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் மாநில அரசு அவ்வழக்கை ரத்து செய்து அவர்களை விடுவித்தது.

செல்வம் இந்நிகழ்ச்சியைச் சட்டமன்றத்தில் மிகவும் வன்மையாகத் தாக்கிப் பேசினார். இத்தகைய செயல்கள் சமூக விரோதிகளுக்கு ஊக்கமளிப்பதாகிவிடும் என்று அவர் கண்டித்தார். அதற்கு முதலமைச்சர், இராஜாஜி பதில் கூறும்போது "பொதுக் கூட்டங்களில் பேசுகின்றவர்கள் மக்களைப் பதற்றமடையச் செய்யாத வகையிலும், மாறான கருத்துடையோரைப் பழித்துரைக்காத வகையிலும் பேச வேண்டும்" என்று உரைத்தார். இதைக் கேட்ட செல்வம் கடுஞ்சினத்துடன், "சோமசுந்தர பாரதியாரைப் போலவும், கி.ஆ.பெ. விசுவநாதத்தைப் போலவும் உயர்ந்த தரமும் ஆற்றலும் பண்பாடும் உடைய பேச்சாளர்களை நான் இதுவரையில் சட்டமன்றத்தில் கூடக் கண்டதில்லை" என்று ஆவேசத்துடன் பேசினார். அதோடு "அரசே தன் விருப்பப்படி குற்றவாளிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை ரத்து செய்யுமானால் இது எங்கே போய் முடியும்?" என்று வினவினார். "குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று கண்டதாலேயே அரசு அவற்றை ரத்து செய்தது" என்று அமைச்சரவையின் சார்பில் பதிலிறுக்கப்பட்டபோது, "ஒவ்வொரு குற்றச்சாட்டையும் அரசே ஆராய்ந்து பார்த்து எந்தக் குற்றசாட்டு அடிப்படையுள்ளது, எந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது எனத் தீர்ப்பு வழங்கத் தொடங்கினால் நீதி மன்றங்கள் எதற்கு? வழக்கறிஞர்கள் எதற்கு? நீதிபதிகள் எதற்கு?" என்று செல்வம் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தபோது

அமைச்சரவையால் பதிலிறுக்க இயலவில்லை. "காங்கிரசுக் கட்சியினருக்கு ஒரு சட்டம், காங்கிரசை எதிர்ப்பவர்களுக்கு ஒரு சட்டம் என்றால் இந்த நாட்டில் அராஜக ஆட்சி நடப்பதாகத்தானே அர்த்தம்?" என்று செல்வம் தொடர்ந்து ஆவேசத்துடன் முழங்கிய போது அமைச்சரவையினர் பதிலிறுக்க இயலாமல் மௌனம் காக்க வேண்டியதாயிற்று.

## யாருக்குப் பெரும்பான்மை?

இன்னொரு முறை "சோமசுந்தர பாரதியார், ஈ.வெ.ரா. ஆகிய இருவர்தான் இந்தியை எதிர்க்கிறார்கள்" என்று இராஜாஜி சட்டமன்றத்தில் கூறிய போது "அப்படியானால் நீங்கள் ஒருவர்தானே இந்தியை ஆதரிக்கிறீர்கள்?" என்று செல்வம் சூடாகப் பதிலளித்தார். சட்டமன்றத்தில் இந்தித் திணிப்புப் பிரச்சினை எழுப்பப்படும்போதெல்லாம் கல்வியமைச்சருக்குப் பதிலாக முதலமைச்சராகிய இராஜாஜியே விளக்கம் தருவார். இதை மனதில் கொண்டே செல்வம் மேற்கூறியவாறு பதிலிறுத்தார்.

## தாலமுத்து – நடராசன் மறைவு

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்தவர்களுள் நடராசன், தாலமுத்து ஆகிய இருவரும் வயிற்று நோயால் பீடிக்கப்பட்டுக் கைதிகளாகவே இறந்தனர். இது நாட்டில் பெரும் குழப்பத்தை உண்டாக்கிற்று. நோய் முற்றிய நிலையிலும் அவர்களை விடுதலை செய்யாமல், மன்னிப்புக் கடிதம் எழுதிக்கொடுத்தால்தான் விடுதலை செய்வோம் என்று சிறை அதிகாரிகள் சொன்னதாக ஒரு செய்தி நாட்டில் பரவிற்று. இவ்வாறு இரக்கமற்ற மனதுடன் அரசு நடந்து கொண்டதைச் செல்வம் சட்டமன்றத்தில் கண்டித்துப் பேசினார். "வதந்திகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு பேசக் கூடாது" என இராஜாஜி செல்வத்தைக் கண்டித்தபோது, "வதந்திகளையல்ல, நம்பத் தகுந்த பொறுப்பானவர்கள் சொன்னதை வைத்தே பேசுகிறேன்" என்று சூடாகச் செல்வம் பதிலிறுத்தார். ஆயினும் செல்வம் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு இராஜாஜி வழங்கிய பதில் யாருக்குமே திருப்தி தரவில்லை.

"கல்வியறிவில்லாத காரணத்தாலேயே நடராசன் இந்து தியலாஜிக்கல் பள்ளியின் முன்பு மறியலில் ஈடுபட்டார். ஆதி திராவிடரிடையே கல்வியறிவின்மை பரவலானது" என்று இராஜாஜி கூறிய விளக்கத்தில் சாதி வெறி தொனித்ததாக நீதிக்கட்சியினர் கருதினர். சட்டமன்றத்திலும் வெளியிலும் இவ்விளக்கம் மக்கள் மனதில் கொதிப்பை உண்டாக்கியது. இராஜாஜி சாதி வெறி கொண்டவர் என்று செல்வம் முதலிய தலைவர்கள் கூறி வந்தது உண்மை தான் என்று மக்கள் நம்பத் தொடங்கினர்.

## நீதிக்கட்சியின் முடிசூடா மன்னர்

பெரியார் சிறையிலிருந்த போது நடந்தேறிய நீதிக்கட்சி மாநாட்டுக்குப் பின் 31–12–1938 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பேசிய செல்வம், செயற்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரோடு **14** உறுப்பினரை நியமனம் செய்யும் அதிகாரம் கட்சித்

தலைவருக்கு வழங்கப்படவேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தார். கட்சிக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் பெரியார் செயல்படுவதற்கும், கட்சியில் நிலவும் எல்லாக் கருத்துக்களுக்கும் இடமளிப்பதற்கும் இது உதவும் என்று அவர் வாதிட்டார். இத் தீர்மானத்தைப் பலர் எதிர்த்தனர். காரசாரமான விவாதம் செயற்குழுவில் நடந்தது. எனினும் இறுதியில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. பெரியாரின் ஆதரவாளர்களாகிய செல்வம், ஏ. துரைசாமி முதலியார், முத்தையா செட்டியார் ஆகிய மூவரும் துணைத் தலைவர்களாகவும், கி.ஆ.பெ.விசுவநாதம் பொது அமைப்பாளராகவும், சி.என்.அண்ணாத்துரை (அறிஞர் அண்ணா) வட்டார அமைப்பாளர்களுள் ஒருவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுச் செயலாளரை நியமிக்கும் அதிகாரமும் தலைவராகிய பெரியாருக்கே வழங்கப்பட்டது. அதன்படி சி.பாசுதேவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பின் அவர் பதவி விலகியபோது, விசுவநாதம் பொதுச் செயலாளராகவும் பெரியார் ஆதரவாளராகிய டி.சுந்தரராவ் நாயுடு பொது அமைப்பாளராகவும் பொறுப்பேற்றனர். பெரியார் சிறையிலிருந்து விடுதலை பெறுமுன்னரே நீதிக் கட்சி அவரது பிடிக்குள் வந்து விட்டது. இந்நிலை உருவாகச் செல்வம் அயராது உழைத்தார் என்றால் அது மிகையாகாது.

## பெரியார் விடுதலை

சிறையிலடைக்கப்பட்டிருந்த பெரியாரின் உடல்நிலை மோசமாகியது. வயிற்றுப் போக்கால் அவர் துன்புற்றார். பெரியார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரைப் பரிசோதித்த டாக்டர் எம்.ஆர். குருசாமி முதலியாரின் ஆலோசனைப்படி கோடைக் காலத்தில் பெரியார் கோயம்புத்தூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டார். ஆயினும் பெரியாரின் உடல்நிலையில் முன்னேற்றம் எதுவுமில்லை. அவரது எடையில் 23 இராத்தல் குறைந்து விட்டது. பெரியாரை விடுதலை செய்ய வேண்டுமென்று நீதிக் கட்சியினர் மட்டுமன்றி, காங்கிரஸ்காரர்களும் குரலெழுப்பத் தொடங்கினர்.

எனவே வேறு வழியில்லாமல் அரசு 22–5–1939 அன்று பெரியாரை விடுதலை செய்தது. ஏற்கனவே சிறையிலிருந்த இந்தி எதிர்ப்புக் கைதிகள் அனைவரையும் அரசு விடுவித்தது. எனினும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தது. பலர் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

## செல்வத்துடன் பெரியார் ஆலோசனை

சிறையிலிருந்து விடுதலை பெற்ற பெரியார் திருவாரூருக்கு விரைந்து சென்று அங்குச் செல்வத்தையும் அவரது நெருங்கிய நண்பராகிய சாமியப்ப முதலியாரையும் சந்தித்துச் செயற்குழு உறுப்பினர்களாக யாரை நியமிக்கலாம் என்பது குறித்து ஆலோசித்தார். புதிய நியமன உறுப்பினர்களுள் பெரியார் ஆதரவாளர்களான சி.என்.அண்ணாத்துரை, பொ.வேதாசலம், சி.டி.நாயகம், குமாரசாமிப் பிள்ளை ஆகியோர் இடம் பெறுவர் என்று தீர்மானித்தனர். கட்சியின் அமைப்பு, கட்சிக் கொடி, இந்தி எதிர்ப்புப் போராட்டம், திராவிட நாடு பிரச்சினை ஆகியவை பற்றியும் பெரியார் செல்வத்துடன் ஆலோசனை செய்தார்.

11–8–1939 அன்று கட்சியின் செயற்குழு கூடியது. பி.டி.இராசன் கருத்து வேறுபாட்டின் காரணமாக இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எனவே புதிய நியமன உறுப்பினர்களாகத் தம் ஆதரவாளர்களையே நியமிப்பதில் பெரியாருக்கு எவ்விதச் சிரமமும் இருக்கவில்லை. கட்சியின் அமைப்புச் செயலாளராக சி.என். அண்ணாத்துரை நியமிக்கப்பட்டார்.

## அமைச்சரவை பதவி விலகியது–இந்தித் திணிப்பு கைவிடப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் 1939–ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கியது. இந்தியர்களின் இசைவின்றியே இந்தியாவும் போரில் ஈடுபடுத்தப்பட்டதால் காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகித் தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்று காங்கிரசுச் செயற்குழு தீர்மானித்தது. போரை எதிர்க்கும் தீர்மானமொன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதோடு சட்டமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. இராஜாஜி அமைச்சரவை பதவி விலகியது. அதன்பின் 21–2–1940 அன்று மாநில ஆளுநர் பிறப்பித்த ஆணையின் மூலம் கட்டாய இந்தி மொழித் திட்டம் கைவிடப்பட்டது.

## போருக்கு ஆதரவு

28–10–1939 அன்று கூடிய நீதிக்கட்சிச் செயற்குழு போரில் ஆங்கிலேயரை ஆதரிப்பதென்றும் ஆனால் அமைச்சரவைப் பொறுப்பினை ஏற்பதில்லை என்றும் முடிவு செய்தது. உலகப் போர் முடிந்ததும், சுதந்திரத் திராவிட நாட்டுக்காகப் போராடுவதென்றும் செயற்குழு தீர்மானித்தது. தனித் திராவிட நாடு ஏன் தேவை என்பது பற்றி நீண்ட ஒரு கட்டுரை எழுதி வெளியிட்ட பெரியார் நாடெங்கும் சுற்றி இத்தீர்மானத்துக்கு ஆத்ரவு தேடினார்.

## கி.ஆ.பெ. விசுவநாதத்தின் பணிகள்

இந்நிலையில் காரணம் ஏதும் தெரிவிக்காமலேயே கி.ஆ.பெ. விசுவநாதம் கட்சிப் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். அவ்வாறு அவர் விலகியது தவறென்றும், அவரது பணி கட்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் தேவையென்றும் செல்வபுரத்தி லிருந்து விசுவநாதத்துக்கு விரிவான கடிதம் ஒன்று எழுதினார் செல்வம். செல்வத்தின் கடிதமும் பெரியாரின் வேண்டுகோளும் விசுவநாதத்தைத் தம் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வைத்தன. எனவே விசுவநாதம் தம் பொதுச் செயலாளர் பணியைத் தொடர்ந்தார். நீதிக் கட்சிக்கு அடிமட்ட அளவில் கிளை அமைப்புகளை நிறுவுவதில் விசுவநாதம் அயராமல் உழைத்தார். அவர் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றபின் 90 புதிய கிளைகளை நிறுவினார். ஒவ்வொரு கிளையும் இருபதுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், செயலர், பொருளர், செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டதாக அமைய விசுவநாதம் வழி வகுத்தார். இவ்வாறு திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவராகிய விசுவநாதம் பதவி விலகியதைக் கட்சித் தலைவர் பெரியாரும், துணைத் தலைவர் செல்வமும் விரும்பாததில் வியப்பில்லை.

## அமைச்சரவை அமைக்கலாமா?

காங்கிரசு பதவி விலகி விட்டதால் நீதிக்கட்சி அமைச்சரவை அமைக்கலாம் என்று முத்தையா செட்டியார் போன்ற சிலர் விரும்பினர். ஆனால் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத நிலையில் அமைச்சரவை அமைப்பது தகாத செயல் என்று செல்வம், அண்ணாத்துரை, சவுந்தரபாண்டியனார் போன்றவர்கள் மறுத்து வாதிட்டனர். 1939 நவம்பரில் சென்னை அடையாறிலுள்ள முத்தையா செட்டியாரின் அரண்மனையில் கூடிய கூட்டத்தில் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டு அமைச்சரவை அமைக்க முன் வருவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. பெரும்பான்மை இல்லாத நிலையில் அமைச்சரவை அமைக்க முன்வரக் கூடாது என்பதே பெரியாரின் விருப்பமாகும். அவ்விருப்பத்தையே செல்வமும் அண்ணாவும் வழிமொழிந்து வெற்றி பெறச் செய்தனர்.

## பெரியாருக்கு அடுத்த தலைவர்

1930–ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டமன்றம் செல்லும்வரை செல்வத்தின் பணிகள் தஞ்சை மாவட்டத்தையே மையமாகக் கொண்டு அமைந்திருந்தன. சட்டமன்ற உறுப்பினராகிய பின்பு தமிழ் நாடெங்கும் செல்வத்தின் பணி தேவைப்பட்டது. பல்வேறு மாநாடுகளில் செல்வமே தலைவராக அல்லது முக்கிய சொற்பொழி வாளராக இருந்தார். பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் செல்வமே பெரியாருக்கு அடுத்த தலைவராக நீதிக்கட்சியில் விளங்கினார். செல்வத்தைக் கலந்தாலோசிக்காமல் பெரியார் எதையும் செய்ததில்லை. கட்சி முழுமையாகப் பெரியாரின் பிடிக்குள் வந்தால்தான் பெரியார் தமது திட்டங்களை நிறைவேற்ற முடியுமென்று எண்ணி அதற்குரிய செயல்களில் செல்வம் ஈடுபட்டார். அதில் வெற்றியும் பெற்றார்.

# 6. சட்டமன்றப் பணிகள்

சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் 1930–ஆம் ஆண்டு முதல் 1934–ஆம் ஆண்டு வரையும், 1937–ஆம் ஆண்டு முதல் 1939–ஆம் ஆண்டு வரையும் செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக விளங்கினார். 1934 முதல் 1937 வரை ஆளுநர் நிர்வாகக் குழுவின் உள்துறை உறுப்பினராகவும் அவர் சட்டமன்றத்தில் வீற்றிருந்தார். கிறித்துவத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருந்த போதிலும் நீதிக்கட்சியின் பிரதிநிதியாகவும் தஞ்சை மாவட்டத்தின் பிரதிநிதியாகவும் அவர் விளங்கினார். தமிழினத்தின் பிரதிநிதியாகவும் அவர் சட்டமன்றத்தில் தொண்டாற்றினார்.

## ஆற்றல் மிக்க உறுப்பினர்

செல்வத்தின் சட்டமன்ற உரைகள் அவரது ஆற்றல்மிக்க நாவன்மையையும், ஆங்கில மொழியை அழகுபடக் கையாளும் நயத்தையும், வாதத் திறமையையும், ஆற்றொழுக்குப் போன்ற நடையையும், அவ்வப்போது நகைச்சுவையும் அவ்வப்போது உணர்ச்சியும் ததும்பப் பேசும் ஆற்றலையும், எதிர்க்கட்சியினர் குறுக்கிட்டுப் பேசும்போது அவர்களுக்குத் தக்க பதில் கூறி அவர்களை வாயடைக்கச் செய்யும் திறமையையும், தம் கட்சியினரே ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தபோதும் தவறுகளைச் சுட்டிக் காட்டத் தயங்காத நேர்மையையும், நீண்ட நேரம் பேசினாலும் அவைத்தலைவர் முதல் மாற்றுக் கட்சியினர்வரை எல்லா உறுப்பினரும் விரும்பிக் கேட்கும் வகையில் உரையாற்றும் சிறப்பையும், மாற்றுக் கட்சியினரின் குறுக்கீடுகளையும் தமது கருத்துக்கு ஆதரவாக மாற்றி விடும் அறிவுக் கூர்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. செல்வத்துக்குப் பேசும் நேரம் ஒதுக்குவதில் மற்ற உறுப்பினர்க்குக் காட்டுவதை விட அதிகத் தாராளமாகவே தாம் நடந்து கொண்டிருப்பதை அவைத் தலைவரே வெளிப்படையாக எடுத்துச் சொல்லும் அளவுக்குச் சட்டமன்றத்தில் செல்லப் பிள்ளையாகவே அவர் விளங்கியிருக்கிறார். காங்கிரசு அமைச்சரவைக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக முத்தையா செட்டியாரும் துணைத் தலைவராகச் செல்வமும் விளங்கிய

போதிலும் உண்மையான எதிர்க்கட்சித் தலைவராகச் செல்வமே விளங்கினார் என்பதைச் சட்டமன்றக் குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. (அதனால் ஒருமுறை இராஜாஜியே செல்வத்தை எதிர்க்கட்சித் தலைவர் என்று குறிப்பிட நேர்ந்தது.) தேவையானால் சட்டமன்றத் தலைவரையே எதிர்த்து வாதாடும் செல்வத்தின் நெஞ்சுரத்தையும் அவை எடுத்துக் காட்டுகின்றன. நேராகச் சொல்ல வேண்டியதை நேராகவும், மறை முகமாகச் சொல்ல வேண்டியதை மறைமுகமாகவும் அதே சமயத்தில் நேர்மையாகவும் சுவையாகவும் எடுத்துரைத்துச் செல்வம் சட்டமன்றத்தில் வாதாடியிருப்பதை நாம் காணலாம்.

## தகுந்த தயாரிப்பு

சட்டமன்றத்துக்குத் தக்க தயாரிப்புடன் செல்வதில் செல்வம் மிகுந்த கவனம் செலுத்தினார். விவாதத்துக்கு வரும் சட்ட முன்வரைவுகளையும் வரவு செலவுத் திட்டத்தையும் கவனமாகப் படித்துத் தக்க குறிப்புக்களுடன் அவர் சட்டமன்றத்துக்குச் செல்வார். இதற்காக இரவு நீண்ட நேரம் அவர் படிக்க வேண்டியவற்றைப் படித்துத் தம்மையே தக்க முறையில் தயார் செய்து கொள்வார். அதோடு செய்தித் தாள்களில் வரும் செய்திக் குறிப்புக்களையும் மனதில் பதித்துக் கொள்வார்.

# அ. கிறித்துவப் பிரதிநிதி

கிறித்துவ சமுதாயத்துக்கு உரிய உரிமைகளைப் பெற்றுத் தருவதில் செல்வம் மிகுந்த கருத்துச் செலுத்தி வந்தார். நீதிக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது கூட அவர் கிறித்துவ சமுதாயத்தின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் வாதாடுவார். 1937–39 ஆண்டுகளில் காங்கிரசுக் கட்சியின் சார்பில் சி.ஜே.வர்க்கி, ஜெபமணி மாசிலாமணி போன்ற கிறித்துவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக விளங்கிய போதிலும் தாம் ஒருவரே கிறித்துவ சமுதாயத்தின் உண்மையான பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் தொண்டாற்றி வருவதைப் பற்றி ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் வெளிப்படையாகவே எடுத்துரைத்தார்.

## கல்விப்பணி தொடர

சென்னை மாநிலக் கல்வித் துறையை ஆய்வு செய்து வழங்கப்பட்ட "சாம்பியன் அறிக்கை" சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, அவ்வறிக்கை கிறித்துவ சமுதாயத்தினர் நடத்தும் பள்ளிகளைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடாததைச் செல்வம் வன்மையாகக் கண்டித்துப் பேசினார். பொதுவாகப் பள்ளிகளை நகராட்சி மன்றங்களும், மாவட்ட, வட்டக் கழகங்களுமே நிறுவி நடத்த வேண்டுமென்றும், ஏற்கனவே தனியாரால் நிறுவப்பட்டு நீண்டகாலமாகச் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வரும் பள்ளிகளுக்கு மட்டுமே அரசு நிதியுதவி வழங்கலாமென்றும் அவ்வறிக்கை கூறியிருப்பதைச் செயல்படுத்தினால் பல கிறித்துவப் பள்ளிகளை மூட வேண்டிய அபாயம் நேரிடும் என்று அவர் எச்சரித்தார். பட்டி தொட்டிகளிலெல்லாம் கிறித்துவர்கள் பள்ளிகளை நிறுவி நடத்தி வருவதை மூட வேண்டி நேரிட்டால் அதனால் நாட்டு மக்களுக்கு இழைக்கப்படவிருக்கும் தீமைகளை அவர் சுட்டிக்காட்டி விரிவாகப் பேசினார். கிறித்துவ சமுதாயத்தினருக்கு ஊறு விளைவிக்காத

வகையில் 'சாம்பியன் அறிக்கை'யைச் செயல்படுத்த வேண்டுமென்று கல்வி அமைச்சர் எஸ். குமாரசாமி ரெட்டியாரை அவர் கேட்டுக் கொண்டார்.

## தாழ்த்தப்பட்ட கிறித்துவர்கள்

பல நூற்றாண்டுக் காலமாகச் சமுதாயத்தில் ஊறிவிட்ட சாதி அமைப்பின் விளைவாகச் சிலர் தாழ்த்தப்பட்டவர்களென்றும் தீண்டத் தகாதவர்களென்றும் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் செல்வம் கண்டிக்கத் தவறுவதில்லை. கிறித்துவர்களுக்கிடையே சிலர் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பதை அவர் எடுத்துக் காட்டி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவி களும், சலுகைகளும் சமய வேறுபாடின்றி, தாழ்த்தப்பட்ட கிறித்துவர் களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று சட்டமன்றத்தில் வலியுறுத்து வார். இதனால் தங்களுக்குக் கிடைக்கவிருக்கும் சலுகைகள் குறைந்து விடலாமே என்று தாழ்த்தப்பட்ட இந்து சகோதரர்கள் அஞ்சலாம் என் பதையும் செல்வம் அறியாதவரல்லர். எனவே தாழ்த்தப்பட்ட கிறித்து வர்களுக்காகக் கூடுதல் தொகையை அரசு ஒதுக்க வேண்டுமென்று அவர் அடிக்கடி எடுத்துரைத்தார்.

அதே சமயத்தில் கிறித்துவ சமயத்தாரிடையில் சாதி வேற்று மைகள் நிலவுவதையும் தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று சிலர் ஒதுக்கி வைக்கப்படுவதையும் அவர் கண்டித்து வந்தார். இந்நிலைக்குக் கிறித்துவ சமயத்தைச் சார்ந்த மேல்சாதியினரே பொறுப்பு என்றும் அவர் எடுத்துரைக்கத் தவறியதில்லை.

## எல்லோர்க்கும் நீதி

அரசினர் பதவிகளில் சாதி சமய பேதமின்றி அனைவர்க்கும் நிய மனங்கள் கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்பதை அடிக்கடி சட்ட சபையில் வலியுறுத்துவார் செல்வம். குறிப்பிட்ட ஒரு சாதியினர் தங் கள் விகிதாச்சாரத்துக்கு அதிகமாகப் பதவிகளைப் பெறுவதையும், சில சாதியினரும் சமயத்தவரும் பதவிகள் பெற வாய்ப்பில்லாத நிலையில் உழல்வதையும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவர் எடுத்து ரைப்பார். வகுப்புவாரிப் பதவி நியமனங்களில் அவருக்கு மிகுந்த நம் பிக்கை உண்டு. அதனாலேயே சமுதாயத்தில் அனைவர்க்கும் சமநீதி வழங்கப்பட இயலும் என்பதை அடிக்கடி விளக்குவார்.

மலபார் மாவட்டத்தில் மாவட்டக் கழகப் பள்ளிகளில் கிறித்துவர் கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படாததைப் பற்றி அவர் ஒருமுறை சட்ட மன்றத்தில் விளக்கிப் பேசினார். கிறித்துவர்கள் என்னும் காரணத்துக் காக அவர்களுக்குப் பதவி மறுக்கப்படக் கூடாது என்பதே செல்வத்தின் வாதம்.

## பூசை இரசம்

இராஜாஜி முதன் முறையாகப் பதவியேற்றதும் மதுவிலக்குக் கொள்கையை சென்னை மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டம் வகுத்தார் இதுபற்றிய விவாதம் சட்டமன்றத்தில் நடைபெற் றது. கிறித்துவர்கள் தங்கள் சமய வழிபாட்டின் முக்கிய பகுதியாகிய



1923-ல் சர் பன்னீர்செல்வம் அவர்களுடைய மூத்த புதல்வியார்
மேரி ஸ்தனிஸ்லாஸ் அவர்களது திருமணத்தின்போது எடுக்கப்பட்டது.

Salvapuram
Kangalanjeri P.O.
Tanjore Dt.
16.2.40.

My Dear Edward Boy,

Thanks for your telegram & letter. I am glad to hear that both of you got to Yercaud safe. I expect you must have begun your studies in right earnest. You must now get yourself ready for the High School examination at the end of next year.

I have decided to fly over to England & I shall be catching a plane at Karachi either on 2nd or 3rd March. I shall be leaving home between 25th instant & leave Madras on 27th. Victoria will be going over here on Monday.

With love & kisses
Your ever affectionate daddy
A.T. Panneerselvam.

My Dear Albert Boy,

Thanks for your letter. I am glad to see that you are beginning your studies for the New year with the determination to come out first.

I hope you are getting your throat touched regularly & that you are also taking your medicine every day.

Your horse is getting on splendidly.

With love & kisses
Your ever affectionate daddy
A.T. Panneerselvam.

தமது இறுதி இலண்டன் பயணத்துக்கு முன் தம் மக்கள் எட்வர்ட், ஆல்பர்ட் இருவருக்கும் செல்வம் எழுதிய கடிதங்கள்.

திருப்பலி பூசையில் பயன்படுத்தும் பூசை இரசத்தைப் பெற அரசிடம் அனுமதி பெற்றுக் கொள்ளலாம்என்று அச்சட்டம் கூறியது. ஆனால் ஒவ்வொரு குருவும் அரசினரிடம் அனுமதி பெறுவதை விட ஒவ்வொரு மறைமாவட்ட ஆயருக்கும் அரசு அனுமதி அளிப்பதே சிறந்தது என்று செல்வம் வாதாடினார். சமயத் துறையில் ஒவ்வொரு மறைமாவட்டத் திலுமுள்ள ஆயருக்குக் கீழ் அம்மறைமாவட்டக் குருக்கள் பணிபுரிவ தால், பூசை இரசம் பெறுவதற்கும் அம்முறையையே பின்பற்றலாம் என விளக்கினார். சிறுபான்மையினராகிய கிறித்துவர்களின் உரிமைகளை மதித்துப் போற்ற அரசுக்கு இது ஓர் அருமையான வாய்ப்பு என்பதை அவர் எடுத்துரைத்தார். சமய வழிபாடுகளில் அரசு தலையிடுதல் முறையாகாது என்பதை அவர் பல எடுத்துக்காட்டுக்களின் மூலம் சுட்டிக் காட்டினார். செல்வத்தின் கருத்தைத் திவான்பகதூர் ஏ. அப்பாதுரைப் பிள்ளை சட்டமன்றத்தில் ஆதரித்துப் பேசினார். கிறித்து வர்களின் மனதைப் புண்படுத்தாத வகையில் இச்சட்டம் மாற்றி யமைக்கப்பட வேண்டும் என்று இருவரும் வலியுறுத்தினர்.

## அமைச்சரவையில் இடம்

இராஜாஜி அமைச்சரவை 15–4–1937 அன்று பொறுப்பேற்ற போது அதில் கிறித்துவர் யாரும் இடம் பெறாதது கண்டு கிறித்துவ சமுதாயம் ஏமாற்றம் அடைந்தது. கிறித்துவப் பத்திரிகைகள் இதைப்பற்றி எழுதியும் பயன் எதுவும் விளையவில்லை. ஓராண்டுக் காலம் காத்திருந்த பின் செல்வம் இப்பிரச்சினையைச் சட்ட மன்றத்தில் எழுப்பினார். முக்கியமான சிறுபான்மைச் சமூகங்களுக்கு அமைச்சரவையில் இயன்ற அளவு இடமளிக்கப்பட வேண்டும் என்று 1935–ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தில் கூறப்பட்டிருப்பதை எடுத்து விளக்கிய செல்வம், இசுலாமிய சமூகத்தைச் சார்ந்த யாக்கூப் ஹஸன் அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பதைப் போலக் கிறித்துவ சமூகத்தைச் சார்ந்த ஒருவருக்கு ஏன் இடமளிக்கவில்லை என்று வினவினார். எந்தச் சமூகத்துக்கும் தாம் எதிராக இல்லை என்று இராஜாஜி கூறினாலும் செல்வத்தின் வினாவுக்கு உரிய வகையில் விடையளிக்கவில்லை. எனினும் செல்வம் எழுப்பிய எதிர்ப்புக் குரல் ஓராண்டுக் காலத்துக்குப் பின் எதிர்பார்த்த பயனைத் தந்தது. மலபார் மாவட்டத்தைச் சார்ந்த சி.ஜே. வர்க்கி என்னும் கிறித்துவர் இராஜாஜி அமைச்சரவையில் இடம் பெற்றார். அதற்காக 18–7–1939 அன்று அவரைச் செல்வம் சட்ட மன்றத்தில் பாராட்டிப் பேசினார்.

## தவறைக் கண்டிக்கத் தவறவில்லை

1939–ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சில கிறித்துவர்கள் இந்து சமயத்தைத் தழுவினர். இதைக் கண்டு மகிழ்ந்த மாநில முதல்வர் இராஜாஜியும், நலவாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் டி.எஸ்.எஸ். இராஜனும் மதம் மாறியவர் களுக்கும், மத மாற்றத்துக்கு வழிவகுத்த ஹரிஜன் சேவா சங்கத்துக்கும் பாராட்டுத் தந்தி அனுப்பினர். சட்டமன்றத்தில் செல்வம் இதைக் கடுமையாகக் கண்டித்தார். சமய வேற்றுமையே பாராட்டுவதில்லை யென்றும், தங்கள் கட்சி எத்தகைய சமய வேற்றுமையுமில்லாமல் எல்லா இந்தியர்களுக்கும் பொதுவான பிரதிநிதி என்றும் சொல்லிக் கொள்கின்ற காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த இராஜாஜியும், இராஜனும்

இவ்வாறு செயல்பட்டது தவறு என்று செல்வம் சாடினார். தனி மனிதர்கள் தனித்தனிச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அரசு எச்சமயத்தையும் சார்ந்ததல்ல. எனவே அரசின் அமைச்சர்கள் இந்நிகழ்ச்சியைப் பாராட்டித் தந்தி அனுப்பியது அவர்கள் ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களே தவிர எல்லாச் சமயத்தார்க்கும் பொது வான பிரதிநிதிகள் அல்ல என்னும் கருத்தை உருவாக்கும் என்பதால் இது மாபெரும் தவறு என்று விளக்கினார் செல்வம். இராஜனும் இராஜாஜியும் இதுபற்றி எவ்வித விளக்கமும் வழங்காமல் மௌனம் காத்தனர்.

## ஆ. நீதிக்கட்சிப் பிரதிநிதி

செல்வம் தம் அரசியல் வாழ்வு முழுமையையும் நீதிக்கட்சி உறுப்பினராகவே செலவிட்டார். தமது பேச்சும் மூச்சும் நீதிக்கட்சி என்றே வாழ்ந்து உழைத்தவர் அவர். எனவே தான் 1934–ஆம் ஆண்டு தேர்தலில் கட்சி தோல்வியைத் தழுவிய துன்ப காலத்தில் பலர் கட்சியை விட்டு விலகினாலும், செல்வம் தம் கட்சிக் கொள்கையில் உறுதியாக நின்றார். இதனாலேயே கட்சித் தொண்டர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் அவர் உரியவராக விளங்கினார்.

இவ்வாறு கொள்கைப் பிடிப்புடையவராகத் திகழ்ந்த செல்வம் சட்டமன்றத்தில் நீதிக் கட்சியின் முக்கிய தலைவராகவும் பேச்சாளராக வும் திகழ்ந்ததில் வியப்பில்லை. எனினும் தம் கட்சியினரே தவறு செய் தால் அதைச் சுட்டிக்காட்டவும் அவர் தவறியதில்லை.

### பதவி நியமனங்களில் வகுப்புரிமை

மக்கள் இயல்பாகவே சுயநலப் போக்குடன் செயல்படுபவர்கள். ஆதலால் அரசின் பதவி நியமனங்களிலும் அத்தகைய சுயநலம் செயல் படுவது உறுதி. ஒரு சாதியை அல்லது சமயத்தைச் சார்ந்தவர் உயர் பதவியில் இருந்தால்,தமது செல்வாக்கைப் பயன்படுத்தித் தம் சாதியை அல்லது சமயத்தைச் சார்ந்தவர்களைப் பதவியில் நியமிக்க முயல்வது இயல்பானதாகும். இந்நிலை மாற வேண்டுமானால் பதவி நியமனங் களிலும் வகுப்புரிமை வழங்கப்படவேண்டுமென்பது நீதிக்கட்சியின் உறுதியான கொள்கை. செல்வமும் இத்தகைய வகுப்புரிமையே மக்க ளுக்குச் சமநீதி வழங்க வல்லது என்று உறுதியாக நம்பினார். ஒரு பதவிக்குத் தகுதியுள்ளவர்கள் பலர் இருக்கும்போது, எந்தச் சமூகத்தி னர்க்கு ஏற்கனவே பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லையோ அச் சமூகத்தைச் சார்ந்த ஒருவரையே பதவியில் நியமிக்க வேண்டும், இப் படிச் செய்தால்தான் எல்லாச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் வாய்ப் புப் பெற முடியும் என்று சட்ட மன்றத்தில் செல்வம் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் வாதாடினார். தாம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்த காலத்தில் பதவி நியமனங்களில் வகுப்புரி மையை அவர் மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடித்தவர். எனவே பதவி நியமனங்களில் வகுப்புரிமை என்பது நடைமுறைப்படுத்த இயலுவதே என்பதைத் தம் சொந்த அனுபவத்திலேயே அறிந்திருந்தார்.

தகுதியைப் பொறுத்தே ஒருவர் அரசு பதவியில் நியமிக்கப்பட வேண்டும் என்று நீதிக் கட்சியைச் சார்ந்த ஆர்.எம். பாலாட் ஒருமுறை

சட்டமன்றத்தில் வாதாடியபோது செல்வம் அவரது கருத்தை மறுத்துப் பேசினார். நீதிக் கட்சியை நிறுவிய சர் பி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகிய தலைவர்கள் வகுப்புரிமைப் பதவி நியமனங்களை ஆதரித்துப் பேசியதையும் செயல்பட்டதையும் அவர் விளக்கினார். அதோடு நின்றுவிடாமல் வகுப்புரிமைப் பதவி நியமனத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றையும் அவர் சட்ட மன்றத்தில் 1–2–1934 அன்று முன்மொழிந்து பேசினார். வகுப்புரிமை நியமனங்கள் அரசுப் பதவிகளுக்கு மட்டுமல்ல, மாவட்டக் கழகம் போன்ற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளுக்கும் உரியவையே என்று அவர் வலியுறுத்தினார். 1924–ஆம் ஆண்டிலேயே தஞ்சை மாவட்டக் கழகம் வகுப்புரிமைப் பதவி நியமனம்பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தை முன்னுதாரணமாக அவர் சுட்டிக் காட்டினார்.

## நீதிக்கட்சியும் இரட்டையாட்சி முறையும்

இரட்டையாட்சி முறையால் மக்களுக்குப் பயன் தரும் வகையில் பணியாற்றுவது இயலாத செயல் என்று சொல்லிக் கொண்டு காங்கிரசுக் கட்சி தேர்தல்களில் ஈடுபடவோ அமைச்சரவைப் பொறுப் பேற்கவோ முன்வராத காலத்திலேயே நீதிக் கட்சி தேர்தல்களில் கலந்து கொண்டு வெற்றி பெற்று அமைச்சரவை அமைத்துத் தொண்டாற்றியது. கொடுக்கப்பட்டிருந்த குறைந்த அளவு அதிகாரத்தைக் கொண்டே நீதிக்கட்சி சென்னை மாநில மக்களுக்குத் தொண்டாற்றியதைப் பற்றிச் செல்வம் பெருமையோடு அடிக்கடி எடுத்துச் சொல்வார். அதனால் பாராளுமன்றச் செயல்முறை சென்னை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும், பாராளுமன்ற உணர்வையும் பாரம்பரியத்தையும் அரசியல் தலைவர்களிடையே வளர்ப்பதற்கும் நீதிக்கட்சி ஆற்றிய தொண்டினைக் குறித்து அவர் மகிழ்ச்சியோடு பேசுவார். 1920–ஆம் ஆண்டில் நீதிக்கட்சி அமைச்சரவை பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஆற்றியுள்ள பணிகளை இன்னும் ஐம்பதாண்டுக் காலத்துக்குக் கூட வேறு எந்த அமைச்சரவையாலும் செய்ய இயலாது என்று சட்ட மன்றத்திலேயே 1–2–1938 அன்று அவர் துணிவோடு எடுத்துரைத்த போது, அன்று ஆட்சியிலிருந்த காங்கிரசுக் கட்சியினர் கூட அதை மறுத்துரைக்கவில்லை.

## வாக்குறுதிகளைக் காப்பாற்றாத அரசு

18–8–1938 அன்று சட்ட மன்றத்தில் பேசிய செல்வம் காங்கிரசுக் கட்சியைத் தாம் பாராட்ட விரும்பியதாகக் கூறியபோது காங்கிரசுக் கட்சியினரும் நீதிக்கட்சியினரும் மலைத்துப் போயினர். தொடர்ந்து செல்வம் 'தேர்தல் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாகக் காற்றில் பறக்க விடுவதில் காங்கிரசு அரசு கடைப்பிடிக்கும் ஒரு சீர்மையைத்' தாம் பாராட்டுவதாக விளக்கியபோது நீதிக்கட்சியினர் கையொலி எழுப்பி மகிழ்ந்தனர்.

## உந்துவண்டி வாங்குவதிலும் சாதிப் பற்றா?

காங்கிரசு அமைச்சரவை பொறுப்பேற்றதும் அமைச்சர்களுக்காக அரசால் உந்துவண்டிகள் வாங்கப்பட்டன. பிராமணர்களின் நிர்வாகத்திலிருந்த ஒரு கடையிலிருந்தே அவ்வுந்துவண்டிகள் அனைத்தும் வாங்கப்பட்டன. இவ்வாறு வண்டிகள் வாங்கியது

உண்மைதானா என்று ஓர் உறுப்பினர் சட்ட மன்றத்தில் வினா எழுப்பியபோது, "அரசுக்கு அதுபற்றித் தெரியாது" என்று விடையிறுக்கப்பட்டது. தெரியாவிட்டால் விசாரித்தறிந்து உண்மையை அறிவிப்பதற்குப் பதிலாக "தெரியாது" என்று பதிலிறுத்ததைச் செல்வம் சட்ட மன்றத்தில் கண்டித்துப் பேசினார். உறுப்பினர்கள் வினாத் தொடுக்கும்போது சரியான பதில் வழங்கப்படாமலிருப்பது முறையற்ற செயல் என்று சாடியதோடு அது வீணான வதந்திகள் எழுவதற்கும் பரவுவதற்கும் காரணமாகிவிடும் என்றும் எச்சரித்தார்.

அமைச்சர்களுக்கு உந்துவண்டிகள் தேவை என்பதை உணர்ந்த போது சில அதிகாரிகள் அவற்றை வாங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர் என்றும், இன்னாரிடமிருந்துதான் வண்டிகள் வாங்கப்பட வேண்டுமென்று தாமோ பிற அமைச்சர்களோ வலியுறுத்தவில்லை என்றும் இராஜாஜி பின்னர் விளக்கம் தந்தார். உறுப்பினர் கேட்ட போது எந்தக் கடையிலிருந்து வண்டிகள் வாங்கப்பட்டன என்னும் விவ ரம் தெரியாததாலேயே "அரசுக்கு அதுபற்றித் தெரியாது" என்னும் உண்மையான பதில் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## கதர் கூடக் கட்டாயமா?

கதர்க் கொள்கை காங்கிரசுக்கு உயிர்க் கொள்கையாகும். காங் கிரசு உறுப்பினர்கள் நாள்தோறும் நூல் நூற்கவேண்டுமென்பது கட் டாயமாக இருந்த காலம் அது. காங்கிரசு உறுப்பினர்களெல்லாம் கதர் அணிவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர்.

முதல்வர் இராஜாஜி மாநில அரசின் அன்றையத் தலைமைச் செயலாளராக இருந்த ப்ராக்கன்பரிக்குக் கதர்த்துணி அன்பளிப்பாக வழங்கியதாகவும் அதைத் தலைமைச் செயலாளர் ஆடையாகத் தைத்து அணிந்ததாகவும் நாளிதழ்களில் செய்தி வந்தபோது அது தவறான போக்காகும் என்று சட்டமன்றத்தில் கண்டித்தார் செல்வம். ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் கட்சியினர் நிர்வாகத் துறையில் இருப்போர்மீது தங்கள் கொள்கைகளைத் திணிப்பது மிகப் பெரிய தவறு என்று விவர மாக எடுத்துரைத்தார். இப்படி அரசின் தவறுகளைச் செல்வம் கண்டித்துப் பேசும் வேளைகளிலெல்லாம் இராஜாஜியும் சரி, பிற அமைச்சர்களும் சரி பதிலிறுக்காமல் மௌனம் காத்தலே வழக்கமாக இருந்தது. ஏனெனில் உண்மையென்று தெரிந்தால் தவிரச் செல்வம் எத்தகைய குற்றசாட்டையும் எழுப்ப மாட்டார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

## விரிவான விவாதம் தேவை

சட்ட முன்வரைவுகள் பற்றிப் படிக்கவும், அவற்றை ஆராயவும், விவாதத்துக்குத் தங்களையே தயார் செய்துகொள்ளவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதிய அவகாசம் தேவை என்பதைச் செல்வம் அடிக்கடி எடுத்துரைப்பார். காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் பெரும் பான்மையினராக இருந்ததால் அவர்களைக் கொண்டு சட்டங்களை நிறைவேற்றி விடலாம் என்னும் எண்ணத்துடன் தேவையான கால அவ காசம் கொடுக்காமல் விரைந்து செயல்படுவது தவறு என்பதை அவர் விளக்குவார். சட்டத்தின் குறுகிய எல்லைகளைக் கடைப்பிடிப்பதைக்

குறிக்கோளாகக் கொள்ளாமல், சட்ட மன்ற உறுப்பினருக்குத் தயாரிப்புக்குரிய நேரம் வழங்குவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று அவர் அரசிடம் வலியுறுத்தி வந்தார். அவசரம் அவசரமாக விவாதங்களை நடத்தினால் சட்ட முன்வரைவுகளின் குறைகளைக் கண்டுணர்ந்து தவிர்க்க வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பது அவரது வாதம்.

## அமைச்சரின் சான்றிதழ்

இந்திய மாநிலங்களிலேயே சென்னை மாநிலத்தில்தான் சுகாதாரத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் டாக்டர் டி.எஸ்.எஸ். இராஜன் ஒருமுறை சட்டமன்றத்தில் எடுத்துரைத்தார். அக்கருத்தை ஆதரித்துப் பேசிய செல்வம் அதற்குக் காரணம் 1920–ஆம் ஆண்டு முதல் நீதிக்கட்சி அரசுகள் அத்துறையில் ஆற்றிய சிறப்பான பணிகளே என்று வாதிட்டபோது அமைச்சர் இராஜனும் அதை மறுத்துரைக்கவில்லை. ஒரு மாநிலத்தின் சுகாதாரத் துறை ஓரிரு ஆண்டுகளுக்குள் முன்னேற்றமடைய முடியாது, ஆதலால் தமக்கு முன்னர் பொறுப்பேற்றிருந்த நீதிக்கட்சி அமைச்சர்களின் சிறப்பான பணியை அமைச்சர் இராஜன் பாராட்டியதாகவே செல்வம் பொருள் கொண்டார். சென்னை மாநிலத்தின் சுகாதாரத் துறை காலத்துக்கேற்ற வளர்ச்சியுற்றிருப்பதாக அமைச்சர் இராஜன் கூறியதை நீதிக்கட்சிக்குச் சாதகமான வாதமாக அவர் மாற்றிக் கொண்டார்.

## ஆலய நுழைவுச் சட்டம்

மலபார் மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் எல்லோரும் நுழைய இடமளிக்கும் வகையில் ஒரு சட்டத்தை இராஜாஜி அமைச்சரவை நிறைவேற்ற முனைந்தபோது செல்வம் அதை எதிர்த்தார். ஆலயங்களில் எல்லோரும் நுழையக் கூடாது என்பதல்ல செல்வத்தின் வாதம். ஆனால் தொலைவிலுள்ள மலபார் மாவட்டத்தில் அதைச் செயல்படுத்த முனையாமல், இராஜாஜி ஆசிரமம் அமைத்துத் தொண்டு செய்த திருச்செங்கோட்டில் அதை நடைமுறைப்படுத்தினால் எதிர்ப்புக் குறைவாக இருக்கும் என்றே அவர் வாதாடினார். திருச்செங்கோட்டு ஆசிரமத்தில் இராஜாஜி தொண்டாற்றியபோது அவ்வாசிரமம் மேற்கொண்ட சமூக நிர்மாணப் பணிகளின் காரணமாக அப்பகுதி மக்கள் இச்சட்டத்தை எளிதாக ஏற்றுக் கொள்வார்களே என்று செல்வம் எடுத்துரைத்தார். அதோடு இராஜாஜி அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் திருச்செங்கோட்டைச் சார்ந்தவர், அத்தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இடம் பெற்றிருந்தவர். எனவே முதல்வரோடும், கல்வி அமைச்சரோடும் தொடர்பு கொண்ட திருச்செங்கோட்டுப் பகுதியில் ஆலய நுழைவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதே பொருத்தமாக இருக்கும் என்று காங்கிரசாருக்கு விளக்கினார் செல்வம்.

## காந்தியடிகள் ஆணை பிறப்பிக்கலாமா?

காங்கிரசு அமைச்சரவை காந்தியடிகளின் விருப்பத்தையும் கருத்துக்களையும் மட்டுமே செயல்படுத்த முனைவது தவறு என்று அடிக்கடி சட்டமன்றத்திலும் வெளியிலும் செல்வம் எடுத்துரைத்தார். ஒருமுறை இக்கருத்தை வலியுறுத்திப் பேசிய அப்துல் இரகுமான் கானை மறுத்து

முதல்வர் இராஜாஜி உரையாற்றினார். இரகுமான் கான் பொறுப்பற்ற முறையில் பேசியதாகக் கண்டித்தார். அப்போது செல்வம் எழுந்து இவ்வாறு இரகுமான் கான் கூறியதற்கு அடிப்படையாக அமைந்தது அமைச்சர்களின் பேச்சுக்களே என்று வாதிட்டார். புதிதாக அமைச்சர் பொறுப்பேற்றிருந்த சி.ஜே. வர்க்கி பாலக்காட்டில் விக்டோரியா கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, கல்லூரியில் அறிவியல் துறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் அறிவியல் துறைகள் ஆரம்பிக்கப்படுவதை ஆதரித்துப் பேசிய வர்க்கி, "ஆனால் அரசுப் பணத்தைக் கல்லூரிக் கல்விக்குச் செலவிடுவதைக் காந்தியடிகள் எதிர்க்கிறார். எனவே உங்களுக்கு வாக்குறுதி வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன். வேண்டுமானால் ஒன்று செய்வோம். பாலக்காடு விக்டோரியா கல்லூரிக்குப் பணம் செலவிடுவதற்குக் காந்தியடிகளை இசையச் செய்ய முயற்சி செய்வோம்" என்று கூறினார். இந்நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டிப் பேசிய செல்வம், "உங்கள் அமைச்சரே இப்படிக் கூறியிருக்கும் போது அப்துல் இரகுமான் கான் கூறியது எப்படித் தவறாகும்?" என்று வினவினார். "நீங்கள் மக்களின் நன்மைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. உங்கள் கட்சியின் மேலிடம் என்ன சொல்கிறதோ அதையே பெரிதாகக் கருதுகிறீர்கள். மேலிடத்தின் அதிகாரமோ காந்தியடிகள் என்னும் ஒரு தனிமனிதரிடம் இருக்கின்றது. அவரோ இந்த மாநிலத்தைச் சேர்ந்தவரல்லர். ஆனால் அவரது ஆணைகளையே ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அவ்வாறே செயல்படுங்கள்" என்று சொல்லி நிறுத்தினார். காங்கிரசுக் கட்சியினரும் நீதிக்கட்சியினரும் அடுத்துச் செல்வம் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். "அப்படிக் காந்தியடிகளின் ஆணைகளையே நீங்கள் ஏற்றுச் செயல்பட விரும்பினால், இதை மக்கள் அரசு என்று அழைக்காமல் வேறு பெயரிட்டு அழைப்பதே பொருத்தமாக இருக்கும்" என்று செல்வம் முடித்தபோது காங்கிரசு உறுப்பினர்கள் வாய் திறக்கவில்லை.

## பெரியாரும் மகாத்மாவும்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட பெரியாரைப் பற்றிச் சட்டமன்றத்தில் செல்வம் ஒரு முறை பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு காங்கிரசு உறுப்பினர் குறுக்கிட்டு, "பெரியார் என்றால் என்ன பொருள்?" என்று கேட்டார். செல்வம் சற்றும் தயங்காமல் "பெரியார் என்றால் மகாத்மா என்று பொருள்" என்று பதிலிறுத்தார். பெரியாரின் ஊராகிய ஈரோட்டுக்குச் செல்வம் அவ்வப்போது சென்றுவருவதை ஓர் உறுப்பினர் சுட்டிக் காட்டியபோது, "காந்தியடிகள் வாழும் வார்தா உங்களுக்குப் புனிதமான இடமாக இருப்பதைப் போலப் பெரியார் வாழும் ஈரோடு எங்களுக்குப் புனிதமான இடம்" என்று கூறி அவ்வுறுப்பினரை வாளாவிருக்கச் செய்தார்.

# இ. தஞ்சை மாவட்டப் பிரதிநிதி

தஞ்சை மாவட்டத்தின் மீது தனிப்பற்றுதல் கொண்டிருந்தார் செல்வம். மாவட்டக் கழகத் தலைவராகவும் மாவட்டக் கல்விக் குழுவின் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த அனுபவத்தால் தஞ்சை மாவட்டம் முழுமையையும் சுற்றிக் காணும் வாய்ப்பு



இலண்டனுக்குச் செல்லுமுன் 1940 பெப்ருவரியில் - தம் குடும்பத்தினருடன் - செல்வம்



தம் இல்லப் பணியாளர்களுடனும் பண்ணை மேற்பார்வையாளர்களுடனும் செல்வம் (1940 பெப்ருவரி)

அவருக்குக் கிடைத்தது. எனவே தஞ்சை மாவட்டத்தின் பிரச்சினைகளை நன்றாக அறிந்திருந்தார். ஆகவே சட்டமன்றத்தில் தஞ்சை மாவட்டத்தின் உண்மையான பிரதிநிதியாக அவர் விளங்கியதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

## மேட்டூர் அணையும், மிகையான வரியும்

1933–ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் மேட்டூர் அணைத் திட்டத்துக்காக ரூபாய் 34,26,900 ஒதுக்கப்பட வேண்டும் என்னும் வரவு செலவுத் திட்டம் விவாதத்துக்கு வந்தபோது அதில் பங்கேற்றுப் பேசினார் செல்வம். மேட்டூர்த் திட்டத்தால் பயன்பெறும் தஞ்சை மாவட்ட நிலக்கிழார்கள் ஏக்கருக்குப் பதினைந்து ரூபாய் தண்ணீர் வரியாகக் கட்ட வேண்டும் என அரசு விதிப்பது சரியல்ல என்று வாதாடினார். இவ்வளவு மிகுதியான தொகையை (ஒரு மூட்டை நெல் மூன்றரை ரூபாயாக விற்ற காலம் அது. எனவே இன்றைய நிலையில் பார்க்கும்போது அன்றைய பதினைந்து ரூபாய் இன்று அறுநூற்றைம்பது ரூபாய்க்குச் சமமாகும்) வரியாகச் செலுத்தினால் மேட்டூர்த் திட்டத்தைத் தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு தண்டனையாகவே கருதத் தொடங்கி விடுவார்கள் என்று அவர் எச்சரித்தார். நீதிக் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த சமயம் அது. ஆயினும் தஞ்சை மாவட்டத்துக்காகத் தம் கட்சியினரையே எதிர்த்து வாதாடவும் செல்வம் தயங்கவில்லை.

## உலகிலேயே அதிக வரி !

உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் விவசாய வரி அதிகம் என்பதை ஒருமுறை சட்டமன்றத்தில் எடுத்துக் காட்டிய செல்வம், இந்தியாவிலேயே சென்னை மாநிலத்திலேயே விவசாய வரி அதிகமாக விதிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக் காட்டினார். சென்னை மாநிலத்தில் தஞ்சை மாவட்டமே அதிக விவசாய வரி செலுத்துகிறது என்பதை அவர் அரசு ஆவணங்களிலிருந்தே நிறுவினார். தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்செய் நிலங்களில் ஏக்கருக்கு ஏழு ரூபாய் நான்கு அணா விவசாய வரியாக இருப்பதையும் அதற்கு அடுத்தபடியாக மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் ஏக்கருக்கு ஐந்து ரூபாய் ஏழணா விவசாய வரியாக இருப்பதையும் எடுத்துக் கூறி, "எனவே உலகிலேயே தஞ்சை மாவட்டம் தான் மிக அதிகமாக விவசாய வரி செலுத்துகிறது" என்பதனை ஆணித்தரமாக நிறுவிக் காட்டினார். ஒரு மூட்டை நெல் மூன்று ரூபாய் முப்பது பைசாவாக விற்ற அக்காலத்தில் (1938) இந்த வரி விகிதம் அதிகப்படியானது என்பதை அவர் சட்டமன்றத்தில் தெளிவாக எடுத்துரைத்தார்.

## வடிகால் வசதிகளில்லை

உலகிலேயே மிக அதிகமான விவசாய வரியைச் செலுத்தி வந்த தஞ்சை மாவட்டத்தில் சரியான வடிகால் வசதிகளில்லை என்பதைச் செல்வம் சட்டமன்றத்தில் அடிக்கடி எடுத்துரைத்தார். வடிகால் வசதிகளில்லாத காரணத்தால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனுபவிக்கும் துன்பத்தை இந்தியத் தலைமை ஆளுநருக்குச் சென்னை ஆளுநர் 1903–ஆம் ஆண்டிலேயே தெரிவித்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றதை விளக்க 17–3–1938 அன்று சட்டமன்றத்தில் வாதாடிய

செல்வம், முப்பத்தைந்தாண்டுகளுக்குப்பின்னும் தஞ்சை மாவட்டம் இத்துறையில் எத்தகைய தீர்வையும் காணாமல் துன்புறுவதை எடுத்தோதினார். மழைக்காலத்தின்போது சீர்காழி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி வட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதையும், அதனால் விவசாயம் பாதிக்கப்படுவதையும் ஆதாரங்களுடன் எடுத்து விளக்கித் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்துக்குத் தேவையான வசதிகளை அரசு செய்தால்தான் அம்மாவட்டம் மாநிலத்துக்குத் தேவையான நெல்லை உற்பத்தி செய்ய முடியும் என்று வாதிட்டார். வெள்ளத்தைத் தடுக்கும் வகையில் திருச்சி தஞ்சை மாவட்டங்களில் சிறிய அணைகள் கட்டப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் சட்டமன்றத்தில் வலியுறுத்தினார்.

1900–1910 ஆகிய பத்தாண்டுகளில் தஞ்சை மாவட்டம் தண்ணீர்ப் பற்றாக்குறை அல்லது வெள்ளத்தின் காரணமாக 6,46,99,769 ரூபாய் இழப்புக்கு ஆளாகியிருப்பதாக ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியார் தலைமையிலமைந்த காவிரி ஆணைக்குழு எடுத்துரைத்திருப்பதைச் சட்டமன்றத்துக்குச் செல்வம் நினைவூட்டினார். போதுமான நீர்ப் பாசன வசதிகளையும் வடிகால் வசதிகளையும் அரசு செய்து கொடுக்காததே இவ்விழப்புக்குக் காரணம் என்று அவ்வாணைக்குழு சுட்டிக் காட்டியதையும் செல்வம் விளக்கினார்.

தஞ்சை மாவட்டத்துக்குத் தேவையான நீர்ப்பாசன, வடிகால் வசதிகளை அரசு செய்து கொடுத்தால் தஞ்சை மாவட்டத்திலிருந்து மாநிலம் அதிக வருமானத்தைப் பெற முடியும் என்பதையும் அரசுக்கு நினைவூட்டினார் அவர்.

## மேட்டூர் அணையால் இழப்பு

அரசுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் தஞ்சை விவசாயிகளின் நன்மையைக் கருதி மேட்டூர் அணையைக் கட்டியெழுப்பியதால் அரசு தன் கடமையைத்தான் செய்திருக்கிறதே தவிர அதிகப்படியாக எதையும் செய்து விடவில்லை என்று சட்டமன்றத்தில் செல்வம் எடுத்துக்கூறினார். எனவே மேட்டூர் அணையைக் கட்டியெழுப்பிய செலவுகளைக் காரணமாகக் காட்டித் தஞ்சை மாவட்ட விவசாயிகளிடமிருந்து அதற்காகத் தனிவரி வசூலிப்பது அநியாயமானது என்று கண்டித்தார்.

மேட்டூர் நீர்த் தேக்கத்துக்காகத் தஞ்சை மாவட்டம் செலுத்தும் வரியினால் ஏற்படும் பொருள் இழப்பை மட்டுமல்ல, காவிரியாறு வண்டல் மண்ணைக் கொண்டு வந்து தஞ்சை மாவட்ட நிலங்களை செழுமைப்படுத்திய நிலை குறைந்துவிட்டதையும் செல்வம் சட்டமன்றத்தில் எடுத்துரைத்தார். எனவே மேட்டூர் அணையைக் காரணமாகக் காட்டித் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தண்ணீர் வரி விதிக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்று அவர் வாதாடினார்.

நீதிக்கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் இவ்வரிவிதிப்பை நிறுத்த முயன்றும் தோற்று விட்டதை நிதி அமைச்சர் டி. பிரகாசம் செல்வத்துக்குச் சுட்டிக்காட்டினார். "அன்று இரட்டையாட்சி முறையின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்துக்கு நன்மை செய்ய எங்களால் இயலாமல் போய்விட்டது. ஆனால் இன்று இரட்டையாட்சி முறை மறைந்து

போய் மக்களாட்சி முறையில் சட்டமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவை பொறுப்பிலிருப்பதால் தஞ்சை மாவட்டதுக்கு நன்மை செய்ய அரசால் முடியும்" என்று செல்வம் வாதிட்டார். நீதிக்கட்சியினர் முயன்றும் முடியாமற் போனதைச் செல்வம் தம் உரையில் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் அமைச்சர் பிரகாசம் அதைக் குறிப்பிட்டதால் அக்குறிப்பையும் தம் கருத்துக்கு ஆதரவாக்கித் தம் நாவன்மையைக் காட்டினார்.

## ஈ. தமிழினத்தின் பிரதிநிதி

செல்வம் நீதிக்கட்சித் தலைவராகச் சட்டமன்றத்தில் விளங்கினாலும் அவர் தமிழினத்தின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் பணியாற்றினார் என்பது முற்றிலும் பொருந்தும். அன்றைய சென்னை மாநிலம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், கொங்கணி ஆகிய பல மொழிகளைப் பேசுவோரைக் கொண்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் தமிழரின் உரிமைகளுக்கு ஊறு நேராத வகையிலும், தமிழருக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை அவர்கள் இழந்துவிடாத வகையிலும் அவர் தொண்டாற்றி வந்தார். செல்வம் தாம் திராவிட இனத்தைச் சார்ந்தவர் என்று பெருமைப்பட்டுக் கொண்டாலும், திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த பிற இனங்களால் தமிழரின் உரிமைகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் அதிகக் கவனம் செலுத்தி வந்தார். அரசின் பல்வேறு துறைகளிலும் மலையாளிகளும் தெலுங்கருமே அதிகமாக இருந்ததை அவர் சுட்டிக்காட்டித் தமிழருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வலியுறுத்தி வந்தார்.

### ஆதி திராவிடருக்கு முன்னுரிமை

வகுப்புரிமையென்பது சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்துக்கள், முகமதியர், கிறித்துவர்கள் என்று சமய அடிப்படையிலும், பின் சாதி அடிப்படையிலும் அமைய வேண்டும் என்று செல்வம் கூறுவார். அதோடு ஆதிதிராவிடருக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு அவர்கள் சமுதாயத்தில் உயர்வு பெற வகைசெய்ய வேண்டும் என்றும் அவர் வாதாடுவார். சென்னை மாநிலத்தில் சாதிப் பிரிவினைகளால் இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துரைத்த அவர், சாதிகள் அழிந்தொழியும் வரையில் சாதி அடிப்படையிலும் வகுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். மாநில அரசில் இணைச் செயலாளர், துணைச் செயலாளர் அளவில் கூட ஆதி திராவிடர்கள் இடம் பெறவில்லையென்று சிதம்பரம் சுவாமி ஏ.எஸ். சகஜானந்தம் சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டியபோது செல்வம் அவரது கருத்தை ஆதரித்து அக்குறையைக் களைய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று வாதாடினார். ஆதி திராவிடர்களின் நலனுக்காகச் செல்வம் உழைத்து வருவதை உணர்ந்த எம்.சி.இராஜா, ஆர். சீனிவாசன் போன்ற ஆதி திராவிட சமுதாயத் தலைவர்கள் செல்வத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றி வந்தனர்.

ஆளுநரின் நிர்வாகக் குழுவில் செல்வம் உள்துறை உறுப்பினராக இருந்தபோது தமது துறையில், குறிப்பாகக் காவல் துறையில் ஆதி திராவிடர்களை அதிகமாகச் சேர்க்குமாறு ஆணை பிறப்பித்தார்.

மற்றச் சமூகத்தார் மாநிலத்தில் அனுபவிக்கும் உரிமைகளை ஆதி திரா விட சமூகத்தாரும் பெறச் செல்வம் பெரிதும் உதவி வந்தார்.

## பெயர் மாறி என்ன பயன்?

ஆதி-திராவிட மக்களை 'ஹரிஜன்' (கடவுளின் மக்கள்) என்னும் பெயரால் அழைக்க வேண்டும் என்று காந்தியடிகள் வற்புறுத்தியபோது அது சரியல்ல என்று சாடினார் செல்வம். ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி செய்யாமல் பெயரை மட்டும் மாற்றி என்ன பயன் என்று அவர் வினவினார். ஆண்டாண்டுக் கால மாக அழைக்கப்பட்டது போல 'ஆதி திராவிடர்கள்' என்று அவர்கள் அழைக்கப்பட்டாலும் பரவாயில்லை, ஆனால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசும் உள்ளாட்சி அமைப்புகளும் முயல வேண்டும் என்று வலியுறுத்தினார். செல்வம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவ ராக இருந்தபோது வடக்குத் தஞ்சையில் ஆதி திராவிட மாணவர் விடுதி அமைத்து அவர்கள் கல்வியில் முன்னேற உதவியது இங்கு நினைவு கூரத்தக்கது. ஆதி திராவிடரின் நலனைப்பற்றிப் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவர்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர் செல்வம். தாம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக் இருந்தபோது வட்டாட்சிக் கழகங்களில் பல ஆதி திராவிடர்களை உறுப்பினராக நியமித்திருக்கிறார். வகுப்புரிமையில் நம்பிக்கை கொண்ட நீதிக் கட்சி யின் உழைப்பால் ஆதி திராவிடர்கள் பலர் நலம் பெற்றனர். சட்ட மன்றத்திலும் மாவட்ட, வட்டாட்சிக் கழகங்களிலும் பல ஆதி திராவி டர்கள் உறுப்பினர்களாகி, ஆதி திராவிட சமூகத்தினருக்காக வாதாட வும் உரிமைகளைப் பெறவும் நீதிக்கட்சி வழிவகுத்தது. செல்வம் உள் துறை உறுப்பினராகப் பணியாற்றியபோது ஆதி திராவிட மாணவ விடுதிகளை மாநிலமெங்கும் ஏற்படுத்தவும் அவ்விடுதிகளுக்குப் போது மான நிதி ஒதுக்கப்படவும் வகை செய்தார். ஆதி திராவிடர் இந்து சமயத்திலிருந்து கிறித்துவ சமயத்துக்கு மாறி விடுவதால் மட்டுமே அவர்களது சமூக நிலையோ பொருளாதார நிலையோ உயர்ந்து விடுவ தில்லை என்று அடிக்கடி விளக்கிப் பேசிய செல்வம், ஆதி திராவிடர் களுக்கு வழங்கப்படும் சலுகை சமய வேறுபாடில்லாமல் எல்லா ஆதி திராவிடர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்.

## சேலம் நகராட்சிப் பிரச்சினை

சேலம் நகராட்சியில் தண்ணீர்க்குழாய்த் திட்டத்துக்காகக் குழாய் கள் வழங்குவதில் காங்கிரசு அரசு தேவையின்றித் தலையிட்டதைச் சட்ட மன்றத்தில் செல்வம் கண்டித்துப் பேசினார். இது தொடர்பாகப் பல்வேறு தந்திச் செய்திகளை அரசு அனுப்பி, அரசாணைகளும் பிறப் பித்துச் சேலம் நகராட்சியைக் குழப்பத்திலாழ்த்தியது மாபெரும் தவறு என்று அவர் சுட்டிக்காட்டினார். இது சேலம் நகராட்சியினரின் பிரச்சினை என்றாலும் அரசின் தவறான தலையீட்டைக் கண்டித்து இத்தகைய செயல்கள் உள்ளாட்சித் துறை அமைப்புக்களைக் குலைக்க வழி செய்யுமென்பதை விரிவாக எடுத்துரைத்தார்.

## நீதித் துறை வேறு, நிர்வாகம் வேறு

1937–ஆம் ஆண்டு புதிய சீர்திருத்த முறையில் தேர்தல் நடை பெற்றது. தேர்தல் பிரசாரத்தின் போது தாங்கள் ஆட்சிக்கு வந்தால்

நீதித் துறையையும், அரசு நிர்வாகத்தையும் பிரித்து விடுவதாகக் காங் கிரசுக் கட்சி வாக்குறுதி வழங்கியது. அரசு நிர்வாக அதிகாரிகள் நீதித் துறை நிர்வாகிகளாகவும் இருந்ததால் எழுந்த குழப்பங்கள் இனி எழாத வகையில் இச்சீர்திருத்தம் அமையும் என்று காங்கிரசு விளக்கியது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னரோ நீதித் துறையையும் நிர்வாகத் துறையையும் பிரித்தமைக்கும் முயற்சிகளில் காங்கிரசு அரசு ஈடுபடவே இல்லை. இதனைச் செல்வம் சட்டமன்றத்தில் அடிக்கடி கண்டித்துப் பேசினார். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாதது மட்டுமல்ல, கட்சி அரசுகள் நீதித் துறையைப் பயன்படுத்தி மாற்றுக் கட்சியினரைப் பழி வாங்குவதற்கும் இது இடம் கொடுக்கும் என்பதாலேயே செல்வம் இதைக் கடுமையாகச் சாடினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது இத்தகைய பழிவாங்கும் முயற்சிகள் பல இடம் பெற்றதைச் செல்வம் எடுத்துக்காட்டித் தம் கருத்தினை விளக்கினார். எனவே மாநிலத்தில் அமைதியும் நீதியும் நிலவ வேண்டுமானால் நீதித் துறையை அரசு நிர்வாகத்திலிருந்து பிரித்துத் தனித் துறையாக அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து அவர் வாதாடினார்.

## உள்ளாட்சித் துறையின் இன்றியமையாமை

மாநிலத்தில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் செல்வம். தஞ்சை நகராட்சியிலும் மாவட்டக் கழகத்திலும் மாவட்டக் கல்விக் கழகத்திலும் தாம் தலை வராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் ஆங்காங்குள்ள மக்கள் தங்க ளுக்குரிய நன்மைகளைப் பெற இம்முறை உதவுவதை அனுபவத்தில் உணர்ந்திருந்தார். மாநில அரசின் நேரடித் தலையீடு இல்லாமலே உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கு நன்மை செய்ய இயலுமாதலால், அரசு அவ்வமைப்புக்களின் சுதந்திரத்துக்கு ஊறு விளைக்காமலிருத்தல் வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

ஆனால் அன்றைய (1937–39) காங்கிரசு அரசு உள்ளாட்சி அமைப் புக்களின் உரிமைகளைக் குறைக்கும் வகையில் பல சட்டங்களைத் தீட்டியது. பல உள்ளாட்சி அமைப்புக்கள் சரியாகச் செயல்படாததா லேயே அரசு இத்தகைய முயற்சிகளை மேற்கொள்கிறது என்று அமைச் சர்கள் விளக்கங்கள் வழங்கினர். ஆங்காங்கு நடைபெறும் தவறுகளை மிகக் கண்டிப்பான முறையில் திருத்தி, உள்ளாட்சி அமைப்புக்களை இன்னும் சிறப்பான முறையில் இயங்கச் செய்ய வேண்டும், அதுவே மக்களைச் சுயாட்சிக்குத் தயாரிக்கச் சிறந்த முறையாகும் என்று செல் வம் எடுத்துரைத்தார். உள்ளாட்சி அமைப்புக்களே அதிகார அமைப் பின் உயிர் என்று செல்வம் உறுதியாக நம்பினார்.

## வரி விதித்தலிலும் நியாயம்

வரிகள் விதிக்கப்படும்போது அவை ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் விதிக்கப்பட வேண்டுமென்று அடிக்கடி சட்டமன்றத்தில் வாதிட்டார் செல்வம். இலாபத்தை அதிகமாகப் பெறுபவர்களே அதிக மாக வரி செலுத்தும் வகையில் வரித் திட்டம் அமைய வேண்டும். உதாரணமாக, புகையிலையின் மீது வரி விதிக்கப்பட்டால் அது செல் வர்கள் பயன்படுத்தும் சிகரெட், சுருட்டு ஆகியவற்றின் மீதுதான்

விதிக்கப்பட வேண்டும். ஏழைகள் பயன்படுத்தும் பீடி, புகையிலைத் தூள் ஆகியவற்றின் மீது வரி விதிக்கப்படக் கூடாது. எனவே புகையிலையின் மீது ஒட்டு மொத்தமாக வரி விதிக்காமல் செல்வர்கள் பயன்படுத்தும் புகையிலை வகைகள் மீது மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டுமென்று தக்க எடுத்துக்காட்டுடன் வாதாடினார் செல்வம். ஏற்கனவே போதிய வருமானமின்றி வாடும் ஏழைகளைப் புதிய வரித் திட்டங்கள் நசுக்கக் கூடாது என்பதுதான் செல்வத்தின் வாதம்.

## உ. சட்டமன்றத்தில் இந்தி எதிர்ப்பு

1937–ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற காங்கிரசு அமைச்சரவை இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கிற்று. இது திராவிட மக்களை ஆரியருக்கு அடிமைகளாக்கும் சூழ்ச்சித் திட்டமே என்று நீதிக்கட்சித் தலைவர்கள் நினைத்தனர். எனவே இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடினர். நீதிக் கட்சி அதிகார பூர்வமாக எத்தகைய முடிவுக்கும் வருவதற்கு முன்பாகவே செல்வம் போன்ற நீதிக்கட்சி உறுப்பினர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சோமசுந்தர பாரதியார் இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். கட்சி வேறுபாடு இல்லாமல் தமிழர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகராகிய சென்னையிலும் தமிழகமெங்கணும் இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல்களும் மாநாடுகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. நாள்தோறும் பலர் கைது செய்யப்பட்டனர். சட்ட மன்றத்தில் செல்வம் ஒவ்வொரு நாளும் இந்தித் திணிப்புப் பற்றி அந்நாட்களில் பேசி வந்தார். ஒருமுறை செல்வம் இந்திப் பிரச்சினைபற்றி மிகுந்த ஆவேசத்தோடு பேசுவதைக் கண்டு அன்றைய வருவாய்த்துறை அமைச்சரான டி.பிரகாசம் "செல்வம் ஆவேசமாக மேசையில் ஓங்கியறைந்து கொண்டு உரையாற்றும் போது சட்டமன்றக் கட்டடமே அதிரத் தொடங்கி விடுகிறது" என்று குறிப்பிட்டார்.

### ஆரிய–திராவிடப் பாகுபாடு

இந்தி மொழியை யாரும் விரும்பிக் கற்கக் கூடாது என்று செல்வம் சொன்னதில்லை. இந்திப் பிரச்சார சபை சென்னை மாநிலத்தில் பணியாற்றி வந்ததை அவர் அறிவார். அதை அவர் ஒருபோதும் எதிர்த்ததில்லை. ஆனால் இந்தி கட்டாயமாக்கப்படும்போது அது ஆரிய மொழியைத் திராவிடர் மீது திணித்து அதன்மூலம் திராவிட நாகரிகத்தை அழிக்கும் சதித்திட்டமே என்று செல்வம் நம்பினார். அதனாலேயே இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தார். பிராமணரல்லாதாரின் நன்மையைக் கருதியே தாம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதாக முதல்வர் இராஜாஜி கூறினார். பிராமணரல்லாதாரே இந்தியை எதிர்க்கும்போது திணிப்புத் திட்டத்தை ஏன் தொடர்கிறீர்கள்? என்று செல்வம் வினவினார். இந்தி எதிர்ப்பு பிராமணரல்லாத மக்களின் உண்மையான உணர்வின் வெளிப்பாடு என்று அன்றைய கல்வி அமைச்சர் டாக்டர் பி. சுப்பராயன் கூறியதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாதாடினார் செல்வம். மக்களின் உணர்வை மதிக்காமல் நடந்தால் அதற்குரிய பயனை அனுபவிக்க வேண்டிய காலம் வரும் என்று எச்சரித்தார்.

மாணவர்கள் பயில வேண்டிய மொழி எது என்று தீர்மானிப்பது அரசின் உரிமை என்று வருவாய்த் துறை அமைச்சர் டி. பிரகாசம் வாதாடியதைச் செல்வம் ஏற்க மறுத்தார். மக்களின் மனஉணர்வுகளை மதித்துப் போற்றும் வகையிலேயே அரசின் சட்டங்கள் அமைய வேண்டும் என்று வாதாடினார். இந்தித் திணிப்பை எதிர்த்துப் பலர் சிறை செல்லத் துணிந்துள்ளதைக் கண்ட பின்னும் தொடர்ந்து இந்தியைத் திணிப்பது அரசின் நோக்கத்தின்மீது ஐயம் கொள்ளச் செய்கிறது என்று அவர் விளக்கினார். இந்தியை மெல்ல மெல்ல மாநிலத்தில் திணித்து நுழைத்துத் திராவிடர்களை ஆரியர்க்கு அடிமையாக்கும் திட்டமே இது என்று விவரித்தார். "திராவிட நாகரிகமும் மொழிகளும் வளமும் தொன்மைச் சிறப்பும் இலக்கிய நயங்களும் பொருந்தியனவாக இருக்கும் நிலையில், வளங்குன்றியதும் தொன்மைச் சிறப்பற்றதுமாகிய இந்தி மொழியைப் பயிலுமாறு நாங்கள் ஏன் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்?" என்று அவர் சட்டமன்றத்தில் வினவினார்.

## நிதியை வீணாக்கலாமா?

1939–ஆம் ஆண்டு பெப்ருவரி திங்களில் சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த முதல்வர் பஞ்சம், பருவக்காற்றுப் பொய்த்தல், எதிர்பாராத வெள்ளம், புயல்காற்று ஆகியவற்றால் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். இதனால் வரவை விடச் செலவு எழுபத்திரண்டு இலட்சம் ரூபாய் மிகுதியாகியிருப்பதாக முதல்வர் அறிவித்தார்.

மாநிலத்தின் நிதிநிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும் போது பயனற்ற திட்டமாகிய இந்தித் திணிப்புத் திட்டத்துக்காகப் பணத்தைச் செலவழிக்கக் கூடாது என்று செல்வம் சட்டமன்றத்தில் வாதாடினார். மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களில் பணத்தைச் செலவிடாமல் இப்படி வீணாக்குவது எவ்வகையில் நியாயம் என்று அவர் வினாத் தொடுத்தார்.

## திட்டமிட்ட சதி

தமிழர்களின் இன உணர்வை அழிப்பதற்கும் அவர்கள் தங்கள் தனித்தன்மையை மறக்கச் செய்வதற்குமே இந்தித் திணிப்பு என்னும் திட்டமிட்ட சதி பயன்படுத்தப்படுகிறது என்று சட்டமன்றத்தில் குற்றஞ் சாட்டினார் செல்வம். இதை உணர்ந்ததால்தான் சோமசுந்தர பாரதியார் போன்ற காங்கிரசு உறுப்பினர்களே இந்தித் திணிப்பை எதிர்க்கிறார்கள் என்று விளக்கினார். இந்துக்கள், முகமதியர், கிறித்துவர்கள் எனச் சமயப் பாகுபாடு இல்லாமல் எல்லாத் தமிழர்களுமே இந்தித் திணிப்பை எதிர்ப்பதனை அரசுக்கு நினைவூட்டினார்.

## நீண்ட பாரம்பரியம்

எந்த வேற்றுமொழி தங்கள் மீது திணிக்கப்பட்டாலும் தமிழர்கள் அதை எதிர்த்து வந்திருப்பதைச் செல்வம் மன்றத்தில் குறிப்பிட்டார். சில ஆண்டுகளுக்கு முன் தலைமை ஆளுநர் வடமொழியைக் கல்லூரிகளில் கட்டாயப் பாடமாக்க முயன்ற போது தமிழர்கள் அதை எதிர்த்துப் போராடிய வரலாற்றுச் செய்தியைச் சட்டமன்ற உறுப்பினர்

களுக்கு எடுத்துரைத்தார். அதே தமிழினம்தான் இப்போது இந்தித் திணிப்பையும் எதிர்க்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய செல்வம், தமிழர்கள் எவ்வகையான திணிப்பையும் எப்போதுமே எதிர்த்து வந்திருப்பதைச் சட்டமன்றத்தில் விளக்கினார். கடந்த காலத்தில் பொதுக் கூட்டங்கள் மூலமும் மாநாடுகள் தீர்மானங்கள் மூலமும் எதிர்த்த தமிழர்கள் தற்சமயம் மறியல் மூலமும் சத்தியாக்கிரகம் மூலமும் எதிர்க்கிறார்கள், இந்தித் திணிப்பு அந்த அளவுக்குத் தமிழர்களின் உரிமை உணர்வைப் பாதித்துள்ளது என்று செல்வம் எடுத்தோதினார்.

## எதிர்த்ததையே ஆதரிப்பதா?

இரட்டையாட்சி நிர்வாகத்தின்போது நடைமுறையில் இருந்த குற்றவியல் திருத்தச் சட்டம் மாற்றப்பட வேண்டுமென்று காங்கிரசார் வாதாடினர். குற்றவியல் சட்டம் மக்களின் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதாகும் என்று அவர்கள் கூறினர். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் பணியாகக் குற்றவியல் சட்டத்தைத் திரும்பப் பெறுவோம் என்று தேர்தலுக்கு முன் சூளுரைத்தனர். இவ்வாறு சூளுரைத்த காங்கிரசார் தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சரவைப் பொறுப்பேற்றதும் அச் சூளுரையை மறந்து விட்டது மட்டுமல்ல, அதே குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்தி இந்தி எதிர்ப்பாளர்களைச் சிறையிலடைக்கிறார்கள் என்பதைக் கண்டித்தார் செல்வம். 'தமிழ் வாழ்க' என்று மறியலின் போது கோஷம் எழுப்பியதற்காக ஆறுமாதச் சிறைத்தண்டனை விதிக்கப்படுவது எவ்வகை நியாயம் என்று அரசை வினவினார்.

தாங்கள் முன்னர் எதிர்த்ததையே காங்கிரசார் தற்போது ஆதரித்துப் பயன்படுத்துவதால் 'சொல் ஒன்று, செயல் ஒன்று' என்னும் வகையில் அவர்கள் செயல்படுகிறார்கள் என்று செல்வம் குற்றம் சாட்டினார்.

## தாலமுத்து, நடராசன்

இந்தி எதிர்ப்பு மறியலில் கலந்து கொண்டதால் சிறைக் கைதிகளாக்கப்பட்ட தாலமுத்து, நடராசன் என்னும் இருவர் சிறையிலேயே இறந்தபோது அதனைக் கடுமையாகக் கண்டித்தார் செல்வம். இந்தியை எதிர்த்ததற்காக அவர்கள் சிறையில் உயிர் நீத்த துயரத்தை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. ஒரு சாதாரணக் குற்றத்துக்காக அவர்களைச் சிறையிலடைத்தது மட்டுமல்ல, நோயுற்ற போது கூட அவர்களுக்கு விடுதலை வழங்காத கொடுமையைப் புரிந்த காங்கிரசு அரசை அவர் சட்டமன்றத்தில் கடுமையாகச் சாடினார்.

தமிழைக் காப்பதற்காக மறியலில் ஈடுபட்டவர்களை குற்றவியல் சட்டத்தின் கீழ்க் கைது செய்து, குற்றவியல் கைதிகளாக நடத்தி, சிறையில் கடுமையான வேலைகளை அவர்கள் மீது சுமத்திய கொடுமையை உணர்ச்சி ததும்பச் சட்ட மன்றத்தில் எடுத்துரைத்தார் செல்வம். காங்கிரசாரின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதும், அக் கருத்தினை வெளிப்படுத்துவதும் அவ்வளவு கடுமையான குற்றமா என்று அவர் கேள்விக் கணை தொடுத்தார்.

## தனக்கொரு நீதி, பிறர்க்கொரு நீதியா?

மறியலில் கலந்து கொண்டு கோஷம் எழுப்பியமைக்காகச் சிலர் சிறையிலடைக்கப்படுவது ஒரு பக்கம், வன்முறைச் செயல்களில் ஈடு பட்ட காங்கிரசார்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை அரசு திரும்பப் பெறுவது மற்றொரு பக்கம் என்னும் வகையில் காங்கிரசார் செயல் படும் அநீதியைச் சட்டமன்றத்தில் செல்வம் கண்டித்தார். எட்டையபுரம் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் கல்லெறிந்தவர்களைக் கைது செய்து காவல்துறையினர் வழக்குத் தொடுத்தபோது, அரசு தலையிட்டு அவர்களை விடுதலை செய்த கொடுமையைச் செல்வம் கடுமையாகச் சாடினார். தங்கள் கட்சியினர்க்கு ஒரு நீதி, எதிர்க்கட்சியினர்க்கு மற்றொரு நீதி என்னும் அநியாயப் போக்கில் காங்கிரசு அரசு நடந்து கொள்வதைக் கண்டு மனம் குமுறினார். அதைப்பற்றி ஆவேசமாகச் சட்ட மன்றத்தில் பேசினார்.

## எதிர்க்கட்சியினர் எதிரிகள் அல்லர்!

குடியாட்சித் தத்துவத்தில் எதிர்க்கட்சிகளுக்குச் சிறப்பிடம் உண்டு. ஆளும் கட்சியினரை நெறிபிறழாமல் ஆட்சிபுரியச் செய்யும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு. எனவே எதிர்க்கட்சியினரை மதித்து நடத்துவது ஆளும் கட்சியினரின் கடமையாகும். அதற்கு மாறாகக் காங் கிரசு அரசு எதிர்க்கட்சியினரை எதிரிக்கட்சியினராக நடத்தும் பாங்கி னைச் செல்வம் இடித்துரைத்தார்.

## சிறையில் பெரியார்

சென்னையில் பெண்கள் மாநாடு ஒன்றில் பெரியார் ஈ.வெ.ரா. ஆற்றிய உரைக்காக அவரைக் கைதுசெய்து சிறையிலடைத்தது காங் கிரசு அரசு. தென்னகத்தில் இலட்சக்கணக்கான மக்கள் தலைவராக மதித்துப் போற்றிய பெரியாரைக் கைது செய்து கொடிய வெப்பம் மிகுந்த பெல்லாரிச் சிறையில் அரசு அடைத்ததையும், அவருக்கு ஒறுப்புக் கட்டணமாக இரண்டாயிரம் ரூபாய் விதிக்கப்பட்டதையும் பற்றி மனம் நொந்தார் செல்வம். பெரியார் ஒறுப்புக் கட்டணம் செலுத்த மறுத்தார். எனவே அவருக்குச் சொந்தமான ஒரு பழைய உந்து வண் டியை அரசு எடுத்து ஏலம் விட்டது.

1938–ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 29,30, 31 தேதிகளில் சென் னையில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் தலைமை தாங்க வேண்டிய பெரியாரைச் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று நீதிக்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் வேண்டு கோள் விடுத்தனர். அன்று சிறைத்துறை அமைச்சராகப் பொறுப்பேற் றிருந்த எஸ். இராமநாதன் முன்பு சுயமரியாதை இயக்கத்தைப் பெரி யாருடன் இணைந்து நடத்தியவர். அவர் "நீதிக்கட்சியினரின் வேண்டு கோள் கவனிக்கப்படும்" என்று சட்டமன்றத்தில் பதிலிறுத்தார். எனவே பெரியார் விடுதலை செய்யப்படுவார், நீதிக்கட்சி மாநாட்டில் தலைமை யேற்பார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் பெரியார் விடுதலை செய்யப்படவில்லை. மாறாக, சென்னைச் சிறையில் இருந்த பெரியா ரைப் பெல்லாரிச் சிறைக்கு மாற்றினர். இக்கொடுமையைக் கண்டு

மனம் நொந்து சட்டமன்றத்தில் பேசினார் செல்வம். இவ்வாறு கொடுமைகளுக்கு ஆளாகும் வகையில் பெரியார் செய்து விட்ட குற்றம் தான் என்ன என்று அவர் வினவியபோது இராஜாஜி உட்பட எந்த அமைச்சருமே வாய்திறந்து பதில் கூறவில்லை.

## செல்வத்தின் போராட்டம்

மறியல், சத்தியாக்கிரகம் முதலியவற்றில் செல்வத்துக்கு நம்பிக்கையில்லை. எனவே பொதுக் கூட்டங்கள், மாநாடுகளில் கலந்து உரையாற்றியும் இந்தித் திணிப்பை எதிர்த்துச் சட்டமன்றத்தில் வாதாடியும் செல்வம் இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து கொண்டார். இந்தித் திணிப்பு விரைவில் கைவிடப்படாவிட்டால் தாமும் இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட வேண்டியிருக்கும் என்று காஞ்சிபுரம் மாநாட்டில் அவர் முழங்கியதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தித் திணிப்பை மக்கள் சாதிமத வேறுபாடின்றி எதிர்ப்பதைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் வெளிப்படுத்தியதன் மூலமாக இந்தித் திணிப்பு கைவிடப்படுவதற்குச் செல்வம் வழிவகுத்தார் எனலாம்.

# 7. செல்வத்தின் மறைவு

இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயரை ஆதரிப்பதென்று நீதிக்கட்சி முடிவு செய்ததல்லவா? இம்முடிவைச் செயல்படுத்தும் வகையில் பெரியார், செல்வம், அண்ணா போன்றவர்கள் தமிழ்நாடெங் கும் சுற்றிப் போருக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தனர். இப்பிரசாரத் தின் விளைவாகத் தமிழர் பலர் இராணுவத்தில் சேர முன்வந்தனர். இந்தியர்கள் போருக்கு ஆதரவு அளிக்கக் கூடாது என்று காங்கிரசும் காந்தியடிகளும் பிரசாரம் செய்து வந்த நிலையில் நீதிக்கட்சியும் முஸ் லீம் லீகுமே ஆங்கிலேயருக்குப் போர்ப் பணியில் ஆதரவளித்து வந்தன.

உலகப் போருக்கு இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக 1939 –ஆம் ஆண்டின் இறுதியில் தலைமை ஆளுநர் பல கட்சித் தலைவர் களையும் டெல்லிக்கு அழைத்துப் பேசினார். அவ்வாறே செல்வமும் டெல்லிக்கு அழைக்கப்பட்டார். "என்னை அழைத்துப் பேசுவதற்குப் பதிலாக எங்கள் கட்சித் தலைவர் ஈ.வெ.ரா. பெரியாரை அழைத்துப் பேசினால் நீதிக்கட்சியின் முழு ஆதரவும் உங்களுக்குக் கிடைக்க அவர் உதவுவார்" என்று செல்வம் தலைமை ஆளுநரிடம் எடுத்துக் கூறினார். தங்கள் கட்சித் தலைவரைச் செல்வம் எப்போதுமே விட்டுக் கொடுத்த தில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு தக்க எடுத்துக்காட்டாகும்.

## ஆங்கில அரசில் பதவி

இங்கிலாந்தில் போர்க்கால அமைச்சரவை ஏற்பட்டதும் இந்தியா அமைச்சருக்கு உதவியாக ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இந்த ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகச் சர்தார் பகதூர் மோகன் சிங் பணியாற்றி வந்தார். அவருக்குப் பதிலாக 10–1–1940 அன்று செல்வம் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தால் நீதிக்கட்சியினர் பெரும் மகிழ்ச்சி கொண்டனர். ஏற்கனவே அரசு பதவி ஒன்று காலியான போது அப்பதவியில் நீதிக்கட்சியைச் சார்ந்த டி.ஏ.வி. நாதன் நியமிக்கப்படுவார் என்று நீதிக்கட்சித் தலைவர்கள் நம்பினர். ஆனால் அப்பதவிக்கு ஒரு

பிராமணர் நியமிக்கப்பட்ட போது நீதிக்கட்சியினர் ஆத்திரம் கொண்டனர். அந்நியமனம் பற்றி 'மதராஸ் மெயில்' பத்திரிகையில் எழுதிய செல்வம், "ஆளுநரின் போக்கு இவ்வாறு தொடர்ந்து அமையுமானால் போர்ப்பணிக்கு நீதிக்கட்சி அளித்து வரும் ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்" என்று தெளிவாக அறிவித்தார். ஆளுநரின் ஆலோசகராக இருந்த சி.கே. விஜயராகவன் ஆளுநரை வந்து சந்திக்குமாறு செல்வத்தை அழைத்தார். அச்சந்திப்பின்போதுதான் ஆலோசகர் பதவிக்குச் செல்வம் நியமிக்கப் பட்டிருப்பதை ஆளுநர் செல்வத்துக்கு அறிவித்தார்.

## கட்சியினரின் எதிர்பார்ப்பு

செல்வம் தம் திறமையையும் செல்வாக்கையும் பயன்படுத்திப் பிராமணரல்லாதார்க்குப் பல நலன்களைப் பெற்றுத் தருவார் என்று நீதிக்கட்சியினர் எதிர்பார்த்தனர். ஏற்கனவே 1935–ஆம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தத்தின் விளைவாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. சுப்பராயன் முதலமைச்சராக இருந்தபோது அமைச்சர் முத்தையா முதலியாரின் முயற்சியால் அரசுப் பணி நியமனங்களிலும் வகுப்புரிமை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அடுத்து வந்த இராஜாஜி அமைச்சரவை அவ்வுரிமையைப் பிராமண ரல்லாதார்க்கு வழங்குவதில் ஆர்வம் காட்டவில்லை என்று செல்வம் பலமுறை சட்டமன்றத்தில் முதலமைச்சருக்கு முன் குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளார். போருக்குப் பின் எப்படியும் இந்தியா சுதந்திரம் பெறும் என்பதற்குரிய நம்பிக்கை தோன்றிய நிலையில், சுதந்திர இந்தியாவில் பிராமணரல்லாதாரின் உரிமைகள் காக்கப்படும் வகை யில் அரசியல் சட்ட அமைப்பு உருவாகச் செல்வம் இங்கிலாந்தி லிருந்து உதவுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதோடு அண்மைக் காலத்தில் நீதிக்கட்சியினர் தனித் திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்துப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தி ருந்தனர். இந்தியா சுதந்திரம் பெறும்போது ஆரிய நாடு, பாகிஸ்தான், திராவிட நாடு ஆகிய மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று பெரியார் பிரசாரம் செய்து வந்தார். இதை நீதிக்கட்சி மாநாடு களும் வலியுறுத்தி வந்தன. திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்படச் செல்வம் இங்கிலாந்திலிருந்து உதவுவார் என்று நீதிக்கட்சியினர் எதிர்பார்த்ததில் வியப்பில்லை.

## செல்வத்தின் திட்டங்கள்

இந்தியாவை விட்டுப் பிரிவது செல்வத்துக்கு அத்துணை எளிதாக இருக்கவில்லை. மூத்த மகன் ஜார்ஜுக்கும் பெண் மக்கள் மேரி, டெய்ஸி, விக்டோரியா ஆகிய மூவருக்கும் திருமணமாகிவிட்டது. எட்வர்டும், ஆல்பர்ட்டும் ஏற்காட்டில் படித்துக் கொண்டிருந்தனர். அவர்களை இங்கிலாந்தில் படிக்க வைக்க வேண்டும் என ஏற்கனவே எண்ணம் கொண்டிருந்த செல்வம் தாம் இங்கிலாந்திலிருக்கும்போது அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று தமக்குள் நினைத்துக் கொண்டார். போர் முடிந்த பின் அவர்களை இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லலாம் என்று மனதில் திட்டம் தீட்டிக் கொண்டார். ஏற்கனவே தம் அருமை மனைவியை இழந்து விட்ட நிலையில் தம்

மக்களை விட்டுப் பிரிய வேண்டுமே என்று எண்ணும்போது அவரது உள்ளம் கலங்கியது. அதே சமயத்தில் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பினை ஏற்றுச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்னும் உறுதியும் மனதில் வளர்ந்தது.

இங்கிலாந்திலிருக்கும்போது தமிழகத்தில் பலருக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ற பதவிகள் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று செல்வம் திட்டங்கள் தீட்டினார். தகுதியுள்ள பலர் தமிழ்நாட்டிலிருந்தும், பிராமணர் ஆதிக்கத்தின் விளைவாக அவர்களின் ஆற்றல் பயன்படாமல் போயிற்றே என்னும் ஆதங்கம் செல்வத்துக்கு எப்போதும் உண்டு. அந்நிலையை மாற்றியமைக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதெப்படி என்று இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முன்னரே திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தார்.

## மகனுக்கு அறிவுரை

மூத்த மகன் ஜார்ஜ் ஏற்கனவே மாவட்டக் கழகத் துணைப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். பொன்னு பாப்பாள் உயிருடன் இருந்த போதே தம் மூத்த மகனுக்குப் பெரும்பண்ணையூரில் பெண் பார்த்து வைத்திருந்தார். 1930–ஆம் ஆண்டிலேயே செல்வமும் அவரது மனைவியும் தங்கள் மனதில் இத்திருமணத்தை உறுதி செய்து கொண்டனர். அப்போது ஜார்ஜுக்குப் பதினைந்து வயதுதான். ஜார்ஜுக்கு நிச்சயம் செய்து வைத்திருந்த கிளாராவுக்கு பதின்மூன்று வயது. புகழ்பெற்ற செல்வத்தின் குடும்பத்தில் மருமகளாகச் செல்லவிருக்கும் தம் மகளை அதற்கேற்றபடி தயாரிப்பதற்காகக் கிளாராவின் தந்தையார் அவரைச் சென்னையிலுள்ள நல்லாயன் பள்ளிக்கு அனுப்பி ஐரோப்பிய வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொள்ளச் செய்திருந்தார். செல்வமும் ஜார்ஜும் இங்கிலாந்தில் படித்தவர்களென்பதாலேயே இந்த ஏற்பாடு. பொன்னு பாப்பாள் இறந்த அடுத்த ஆண்டில், முன்னரே தீர்மானித்திருந்தபடி ஜார்ஜுக்கும் கிளாராவுக்கும் திருமணமாகி விட்டது. தாம் இங்கிலாந்திலிருந்த போதிலும் ஜார்ஜும் கிளாராவும் தம் குடும்பத்தைக் கவனித்துக் கொள்வார்கள் என்று செல்வம் ஆறுதல் கொண்டார்.

தாம் புறப்படுவதற்கு முன் செல்வம் ஜார்ஜை அடிக்கடி அழைத்து அவருக்குப் பல அறிவுரைகள் கூறினார். தாம் இங்கிலாந்திலிருக்கையில் குடும்பப் பொறுப்பையேற்றுச் செயல்பட வேண்டும் என்பதை வற்புறுத்தினார். இதுகாறும் தமக்கென்றோ தம் குடும்பத்துக்கென்றோ பணம் சேமித்து வைக்காத செல்வம் தாம் இங்கிலாந்தில் பணியாற்றும் காலத்தில் தம் வருவாயில் ஒரு பகுதியைச் சேமிக்கப் போவதாகத் தம் மகனிடம் கூறினார். சென்னை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் உள்துறை உறுப்பினராகவும், பின் நிதி, உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி மாதச் சம்பளமாக ஐயாயிரம் ரூபாய் பெற்ற போது ஒன்றும் சேமிக்க முடியாத தம் தந்தை இப்போது எப்படிச் சேமிக்கப் போகிறார் என்று ஜார்ஜ் வியந்தார். "நீங்கள் எதுவும் சேமிக்கா விட்டாலும் பரவாயில்லை. நிலத்தின் வருமானத்திலிருந்து உங்களுக்கு இலண்டனுக்கே பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளாமலிருந்தால் போதும்" என்று சிரித்துக் கொண்டே பதில் கூறினார். செல்வமும் இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டார்.

## விருந்துகள்

இங்கிலாந்து அமைச்சரின் ஆலோசகராகப் பதவியேற்றுச் செல்லும் செல்வத்தைப் பாராட்டிப் பலரும் விருந்துகள் வழங்கினர். அவ்விருந்துகளில் பெரியார் தவறாமல் கலந்து கொண்டார். தம் அருமைத் தோழர் இந்தியாவை விட்டுப் புறப்படுமுன் அவருடன் நீண்ட நேரத்தைப் பெரியார் செலவிட விரும்பியது அதற்குக் காரணமாக அமைந்தது. அதோடு தம் நண்பர் செல்வத்துக்குக் கிடைத்த சிறப்பி னையும் பதவியையும் தமக்கே கிடைத்ததாகப் பெரியார் எண்ணி மகிழ்ந்ததும் மற்றொரு காரணம். இந்நாட்களில் பெரியார் தம்முடன் இருப்பதைச் செல்வமும் விரும்பினார். தாம் இங்கிலாந்தில் இருக்கும் போது தமது கட்சிக்கும் கட்சியின் கொள்கைகளுக்கும் என்னென்ன நன்மை செய்யலாம் என்பதைப்பற்றிக் கலந்தாலோசிக்கவும் திட்டங்கள் தீட்டவும் அது உதவுமென்று எண்ணினார்.

செல்வத்தின் நெருங்கிய நண்பரும் தஞ்சை மாவட்டத்தில் நீதிக் கட்சியை வளர்ப்பதில் செல்வத்துடன் தோளோடு தோள் நின்று உழைத் தவருமாகிய என்.ஆர். சாமியப்ப முதலியார் 4–2–1940 அன்று சென்னை கன்னிமாரா ஓட்டலில் விருந்து வழங்கினார். இவ்விருந்தில் பெரியார், பி.டி. இராசன், முத்தையா முதலியார், ஏ. துரைசாமி முதலியார், ஜனாப் அப்துல் ஹமீத்கான், எம்.சி. இராஜா, எம். தாமோதரம் நாயுடு, டி. சுந்தரராவ் நாயுடு முதலிய பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையிலுள்ள கிறித்துவத் தலைவர்கள் 6–2–1940 அன்று வெல்லிங்டனில் செல்வத்துக்கு விருந்தளித்தனர். அந்த விருந்தில் அன்றைய மயிலாப்பூர் ஆயர் மேதகு மனுவேல் கெரெய்ரோ ஆண்டகை, பெரியார், கே.வி. ரெட்டி நாயுடு, அன்றையச் சென்னை ஆளுநரின் ஆலோசகரான ஜி.டி. போக், நீதிபதி வெங்கட்ரமணராவ் நாயுடு, எஸ். இ. அரங்கநாதம், பேராசிரியர் எம். இரத்தினசாமி முதலியோர் கலந்து கொண்டனர். தம் சொந்தக் குடும்பத்தினரோடு விருந்தில் கலந்து கொண்ட உணர்வினைத் தாம் பெற்றதாக அவ்விருந்தின் போது செல்வம் குறிப்பிட்டார்.

தஞ்சையில் நீதிக்கட்சித் தலைவராக இருந்த ஆ.யா. அருளா னந்தசாமி நாடார் செல்வத்துக்குத் தஞ்சையில் சிறந்த விருந்தொன்று வழங்கினார். 17–2–1940 அன்று நடைபெற்ற அவ்விருந்தில் பெரியார் ஈ.வெ.ரா., மாவட்ட நீதிபதி அமிருதீன், தஞ்சை நகரப் பங்குத் தந்தை அருள்திரு. மி. மோத்தாவாஸ் அடிகள் போன்ற பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முத்தையா செட்டியார் செல்வத்துக்குத் தம் அடையாறு அரண் மனையில் விருந்தளித்தார். அவ்விருந்தில் மயிலை ஆயர் கெரெய்ரோ ஆண்டகை, பெரியார், பேராசிரியர் எம். இரத்தினசாமி முதலியோர் கலந்து கொண்டனர்.

26–2–1940 அன்று செல்வம் சென்னையை விட்டுப் புறப்படுமுன் சென்னைத் தமிழ்க் கத்தோலிக்க சங்கம் விக்டோரியா மன்றத்தில் செல்வத்துக்கு விருந்து வழங்கியது. விருந்து இரவு 10 மணிக்கு முடிந்த



*1934* - ஆம் ஆண்டில் சென்னை ஆளுநர் நிர்வாகக் குழுவின் உள்துறை உறுப்பினராகச் செல்வம் நியமிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட இப்படத்தில் இடமிருந்து வலமாக: ஆர்.கே. சண்முகம் செட்டியார், மயிலாப்பூர் ஆயர் மேதகு கார்லோஸ் தெ ஃப்ரகோஸோ ஆண்டகை, பொப்பிலி அரசர், சர் ஏ.டி. பன்னீர்செல்வம் (கழுத்தில் மாலையுடன்), திரு. ஹாஜி ஆதம் சேட், திரு. பி. இராமச்சந்திர ரெட்டி, சர் முகமது உஸ்மான்.



வட்டமேசை மாநாட்டின்போது செல்வம் (முதல் வரிசையில் வலமிருந்து இடமாக நான்காமவர்). அருகில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்.

தெனினும் இரயிலுக்கு நேரமாகி விட்டதால் செல்வம் 8.30 மணிக்கே அவசர அவசரமாகப் புறப்பட வேண்டியதாயிற்று. எனினும் விருந்தினை ஏற்பாடு செய்தவர்களுக்கும் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றி தெரிவித்த பின்னரே புறப்பட்டார்.

தஞ்சை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி நகராட்சி மன்றங்கள் செல்வத்துக்கு அவரது இலண்டன் நியமனத்தை முன்னிட்டுப் பாராட்டு விழா நடத்தி மகிழ்ந்தன.

## பயணம் தொடங்குகிறது

திருவாரூருக்கு அருகிலுள்ள விற்குடி புகைவண்டி நிலையம் 25–2–1940 அன்று மக்கள் வெள்ளத்தால் திக்குமுக்காடியது. இங்கிலாந்துப் பயணத்தின் முதற் கட்டமாக அன்று செல்வம் தம் சொந்த ஊராகிய செல்வபுரத்திலிருந்து விற்குடிக்கு வந்து இரயிலேறப் போகிறார். அழுத கண்ணீருடன் தம் அன்னை இரத்தினத்தம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு விற்குடி நிலையத்துக்கு வந்து விட்டார் செல்வம். அவரை வழியனுப்பி வைக்கவே அந்தப் பெருங்கூட்டம்! செல்வபுரம் முழுவதும் அங்கே திரண்டு நிற்கிறது. திருவாரூரிலிருந்தும் பல தோழர்கள் வந்திருக்கின்றார்கள். அத்தனைப் பேரிடமும் கைகூப்பி விடைபெற்ற செல்வம் தாம் பெற்ற செல்விகளான மேரி, டெய்ஸி, விக்டோரியா ஆகிய மூவரையும் நோக்குகின்றார். அவர்களுக்கு ஆசி முத்தமிட்டு விடைபெற்றுக்கொண்டு புகைவண்டியில் ஏறுகின்றார். எப்போதும் வீர உணர்வு பொங்கி நிற்கும் செல்வத்தின் முகத்தில் அன்று சோகம் கப்பிக் கிடக்கின்றது. புகை வண்டியில் ஏறி அமர்ந்து திரும்பும்போது கன்னங்கள் இரண்டும் புடைத்தெழ, விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தோடுகின்றது. கூடி நின்ற மக்களின் கண் கலங்குகின்றது. அவரது செல்வியரும் விம்மி விம்மி அழுகின்றனர். செல்வத்தின் மாமனாராகிய முதியவர் முத்துச்சாமி தம் பேத்தியரை அணைத்து ஆறுதல் கூற முயல்கின்றார். மேரியின் கணவர் ஸ்தனிஸ் லாஸும், டெய்ஸியின் கணவர் வழக்கறிஞர் அப்புசாமியும், விக்டோரியாவின் கணவர் சுந்தரராசனும் கைகூப்பி நின்றபடியே தங்கள் மாமனாரிடம் விடைபெறுகின்றனர். ஜார்ஜ் மட்டும் தந்தையுடன் புகை வண்டியில் புறப்படுகின்றார்.

சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையம். செல்வம் பம்பாய்க்குச் செல்லவிருக்கும் புகைவண்டிப் பெட்டியைச் சுற்றி நீதிக் கட்சியினரும் சுயமரியாதை இயக்கத் தோழர்களுமாகப் பெருங்கூட்டம் அலைமோதுகின்றது. மூத்த மகன் ஜார்ஜ் வண்டியின் அருகே நிற்கின்றார். பெரியார் நிற்கின்றார். சாமியப்ப முதலியார் நிற்கின்றார். எல்லோரிடமும் செல்வம் விடை பெற்றுக் கொள்கின்றார். வண்டியில் ஏறி வாயிற்படியில் நிற்கின்றார். வண்டியிலிருந்து இறங்கித் தம் மகன் ஜார்ஜை அணைத்து உச்சியிலும் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டு விட்டு நிமிர்ந்து நோக்குகின்றார். ஜார்ஜின் கண்களில் அருவி பெருகி வழிகிறது. செல்வம் பெரியாரைப் பார்த்தார். இருவரும் பேசமுடியாமல் தத்தளித்தனர். வழிந்த கண்ணீரை அடக்க முயன்றும் முடியாமல் போயிற்று. சிரிக்க முயற்சி செய்தார் செல்வம். விடைகூற முயன்றார் பெரியார். நாக்கை அசைக்க முடியாமல் குழறியவராய்ப் "போய் வாருங்கள்" என்றார்.

செல்வமும் துயரத்தை அடக்க முயற்சி செய்தவராய்ப் "போய் வருகிறேன்" என்றார். வார்த்தைகள் தெளிவாக வெளிவரவில்லை. வண்டி புறப்பட்டது. "வாழ்க செல்வம்!" என்று கட்சித் தோழர்கள் எழுப்பிய பேரொலி வண்டியைப் பின்தொடர்ந்தது.

## பழக்கத்தை மீறிய செல்வம்

பாம்பனிலிருந்து செல்வத்தின் முன்னோர்கள் செல்வபுரத்தில் வந்து குடியேறியபோது, தங்கள் குடும்பத்தில் வைத்துப் போற்றிய மரியன்னையின் சிறிய திருச்சிலை ஒன்றை உடன் கொண்டு வந்தார்கள். செல்வபுரத்தில் தங்கள் வீட்டில் நடுநாயகமாக அத்திருச் சிலையை வைத்துப் போற்றினார்கள். 1930, 31–ஆம் ஆண்டுகளில் இலண்டனுக்கு வட்ட மேசை மாநாட்டுக்காகச் சென்றபோது இத்திருச் சிலையைச் செல்வம் தம்முடன் கொண்டு சென்றார். அதனாலேயே தம் இலண்டன் பயணங்கள் வெற்றிகரமாக நடந்தேறின என்று அவர் நம்பினார். ஆனால் இம்முறை ஆங்கில அமைச்சரின் ஆலோசகராகப் பொறுப்பேற்கப் புறப்பட்டபோது ஏனோ அத்திருச்சிலையைத் தம்முடன் எடுத்துச் செல்லத் தவறிவிட்டார். அவர் புறப்பட்டுச் சென்ற பின்னரே அதைக் கவனித்த செல்வத்தின் அன்னை மனதுக்குள் பெரிதும் கலங்கி னார். எனினும் அக்கலக்கத்தை அவ்வமயம் யாருடனும் பகிர்ந்து கொள்ளவில்லை அவர்.

பம்பாயில் கே. தியாகராசப் பிள்ளையுடன் செல்வம் தங்கி யிருந்தார். தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவராகிய டி.வி. உமாமகேசுவரம் பிள்ளையின் உறவினரான தியாகராசப்பிள்ளை பம்பாயில் மின்சக்திப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். விமான நிலையத்துக்குப் புறப்படுவதற்காகத் தியாகராசப் பிள்ளை வீட்டு மாடி யிலிருந்து செல்வம் படிகளில் இறங்கி வந்தபோது வெள்ளைப் புடவை உடுத்த ஒரு பெண் தமக்கு எதிரே வருவதைக் கண்டதும் "சகுனம் சரியில்லையே" என்று அவரது வாய் மொழிந்தது. பொதுவாக மூட நம்பிக்கைகளைப் பழித்து ஒதுக்கும் செல்வத்தின் வாய் ஏனோ அன்று அவரை அறியாமலே அச்சொற்களை உதிர்த்தது.

## பம்பாயிலிருந்து கராச்சிக்கு

செல்வம் பம்பாயிலிருந்து கராச்சிக்கு விமானத்தில் புறப்பட்டுச் சென்று கராச்சியில் ஒருநாள் தங்கினார். அங்கிருந்து பெரியாருக்குக் கடிதம் எழுதினார். அதுதான் செல்வம் எழுதிய கடைசிக் கடிதம். அக்கடிதம் வருமாறு :

விமானநிலையம்,
கராச்சி.
29.2.40

எனது அன்புள்ள தலைவர் அவர்கட்கு,

நேற்று மாலை பம்பாயிலிருந்து இங்கு வந்து சேர்ந்தேன். இன்று காலை நான் எந்த பிளேனில் போகிறதாயிருந்–
தேனோ அந்த பிளேன் இன்னும் இங்கு வந்து சேரவில்லை. அநேகமாய் இன்று மாலை இங்கு வந்து சேரும்.
நாளை காலை 7 மணி சுமாருக்கு நான் இங்கிருந்து

கிளம்புவேன். ஆகவே வரும் திங்கட்கிழமை லண்டன் போய்ச் சேருவேன் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு,

தங்களன்புள்ள
பன்னீர் செல்வம்.

## கராச்சியிலிருந்து?

மார்ச் மாதம் முதல் தேதி, விடியற்காலை நேரம். இராணுவ விமானமாகிய "அனிபால்" செல்வத்தை ஏற்றிக் கொண்டு வானில் பறந்தது. அவரோடு விமான அதிகாரிகள் நால்வரும் ஆங்கில ராணுவ அதிகாரிகள் மூவரும் இருந்தனர்.

"அனிபால்" விமானம் கராச்சியிலிருந்து 1–3–1940 அன்று காலை 4.54க்குப் புறப்பட்டு 'ஜிவானி' விமான தளத்தை 10.25க்கு அடைந்தது. அங்கிருந்து 11.02க்குப் புறப்பட்டது. விமானி பிற்பகல் 2.38க்கு ஜிவானி விமான நிலையத்துடன் தொடர்பு கொண்டு தாம் 'ஜாஸ்க்' நகருக்கு மேற்கே முப்பது மைல் தூரத்தில் பறந்து கொண்டிருப்பதாகவும், பிற்பகல் நான்கு அல்லது ஐந்து மணியளவில் 'ஷார்ஜா' விமான நிலையத்தை அடைந்து விடுவோம் என நம்புவதாகவும் தெரிவித்தார். 2.51க்கு அனிபால் விமானத்தின் சங்கேத ஒலி ஜிவானி, ஷார்ஜா விமான நிலையங்களில் கேட்டது. ஆனால் விமானத்துடன் தொடர்பு கொண்டு பேசமுடியவில்லை. அதன்பின் அனிபால் விமானத்துடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. உரிய நேரமாகியும் விமானம் வந்து சேராததால் ஏதும் நேர்ந்திருக்கலாமோ என்று ஷார்ஜா விமான நிலையத்தினர் கவலை கொண்டனர். அனிபாலைத் தேடி அராபிய, பாரசீகக் கடற்கரையோரம் விமானங்கள் திரிந்தும் பயன் ஏதுமில்லை. விமானத்தில் எதுவும் கோளாறு காரணமாக அது கடலில் இறங்கி யிருக்கலாமோ என்று விமான நிலைய அதிகாரிகள் ஐயம் கொண்டனர். ஒருவேளை விமானம் கடலில் இறங்கி அதிலுள்ள பயணிகள் எப்படியாவது தப்பிக் கரையேறியிருக்கலாமோ என்று அராபிய, பாரசீகக் கடற்கரையோரமாகத் தேடினர். ஒட்டகப் படைகளை அனுப்பியும் தேடினர். பயனெதுவும் இல்லை.

கடற்கரையோரமாகப் பெட்ரோல் மிதந்ததால் அப்பகுதிகளில் நன்றாகச் சுற்றிப் பார்த்தனர். அப்பகுதியில் கடற்கரையில் பெட்ரோல் மிதப்பது சாதாரணமே என்றாலும் விமானம் விபத்துக்கு உள்ளாகி யிருந்தால் ஏதாவது தடயங்களாவது கிடைக்காதா என்று தேடினர். கடலோரத்தில் விமானத்தின் இறக்கைகள் போலச் சில பகுதிகள் ஒதுங்கி யிருக்கக் கண்டனர். அவற்றை எடுத்துப் பார்த்தபோது அவை ஓர் அராபியக் கப்பலின் பகுதிகள் என்று கண்டனர். தொடர்ந்து முயன்றும் பயன்தராததால் முயற்சிகள் கைவிடப்பட்டன.

## விபத்து உறுதியாயிற்று

எனவே 1–3–1940 அன்று ஓமான் தீபகற்பத்தின் அருகில் ஓமான் வளைகுடாவில் அனிபால் விமானம் விபத்துக்கு உள்ளாகியது என்றும் விமானத்திலிருந்தவர்களுள் எவருமே உயிர் தப்பவில்லை என்றும் உறுதியாகியது.

## தமிழகத்தின் துயரம்

அனிபால் விமானத்தைத் தேடும் முயற்சியில் விமானப்படை ஈடுபட்டிருந்தாலும் செய்தி தமிழகத்தை எட்டியவுடனே பெரும் கவலையை உண்டாக்கிற்று. தமிழக மக்கள் தங்கள் குடும்பத்தில் ஒருவரையே இழந்து விட்டதுபோல் ஆறாத் துயரத்தில் மூழ்கினர்.

## குடும்பத்தாரின் கண்ணீரும் கம்பலையும்

திருவாரூருக்கு அருகிலுள்ள நீலக்குடியைச் சேர்ந்த உலகநாதன் என்பவர் நெல் வணிகர். டாக்டர் செபாஸ்டின் திருச்செல்வம், செல்வம் ஆகியோரின் நிலத்தில் விளையும் நெல்லையெல்லாம் ஆண்டுதோறும் அவரே வாங்கி விற்பனை செய்து வந்தவர். மார்ச் 2-ஆம் நாளன்று திருவாரூருக்கு நெல் வணிகத் தொடர்பாகச் சென்றிருந்த அவர் விமான விபத்து பற்றியும் அதில் உயிரிழந்தோருள் செல்வமும் ஒருவர் என்பது பற்றியும் வானொலியில் அறிவிக்கப் பட்டதைக் கேட்டதும் அதிர்ச்சியுற்றார். அக்காலத்தில் வானொலி செல்வபுரத்தில் யாரிடமும் இல்லை. எனவே செல்வத்தின் குடும்பத் தினருக்குச் செய்தியைத் தெரிவிக்க உடனே செல்வபுரம் நோக்கி விரைந்தார். உலகநாதன் வாயிலாகச் செய்தியை அறிந்த ஜார்ஜ் அதை நம்பவில்லை. தங்கள் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த மாணிக்கம் என்பவரைத் திருவாரூருக்கு அனுப்பி உலகநாதன் சொன்ன செய்தி உண்மைதானா என்று அறிந்துவரச் செய்தார். மாணிக்கமும் அச்செய்தியை உறுதி செய்த போது ஜார்ஜ் அடைந்த துயரத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. துயரத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் வாய்விட்டுப் புலம்பி அழுதார். விமானப் படையின் முயற்சிகளால் தங்கள் தந்தையார் உயிரோடு கிடைத்து விடமாட்டாரா என்று அங்கலாய்த்தார்.

மார்ச் 2-ஆம் நாளன்று செல்வத்தின் அன்னையார் இரத்தினத் தம்மாளும் இரண்டாவது மகள் டெய்ஸியும் தஞ்சாவூரில் இருந்தனர். வானொலிச் செய்தியைக் கேட்ட அவர்கள் அதை நம்ப இயலாமல் தவித்தனர். செல்வபுரத்துக்கு விரைந்தனர். மூத்த மகள் மேரிக்குப் பெரும்பண்ணையூரில் செய்தி கிடைத்ததும் அவரும் செல்வபுரத்துக்கு விரைந்தார். அனைவரும் சந்தித்தபோது ஒருவரையொருவர் கட்டித் தழுவி அழுது புலம்பினர். ஜார்ஜுக்குத் தம் துயரத்தை உள்ளடக்கிக் கொண்டு தம் பாட்டியாரையும் (செல்வத்தின் அன்னை), சகோதரிகளையும் ஆறுதல் கொள்ளச் செய்வது பெருமுயற்சியாயிற்று. இறுதியில் 'இறந்தோரின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவ தில்லை" என்னும் விவிலிய வாக்கை மனதில் கொண்டு ஒருவாறு தேறினார். "மரணம் திருடனைப் போல வரும்" என்று யேசு பெருமான் கூறியது தங்கள் தந்தையாரின் வாழ்வில் நிறைவேறியதைப்பற்றி எண்ணும்போதெல்லாம் மீண்டும் மீண்டும் மனம் கலங்கினார். இலண்டனுக்குப் புறப்படுமுன் தம் பழைய கல்லூரியாகிய தூய வளனார் கல்லூரியில் நடந்த முன்னாள் மாணவர் ஆண்டுத் தியானத்தில் பங்கு கொண்டிருந்தாராதலால் ஒருவகையில் தங்கள் தந்தையார் மரணத் துக்கு ஆயத்தமாகவே இருந்தார் என்னும் எண்ணம் அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனால் செல்வத்தின் அன்னையாரின் துயரம் தான் அடக்குதற்கு இயலாததாக இருந்தது. "வயது முதிர்ந்த நான் உயிரோடு இருக்க, ஆற்றலும் சிறப்பும் மிக்க என் செல்வ மகனின்

உயிரை இறைவன் பறித்துக் கொண்டாரே, அதற்குப் பதிலாக என் உயிரை அவர் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா" என்று புலம்பிக் கொண்டே இருந்தார். (இவர் 1952-ஆம் ஆண்டில் காலமானார்.)

ஏற்காட்டில் அவ்வமயம் படித்துக் கொண்டிருந்த எட்வர்டும் ஆல்பர்ட்டும் செய்தியை அறிந்து திகைத்துப் போயினர். யாரிடம் சொல்லி அழுவது என்று தெரியாமல் புலம்பினர். அவர்கள் படித்துக் கொண்டிருந்த மோன்ட்ஃபோர்ட் பள்ளிச் சகோதரர்கள் அவர்களுக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தனர். இருவரையும் செல்வபுரத்துக்கு வருமாறு ஜார்ஜ் அழைத்தபோது எட்வர்ட் ஊருக்குப் போக விரும்பவில்லை. தந்தையார் இல்லாத ஊருக்குப் போக அவரது மனம் இடம் தரவில்லை. ஆல்பர்ட் மட்டுமே போய் வந்தார்.

செல்வம் இறந்து பதினேழு நாட்களுக்குப் பின் ஜார்ஜ்-கிளாரா தம்பதிகளின் முதற்குழந்தை பிறந்தது. தம் தந்தையின் நினைவாக இம்மகனுக்கு ஏ.டி. பன்னீர்செல்வம் என்று ஜார்ஜ் பெயர் சூட்டினார்.

## கட்சித் தோழர்களின் கலக்கம்

செல்வத்தின் மறைவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் பெரியார் அடைந்த துயரம் அளவிட்டுரைக்கத் தக்கதன்று. தம் அருமை மனைவி நாகம்மையார் இறந்தபோதும், தம் அன்னையார் இறந்தபோதும் கலங்காத பெரியார், செல்வம் மறைந்தபோது கண்ணீர் விட்டுக் கலங்கினார். "மனம் பதைக்கிறது, நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது, மெய் நடுங்குகிறது, எழுதக் கையோடவில்லை, கண் கலங்கி மறைக்கிறது, கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது" என்று கண்ணீருக்கிடையில் தம் கலக்கத்தைத் தெரிவித்துக் "குடிஅரசு" இதழில் பெரியார் தலையங்கம் எழுதினார்.

"செல்வம் எதிர்பாராமல் இறந்த செய்தியைக் கேட்டு எனக்கேற்பட்டுள்ள துயரத்தை எந்த வார்த்தைகளால் விளக்குவதென்று தெரியவில்லை. அவரது பிரிவால் ஏற்பட்டுள்ள இழப்பை ஒருக்காலும் ஈடு செய்ய இயலாது" என்று செட்டி நாட்டு இளவரசர் முத்தையா செட்டியார் கலங்கினார்.

"விலைமதிக்க முடியாத ஓர் ஆத்ம நண்பருடைய பிரிவால் நான் சொல்லொண்ணாத துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கிறேன். அவருடன் நான் பல ஆண்டுகளாகப் பழகி வந்திருக்கிறேன். சர் ஏ.டி. பன்னீர் செல்வம் எனக்கு நண்பர் மட்டுமல்ல, தமையனுக்குத் தமையனாகவும் விளங்கினார். எனது பொது வாழ்வில் அவரைக் கேட்காமல், அவரைக் கலந்து பேசாமல் செய்த காரியம் ஒன்றுமே இருக்காது. அரசியல் சம்பந்தமான காரியமாக இருந்தாலும் சரி, சொந்தக் காரியமானாலும் சரி, எதையும் அவரைக் கலக்காமல் செய்ததேயில்லை என்று நிச்சயமாகச் சொல்லுவேன். நீதிக்கட்சி என்ன என்பதைக் குறித்துத் தஞ்சை மாவட்ட மக்கள் அறியாதிருந்த காலத்தில் நீதிக்கட்சிக் கொள்கையைச் சிரமேல் தாங்கிப் பரவச் செய்த உத்தம சீலர். அவரில்லாதிருந்தால் நீதிக்கட்சியே தஞ்சை மாவட்டத்தில் வேரூன்றியிருக்காது" என்று சென்னை மாநிலச் சட்டமன்றத்தின் மேலவையில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய என். ஆர். சாமியப்ப முதலியார் புலம்பினார்.

கே.வி. ரெட்டி நாயுடு, டாக்டர் சுப்பராயன், ஏ. இராமசாமி முதலியார், பி.டி. இராசன், ஆர். சீனிவாசன், கவிஞர் பாரதிதாசன், கே.எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ. இராமலிங்கம் செட்டியார், எம்.சி. இராஜா, கலிபுல்லா சாகிப் முதலிய பல பிரமுகர்களும் செல்வத்தின் அகால மரணத்துக்கு வருத்தம் தெரிவித்து அறிக்கைகள் விடுத்தனர்.

## இரங்கற் கூட்டங்கள்

'தமிழர்களின் தளபதி சர் செல்வம் அவர்கள் மறைந்து போன துக்க நாளாகிய 2-4-1940 அன்று தமிழர் அனைவரும் துக்கம் கொண்டாடுங்கள். அன்று தமிழர் அனைவரும் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகள் கட்டுங்கள். எல்லாக் கடைகளையும் அடைத்துக் கறுப்புக் கொடி கட்டச் செய்யுங்கள். மாலையில் கறுப்புக் கொடியுடன் ஊர் வலம் வந்து பொதுக் கூட்டம் கூட்டி சர் செல்வம் அவர்களின் ஊழியத்தைப் பாராட்டி அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றுங்கள்" என்று பெரியார் 'விடுதலை' யில் அறிக்கை விடுத்தார். அதைப் பின் பற்றித் தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் மௌன ஊர்வலங்களும், இரங்கற் கூட்டங்களும் நடைபெற்றன. பெரியாரின் அறிக்கை வெளி வரும் முன்னரே சென்னை நகரின் பல்வேறிடங்களிலும் இரங்கற் கூட்டங்கள் நடந்தன.

திருச்சியில் பெரியார் தலைமையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட கறுப்புக் கொடி மௌன ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தின் இறுதியில் டி.எம். நாராயணசாமிப் பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் ஒன்றரை மணி நேரம் பேசிய பெரியார், "செல்வத்தின் கட்சிப் பற்றும், கொள்கையில் உறுதியும், தனக்கு மாறுபட்ட எதிர்க்கட்சிக்காரர்களையும் அன்புடன் நடத்திய அவரது போக்கும், சட்டசபையில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு காங்கிரஸ் மந்திரிகளின் போக்கைக் கண்டித்த வீரமும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு அவர் காட்டிய ஆதரவும் உதவியும், ஜில்லா போர்டு முனிசிபல் நிர்வாகத்தில் அவர் செய்த ஒப்பற்ற சீர் திருத்தங்களும் தமிழரால் என்றும் மறக்க முடியாதவை" என்று விரிவாக எடுத்துரைத்தார்.

முன்னாள் அமைச்சர் முத்தையா செட்டியாரின் தலைமையில் சென்னையில் செல்வம் மறைவு நாள் நடைபெற்றது. "தலைவர் செல்வம் மறைந்தாலும் அவரது நோக்கங்களும் கொள்கைகளும் மறையவில்லை. அவற்றைப் பூர்த்தி செய்வது நம் கடமை. நீங்கள் ஒன்று சேர்ந்து கட்சிக்குப் பலம் கொடுத்தால்தான், செல்வத்தை இழந்ததால் நம் கட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய முடியும்" என்று தம் தலைமையுரையில் முத்தையா செட்டியார் கூறினார். முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா முதலியார், கலிபுல்லா சாகிப், என். ஆர். சாமியப்ப முதலியார் ஆகியோரும் அக்கூட்டத்தில் செல்வத்தின் சிறப்புகளை விளக்கிப் பேசினர்.

24-4-1940 அன்று சென்னை மாநகர ஷெரீப் ஏற்பாடு செய்த இரங்கற் கூட்டத்தில் சென்னைப் பேராயர் மேதகு லூயிஸ் மத்தியாஸ் ஆண்டகை தலைமையேற்றார். செல்வத்தின் வாழ்வு நிறைவான வாழ் வென்றும், பணி சிறப்புமிக்கது என்றும் தம் தலைமையுரையில் கூறிய



1940-ஆம் ஆண்டில் இலண்டனுக்குப் புறப்படுமுன் தம் பண்ணை (அரிசன) வேலையாட்களுடன் செல்வம்.



மயிலை ஆயர் மேதகு கார்லோஸ் தெ ப்ரகோசோ ஆண்டகையுடன் செல்வம்.

பேராயர், செல்வம் ஓர் உண்மையான சனநாயகவாதி எனறும் குறிப்பிட்டார். நாட்டில் எல்லா வகுப்பினர்க்கும் நீதியான, சமமான முறையில் பங்கு கிடைக்க வேண்டும் என எண்ணி உழைத்த செல்வம் நாட்டுக்குச் சிறந்த பணி புரிந்து எல்லோரின் மதிப்புக்கும் உரியவரானார் என்றும் அவர் விளக்கினார். கூட்டத்தில் எஸ். ஜி. ரங்க ராமானுஜ முதலியார், வி.டி. அரசு, சென்னை மாநகர உதவி ஷெரீப், எஸ்.எம்.பி. ராஸ்வி ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர்.

சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் செல்வத்தின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி நிகழ்த்தப்பட்டது. மயிலாப்பூரில் மயிலை ஆயர் கெரெய்ரோ ஆண்டகையின் தலைமையில் திருப்பலி நிகழ்ந்தது.

செல்வத்தின் நினைவாகத் தமிழரின் பழம்பெருமைகள்பற்றிக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசு வழங்க வேண்டுமென மதுரை நீதிக் கட்சியினர் நடத்திய இரங்கற் கூட்டத்தில் சர் பி.டி. இராசன் கருத்து தெரிவித்தார்.

சென்னை சமதர்ம சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற செல்வம் நினைவுநாள் கூட்டத்தில் பேசிய கே. எம். பாலசுப்பிரமணியம் செல்வத்தின் வாழ்க்கையையும் தொண்டுகளையும் பற்றிய வரலாற்று நூலை எழுதி வெளியிட வேண்டுமென வலியுறுத்தினார்.

மதுரை, காக்கிநாடா, செங்கற்பட்டு, திண்டுக்கல், ஈரோடு, கொரடாச்சேரி, குடவாசல், கும்பகோணம், மாயூரம், நாகைப் பட்டினம், பழநி, சேலம், திருவண்ணாமலை, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தரங்கம்பாடி ஆகிய பல ஊர்களில் இரங்கற் கூட்டங்கள் நடைபெற்றன.

## ஆருடங்கள்

செல்வத்தின் திடீர்மறைவு குறித்துப் பல்வேறு இடங்களில் இரங்கற் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தபோது வதந்திகள் பல பரவின. "இப்போது வதந்திகள் பல உலவுகின்றன. அவ்வதந்திகள் உண்மையோ, பொய்யோ! எவ்விதத்தும் நம் செல்வம் நம்மிடையே மீண்டும் வருமாறு பிரார்த்திப்போமாக" என்று தம் தலைமையில் சென்னையில் நடைபெற்ற செல்வம் நினைவுநாளில் முத்தையா செட்டியார் கூறினார். "நான் நினைக்கிறேன், செல்வம் உயிரோடு இருக்கிறாரென்று. இது உண்மையானால் என்னைவிட மகிழ்ச்சியடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது" என்று செல்வத்தின் நெருங்கிய நண்பராகிய சாமியப்ப முதலியார் அதே கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

"செல்வம் கராச்சியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்ட நேரத்தைக் கொண்டு சோதிட சாத்திர முறைப்படி கணித்துப் பார்த்ததில் அவருக்குப் பேராபத்து ஏற்பட வேண்டிய சந்தர்ப்பமாய்த் தற்போது இருப்பினும் அவரது உயிருக்கு யாதொரு ஆபத்துமில்லையென்று திடமாய் நம்பலாம். அவரும் 15–3–1940க்குள் கண்டுபிடிக்கப்படுவார் என்பது மேற்படி கணிதமுறைப்படி தெரிகிறது" என்று ஆ.பு. கனகசபை என்பவர் பத்திரிகைகளில் எழுதினார்.

'திருப்பூர் முஸ்லீம் லீக் செயற்குழு உறுப்பினரும் பிரபல நுஜூம் (சோதிடம்) ஆராய்ச்சியாளருமான எம்.கே. அப்துல் வகாப் அவர்கள் தமது நுஜூம் ஆராய்ச்சியால் சர் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்கள் யாதொரு விபத்துமின்றி 20–4–40–க்குள் கிடைப்பாரென்று தெரிவிக்கிறார்" என்று திருப்பூர் தி.சி.மு. அப்துல் இரகுமான் (திருப்பூர் நகர முஸ்லீம் லீக் முன்னாள் செயலர்) பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

## பணயக் கைதியா?

இதற்கிடையில் பாரசீகக் கடற் கொள்ளைக்காரரிடம் செல்வம் சிக்கியிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடும் பெருந்தொகையைப் பணயத் தொகையாகக் கொடுத்தால் அவரை விடுவிக்க அவர்கள் தயாராக இருப்பதாகவும் சென்னையில் ஒரு வதந்தி பரவியது. இது பற்றிய செய்தி சென்னையிலுள்ள கத்தோலிக்க சமய உயர் அதிகாரி ஒருவருக்குச் செல்வத்திடமிருந்தோ அல்லது அவர் சார்பாகப் பேசிய ஒருவரிடமிருந்தோ கிடைத்தது என்று அவ்வதந்தி கூறியது. வதந்தி உண்மையானால் பணயத் தொகை எவ்வளவாக இருந்தாலும் தாம் அத்தொகையைக் கொடுத்துச் செல்வத்தை உயிரோடு மீட்கத் தயாராக இருப்பதாக என்.ஆர். சாமியப்ப முதலியார் தெரிவித்தார். ஆனால் மற்றச் செய்திகளைப் போல இதுவும் ஒரு வதந்தியாகவே நின்று விட்டது.

## ஆளுநரின் அறிக்கை

"இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னும் எதுவும் தெரிய வராததால் அனிபால் விமான விபத்தில் சர் பன்னீர் செல்வம் உயிரிழந்து விட்டார் என்னும் முடிவுக்கே நாம் வர வேண்டியிருக்கிறது. அனுபவ மிக்கவரும் நம்பிக்கைக்குரியவருமான செல்வத்தை இவ்விபத்தில் இந்திய மக்கள் இழந்து விட்டார்கள். தஞ்சை நகராட்சி மன்றம், தஞ்சை மாவட்டக் கல்விக் குழு, தஞ்சை மாவட்டக் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் ஆளுநரின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் அமைச்சராகவும் பணியாற்றிய செல்வம் அரிய திறமைகள் நிறையப் பெற்றவர். அவரது அகால மரணத்தைக் குறித்து என் வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சென்னை மாநில ஆளுநர் அறிக்கை வெளியிட்டார். செல்வத்தின் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறித் தம் செயலர் மூலம் கடிதம் எழுதியனுப்பினார் ஆளுநர்.

## செல்வத்தின் சிறப்பு

'52 வயது, நடுத்தர உயரம், கருத்த உடல், கம்பீரத் தோற்றம், பரந்த நெற்றி, உறுதியை உரைக்கும் கண்கள், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் புன்சிரிப்பு, படர்ந்த மீசை, நரையைக் கருமயிர் திரைபோல் மூடிய பருவம்' என்று 14–3–1940 அன்று வெளிவந்த 'விடுதலை' செல்வத்தின் உருவத்தைச் சொல்லோவியமாகத் தீட்டியது. 'தமிழரைத் தட்டியெழுப்பும் முரசொலி போன்ற குரல், நாடாண்ட குரல், நிபுணர்கள் கேட்டு மகிழ்ந்த குரல், தமிழரின் செவிக்குத் தேன் ஊட்டிய குரல், சட்டசபைகளில் அறிவையும் ஆற்றலையும் அஞ்சாநெஞ்சத்தையும் பட்டவர்த்தனத்தையும் விளக்கிய குரல்' என்று செல்வத்தின் பேச்சாற்றலை 'விடுதலை' எடுத்தோதியது.

செல்வத்தின் மரணம் விந்தையான ஒன்றுதான். விபத்து என்றாலும் விமானத்தின் சிறு பகுதிகள் கூடக் கிடைக்காமல் போன நிலையை அன்று எவராலும் புரிந்து கொள்ள இயலவில்லை. இது சதித் திட்டத்தின் விளைவாக இருக்குமோ என அன்று பலர் பேசிக் கொண்டனர். இன்று கூடச் செல்வத்தை அறிந்தவர்களின் வாயில் சதித் திட்டம் பற்றிய பேச்சு அவ்வப்போது எழுகின்றது.

எது எப்படியாயினும் தமிழர் செல்வத்தை நாம் இழந்தோம். தமிழ்நாடு தன் அரிய தலைவரை இழந்தது.

# 8. நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

செல்வம் மறைந்து ஏறக்குறைய ஐம்பதாண்டுகள் உருண்டோடி விட்டாலும் செல்வத்தைத் தமிழ்மக்கள் மறந்துவிடவில்லை என்பதை அவரது பிறப்பு நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் மெய்ப்பித்தன. செல்வபுரத்தில் செல்வத்தின் குடும்பத்தினரும் திருவாரூரில் திராவிடர் கழகமும் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகமும் செல்வம் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து கொண்டாடினர்.

## அ. செல்வபுரத்தில் நூற்றாண்டு விழா

செல்வம் பிறந்த மண் செல்வபுரம். செட்டியாபுரம் என வழங்கிய பெயரைச் செல்வபுரம் என்று மாற்றியமைத்தவரும் அவரே. செல்வத்தை ஈன்றெடுத்ததால் செல்வபுரம் சிறப்புப் பெற்றது எனில் அது மிகையாகாது.

1–6–1988 அன்று செல்வபுரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. பெய்த மழை கூட அவ்விழாக் கோலத்தினைப் பாதித்து விடவில்லை. செல்வம் கட்டியெழுப்பிய புனித குழந்தை தெரசாள் கோவில் அருகில் விழாவுக்கென ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் பெய்த பெருமழையின் காரணமாக அது பயன்படுத்தப்படவில்லை. எனவே செல்வத்தின் இல்லமாகிய 'செல்வ விலாஸ்' தான் விழா நடைபெறும் இடமாயிற்று. இவ்வில்லத்திலேயே செல்வத்தின் திருமணம் நடை பெற்றது என்பது நினைவுகூரத் தக்கதாகும்.

செல்வத்தின் மக்களாகிய மேரி ஸ்தனிஸ்லாஸ், ஜார்ஜ் செல்வம், டெய்ஸி இராயப்பன், விக்டோரியா சுந்தரராசன், எட்வர்ட் செல்வம் ஆகியோரும் அவர்களின் கணவன்மாரும், மனைவியரும், மக்களும்,

பேரக் குழந்தைகளும் எனப் பெருந்திரளாகச் செல்வத்தின் குடும்பத் தினர் செல்வபுரத்தில் குழுமியிருந்தனர்.

வீட்டின் கூடத்தில் மாலை 6.30 மணிக்கு நூற்றாண்டு விழாத் திருப்பலி தொடங்கியது. புதுச்சேரிப் பேராயர் மேதகு வெண்மணி செல்வநாதர் ஆண்டகையும் குடந்தை ஆயர் மேதகு பால் அருள்சாமி ஆண்டகையும் இணைந்து நடத்திய கூட்டுத் திருப்பலியில் பல குருக்கள் கலந்து கொண்டனர்.

திருப்பலி முடிந்தபின் அவ்விடத்திலேயே நூற்றாண்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. விழாவுக்குப் புதுச்சேரிப் பேராயர் தலைமை யேற்றுச் செல்வத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசினார். ஜார்ஜ் செல்வம் வரவேற்புரை வழங்கினார்.

குடந்தை மாவட்டத்துடன் செல்வத்துக்கிருந்த தொடர்பினைத் தம் உரையில் பால் அருள்சாமி ஆண்டகை எடுத்துரைத்தார்.

பார்ப்பனரல்லாதாருக்காகச் செல்வம் ஆற்றிய பணிகளையும், குறிப்பாகப் பெரியார் பெல்லாரிச் சிறையில் வாடியபோது செல்வம் செய்த தொண்டுகளையும் அமுதன் அடிகள் விரிவாக எடுத்துரைத் தார். சாதி சமய வேறுபாடு இல்லாமல் எல்லா மக்களின் நன்மைக் காக உழைத்த செல்வம் பொதுவாழ்வில் நேர்மையுடனும், கறைபடாத கரங்களுடனும் செயல்பட்ட பான்மையை அவர் விரித்துரைத்தார்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி 'செல்வத்தின் விழா தமிழ்மக்களின் குடும்ப விழா' என்று கூறிப் பெரியாருடன் இணைந்து செல்வம் ஆற்றிய பல்வேறு தொண்டுகளைத் தொகுத்துரைத்தார்.

திரு. மன்னை ப. நாராயணசாமி, திரு. இரகுமான்கான் ஆகிய இருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர். தஞ்சை மாவட்டத்தின் தனிப் பெரும் தலைவராகச் செல்வம் விளங்கி ஆற்றிய பணிகளைத் திரு. மன்னை ப. நாராயணசாமி விளக்கினார். அவரது சட்டமன்றப் பணி களைத் திரு. இரகுமான்கான் எடுத்துரைத்தார்.

மறுநாள் (2–6–1988) செல்வத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டுச் செல்வபுரத்தில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது. பண்ணைவிளாகம் பங்குத் தந்தை அருள்திரு. ஆ. சேவியர், துணைப் பங்குத்தந்தை அருள்திரு. இராபர்ட் தனராஜ், திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவர் திரு. சாம்பசிவம், கொரடாச்சேரி ஊராட்சி ஒன் றியப் பெருந்தலைவர் திரு. பொன். நரசிம்மன், நன்னிலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. வரத கோபால கிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல். கணேசன், மணிமாறன், விவசாயிகள் சங்கத் தலைவர் ஒ.வி. நாயுடு, செல்வத்தின் நிலத்தில் முன்பு பணி யாற்றிய ஒருவரின் குடும்பத்தைச் சார்ந்த ஆசிரியர் கிருட்டிணன் ஆகிய பலர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு செல்வம் தமிழ்ச் சமுதாயத் துக்கு ஆற்றிய பல்வேறு பணிகளையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

# ஆ. திராவிடர் கழகம் எடுத்த விழா

திராவிடர் கழகத்தின் சார்பில் 1-6-1988 அன்று சர் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் நூற்றாண்டு விழா திருவாரூரில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

தஞ்சை மாவட்டம் முழுவதும் திருவாரூரில் நடக்கும் விழா பற்றிச் சிறப்பாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. திராவிடர் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட பன்னீர் செல்வம் அவர்களின் உருவப்படம் மாவட்டம் முழுவதும் ஒட்டப்பட்டு இருந்தது.

சரியாக நான்கு மணிக்குப் பெருமழை பெய்யத் தொடங்கியது. பேரணியில் கலந்து கொள்ள வந்த ஆயிரக்கணக்கான மக்கள் மழையில் நனைந்த வண்ணமே ஊர்வலம் புறப்படும் புகைவண்டிச் சந்திப்புக்கு வந்தனர்.

கொட்டும் மழையிலும் மாலை 6 மணி அளவில் புகைவண்டிச் சந்திப்பிலிருந்து பேரணி புறப்பட்டது. பன்னீர் செல்வம் அவர்களின் படத்தைத் தட்டிகளில் ஒட்டிப் பலர் ஏந்தி வந்தனர்.

பேரணி புகைவண்டிச் சந்திப்பில் புறப்பட்டுக் கடைவீதி, பேருந்து நிலையம், ஆண்டாள் தெரு வழியாகக் கீழ வீதியைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்டு டிரக்கில் எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வல முடிவில் கீழ வீதியில் அமைக்கப்பட்டிருந்த அழகிய மேடையில் நூற்றாண்டு விழா தொடங்கியது. ஏ.டி. பன்னீர் செல்வம் பார்-அட்-லா அவர்களின் உருவப்படத்தினை டாக்டர் ஏ. கிருட்டிண சாமி பார்-அட்-லா திறந்து வைத்து ஆற்றிய அருமையான ஆங்கில உரையைப் பேராசிரியர் இறையன் அழகுத் தமிழில் சுவைபட மொழிபெயர்த்தார்.

பெரியார் என்று பொதுமக்களால் மரியாதையுடன் அழைக்கப் பட்டாலும், பெருமைக்குரிய அந்தப் பெயரைச் சட்டமன்றப் பதிவேடு களில் சரித்திரச் சிறப்போடு பதிவு செய்து வைத்த பெருமை ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களைச் சாரும் என்று டாக்டர் ஏ. கிருட்டிண சாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

தமிழக மூதறிஞர் குழுத் தலைவர் ஜஸ்டிஸ் திரு.பி. வேணு கோபால் அவர்கள் ஏ.டி.பி. அவர்களின் அருந்தொண்டுகளுக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். தந்தை பெரியாரின் கொள்கைகளையும், தமிழ்நாட்டின் நிலைமைகளையும் முற்றிலும் உணர்ந்திருந்த ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்கள், விபத்தில் சிக்கி மறையாமல், இங்கி லாந்தில் உள்ள இந்தியா மந்திரியின் ஆலோசகர் பதவியை ஏற்றுப் பணியாற்றியிருந்தால், நிச்சயமாக நமக்குத் தனிநாடு கிடைத்திருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் மறைவையொட்டிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாடப்பட்ட பாடலின் கருத்தை மையமாக வைத்துப் பேராசிரியர் த. இராமநாதன் உரையாற்றினார்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி "தமிழன் யார்?" என்பது பற்றி ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொன்ன கருத்துக்களைத் தம் உரையில் ஆதாரப் பூர்வமாக எடுத்துரைத்தார்.

ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவிற்குள் மத்திய அரசு அவர் நினைவாக அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்றும் அதற்காகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டபொழுது பலத்த கர ஒலி எழுப்பிப் பொதுமக்கள் வரவேற்றனர்.

பெருந்திரளான பொதுமக்களும் ஏராளமான திராவிடர் கழகத் தொண்டர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இரவு 11 மணிக்கு விழா முடிவுற்றது.

## இ. திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய விழா

சென்னை கலைவாணர் அரங்கில் சர் ஏ.டி. பன்னீர் செல்வம் நூற்றாண்டு விழாவினை 1–6–1988 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்து நடத்தியது. கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

திராவிட இயக்க முன்னோடிகளுள் ஒருவராகிய செல்வத்தின் உருவப்படத்தை அவ்வமயம் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார். தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகவும் தஞ்சை நகராட்சி மன்றத் தலைவராகவும் செல்வம் ஆற்றிய பணிகளை விளக்கிய கலைஞர் இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்த்துச் செல்வம் சட்டமன்றத்தில் வாதாடியதை நினைவு கூர்ந்தார். செல்வம் இறந்தபோது ஈ.வெ.ரா. பெரியார் தம் 'குடிஅரசு' இதழில் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதியைப் படித்துக் காட்டிய கலைஞர் "அதிலிருந்து பெரியார், சர் ஏ.டி. பன்னீர் செல்வத்திடம் கொண்டிருந்த பற்றும், ஏ.டி. பன்னீர் செல்வத்தின் அயராத உழைப்பும் எத்தகையது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள இயலும்" என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இவ்விழாவில் முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் சமதும் ஏ.டி. பன்னீர் செல்வத்தின் பேரன் ஆரோக்கிய சின்னராஜ் செல்வமும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# ஈ. திருச்சியில் விழா

அனைத்திந்தியப் பொதுநிலையினர் பேரவையின் திருச்சி அணியினர் 26-12-1988 அன்று திருச்சித் தமிழ்ச் சங்க மன்றத்தில் செல்வம் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடினர். திருச்சி மறைமாவட்டக் குருகுல முதல்வர் பெருமறைத்திரு. எஸ். பன்னீர் செல்வம் அடிகளார் விழாவுக்குத் தலைமை தாங்கினார். பேராசிரியர் ரம்போலா மாஸ்கரனேஸ்ஸும் திரு.கே. இருதயசாமியும் விழாவினை ஏற்பாடு செய்தனர்.

பேராசிரியர்கள் இராசகோபாலன், இளங்கோ, கே. சண்முக சுந்தரம் ஆகியோரும் திரு. பாலகங்காதரன், திரு. அ.மலர்மன்னன், திரு. ஏ.ஜி.எல். இருதயராஜ் ஆகியோரும் அமுதன் அடிகளும் உரையாற்றினர்.

கத்தோலிக்க சமுதாயத் தலைவராகச் செல்வம் ஆற்றிய பணி களைத் திரு. ஏ.ஜி.எல். இருதயராஜும், தமிழ்ச் சமுதாயத் தலைவராக அவர் ஆற்றிய பணிகளைப் பேராசிரியர் இராசகோபாலனும், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவராகச் செல்வம் ஆற்றிய பணிகளை அமுதன் அடிகளும் விரிவாக எடுத்துரைத்தனர்.

# செல்வத்தின் வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| *1–6–1888* | பிறப்பு : செல்வபுரம் |
| *1900–1908* | திருச்சியில் கல்வி |
| *1908–1912* | இலண்டனில் சட்டக்கல்வி |
| *1918–1920* | தஞ்சை நகராட்சி மன்றத் தலைவர் |
| *1922–1924* | தஞ்சை மாவட்டக் கல்விக் குழுத் தலைவர் |
| *1924–1930* | தஞ்சை மாவட்டக் கழகத் தலைவர் |
| *1930–1931* | வட்டமேசை மாநாட்டில் பங்கேற்பு |
| *1930–1939* | சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் |
| *1934–1937* | சென்னை ஆளுநரின் நிர்வாகக் குழு உறுப்பினர் |
| *1937* | சென்னை மாநிலத்தில் நிதி, உள்துறை அமைச்சர் |
| *1937–1939* | சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் |
| *1938–1940* | நீதிக்கட்சித் துணைத்தலைவர் |
| *1–3–1940* | விமான விபத்தில் மரணம் |

# துணை நின்ற நூல்கள்


**(அ)** அண்ணா, அறிஞர் : அண்ணா கண்ட தியாகராயர் (1988)

கலியாணசுந்தரனார், திரு.வி. : திரு. வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் (1982)

குமரவேலன், இரா., புலவர் புகழேந்தி : இந்தியாவின் சமுதாயச் சீர்திருத்தச் செம்மல்கள் (1983)

சம்பந்தன், மா.சு. : திருச்சி விசுவநாதம் (1973)

சிதம்பரனார், சாமி : தமிழர் தலைவர் பெரியார் (1975)

மாறன், பொன். : திராவிட இயக்கங்களின் வரலாற்றுப் பின்னணி (1988)

முத்துச்சாமிப்பிள்ளை, பண்டித எஸ். : நீதிக்கட்சி வரலாறு (1985)

விசுவநாதம், கி.ஆ.பெ. : எனது நண்பர்கள் (1984)

வீரமணி, கி. : விடுதலைப்போரும் திராவிடர் இயக்கமும் –உண்மை வரலாறு (1985)

**(ஆ)** Baker, C.J. : The Politics of South India 1920-1937 (1976)

Gwyer, Sir Maurice & A. Appadurai : Speeches and Documents on the Indian Constitution Vol. I & II (1957)

Irschick, Eugene P. : Tamil Revivalism in the 1930's (1986)

Nambi Arooran K. : Tamil Renaissance and Dravidian Nationalism (1980)

Rajan, P.T. (Ed.) : Justice Party Golden Jubilee Souvenir (1968)

Spear Percival : The Oxford History of Modern India (1965)

Visswanathan, E.Sa. : The Political Career of E.V. Ramasamy Naicker (1983)

**(இ)** The Proceedings of the Madras Legislative Council 1931-39

**(ஈ)** பத்திரிகைகள்

குடிஅரசு
விடுதலை
Madras Mail
The Hindu

**(உ)** நேர்காணல்:

செல்வம், எட்வர்ட் — 24–8–1989

செல்வம், கிளாரா — 31–12–1988, 1–1–1989, 9–7–1988, 10–7–1989

செல்வம், எல். ஜார்ஜ் — 31–12–1988, 1–1–1989, 2–1–1989, 9–7–1989, 10–7–1989

டெய்ஸி இராயப்பன் — 9–7–1989

மேரி ஸ்தனிஸ்லாஸ் — 1–1–1989, 2–1–1989

விசுவநாதம், கி.ஆ.பெ. — 15–5–1988, 12–6–1989

## கடைசி அட்டையில்

பெரியார் ஈ.வெ.ரா., முத்தையா செட்டியார், பேரா. எம். இரத்தினசாமி ஆகியோருடன் செல்வம். இலண்டனுக்குப் புறப்படுமுன் (1940) முத்தையா செட்டியார் செல்வத்துக்கு அளித்த விருந்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

